
# Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita




# श्री ललिता त्रिशती

## ஶ்ரீ லலிதா த்ரிஶதீ



ஶ்ரீலலிதாத்ரிஶதீ ஶ்ரீஶங்கர பா$^{4}$ஷ்யம்
முன்னூறு நாமாக்களுக்கும் எளிய தமிழில்
விளக்கவுரை வழங்கியவர் ஸ்வாமி பரவித்யாநந்த
ஸரஸ்வதி அவர்கள்.

We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji



**We submit our efforts at the Lotus feet of Jagadguru Śankarācārya His Holiness Mahāsannidhānam Śrī Śrī Srī Bhāratī Tīrtha Mahāswāmiji and Jagadguru Śankarācārya His Holiness Sannidhānam Śrī Śrī Śrī Vidhuśekhara Bhāratī Mahāswāmiji**

# स्वर्ण भारती

# श्री ललिता त्रिशती

## ஶ்ரீ லலிதா த்ரிஶதீ

## ஸ்வர்ண பா$^{4}$ரதீ

**வரிசை எண் 11**

श्री श्री जगद्गुरु शङ्कराचार्य महासंस्थानम्,

दक्षिणाम्नाय श्रीशारदापीठम्, शृङ्गेरी

Sri Sri Jagadguru Shankaracharya Mahasamsthanam

Dakshinamnaya Sri Sharada Peetham, Sringeri - 577 139.


शृङ्गगिरिः १३.४.२०२४

दक्षिणाम्नायशृङ्गेरीशारदापीठाधीश्वराणाम् अनन्तश्रीविभूषितानां परमपूज्यानां जगद्गुरु शङ्कराचार्याणां श्रीभारतीतीर्थमहास्वामिनां संन्याश्रमस्वीकारस्वर्णमहोत्सवसन्दर्भं पुरस्कृत्य मुद्रितचराणां अधुना दुर्लभंगतानां विशिष्टानां गैर्वाणीग्रन्थाणां अन्तर्जालमाध्यमेन पुनः प्रकाशनं क्रियत इति विदित्वा जगद्गुरुचरणाः नितराममोदन्त । श्रीशारदाचन्द्रमौलीश्वरयोरसीमया कृपया कार्यमिदं सुष्ठु प्रवर्तताम्, कार्येऽस्मिन् कृतसाह्यास्समेऽपि सज्जनाः श्रेयांसि समधिगच्छन्त्विति च श्रीजगद्गुरुचरणा आशासते ।

इति निवेदयिता

दि दक्षिणामूर्तिः


Phone: 08265 - 250123 / 250192 • Fax: 08265 - 250792

E-mail: info@sringerisharadapeetham.org • www.sringerisharadapeetham.org




ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் மற்றும் ஜகத்குரு சங்கராசாரியர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிநானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் பொற்பாதங்களில் எங்களின் முயற்சியை சமர்ப்பிக்கிறோம்.

ஸ்ரீ லலிதா த்ரிஶதீ என்ற இந்த நூல் எளிமையாகவும், அருமையான விளக்கத்துடனும் மிகவும் அழகாகவும் ஸாதகர்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக விளங்கும் இந்த நூல் ஸ்வாமி பரவித்யாநந்த ஸரஸ்வதி அவர்களால் ஸ்ரீ சங்கர பாஷ்யம் தமிழாக்கம் செய்யப்பட்டு இங்கு வழங்கப்பட்டுள்ளது. ஸ்வாமிஜி அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள் .

இப்படிக்கு,
ஸ்ரீமதி வீரமணி.

# ॥श्रीगुरुवन्दनम्॥

## श्रीगुरुभ्यो नमः

शङ्कारूपेण मच्चित्तं पङ्कीकृतमभूद्यया ।
किङ्करी यस्य सा माया शङ्कराचार्यमाश्रये ॥
प्रह्लादवरदो देवो यो नृसिंहः परो हरिः ।
नृसिंहोपासकं नित्यं तं नृसिंहगुरुं भजे ॥
श्रीसच्चिदानन्दशिवाभिनव्यनृसिंहभारत्यभिधान् यतीन्द्रान् ।
विद्यानिधीन् मन्त्रनिधीन् सदात्मनिष्ठान् भजे मानवशम्भुरूपान् ॥
सदात्मध्याननिरतं विषयेभ्यः पराङ्मुखम् ।
नौमि शास्त्रेषु निष्णातं चन्द्रशेखरभारतीम् ॥
विवेकिनं महाप्रज्ञं धैर्यौदार्यक्षमानिधिम् ।
सदाभिनवपूर्वं तं विद्यातीर्थगुरुं भजे ॥
अज्ञानां जाह्नवीतीर्थं विद्यातीर्थं विवेकिनाम् ।
सर्वेषां सुखदं तीर्थं भारतीतीर्थमाश्रये ॥
विद्याविनयसम्पन्नं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञं विधुशेखरभारतीम् ॥
पञ्चाशल्लिपिभिर्विभक्तमुखदोः पन्मध्यवक्षस्थलां
भास्वन्मौलिनिबद्धचन्द्रशकलामापीनतुङ्गस्तनीम् ।
मुद्रामक्षगुणं सुधाढ्यकलशं
विद्याञ्च हस्ताम्बुजैः
बिभ्राणां विशदप्रभां त्रिनयनां वाग्देवतामाश्रये ॥

श्रीमत्परमहंस-परिव्राजकाचार्यवर्य-पदवाक्यप्रमाणपारावारपारीण-यमनियमासनप्राणायामप्रत्याहारधारणाध्यान समाध्यष्टाङ्गयोगानुष्ठाननिष्ठ-तपश्चक्रवर्ति-अनाद्यविच्छिन्नश्रीशङ्कराचार्यगुरुपरंपराप्राप्त-षड्दर्शनस्थापनाचार्य-व्याख्यानसिंहासनाधीश्वर-सकलनिगमागमसारहृदय-सांख्यत्रयप्रतिपादक-वैदिकमार्गप्रवर्तक-सर्वतन्त्रस्वतन्त्र-आदिराजधानी-विद्यानगरमहाराजधानी-कर्णाटकसिंहासनप्रतिष्ठापनाचार्य-श्रीमद्राजाधिराजगुरु-भूमण्डलाचार्य-ऋष्यशृङ्गपुरवराधीश्वर-तुङ्गभद्रातीरवासि-श्रीमद्विद्याशङ्करपादपद्माराधक-

**श्रीमज्जगद्गुरु-श्रीमदभिनवविद्यातीर्थमहास्वामिगुरुकरकमलसञ्जात-**
**श्रीमज्जगद्गुरु-श्रीभारतीतीर्थमहास्वामिनां-**
**तत्करकमलसञ्जात-श्रीमज्जगद्गुरु-श्रीविधुशेखरभारतीमहास्वामिनां च चरणारविन्दयोः साष्टाङ्गप्रणामान् समर्पयामः ॥**







||ஶ்ரீகு³ருவந்த³னம்||

ஶ்ரீகு³ருப்⁴யோ நம꞉

ஶங்காரூபேண மச்சித்தம்’ பங்கீக்ரு’தமபூ⁴த்³யயா |
கிங்கரீ யஸ்ய ஸா மாயா ஶங்காராசார்யமாஶ்ரயே ||

ப்ரஹ்லாத³வரதோ³ தே³வோ யோ ந்ரு’ஸிம்’ஹ꞉ பரோ ஹரி꞉ |
ந்ரு’ஸிம்’ஹோபாஸகம்’ நித்யம்’ தம்’ ந்ரு’ஸிம்’ஹகு³ரும்’ ப⁴ஜே ||

ஶ்ரீஸச்சிதா³னந்த³ஶிவாபி⁴நவ்யந்ரு’ஸிம்’ஹபா⁴ரத்யபி⁴தா⁴ன் யதீந்த்³ரான் |
வித்³யாநிதீ⁴ன் மந்த்ரநிதீ⁴ன் ஸதா³த்மநிஷ்டா²ன் ப⁴ஜே மானவஶம்பு⁴ரூபான் ||

ஸதா³த்மத்⁴யானநிரதம்’ விஷயேப்⁴ய꞉ பராங்முக²ம் |
நௌமி ஶாஸ்த்ரேஷு நிஷ்ணாதம்’ சந்த்³ரஶேக²ரபா⁴ரதீம் ||

விவேகினம்’ மஹாப்ரஜ்ஞம்’ தை⁴ர்யௌதா³ர்யக்ஷமாநிதி⁴ம் |
ஸதா³பி⁴னவபூர்வம்’ தம்’ வித்³யாதீர்த²கு³ரும்’ ப⁴ஜே ||

அஜ்ஞானாம்’ ஜாஹ்னவீதீர்த²ம்’ வித்³யாதீர்த²ம்’ விவேகினாம் |
ஸர்வேஷாம்’ ஸுக²த³ம்’ தீர்த²ம்’ பா⁴ரதீதீர்த²மாஶ்ரயே ||

வித்³யாவினயஸம்பன்னம்’ வீதராக³ம்’ விவேகினம் |
வந்தே³ வேதா³ந்ததத்த்வஜ்ஞம்’ விது⁴ஶேக²ரபா⁴ரதீம் ||

பஞ்சாஶல்லிபிபி⁴ர்விப⁴க்தமுக²தோ³꞉ பன்மத்⁴யவக்ஷஸ்த²லாம்’
பா⁴ஸ்வன்மௌலிநிப³த்³த⁴சந்த்³ரஶகலாமாபீனதுங்க³ஸ்தனீம் |
முத்³ராமக்ஷகு³ணம்’ ஸுதா⁴ட்⁴யகலஶம்’
வித்³யாஞ்ச ஹஸ்தாம்பு³ஜை꞉
பி³ப்⁴ராணாம்’ விஶத³ப்ரபா⁴ம்’ த்ரிநயனாம்’ வாக்³தே³வதாமாஶ்ரயே ||

**ஶ்ரீமத்பரமஹம்’ஸ-பரிவ்ராஜகாசார்யவர்ய-பத³வாக்யப்ரமாணபாராவாரபாரீண-யமநியமாஸனப்ராணாயாமப்ரத்யாஹாரதா⁴ரணாத்⁴யானஸமாத்⁴யஷ்டாங்க³யோகா³னுஷ்டா²னநிஷ்ட²-தபஶ்சக்ரவர்தி-அநாத்³யவிச்சி²ன்னஶ்ரீஶங்கராசார்யகு³ருபரம்பராப்ராப்த-ஷட்³த³ர்ஶனஸ்தா²பனாசார்ய-வ்யாக்²யானஸிம்’ஹாஸனாதீ⁴ஶ்வர-ஸகலநிக³மாக³மஸாரஹ்ரு’த³ய-ஸாங்க்²யத்ரயப்ரதிபாத³க-வைதி³கமார்க³ப்ரவர்தக-ஸர்வதந்த்ரஸ்வதந்த்ர-ஆதி³ராஜதா⁴னீ-வித்³யாநக³ரமஹாராஜதா⁴னீ-கர்ணாடகஸிம்’ஹாஸனப்ரதிஷ்டா²பனாசார்ய-ஶ்ரீமத்³ராஜாதி⁴ராஜகு³ரு-பூ⁴மண்ட³லாசார்ய-ரு’ஷ்யஶ்ரு’ங்க³புரவராதீ⁴ஶ்வர-துங்க³ப⁴த்³ராதீரவாஸி-ஶ்ரீமத்³வித்³யாஶங்கரபாத³பத்³மாராத⁴க-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீமத³பி⁴னவவித்³யாதீர்த²மஹாஸ்வாமிகு³ருகரகமலஸஞ்ஜாத-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீபா⁴ரதீதீர்த²மஹாஸ்வாமினாம்’-தத்கரகமலஸஞ்ஜாத-ஶ்ரீமஜ்ஜக³த்³கு³ரு-ஶ்ரீவிது⁴ஶேக²ரபா⁴ரதீமஹாஸ்வாமினாம்’ ச சரணாரவிந்த³யோ꞉ ஸாஷ்டாங்க³ப்ரணாமான் ஸமர்பயாம꞉ ||**

# श्री ललिता त्रिशती

## ஸ்ரீ லலிதா த்ரிஶதீ

**श्रीललितात्रिशतीभाष्यम्**
**श्रीशंकर भगवत्पादाचार्यप्रणीतम् ।**

ஶ்ரீலலிதாத்ரிஶதீபா⁴ஷ்யம்
ஶ்ரீஶங்கர ப⁴க³வத்பாதா³சார்யப்ரணீதம் |

### முகவுரை

ஸ்ரீ லலிதா த்ரிஶதீ என்ற நூலில் உள்ள பரதேவதையின் நாமாக்கள் 300. அந்த நாமங்களுக்கு பகவான் ஸ்ரீ ஆதி சங்கரர் எழுதியுள்ள பாஷ்யத்தை ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா சன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதி ஆகியவர்களின் பாத கமலங்களை மனதிலும், வாக்கிலும், சிந்தையிலும் எப்போழும் தியானம் செய்து கொண்டு தமிழில் மொழி பெயர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

இந்த லலிதா த்ரிஶதீ ஸ்ரீ சங்கர பாஷ்யத்தை தமிழில் மொழிபெயர்ப்பு செய்து தர ஸ்வாமிஜி ஸ்ரீ பரவித்யாநந்த ஸரஸ்வதி , கோயம்புத்தூர், அவர்கள் முன் வந்துள்ளது ஸ்ரீ ஜகத்குருக்களின் அபாரமான கருணையினால் தான் கிடைத்தது.

ஸ்ரீ பரவித்யாநந்த ஸரஸ்வதி அவர்கள் பூஜ்யஸ்ரீ ஸ்வாமி தயானந்த சரஸ்வதி, ஆனைக்கட்டி, கோயம்புத்தூர், அவர்களின் சிஷ்யர் ஆவார்கள். இந்த ஸ்ரீ லலிதா த்ரிஶதீ 300 நாமக்களின் ஸ்ரீ சங்கர பாஷ்யத்தை தமிழில் மொழிபெயர்ப்பு செய்யது கொடுத்துள்ளார்கள். ஸ்வாமிகள் அவர்களுக்கு, எங்களின் Voice of Jagadguru e magazine team சார்பாக மனமார்ந்த நன்றியை இந்த சந்தர்ப்பத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த புத்தகத்தில் பூர்வபாகமும், உத்தர பாகமும் ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலாவை தழுவி போடப்பட்டுள்ளது. ஸம்ஸ்க்ருத சங்கரபாஷ்யமும் அதில் இருந்து தான் எடுக்கப் பட்டுள்ளது.

ஒரு காரியத்தை நம்மால் நல்லபடியாக செய்து முடிக்க வேண்டும் என்றால் அதற்கு குருவின் அருள் இருந்தால் மட்டுமே செய்ய முடியும். அப்படி குருவின் அருளை தன் வாழ்நாளில் ஒரு நொடிப் பொழுதாவது அனுபவித்த ஒருவர், எத்தனை கோடி ஜென்மங்கள் எடுத்தாலும் மேலும் மேலும் அந்த சத்குருவின் அருளை பெற்றுக் கொண்டே இருப்பார்கள். முடிவில், இந்த ஸம்ஸார ஸாகரத்தில் இருந்து கரை ஏறி விடுவார்கள், அப்பேர் பெற்ற குருவின் மகிமை உணர்ந்தவர்களுக்காகவும், உணரப்போகின்றவர்களுக்காகவும் இந்த ஜகத்துக்கே குருவான "ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கராசாரியார்" அவர்கள், இந்த அகில உலக







நாயகியான "ஸ்ரீ லலிதாம்பாளின் த்ரிஶதீக்கு பாஷ்யம் எழுதி நாம் எல்லோரும் அந்த ஜகதம்பிகையின் பரிபூரணமான அருளுக்குப் பாத்திரமாக நமக்கு கருணையுடன் வழங்கியுள்ளார்கள்.

பகவான் ஹயக்ரீவர், மஹரிஷி அகஸ்தியருக்கு அருளிச் செய்த ஸ்ரீ லலிதா த்ரிபுர ஸுந்தரியின் தத்துவங்களை லலிதா ஸஹஸ்ரநாமத்தின் மூலம் எடுத்துரைத்தார். ஸர்வ உபநிஷத்துக்களின் சாரங்களை எவ்வாறு ஸ்ரீகிருஷ்ண பகவான் ஸ்ரீமத் பகவத் கீதையின் மூலம் விளக்கினாரோ, அதே போல மஹரிஷி அகஸ்தியரின் பக்திக்கும், வேண்டுதலுக்கு இணங்க, ஸாக்ஷாத் அம்பாளே ஹயக்ரீவர் முன் தோன்றி ஸ்ரீ லலிதா த்ரிஶதீயை அகஸ்தியருக்கு எடுத்துரைக்கச் சொன்னாள். எதனால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை அறிந்தால் எல்லா புருஷார்த்தங்களின் நிறைவும் கிடைக்குமோ அவை இந்த ஸ்ரீ லலிதா த்ரிஶதீயின் ரஹஸ்ய தத்துவங்களை அறிந்தால் கிடைக்கும்.

உபநிஷத், பகவத் கீதை முதவிய கடுமையான வேதாந்த நூல்களுக்கு பாஷ்யம் எழுதிய ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதரே, ஸ்ரீ லலிதா த்ரிஶதீக்குப் பாஷ்யம் எழுதியுள்ளார் என்றால், இந்த த்ரிஶதீ எவ்வளவு முக்கியமான நூல் என்று விளக்க அவசியம் இல்லை. ஸ்ரீலலிதா த்ரிஶதீ ஒரு பக்தி நூல் மட்டும் என்று எண்ணுபவர்களுக்கு, இதுவே ஒரு மோக்ஷ சாஸ்திரம் என்பதை பாஷ்யத்தில் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஸ்வாமி பரவித்யாநந்த ஸரஸ்வதி அவர்கள் ஒரு ச்ரோத்ரியரும் பிரஹ்மநிஷ்டரும் ஆவார். வேத, வேதாந்த தத்துவங்களை நன்கு அறிந்தவரும், மற்றவர்களுக்கு அந்த கடினமான தத்துவங்களை எளிமையாக எடுத்துரைக்கும் திறமையும் கொண்டவர். அப்படிப்பட்ட ஸ்வாமிகள் , பக்தர்களின் வேண்டுகோளுக்கு மனமிரங்கி, ஸ்ரீலலிதா த்ரிஶதீயை, வேதம், வேதாந்தம் மேலும் தமிழ் நூல்களையும் மேற்கோள் காட்டி, மிகவும் சிறப்பான முறையில் ஸ்ரீ லலிகா த்ரிஶதீ ஸ்லோகங்கருக்கும் அவைகளின் ஸ்ரீசங்கர பாஷ்யத்திற்கும் விளக்கவுரை கொடுத்துள்ளது நாம் செய்த நல்வினையின் பலனாகும். இரவு, பகல் பாராமல் இந்த விளக்க உரையை தயார் செய்து நமக்கு அளித்த ஸ்வாமி பரவித்யாநந்த ஸரஸ்வதிக்கு சிரம் தாழ்ந்த நமஸ்காரங்கள். உள்ளங்கை நெல்லிக்கனி போல், நமக்குக்கொடுக்கபட்டுள்ள இந்த ஸ்ரீ லலிதா த்ரிஶதீ ஸ்லோஹ அர்த்தங்களையும், அதன் ஸ்ரீசங்கர பாஷ்யத்தையும் படித்து, பாராயணம் செய்பவர்களுக்கு, தர்மார்த்த காம, மோக்ஷங்கள் கைகூட ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹா சன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள், ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சன்னிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஆகியவர்களின் ஆசியையும் அருளையும் வேண்டி இந்த எங்களின் முயற்சியை ஜகத்குருக்களின் பாத கமலங்களில் ஸமர்பிக்கின்றோம்.

ஸ்ரீ குரோதி வருடம்
சைத்ர மாதம் , ஷஷ்டி திதி
வியாழக்கிழமை 03/04/2025

இப்படிக்கு
VOJ TEAM MEMBERS

# ஶ்ரீ லலிதா த்ரிஶதீ

## முன்னுரை

ஶ்ரீ லலிதா த்ரிஶதீ என்ற நாமஸ்தோத்திற்கு பகவான் சங்கரரின் பாஷ்ய விரிவுரைக்கு முன்னால் ஒரு சிறு முன்னுரையாக இந்த த்ரிஶதீ ஸ்தோத்திரமானது எங்கு காணப்படுகிறது அது உத்பவமான விதம், அதை பற்றி ஒரு விளக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

ஶ்ரீ ப்ரஹ்மாண்ட புராணத்திலே உத்தர கண்டத்திலே ஹயக்ரீவருக்கும், அகஸ்தியருக்கும் நடந்த ஸம்பாத வடிவமான லலிதோபாக்யான கண்டத்திலே இந்த த்ரிஶதீ ஸ்தோத்திரமானது இருக்கிறது. இந்த லலிதோபாக்கியமானது சரித்திர கண்டம், மாஹாத்மியம், பூஜா, கண்டா, புரஸ்சரணம், ஹோமம், ஸ்தோத்திரம், ரஹஸ்யம் என்ற பல பிரிவுகளை உடையது.

ஒரு ஒரு கண்டத்திலும் ஒரு விதமான சிறப்பு. சரித்திர கண்டத்திலே லலிதா தேவியின் ப்ராதுர் பாகம் என்று ஆரம்பித்து ஒரு ஒரு விபூதியும் விஸ்தரிக்கப் படுகின்றது. கடைசியான ஸ்தோத்திர கண்டத்திலே லலிதா ஸஹஸ்ரநாமமும், இதர ஸ்தோத்திரங்களும், த்ரிஶதீ நாமஸ்தோத்திரமும் விரிவாய் கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஸ்தோத்திரத்தின் மஹிமை ஶ்ரீவித்யா காதி பஞ்சதசியின் 15 வருணாத்மகமாஹ அமைந்து இருக்கிறது. ஶ்ரீவித்யாவை பற்றி அனைவருக்கும் தெரியும். ஶ்ரீவித்யா என்பதே ப்ரஹ்ம வித்யா என்று சொல்லப்படுகிறது. உலகத்திலே யாவருக்கும் இஷ்டமான ஸுக ஸாதனத்திலே ப்ரவ்ருத்தி, அனிஷ்டமான துக்க ஸாதனங்களிலே காரியத்திலே நிவ்ருத்தி, இரண்டும் இல்லாமல் இருப்பதிலே உபேக்ஷயம் உண்டாகின்றது என்பது நடைமுறை வழக்கம். இஷ்டமான ஸுக ஸாதனப் ப்ரவ்ருத்தியிலும், துக்க ஸாதன நிவ்ருத்தியிலும் அதை எல்லாம் தாண்டி எது ப்ரியம் என்று சொன்னால், பரம ப்ரியமான வஸ்து ஆத்மாதான் .

‘ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி’, ‘ஆத்ம லாபாத் ந பரோ லாப:’ என்று ஸ்ருதி மற்றும் ப்ரகரண க்ரந்தங்களின் ஸாராம்ஸமாகும். தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை ஸந்தேஹமற தெரிந்தவன் ஆத்மஞானி. ‘தரதிசோகம் ஆத்ம வித்:’ என்று அவன் ஜனன மரண ஸம்ஸார வடிவ துக்கக் கடலைக் கடக்கிறான் என்று நமக்கு ப்ரமாண வாக்கியமாய் கூறுகின்றது. அதனால் சோக நிவர்த்தி வடிவமாக மோக்ஷமும், ஆத்மஞானத்தை கொடுக்க கூடிய ப்ரஹ்ம வித்தை என்பதும், இந்த ப்ரஹ்ம வித்யை பரா வித்யா, அபரா வித்யா என்று இரண்டு வகைகளாக சாஸ்திரத்திலே விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

முண்டக ஸ்ருதியானது 'தத்ர அபரா ரிக்வேதோ யஜுர் வேதோ : ஸாமவேதோ அதர்வ வேத: ஸீக்ஷா கல்போ வ்யாகரணம் நிருத்தம் சந்தோ ஜோதிஷம் இதி' என்று சொல்லிவிட்டு , 'அத பரா யயா ததக்ஷரமதிகம்யதே, யத் தத் அத்ரேஷ்ய அக்ராஹ்யம் அகோத்ரம் அவரணம் அசக்ஷு ச் ரோத்ரம் ததாபாணி பாதம் நித்யம் விபும் ஸர்வ கத ஸுஸூக்ஷ்மம்' என்று முண்டக ஸ்ருதியானது ப்ரஹ்ம ஸ்வரூபத்தினுடைய விவரணத்தை கூறுகிறது. அசுத்தமான மனத்தால் கிரஹிக்க முடியாது என்றும், ஸ்தூல கண்களால் காண முடியாது என்றும் வேதங்களை அபராவித்யா என்று சொல்லி, இந்த அபராவித்யா பகுதி கர்மகாண்டம் என்றும், பராவித்யா பகுதி ஞானகாண்டம் என்றும் பிரித்து கூறுகிறது.

அந்த ஞானகாண்டமான பரப்ரஹ்ம வித்யை ஸ்தூல, ஸூக்ஷ்ம பேதத்தால் இரண்டு வகைப்படும் என்று அறிஞர்கள் கூறுவார்கள். ஸ்தூல பரப்ரஹ்ம வித்தை உபநிஷத்துக்கள் என்றும், ஸூக்ஷ்ம பரப்ரஹ்ம வித்தை ப்ரணவம் என்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸூக்ஷ்மமே முக்கியம் என்று ப்ரஹ்மத்தை அறிந்த ப்ரஹ்ம ஞானிகள், சாஸ்திரங்கள் அறுதியிட்டு கூறுகின்றார்கள். ஸத்தாயும், ஏகமாயும், அத்விதியமாகவும், எங்கும் வ்யாபகமாயும், ஆனந்த கனம் என்று உபநிஷத் விவரிக்கப்பட்ட ஆத்ம ஸ்வரூபமானது ஞான திசையிலும், அஞ்ஞான திசையிலும் ஒரே விதமாய் விளங்குகின்றது. அப்படிப்பட்ட நிர்விகார ஸ்வரூப ஆத்ம ஞானத்திலே அநேகத்வ கர்த்ருத்வ பரிச்சின்னத்வாதிகளை கற்பிப்பது அத்யாஸ அஞ்ஞானமாகும். அதனால் தான் ஆனந்த வடிவமான தன் ஸ்வபாவ நிலையை மறந்து, தான் ஜீவன் பரிச்சின்னப் பட்டவன் என்று ஸுப, அஸுப கர்மங்களில் தான் கர்த்தா என்றும் அதனால் அதன் ஸுக, துக்கங்களை அனுபவிக்கக்கூடிய போக்தா என்றும் சுதந்திரம் அற்றவன், பர தந்திரன் என்று நினைத்துக் கொண்டு ஜனன மரணத்திலே மீண்டும் மீண்டும் மூழ்கி மூழ்கி எழுகிறான் என்று சாஸ்திர அறிஞர்கள் அறுதியிட்டு கூறுகின்றார்கள்.

இந்த துன்பத்தை நீங்குவதற்கு ஆத்ம ஞானமே வேண்டும். அந்த ஆத்மஞானம் அதைப்பற்றி சொல்லுவது இந்த வித்யா ஸ்வரூபிணி (ஸ்ரீ வித்யா) என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த ஸ்ரீவித்யாவை தாழ்ந்தது, அது மீண்டும் பிறவிக்கு காரணமாக ஆகிறது என்று பரவலான ஒரு கருத்து நிலவி வருகிறது. அதற்கு காரணம் என்ன என்று சொன்னால் இந்த ஸ்ரீவித்யா உபாஸனை என்பது 'சித்' சக்தி ஸ்வரூபமான பரதேவதை விட்டு இதர தேவதைகளை முன் வைத்து செய்யக்கூடிய உபாசனைகளை, அப்படிப்பட்டவை ஜனன மரண ஹேதுவிற்கு காரணமான உபாஸனையாய் இருக்கின்றது.

அதனால் தான் பகவான் சங்கரர் இந்த த்ரிஶதீக்கு லலிதா ஸஹஸ்ரநாமம் போன்ற வித்யா க்ரந்தங்களுக்கு அத்வைத பரமாக பாஷ்யத்தை எழுதியுள்ளார். இந்த ஸ்ரீவித்யா என்பது பாலை, பஞ்சதஷீ, ஷோடஷீ மந்திரங்கள், பஞ்சாக்ஷரீ, நவாக்ஷரீ போன்ற மந்திரங்களால் உபாஸிப்படுகின்றாள். அதிலே சிறந்தது 'காதி' வித்யை என்று சொல்லப்படுகிறது. பகவத்பாதர் பகவான் ஆதி சங்கரரால் ப்ரஸ்தான த்ரயத்துக்கு பாஷ்யங்கள் எழுதப்பட்டன. அவர் எழுதிய இதர அத்வைதப் ப்ரகரணங்களிலே 'சித்' ஸ்வரூப சக்தியைப் பற்றி விஸ்தாரமாய்

கூறவில்லை. ஏனென்றால் அந்த பாஷ்யங்கள் ப்ரஸ்தானத்ரய பாஷ்யங்கள் மற்ற மதக் கண்டனத்தையே பிரதானமாய் கொண்டு இருப்பதால் அதை பற்றி விஸ்தாரமாய் கூறவில்லை. இருப்பினும் சௌந்தர்யாலஹரீ, த்ரிஷதீ, ஸ்ரீவித்யா வாக் விலாஸம், ஸுப போதய வாஸனை, தேவி வேத பாதத்ஸ்வம் முதலிய ஸ்ரீவித்யா கிரந்தங்களை இயற்றி அதற்கு பாஷ்யத்திலும் விவரத்தைக் கூறி ஸ்ரீவித்யா என்பது மூல வித்யாவான மோக்ஷ ஸ்வரூப வித்யா என்று விவரித்து இருக்கிறார்.

பகவான் பாஷ்யகாரர் இப்படி பட்ட க்ரந்தங்களுக்கு பாஷ்யம் எழுதிக்கொண்டு தேச ஸஞ்சாரம் செய்யும் காலையில் மூகாம்பிகை க்ஷேத்திரத்திற்கு வந்து அங்கே பரதேவதையை ப்ரஹ்ம ஸ்வரூபமாய் துதித்து இருக்கிறார்கள் என்று சாஸ்தரத்திலே மேற்கோள் காட்டப்பட்டு இருக்கின்றன. 'தத்வமஸி', 'அயம் ஆத்மா ப்ரஹ்ம' என்ற மஹாவாக்கியங்களின் ஸாரமும், ஸ்ரீவித்யா உபாஸனையும் ஒன்றே என்று லலிதா த்ரிஸதீயிலே 294வது நாமமாகிய 'ஹ்ரீம் - கார - வேத - உபநிக்ஷதே நம:' என்று ஸ்ரீவித்யா உபாஸனை ப்ரஹ்ம வித்யை என்றும், ஞான காண்டத்தை சேர்ந்தது என்றும் கூறப்பட்டுள்ளது. 'ந கர்மணா ந ப்ரஜயா தனேன தியாகேன ஏகே அம்ருதத்வ மான ஷு: ; என்ற ஸ்ருதி வாக்கியமும், 'நேதம் யதிதம் உபாஸதே' என்ற கேன உபநிஷத்தின் ஸ்ருதியாலும் இந்த நாம ரூப உபாஸனைகள் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்துக்கு நேரடியான ஸாதனம் அல்ல, அவை ப்ரஹ்ம வித்தைக்கு தாழ்ந்தவை என்று கூறப்படுவதுப் போல் தொனிக்கிறது. உபாஸனை தாழ்ந்தது என்று கூறும் ஸ்ருதிக்கு பரதேவதையைத் தவிர பின்னமாக ஒரு தேவதையை ஜீவர்கள் மயக்கத்தினால் ப்ரதீக ;உபாஸனையாக எடுத்து கொண்டு செய்வதால், அஹங்ர: ரூப சித் வித்யா உபாஸனையை அதுவே சிறந்தது மற்றவைகள் தாழ்ந்து இருப்பது என்பது அவை ஜனன மரணத்திற்கு காரணமாய் இருப்பது என்பது போல் தோன்றுவதால். ஜீவர்கள் அநேக ஜன்மங்களிலே செய்த இதர பின்ன தேவதா உபாஸனையின் பலனாய் கடைசி ஜன்மத்திலே அவர்களுக்கு ஸ்ரீவித்யா உபாஸனை ஸித்தியேற்பட்டு அதனால் மோக்ஷத்தை அடைகின்றார்கள் என்று பகவத்பாதர் இயற்றிய 'தேவி வேத பாத ஸ்தவத்திலே' ப்ரமாண வாக்கியங்கள் இருக்கின்றன. ', வித்யயா விந்ததே அம்ருதம்' என்ற வாக்கியம் அதற்கு எடுத்துக்காட்டு. அப்படிப்பட்ட மஹிமை பொருந்திய லலிதா த்ரிஸதீ ஸ்தோத்திரத்தில் அதற்கு விவரணம் பகவான் சங்கரரால் விஸ்தாரமாய் கொடுக்கப்பட்டதை இப்பொழுது ஸம்க்ஷேபமாக தமிழில் அதனுடைய தமிழாக்கம் செய்யப்பட்டு அளிக்கப்பட்டு இருக்கிறது. I at this juncture extend my heartfelt thanks to my long time Veda and Vedanta student Mrs. Usha Mohan for sequentially listening the recordings and affirming the correctness of contents and presentation...

ஓம்

ஸ்வாமி பரவித்யானந்த ஸரஸ்வதி,

கோயம்புத்தூர்.

## குரு தியான ஸ்லோகம்

श्रुतिस्मृतिपुराणानाम् आलय करुणालयम् ।
नमामि भगवन्पादशङ्कर लोकशङ्करम् ॥

भारतीकरुणा पात्रं भारती पदभूषणम् ।
भारती पदमारूद भारतीतीर्थमाश्रये ॥

विद्याविनयसम्पनं वीतरागं विवेकिनम् ।
वन्दे वेदान्ततत्त्वज्ञ विधुशेखर भरतीम् ॥

पूज्य दयानन्द स्वामिन् सूक्ष्मतया सुप्रसन्नो भव |
अवकुण्ठितो भव अनुग्रहम् अपि धीयताम् ||

ஶ்ருதிஸ்ம்ரு’திபுராணானாம் ஆலய கருணாலயம் |
நமாமி ப⁴க³வன்பாத³ஶங்கர லோகஶங்கரம் ||

பா⁴ரதீகருணா பாத்ரம்’ பா⁴ரதீ பத³பூ⁴ஷணம் |
பா⁴ரதீ பத³மாரூந்த³ பா⁴ரதீதீர்த²மாஶ்ரயே ||

வித்³யாவினயஸம்பனம்’ வீதராக³ம்’ விவேகினம் |
வந்தே³ வேதா³ந்ததத்த்வஜ்ஞ விது⁴ஶேக²ர ப⁴ரதீம் ||

பூஜ்ய த³யானந்த³ ஸ்வாமின் ஸூக்ஷ்மதயா ஸுப்ரஸன்னோ ப⁴வ |
அவகுண்டி²தோ ப⁴வ அனுக்³ரஹம் அபி தீ⁴யதாம் ||

# || ललितात्रिशतीभाष्यम् ||

### श्रीशंकर भगवत्पादाचार्यप्रणीतम् ।

वन्दे विघ्नेश्वरं देवं सर्वसिद्धिप्रदायिनम् |
वामाङ्कारूढवामाक्षीकरपल्लवपूजितम् ||१||

पाशाङ्कशेक्षुसुमराजितपञ्चशाखां
पाटल्यशालिसुषुमाखितगातवहीन् |
प्राचीनवाक्स्तुतपदां परदेवतां त्वां
पञ्चायुधार्चितपदां प्रणमामि देवीम् ||२||

लोपामुद्रापतिं नत्वा हयग्रीवमपीश्वरम् |
श्रीविद्याराजसंसिद्धिकारिपंकजवीक्षणम् ||३||

विस्तारितां बहुविधां बहुभिः कृतां च
टीकां विलोकयितुमक्षमतां जनानाम् ।
तत्रत्यसर्वषदयोगविवेकभानुं
तुष्टयै करोमि ललितापदभक्तियोगात् ॥४॥

## ॥ லலிதாத்ரிஶதீபா⁴ஷ்யம் ॥

ஶ்ரீஶங்கர ப⁴க³வத்பாதா³சார்யப்ரணீதம் ।

வந்தே³ விக்⁴னேஶ்வரம்' தே³வம்' ஸர்வஸித்³தி⁴ப்ரதா³யினம் ।
வாமாங்காரூட⁴வாமாக்ஷீகரபல்லவபூஜிதம் ॥1॥

பாஶாங்கஶேக்ஷுஸுமராஜிதபஞ்சஶாகா²ம்'
பாடல்யஶாலிஸுஷுமாகி²தகா³தவஹீன் ।
ப்ராசீனவாக்ஸ்துதபதா³ம்' பரதே³வதாம்' த்வாம்'
பஞ்சாயுதா⁴ர்சிதபதா³ம்' ப்ரணமாமி தே³வீம் ॥2॥

லோபாமுத்³ராபதிம்' நத்வா ஹயக்³ரீவமபீஶ்வரம் ।
ஶ்ரீவித்³யாராஜஸம்'ஸித்³தி⁴காரிபங்கஜவீக்ஷணம் ॥3॥

விஸ்தாரிதாம்' ப³ஹுவிதா⁴ம்' ப³ஹுபி⁴: க்ரு'தாம்' ச
டீகாம்' விலோகயிதுமக்ஷமதாம்' ஜனானாம் ।
தத்ரத்யஸர்வஷத³யோக³விவேகபா⁴னும்'
துஷ்டயை கரோமி லலிதாபத³ப⁴க்தியோகா³த் ॥4॥

अगस्त्य उवाच —-
அக³ஸ்த்ய உவாச —-

हयग्रीव दयासिन्धो भगवन् शिष्यवत्सल ।
त्वत्तः श्रुतमशेषेण श्रोतव्यं यद्यदस्ति तत् ॥१॥
ஹயக்³ரீவ த³யாஸிந்தோ⁴ ப⁴க³வன் ஶிஷ்ய வத்ஸல ।
த்வத்த: ஶ்ருதமஶேஷேண ஶ்ரோதவ்யம்' யத்³ யத³ஸ்தி தத் ॥1॥

அகஸ்தியர் சொல்லகிறார்:-
"ஹயக்ரீவரே! கருணைக்கடலே! பகவானே! உமது சிஷ்யர்களிடம் அன்புமிக்கவரே ! தங்களிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டியது அனைத்தும் என்னால் கேட்கப்பட்டு அறிந்து கொள்ளப்பட்டது.

रहस्यनामसाहस्रमपि त्वत्तः श्रुतं मया ।
इतः परं मे नास्त्येव श्रोतव्यमिति निश्चयः ॥२॥
ரஹஸ்ய நாம ஸாஹஸ்ரமபி த்வத்த: ஶ்ருதம்' மயா ।
இத: பரம்' மே நாஸ்த்யேவ ஶ்ரோதவ்யமிதி நிஶ்சய: ॥2॥

ஸ்ரீ லலிதா தேவியினுடைய ஆயிரம் நாமாக்களும், மிகவும் ரஹஸ்ய - மாயினும், தங்களிடமிருந்து மிகுந்த அனுகிரஹத்துடன் நான் அறிந்து கொண்டேன். இதற்கு மேல் கேட்டு அறிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை என்பது தீர்மானமான ஒன்று என்று நினைக்கிறன்.

**तथापि मम चित्तस्य पर्याप्तिनैव जायते ।**
**कात्स्र्यार्थः प्राप्य इत्येव शोचयिष्याम्यहं प्रभो ॥३॥**
**ததா²பி மம சித்தஸ்ய பர்யாப்திநைவ ஜாயதே ।**
**கார்த்ஸ்ன்யார்த²꞉ ப்ராப்ய இத்யேவ ஶோசயிஷ்யாம்யஹம்' ப்ரபோ⁴ ॥3॥**

ஆயினும், பிரபோ! பிரயோஜனம் அனைத்தையும் நான் அடைந்தும் கூட, ஏனோ எனது சித்தத்தில் திருப்தி உண்டாகவில்லையே. ! இதனால் சாந்தியின்றித் தவிக்கும் எனக்கு துக்கம் மேலிடுகிறதே.

**किमिदं कारणं ब्रूहि ज्ञातव्यांशोऽस्ति वा पुनः ।**
**अस्ति चेन्मम तद्ब्रूहि ब्रूहीत्युक्त्वा प्रणम्य तम् ॥४॥**
**கிமித³ம்' காரணம்' ப்³ரூஹி ஜ்ஞாதவ்யாம்'ஶோ(அ)ஸ்தி வா புந꞉ ।**
**அஸ்தி சேந்மம தத்³ப்³ரூஹி ப்³ரூஹீத்யுக்த்வா ப்ரணம்ய தம் ॥4॥**

**सूत उवाच —**
**ஸூத உவாச —**

**समालम्बे तत्पादयुगलं कलशोद्भवः ।**
**ஸமாலலம்பே³ தத்பாத³யுக³ளம்' கலஶோத்³ப⁴வ꞉ ।**

இந்த துக்கத்திற்கு காரணமென்ன? தங்களிடம் நான் அறிந்து கொள்ள வேண்டியது ஏதாவது பாக்கியிருக்கிறதா? இருக்கிறதென்றால் அதையும் தாங்கள் தயை கூர்ந்து எனக்கு சொல்லுங்கள், சொல்லுங்கள்" இவ்வாறு அகஸ்தியர் மொழிந்து ஹயக்ரீவரை நமஸ்கரித்தார்.

ஸூபௌராணிகர் சொன்னார்: -

கலசத்திலிருந்து உண்டான அகஸ்திய மாமுனிவர் ஹயக்ரீவருடைய இரண்டு பாதங்களையும் நன்றாக பிடித்துக்கொண்டார்.

**हयाननो भीतभीतः किमिदं किमिदं त्विति ॥५॥**
**मुञ्च मुञ्चेति तं चोक्त्वा चिन्ताक्रान्तो बभूव सः ।**
**ஹயாநநோ பீ⁴தபீ⁴த꞉ கிமித³ம்' கிமித³ம்' த்விதி ॥5॥**
**முஞ்ச முஞ்சேதி தம்' சோக்த்வா சிந்தாக்ராந்தோ ப³பூ⁴வ ஸ꞉ ।**

ஹயக்ரீவர் நடுநடுங்கி, 'இதென்ன காரியம், இதென்ன காரியம்?' என்றும் "எனது காலை விடுங்கள், காலை விடுங்கள்" என்றும் சொல்லிச் சிந்தையில் ஆழ்ந்துவிட்டார்.

**चिरं विचार्य निश्चिन्वन्वक्तव्यं न मयेत्यसौ ||६||**
**तूष्णीं स्थितः स्मरन्नाज्ञां ललिताम्बाकृतां पुरा |**
**சிரம்' விசார்ய நிஶ்சிந்வன் வக்தவ்யம்' ந மயேத்யஸௌ ||6||**
**தூஷ்ணீம்' ஸ்தி²த꞉ ஸ்மரந்நாஜ்ஞாம்' லலிதாம்பாக்ரு'தாம்' புரா |**

வெகுநேரம் ஆலோசித்த பிறகு, "நான் சொல்லவேண்டியது இனி ஒன்றும் இல்லையே" என்று தீர்மானித்து, முன்னொரு காலத்தில் லலிதாம்பிகையால் இடப்பட்ட கட்டளையை நினைத்துக்கொண்டு மௌனமாக இருந்துவிட்டார்.

**प्रणम्य विप्रः स मुनिस्तत्पादावत्यजन्स्थितः ||७||**
**ப்ரணம்ய விப்ர꞉ ஸ முநிஸ்தத்பாதா³வத்யஜன் ஸ்தி²த꞉ ||7||**

**वर्षत्रयावधि तदा गुरुशिष्यौ तथा स्थितौ |**
**तच्छृण्वन्तश्च पश्यन्तः सर्वे लोकाः सुविस्मिताः ||८||**
**வர்ஷத்ரயாவதி⁴ ததா³ கு³ருஶிஷ்யௌ ததா² ஸ்தி²தௌ |**
**தச்ச்²ரு'ண்வந்தஶ்ச பஶ்யந்த꞉ ஸர்வே லோகா꞉ ஸுவிஸ்மிதா꞉ ||8||**

அகஸ்திய மாமுனிவரும் ஹயக்ரீவருடைய கமல பாதங்களை விடாமல் அவரை வணங்கிக் கொண்டிருந்தார். மூன்று வருஷ காலம் இவ்வண்ணம் இருந்த குரு சிஷ்யர்களைப் பார்த்தும், அவர்களைப் பற்றிக் கேட்டும், மக்கள் அனைவரும் வியப்பை அடைந்தனர்.

**ततः श्रीललितादेवी कामेश्वरसमन्विता |**
**प्रादुर्भूय हयग्रीवं रहस्येवमचोदयत् ||९||**
**தத꞉ ஶ்ரீலலிதாதே³வீ காமேஶ்வரஸமந்விதா |**
**ப்ராது³ர்பூ⁴ய ஹயக்³ரீவம்' ரஹஸ்யேவமசோத³யத் ||9||**

பிறகு, ஸ்ரீ லலிதாதேவி காமேசுவரருடன் ஹயக்ரீவர் முன் தோன்றி, ரஹஸ்யமாகக் கீழ்கண்டவாறு சொன்னாள்.

**श्रीदेव्युवाच —-**
**ஶ்ரீதே³வ்யுவாச —-**

**अश्वाननावयोः प्रीतिः शास्त्रविश्वासिनि त्वयि |**
**राज्यं देयं शिरो देयं न देया षोडशाक्षरी ||१०||**
**அஶ்வாநநாவயோ꞉ ப்ரீதி꞉ ஶாஸ்த்ரவிஶ்வாஸிநி த்வயி |**
**ராஜ்யம்' தே³யம்' ஶிரோ தே³யம்' ந தே³யா ஷோட³ஶாக்ஷரீ ||10||**

ஶ்ரீதேவீ கூறுகிறார்:-

"குதிரை முகத்தோனே ! ஹயக்ரீவா ! உமக்கு சாஸ்திரங்களில் பக்தியும் நம்பிக்கையும் அதிகம். உம்மிடத்தில் எங்களுக்கு மிகுந்த அன்பு. ஆட்சியைக் கொடுக்கலாம். சிரஸ்ஸையும் கொடுக்கலாம். ஷோடசாக்ஷரீ (16 அக்ஷரங்கள் பொருந்திய ) வித்யையை மட்டும் கொடுக்கலாகாது.

**स्वमातृजारवद्गोप्या विद्यैषेत्यागमा जगुः |**
**ततोऽतिगोपनीया मे सर्वपूर्तिकरी स्तुतिः ||११||**
**ஸ்வமாத்ரு’ ஜாரவத்³ கோ³ப்யா வித்³யைஷேத்யாக³மா ஜகு³: |**
**ததோ(அ)திகோ³பநீயா மே ஸர்வபூர்திகரீ ஸ்துதி: ||11||**

**मया कामेश्वरेणापि कृता सङ्गोपिता भृशम् |**
**மயா காமேஶ்வரேணாபி க்ரு’தா ஸங்கோ³பிதா ப்⁴ரு’ஶம் |**

தன் தாயின் கற்புக்குத் எதிர்பாராதவிதத்தில் தீங்கு ஏற்பட்டு விட்டால், அதை எவ்வளவு மறைவாக ஒருவன் வைத்துக் கொள்ளுவானோ அவ்வளவு மறைவாக இந்த ஷோடசாக்ஷரீ வித்யையை வைத்துக்கொள்ளவேண்டும் என்று வேதங்கள் கட்டளை இட்டு கூறுகின்றன. என்னாலும் காமேச்வரராலும் இயற்றப்பட்டு ரஹஸ்யமாக வைத்துக் கொண்டிருக்கிற, எல்லா அபீஷ்டங்களையும் நிறைவேற்றிக் கொடுக்கும் என் ஸ்தோத்திரத்தை அதைக் காட்டிலும் மிகவும் ரஹஸ்யமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

**मदाज्ञया वचोदेव्यश्चक्रुर्नामसहस्रकम् ||१२||**
**மதா³ஜ்ஞயா வசோ தே³வ்யஶ்ரக்ருர் நாமஸஹஸ்ரகம் ||12||**

**आवाभ्यां कथिता मुख्या सर्वपूर्तिकरी स्तुतिः |**
**सर्वक्रियाणां वैकल्यपूर्तिर्यज्जपतो भवेत् ||१३||**
**ஆவாப்⁴யாம்’ கதி²தா முக்²யா ஸர்வபூர்திகரீ ஸ்துதி: |**
**ஸர்வக்ரியாணாம்’ வைகல்யபூர்த்திர்யஜ்ஜபதோ ப⁴வேத் ||13||**

**सर्वपूर्तिकरं तस्मादिदं नाम कृतं मया |**
**तद्ब्रूहि त्वमगस्त्याय पात्रमेव न संशयः ||१४||**
**ஸர்வபூர்திகரம்’ தஸ்மாதி³த³ம்’ நாம க்ரு’தம்’ மயா |**
**தத்³ப்³ரூஹி த்வமக³ஸ்த்யாய பாத்ரமேவ ந ஸம்’ஶய: ||14||**

எங்கள் கட்டளைக்கு இணங்கி வாக் தேவதைகள் எனது ஸஹஸ்ரநாமங்களைச் செய்தார்கள். ஆனால் முக்கியமாக விளங்கும் இந்த “ஸர்வபூர்த்திகரீ” என்ற ஸ்துதியானது எங்களாலேயே மனமுவந்து இயற்றப்பட்டது. எந்த கர்மாவைச் செய்தாலும், அதில் அறிந்தோ அறியாமலோ ஏற்படும் குற்றங்குறைகள் அனைத்தும் இந்த ஸ்தோத்திரத்தை ஜபம் செய்த மாத்திரத்தில் நீங்கிவிடும். கர்மாவும் பூர்த்தியடையும். இந்தக் காரணத்தால் இந்த ஸ்துதிக்கு

“ஸர்வபூர்த்திகரம்” என்ற பெயர் என்னால் கொடுக்கப்பட்டது. இதைப் பெறுவதற்கு இந்த அகஸ்தியர் தகுதியுள்ளவர். ஆகையால் இந்த ஸ்தோத்திரத்தை நீர் அகஸ்தியருக்குச் சொல்லும்.

**पत्यस्य लोपामुद्राख्या मामुपास्तेऽतिभक्तितः |**
**अयं च नितरां भक्तस्तस्मादस्य वदस्व तत् ||१५||**
**பத்ந்யஸ்ய லோபாமுத்³ராக்²யா மாமுபாஸ்தே(அ)திப⁴க்திதஃ |**
**அயம்’ ச நிதராம்’ ப⁴க்தஸ்தஸ்மாத³ஸ்ய வத³ஸ்வ தத் ||15||**

இவருடைய மனைவியாகிய லோபாமுத்ரை என்னிடம் வியக்கத் தக்க பக்தியுடன் கூடி, என்னை மிகுந்த ஸ்ரத்தையுடன் உபாஸிக்கிறாள். இந்த அகஸ்தியரும் என்னிடம் மிகுந்த பக்தி கொண்டவர். ஆகையால் இவருக்கு இந்த ஸ்தோத்திரத்தை நீர் சொல்ல வேண்டும்.

**अमुञ्चमानस्त्वत्पादौ वर्षत्रयमसौ स्थितः |**
**एतज्ज्ञातुमतो भक्त्या हीदमेव निदर्शनम् ||१६||**
**அமுஞ்சமாநஸ்த்வத்பாதௌ³ வர்ஷத்ரயமஸௌ ஸ்தி²தஃ |**
**ஏதத் ஜ்ஞாதுமதோ ப⁴க்த்யா ஹீத³மேவ நித³ர்ஶநம் ||16||**

இந்த வித்யையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று மூன்று ஆண்டுகளாக உமது பாதங்களை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறாரன்றோ ! இதுவே இவருடைய தீவிரமான பக்திக்கு அத்தாட்சி.

**चित्तपर्याप्तिरेतस्य नान्यथा संभविष्यति |**
**सर्वपूर्तिकरं तस्मादनुज्ञातो मया वद ||१७||**
**சித்த பர்யாப்திரேதஸ்ய நாந்யதா² ஸம்ப⁴விஷ்யதி |**
**ஸர்வபூர்த்திகரம்’ தஸ்மாத³நுஜ்ஞாதோ மயா வத³ ||17||**

வேறு எவ்விதத்திலும் இந்த அகஸ்தியருக்கு மனச்சாந்தி உண்டாகாது. ஆகையால் “ஸர்வபூர்த்திகரீ” வித்யையை இவருக்கு உபதேஸிப்பாயாக. அதற்கு நான் உமக்கு அனுமதி கொடுக்கிறேன் "

**सूत उवाच —--**
**ஸூத உவாச —--**

**इत्युक्त्वाऽन्तरधादम्बा कामेश्वरसमन्विता |**
**अथोत्थाप्य हयग्रीवः पाणिभ्यां कुम्भसंभवम् ||१८||**
**இத்யுக்த்வா(அ)ந்தரதா⁴த³ம்பா³ காமேஶ்வர ஸமந்விதா |**
**அதோ²த்தா²ப்ய ஹயக்³ரீவஃ பாணிப்⁴யாம்’ கும்ப⁴ஸம்ப⁴வம் ||18||**

**संस्थाप्य निकटे वाचमुवाच भृशविस्मितः |**
**ஸம்’ஸ்தா²ப்ய நிகடே வாசமுவாச ப்⁴ரு’ஶவிஸ்மிதஃ |**





இவ்வண்ணம் உரைத்த பின்னர் காமேசுவரருடன் அந்த லலிதாம்பிகையானவள் மறைந்துவிட்டாள். பின்பு ஹயக்ரீவர் அகஸ்தியரைக் கையினால் தூக்கி அருகில் அமர்த்தி அளவிலா வியப்புடன் பின்வருமாறு சொல்லலுற்றார்.

**हयग्रीव उवाच —--**
**ஹயக்³ரீவ உவாச —--**

**कृतार्थोऽसि कृतार्थोऽसि कृतार्थोऽसि घटोद्भव ||१९||**
**க்ரு'தார்தோ²(அ)ஸி க்ரு'தார்தோ²(அ)ஸி க்ரு'தார்தோ²(அ)ஸி க⁴டோத்³ப⁴வ ||19||**

ஹயக்ரீவர் சொன்னது:-

"கும்ப முனிவரே! நீர் கிருதார்த்தர் ஆகிவிட்டீர் வாழ்க்கைப் பயனை அடைந்துவிட்டீர். இம்மூன்று ஆண்டுகளில் செய்த தவத்தின் நற்பயனை எய்திவிட்டீர். இதில் கொஞ்சமும் ஸந்தேகம் இல்லை.

**त्वत्समो ललिताभक्तो नास्ति नास्ति जगत्त्रये |**
**येनागस्त्य स्वयं देवी तव वक्तव्यमन्वशात् ||२०||**
**த்வத்ஸமோ லலிதாப⁴க்தோ நாஸ்தி நாஸ்தி ஜக³த்த்ரயே |**
**யேநாக³ஸ்த்ய ஸ்வயம்' தே³வீ தவ வக்தவ்யமந்வஶாத் ||20||**

அகஸ்திய முனிவரே! மூவுலகிலும் உமக்கு இணையான லலிதா தேவியின் பக்தர் யாருமே இல்லவே இல்லை. ஏனென்றால், அந்த பரதேவியே நேரில் தோன்றி உமக்கு உபதேசிக்க வேண்டியதை உபதேசிக்கும் படி எனக்கு ஆணையிட் - டிருக்கிறாள்.

**सच्छिष्येण त्वया चाहं दृष्टवानस्मि तां शिवाम् |**
**यतन्ते दर्शनार्थाय ब्रह्मविष्णवीशपूर्वकाः ||२१||**
**ஸச்சி²ஷ்யேண த்வயா சாஹம்' த்³ரு'ஷ்டவாநஸ்மி தாம்' ஶிவாம் |**
**யதந்தே த³ர்ஶநார்தா²ய ப்³ரஹ்மவிஷ்ண்வீஶபூர்வகா: ||21||**

எந்த தேவியை நேரில் காண, மும்மூர்த்திகள் ஆகிய ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் முதலியோர் முயலுகின்றனரோ அந்த மங்களமூர்த்தியாகிய தேவியை உத்தம சிஷ்யராகிய உம் மூலம் நானும் தரிசனம் செய்தேன்.

**अतः परं ते वक्ष्यामि सर्वपूर्तिकरं स्तवम् |**
**यस्य स्मरणमात्रेण पर्याप्तिस्ते भवेद् धृदि ||२२||**
**அத: பரம்' தே வக்ஷ்யாமி ஸர்வபூர்திகரம்' ஸ்தவம் |**
**யஸ்ய ஸ்மரணமாத்ரேண பர்யாப்திஸ்தே ப⁴வேத்³ த்⁴ரு'தி³ ||22||**

இனிமேல் “ஸர்வபூர்த்திகரீ” ஸ்துதியை உமக்கு நான் அம்பாளின் ஆணையின் படி உபதேசிக்கிறேன். இதை நினைத்த மாத்திரத்தில் உமது இருதயத்தில் திருப்தியும் சாந்தியும் நிலவும்.

**रहस्यनामसाहस्रादपि गुह्यतमं मुने ।**
**आवश्यकं ततोऽप्येतल्ललितां समुपासितुम् ॥२३॥**
**ரஹஸ்ய நாம ஸாஹஸ்ராத³பி கு³ஹ்யதமம்’ முநே ।**
**ஆவஶ்யகம்’ ததோ(அ)ப்யேதத் லலிதாம்’ ஸமுபாஸிதும் ॥23॥**

**तदहं संप्रवक्ष्यामि ललिताम्बानुशासनात् ।**
**தத³ஹம்’ ஸம்ப்ரவக்ஷ்யாமி லலிதாம்பா³நுஶாஸநாத் ।**

முனிவரே! தேவீ ஸஹஸ்ரநாமத்தைக் காட்டிலும் இது ரகஸ்யமானது. ஆகையால் லலிதா தேவியை உபாஸிக்க இது ஸஹஸ்ர நாமத்தைக் காட்டிலும் முக்கியத்வம் வாய்ந்தது. இந்த வித்யையை லலிதாம்பாளுடைய கட்டளைக்கு இணங்கித் தெளிவாக உமக்கு நான் உரைக்கிறேன்

**श्रीमत्पञ्चदशाक्षर्याः कादिवर्णक्रमान्मुने ॥२४॥**
**ஶ்ரீமத்பஞ்சத³ஶாக்ஷர்யாঃ காதி³வர்ண க்ரமாந் முநே ॥24॥**

**पृथग्विंशतिनामानि कथितानि घटोद्भव ।**
**आहत्य नाम्नां त्रिशती सर्वसंपूर्तिकारिणी ॥२५॥**
**ப்ரு’த²க்³ விம்’ஶதி நாமாநி கதி²தாநி க⁴டோத்³ப⁴வ ।**
**ஆஹத்ய நாம்நாம்’ த்ரிஶதீ ஸர்வஸம்பூர்திகாரிணீ ॥25॥**

ஶ்ரீமத் பஞ்சதசாக்ஷரீ மந்திரத்திலுள்ள 'க' முதலான 15 அக்ஷரங்களில் வரிசையாக ஒவ்வொரு அக்ஷரத்தையும் முதன்மையாகக் கொண்டது 20 நாமாக்கள். இவ்வாறு 15 அக்ஷரங்களுக்கும் (20×15) 300 நாமாக்கள். இந்த “ஸர்வஸம்பூர்த்திகர” ஸ்தோத்ரத்தில் கூறப்பட்டு இருக்கின்றன.

**रहस्यातिरहस्यैषा गोपनीया प्रयत्नतः ।**
**तां शृणुष्व महाभाग सावधानेन चेतसा ॥२६॥**
**ரஹஸ்யாதிரஹஸ்யைஷா கோ³பநீயா ப்ரயத்நதঃ ।**
**தாம்’ ஶ்ரு’ணுஷ்வ மஹாபா⁴க³ ஸாவதா⁴நேந சேதஸா ॥26॥**

இந்த வித்யை மிக மிக ரஹஸ்யமானது. கண்ணுங்கருத்துமாகக் காக்கப்பட வேண்டும். சிறந்த பாக்கியம் பொருந்திய அகத்தியரே! உமது சித்தத்தைக் குவித்து இந்த வித்யையைக் கேளும்.

**केवलं नामबुद्धिस्ते न कार्या तेषु कुम्भज ।**
**मन्त्रात्मकत्वमेतेषां नाम्नां नामात्मतापि च ॥२७॥**
**கேவலம்’ நாமபு³த்³தி⁴ஸ்தே ந கார்யா தேஷு கும்ப⁴ஜ ।**

**மந்த்ராத்மகத்வமேதேஷாம்' நாம்நாம்' நாமாத்மதாபி ச ||27||**

இந்த முன்னூறு நாமாக்களும் கேவலம் பெயர்கள் போன்றவை அல்ல. அவ்விதம் அவற்றை நினைக்கலாகாது. அகஸ்திய மாமுனிவரே! இவைகள் நாமாக்கள் போல் இருந்தாலும், உண்மையில் இவைகள் எல்லாம் மந்திரங்கள் என்பதை நீர் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**तस्मादेकाग्रमनसा श्रोतव्यं च त्वया सदा |**
**தஸ்மாதே³காக்³ரமநஸா ஶ்ரோதவ்யம்' ச த்வயா ஸதா³ |**

ஆகையால் மனதை ஒரே நிலையில் நிறுத்திக் கொண்டு, இம்மந்திரங்களை நீர் ஸ்ரத்தையுடன் கேட்க வேண்டும்.

**सूत उवाच —-**
**ஸூத உவாச —-**

**इत्युक्त्वा तं हयग्रीवः प्रोचे नामशतत्रयम् ||२८||**
**இத்யுக்த்வா தம்' ஹயக்³ரீவ: ப்ரோசே நாமஶதத்ரயம் ||28||**

ஸூதபௌராணிகர் சொல்கிறார்:-

"இப்படி உரைத்தபின் ஹயக்ரீவரானவர் ஸ்ரீ லலிதா தேவியின் முன்னூறு நாமங்களாகிய மந்திரங்களை அகஸ்திய மாமுனிவருக்கு உபதேசித்தார்".

**बहुकालं सुभक्तिमहिम्ना गुरुपादाम्बुजमवलम्ब्य स्थिताय कुंभयोनिमुनये शिवदम्पतिकृतनाम - शतत्रयोक्त्या प्रेरितो हयग्रीव उवाच —---**

**ப³ஹுகாலம்' ஸுப⁴க்திமஹிம்னா கு³ருபாதா³ம்பு³ஜமவலம்ப்³ய ஸ்தி²தாய கும்ப⁴யோனிமுநயே ஶிவத³ம்பதிக்ரு'தநாமஶதத்ரயோக்த்யா ப்ரேரிதோ ஹயக்³ரீவ உவாச —-----**

**ककाररूपा कल्याणी कल्याणगुणशालिनी |**
**कल्याणशैलनिलया कमनीया कलावती ||१||**
**ககாரரூபா கல்யாணீ கல்யாணகு³ணஶாலினீ |**
**கல்யாணஶைலநிலயா கமனீயா கலாவதீ ||1||**

**ककाररूपा | (1)**
**ககாரரூபா | 1**

**ककाररूपेति । ककारः कवर्णः रूपं ज्ञापकविशेषणं यस्याः सा, कादिविद्याविग्रहेत्यर्थः । अथवा ककारः रूपं वाचकं येषां ते ककाररूपाः हिरण्यगर्भः उदकम् उत्तमाङ्गं सुखादयश्च । हिरण्यगर्भनिष्ठजगद्धारकजगत्कर्तृत्वादिगुणवत्त्वं ककारस्य व्यञ्जनादिमवर्णत्वेन वर्तत इति तद्वाच्य-**

**तया तथा । उदकनिष्ठमन्त्रादिद्वारा जगत्सञ्जीवनहेतुत्वमपि ककारस्य विद्याग्रिमवर्णतयाऽस्तीनि तद्पा वा । सर्वेषां प्राणिनां शिरस्यमृतमस्तीत्ति योगमार्गेण कुण्डलिनीगमने तत्रत्यनत्प्रवाहाप्लुतयोगिनामी - श्वरसाम्यं जायत इति योगशास्त्रेषु प्रसिद्वम् । तद्वत् कवर्णः मन्त्रादिमभागस्थः तत्पुरश्चर्यापरायणानां शिवभावमेव यच्छतीति षा तद्रूपेत्यर्थः । 'कं ब्रह्म खं ब्रह्म' (छान्दोग्योपनिषत् ४- १०) इति श्रुतेः, दहराकाशस्य सुखस्वरूपत्वेन परमप्रेमास्पदतया अभिलाषविषयत्ववत् ककारोऽप्यतिप्रीतिविषयमूल - मन्त्रादिमाक्षरतया अभ्यर्हितत्वाद्वा तद्रूपेत्यर्थः ॥**

**ககாரரூபேதி | ககாரঃ கவர்ணঃ ரூபம்' ஜ்ஞாபகவிஶேஷணம்' யஸ்யாঃ ஸா, காதி³வித்³யாவிக்³ரஹேத்யர்த²ঃ | அத²வா ககாரঃ ரூபம் வாசகம்' யேஷாம்' தே ககாரரூபாঃ ஹிரண்யக³ர்ப⁴ঃ உத³கம் உத்தமாங்க³ம்' ஸுகா²த³யஶ்ச | ஹிரண்யக³ர்ப⁴ - நிஷ்ட²ஜக³த்³தா⁴ரகஜக³த்கர்த்ரு'த்வாதி³கு³ணவத்த்வம்' ககாரஸ்ய வ்யஞ்ஜநாதி³ம - வர்ணத்வேன வர்தத இதி தத்³வாச்யதயா ததா² | உத³கநிஷ்ட²மந்நாதி³த்³வாரா ஜக³த்ஸஞ்ஜீவனஹேதுத்வமபி ககாரஸ்ய வித்³யாக்³ரிமவர்ணதயா(அ)ஸ்தீனி தத்³பா வா | ஸர்வேஷாம்' ப்ராணினாம்' ஶிரஸ்யம்ரு'தமஸ்தீத்தி யோக³மார்கே³ண குண்ட³லினீக³மநே தத்ரத்யனத்ப்ரவாஹாப்லுதயோகி³நாமீஶ்வரஸாம்யம்' ஜாயத இதி யோக³ஶாஸ்த்ரேஷு ப்ரஸித்³வம் | தத்³வத் கவர்ணঃ மந்த்ராதி³மபா⁴க³ஸ்த²ঃ தத்புரஶ்சர்யாபராயணானாம்' ஶிவபா⁴வமேவ யச்ச²தீதி ஷா தத்³ரூபேத்யர்த²ঃ | 'கம் ப்³ரஹ்ம க²ம்' ப்³ரஹ்ம' (சா²ந்தோ³க்³யோபநிஷத் 4-10) இதி ஶ்ருதேঃ, த³ஹராகாஶஸ்ய ஸுக²ஸ்வரூபத்வேன பரமப்ரேமாஸ்பத³தயா அபி⁴லாஷவிஷயத்வவத் ககாரோ - (அ)ப்யதிப்ரீதிவிஷயமூலமந்த்ராதி³மாக்ஷரதயா அப்⁴யர்ஹிதத்வாத்³வா தத்³ரூபேத் - யர்த²ঃ ||**

காதி வித்யா என்று பிரஹ்ம வித்யாவிற்கு ஒரு பெயர் உண்டு. காதி வித்தையையே சரீரமாக உடைய பரதேவதையை ஞாபகபடுத்தக் கூடிய ஒரு அக்ஷரம் 'க' என்னும் வர்ணம். வித்யா ஸ்வரூபிணியாக இருக்கின்ற பரதேவதையை ஞாபக விக்ஷேணமாய் வைத்து இருக்ககூடியது 'க' என்னும் அக்ஷரம்.

இந்த 'க' என்னும் அக்ஷரமே ஒரு பதமாய் சொல்லப் படுகிறது. இந்த பதத்திற்கு 'ஹிரண்ய கர்ப்பன்' (தண்ணீர், சரீரத்தின் உத்தமமான அங்கமான 'சிரஸ்' இதர) ஆனந்த ஸ்வரூபம் முதலிய அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த 'க' என்னும் எழுத்தானது மெய் எழுத்துக்களிலேயே (வட மொழி) முதல் எழுத்தாகும். அப்படிப் பட்ட காரணத்தினால் இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலிய தர்மங்களோடு கூடிய 'ஹிரண்ய கர்ப்ப' ஸ்வரூபமான ஸகுண ப்ரம்மனை குறிக்கும். அதனால் 'ககார ரூபா'.

'ககாரத்தின் மற்றோரு பொருளான தண்ணீரே (ஜலம்) அன்ன உற்பத்தி, அன்னத்தின் விருத்தி, ஸர்வ பிரபஞ்சத்தை ஜீவிக்க செய்யக் கூடிய காரணமாய் இருக்க கூடியது. இந்த 'க' என்னும் அக்ஷர ஸ்வரூபம்.

மூல வித்தையின் முதல் எழுத்து இந்த 'க'. அதனால் அது மற்ற பீஜங்களையும் போஷித்துக் காப்பாற்றுகின்றது. அதனால் அது 'ககார ரூபா'.

ஸர்வ பிராணிகளுக்கும் சிரஸிலே அம்ருதம் இருப்பதாக யோக சாஸ்திரத்தில் கூறப்படுகிறது. யோக சாதனையால் ‘மூலாதாரத்தில்’ அடங்கி இருக்கும் குண்டலினீ சக்தியை எழுப்பி ‘ஸ்வாதிஷ்டானம்’, ‘மணிபூரகம்’ , ‘அனாகதம்’ , ‘விஷுத்தி’ மற்றும் ‘ஆக்ஞா’ சக்கரங்களின் வழியாக சிரஸில் இருக்கும் ‘ஸஹஸ்ராரம்’ வரைக்கும் மேலெழுப்பச் செய்து, அங்கு இருக்கும் அம்ருதத்தை சுரக்கும் படி செய்யக் கூடிய சுபாவம் குண்டலினி யோகிகளுக்கு உண்டு. இங்ஙனமே இந்த ‘க’ என்னும் வர்ணம் காதி வித்தையின் முதல் பீஜம் ஆகும். அதனால் அதை தியானிப்பவர்கள் ஈஸ்வர பதத்தை தடையின்றி அடைகின்றார்கள் என்று ‘ககார’ ரூபத்தின் பெருமை கூறப்படுகின்றது.

**क** (க) ப்ரம்ம , **ख** (க²) ப்ரம்மா என்ற ஸ்ருதிப் படி, சிதாகாச வடிவமான ஹ்ருதய ஆகாசமானது ஆனந்த ஸ்வரூபமாக இருக்கின்றது. ஆனந்தம் என்ற பொருள்படும் ககாரமானது முமுக்ஷுக்கள் மோக்ஷத்திற்கான ஸ்ரத்தையுடன் விரும்பக் கூடிய ப்ரம்ம வித்யா மூல மந்திரத்தின் முதல் அக்ஷரமாய் இருக்கின்றது. அதுவே ‘ககார’ ரூபம்.

**ॐ ककाररूपायै नमः ||१||**
**ஓம் ககாரரூபாயை நம꞉ ||1||**

**कल्याणी | (2)**
**கல்யாணீ | 2**

**कल्याणानि सुखानि युवसार्वभौमानन्दादारभ्य ब्रह्मानन्दपर्यन्तं तैत्तिरीयकादो प्रतिपादितानि । तत्तदुपाधिभेदेष्ववच्छिन्न- सरूपतया तानि कल्याणशब्दद्वाच्यानि, ‘एतस्यैवानन्दस्य अन्यानि भूतानि मात्रामुपजीवन्ति' (बृहदारण्यकम् ४-३) इति श्रुतेः । समाष्टव्याष्टिमत्त्वमुपहितस्वरूपेण सम्भवतीति मतुप्समासोपपत्तिः । तथा च राहोः शिर इतिवत् समासान्तर्गतषष्ठयर्थभेदत्याविवक्षिततया आनन्दैकविग्रहवतत्यिर्थः, ‘विज्ञानमानन्दं ब्रह्म' (बृहदारण्यकम् ३-९-२८) इति श्रुत्युक्तब्रह्म-स्वरूपलक्षणवतीत्यर्थः ||**

**கல்யாணானி ஸுகா²னி யுவஸார்வபௌ⁴மானந்தா³தா³ரப்⁴ய ப்³ரஹ்மானந்த³ - பர்யந்தம்’ தைத்திரீயகாதோ³ ப்ரதிபாதி³தானி | தத்தது³பாதி⁴பே⁴தே³ஷ்வவச்சி²ன் - னஸரூபதயா தானி கல்யாணஶப்³த³த்³வாச்யானி, ‘ஏதஸ்யைவானந்த³ஸ்ய அன்யானி பூ⁴தானி மாத்ராமுபஜீவந்தி' (ப்³ரு’ஹதா³ரண்யகம் 4-3) இதி ஶ்ருதே꞉ | ஸமாஷ்டவ்யஷ்டிமத்த்வமுபஹிதஸ்வரூபேண ஸம்ப⁴வதீதி மதுப்ஸமாஸோபபத்தி꞉ | ததா² ச ராஹோ꞉ ஶிர இதிவத் ஸமாஸாந்தர்க³தஷஷ்ட²யர்த²பே⁴த³த்யாவிவக்ஷித - தயா ஆனந்தை³கவிக்³ரஹவதத்யிர்த²꞉, ‘விஜ்ஞானமானந்த³ம்’ ப்³ரஹ்ம' (ப்³ரு’ஹதா³ர - ண்யகம் 3-9-28) இதி ஶ்ருத்யுக்தப்³ரஹ்மஸ்வரூபலக்ஷணவதீத்யர்த²꞉ ||**

கல்யாணி என்றால் கல்யாண குணங்கள் என்று அர்த்தம். மங்கள குணங்கள் என்றும் கூறுவார். அவைகள் சுகம். அவைகள் ஸுகஸ்வரூபங்களாகும். விஷய ஸுகங்கள் ஸ்ருதியிலே கூறப்பட்ட ஆரோக்யம், இளமை, ஸர்வபௌவமத்வம் ஆகும். சதுர்முக ப்ரம்மா முதல் ஒரு சிறு புல் வரைக்கும் இருக்க கூடிய ஸரீர

உபாதிகளை உடையவர்களில் அனுபவிக்க கூடிய விஷய ஸுகம். இவை நிருபாதிக ஸ்வருபமான ஆனந்த சமுத்திரத்தில் இருந்து தெளித்து வரும் ஒரு சிறு திவலையாகும்.

ஆனந்தமே ஸ்வரூபமாக வடிவமாக இருப்பவள் கல்யாணி "விஜ்ஞானம் ஆனந்தம் ப்ரஹ்ம" என்ற ஸ்ருதிப் படி நிரங்குஸ நித்யானந்தஸ்வபமாய் ப்ரம்ம லக்ஷணமாய் விளங்கக் கூடிய பரதேவதை என்று பொருள்படுகிறது. இதையே வடிவனைத்தையும் தந்த வடிவற்ற வன்பொருள் என்று தமிழ் வேதாந்தம் சித்தரிக்கின்றது

**ॐ कल्याण्यै नमः ||२||**

**ஓம் கல்யாண்யை நம: ||2||**

**कल्याणगुणशालिनी | (3)**

**கல்யாணகு3ணஶாலினீ | 3**

**कल्याणाः सुखकर्तारः ये गुणाः सत्यकामसत्यसङ्कल्प सर्वाधिपत्यसर्वेशानत्ववामनीत्वसंयद्वा - मत्वादयः, ते अस्याः शालयन्त इति तथा, एनां शोभयन्तीति वा, तै: शाल्यत इति वा कल्याणगुणशालिनी । तथा च कल्याणाश्च ते गुणाश्च कल्याणगुणाः शालयन्त्येनामिति कल्याणगुणशालिनी; अस्मिन् समासे देवतायाः पराधीनगुणवत्त्वं स्वतः शुद्धचैतन्यत्वं च स्फुरितम् । कल्याणगुणै: शाल्यत इत्यत्र गुणवत्त्वमात्रं देवतायाः द्योत्यते । तस्यौपाधिकत्वं वैदिकमपि स्तुतौ तदप्रकटनं न दोषाय । यदि गुणानामारोपितत्वेन तत्सङ्कीर्तनस्य भेदबुद्धिसमये तत्कृपाप्राप्तिहेतुत्वेनावश्यकत्वम्, तथापि तदपवादपुरःसरं शुद्धचैतन्याभेदध्यानरूपमुख्यभजनं मुख्यमेवेति संपादयितुं स्वगुरूपदिष्टमार्गेण सुकरमेवेति नातिविस्तार्यते ||**

**கல்யாணாः ஸுக2கர்தாரः யே கு3ணாः ஸத்யகாமஸத்ய ஸங்கல்ப ஸர்வாதி4பத்ய - ஸர்வேஶானத்வவாமனீத்வஸம்'யத்3வாமத்வாத3யः, தே அஸ்யாः ஶாலயந்த இதி ததா2, ஏனாம்' ஶோப4யந்தீதி வா, தைः ஶால்யத இதி வா கல்யாணகு3ணஶாலினீ | ததா2 ச கல்யாணாஶ்ச தே கு3ணாஶ்ச கல்யாணகு3ணாः ஶாலயந்த்யேநாமிநி கல்யாணகு3ணஶாலினீ; அஸ்மின் ஸமாஸே தே3வதாயாः பராதீ4னகு3ணவத்த்வம்' ஸ்வதः ஶுத்3த4சைதன்யத்வம்' ச ஸ்பு2ரிதம் | கல்யாணகு3ணை: ஶால்யத இத்யத்ர கு3ணவத்த்வமாத்ரம்' தே3வதாயாः த்3யோத்யதே | தஸ்யௌபாதி4கத்வம்' வைதி3கமபி ஸ்துதௌ தத3ப்ரகடனம்' ந தோ3ஷாய | யதி3 கு3ணாநாமாரோபிதத்வேன தத்ஸங்கீர் - தனஸ்ய பே4த3பு3த்3தி4ஸமயே தத்க்ரு'பாப்ராப்திஹேதுத்வேனாவஶ்யகத்வம், ததா2 - பி தத3பவாத3புரःஸரம்' ஶுத்3த4சைதன்யாபே4த3த்4யானரூபமுக்2யப4ஜனம்' முக்2ய - மேவேதி ஸம்பாத3யிதும்' ஸ்வகு3ரூபதி3ஷ்டமார்கே3ண ஸுகரமேவேதி நாதிவிஸ் - தார்யதே ||**

மங்களத்தை தரக்கூடிய குணத்தோடு கூடியவள். ஸுகத்தை உண்டு பண்ணக் கூடிய சத்திய காமத்வம், சத்ய சங்கல்பத்வம், ஆதிக்யத்வம் போன்ற குணங்கள் கல்யாண குணங்கள் என்று கூறப் படுகின்றன. இந்த குணங்கள் பரிசின்னமாக இருந்தாலும் பரிசின்னமான குணங்கள் அபரிச்சின்னமான பரதேவைவதையில்

பரகாசிக்கின்றன. மித்யா ஆத்ம ப்ரகாசனாய என்ற வாக்கியத்தின் பிரகாரம், இந்த கல்யாண குணங்களால் பரதேவதை போற்றத்தக்கவளாக இருக்கிறாள். அறியத் தக்கவள். ஸுத்த சைதன்ய ரூபமாய் உள்ள அந்த சித் ஸ்வரூபத்திற்கு குணங்கள் ஸ்வாதீனமாக இருப்பதால் வாஸ்தவமாய்ப் பார்த்தால் குணங்களே இல்லை.

"ஸாக்ஷி சேதா கேவலோ நிற்குணஸ்ச" என்று உபநிஷத் அந்த வன்பொருளை போற்றுகின்றது. நிற்குணம் என்று ஸஹஸ்ரநாமமும் வர்ணிக்கின்றது. அதனால் பரதேவதையிடத்துலே குணங்கள் ஆரோபிக்கப்பட்டு அந்த குணங்கள் பிரகாசிக்கப்படுகின்றன. இருந்தாலும் உபாதியால் குணங்களை கற்பித்து துதிப்பது தோஷம் என்று கூற முடியாது. பேத புத்தியோடு பக்தர்களுக்கு ஸகுண ப்ரம்ம ஸ்வரூப ஸ்தோத்திரத்தினால் பராசக்தியின் கருணை உண்டாகிறது. இருப்பினும் ஆரோபிக்கப் பட்ட குணங்களை அபவாதம் செய்து அபேதமா இருக்க கூடிய ஸுத்த சைதன்யம் என்ற அறிவோடு புரிவது சிறந்ததாகும்.

நிற்குண விசாரம் என்பது நிற்குண உபாசனை என்பது ஜீவ சைதன்ய ஸ்வரூபத்தின் ஒரே தன்மையை இது கொடுக்க கூடிய வாக்கியங்களை பற்றி சிந்திப்பது. இத்தகைய நிற்குண உபாதியை (நிற்குணம் என்றால் உபாதி ரஹிதம் என்று சொல்லக்கூடிய விஷயத்தை) குரு முகமாக தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

'ஸ்வாதந்தர்யேண சாஸ்திர, அன்வேஷணம் ந குர்யாத்' என்று உபநிஷத்தில் பகவான் சங்கரரின் வாக்கியம் இருக்கிறது. ஆகவே இந்த வித்யா குருமுகமாகவே நாம் பெற வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்

**ॐ कल्याणगुणशालिन्यै नमः ||३||**

**ஓம் கல்யாண - கு³ண - ஶாலின்யை நமஃ ||3||**

### कल्याणशैलनिलया | (4)
**கல்யாணஶைலநிலயா | 4**

**शिलानां विकारः शैलः शिलाघन इत्यर्थः, कल्याणं सुखमेव शैलः घनीभूत इत्यर्थः, तस्मिन् कल्याणशैले स्वस्वरूपे आनन्दघने निलयति तिष्ठतीति कल्याणशैलनिलया, 'स भगवः कस्मिन् प्रतिष्ठित इति स्वे महिम्नीति होवाच' (छान्दोग्योपनिषत् ७-२४) इति श्रुतेः, देवदत्तः स्वस्मिन्नेव स्वयं वर्तते इति लौकिकप्रयोगाच्च, देवतायाः स्वस्वरूपे स्वावस्थानं युज्यत इति । कल्याणमेव शैलवत् घनीभूतं कल्याणशैलः आनन्दमयकोशः कल्याणशैलो निलयः यस्याः सा इति बहुव्रीहिसमासः न विरुद्धः, 'ब्रह्म पुच्छं प्रतिष्ठा' (तैत्तिरीयोपनिषत् २-५) इति उक्तश्रुतिप्रामाण्यात् । अथवा कल्याणशैलः महामेरुः निलयं गृहं यस्याः सा तथा; सुमेरुमध्यशृङ्गस्थेत्यर्थः ||**

**ஶிலானாம்' விகாரஃ ஶைலஃ ஶிலாக⁴ன இத்யர்த²ஃ, கல்யாணம்' ஸுக²மேவ ஶைலஃ க⁴னீபூ⁴த இத்யர்த²ஃ, தஸ்மின் கல்யாணஶைலே ஸ்வஸ்வரூபே ஆனந்த³க⁴நே நிலயதி திஷ்ட²தீதி கல்யாணஶைல நிலயா, 'ஸ ப⁴க³வஃ கஸ்மின் ப்ரதிஷ்டி²த இதி ஸ்வே**

**மஹிம்நீதி ஹோவாச' (சா²ந்தோ³க்³யோபநிஷத் 7-24) இதி ஶ்ருதே:, தே³வத³த்த: ஸ்வஸ்மின்னேவ ஸ்வயம்' வர்ததே இதி லௌகிகப்ரயோகா³ச்ச, தே³வதாயா: ஸ்வஸ்வரூபே ஸ்வாவஸ்தா²னம்' யுஜ்யத இதி | கல்யாணமேவ ஶைலவத் க⁴னீபூ⁴தம்' கல்யாணஶைல: ஆனந்த³மயகோஶ: கல்யாணஶைலோ நிலய: யஸ்யா: ஸா இதி ப³ஹுவ்ப்³ரீஹிஸமாஸ: ந விருத்³த⁴:, 'ப்³ரஹ்ம புச்ச²ம்' ப்ரதிஷ்டா²' (தைத்திரீயோ - பநிஷத் 2-5) இதி உக்த்தஶ்ருதிப்ராமாண்யாத் | அத²வா கல்யாணஶைல: மஹாமேரு: நிலய க்³ரு'ஹம்' யஸ்யா: ஸா ததா²; ஸுமேருமத்⁴யஶ்ரு'ங்க³ஸ்தே²த்யர்த²: ||**

கல்யாண ஶைல நிலயா லலித்தாம்பாளுக்கு நான்காவது நாமம். கல்யாணம் என்ற வார்த்தையே ஆனந்தம், ஸுகம் என்று அர்த்தம். ஶைலம் என்பது ஶிலா என்பதில் இருந்து வந்தது. ஒரு கல் அல்லது ஒரு மலை என்று பொருள் கொள்ளலாம். இதை சரியாக சொல்வதானால் மலைச் சிகரம் அல்லது மலையின் உச்சி. இதை சமஸ்கிருதத்தில் ஶிலா கனம் என்று சொல்லவார்கள். அப்படிப்பட்ட ஆனந்தமான இடத்தில் ஆனந்த ஸ்வரூபமான லலிதாம்பிகையிடத்தில் துக்கம் ஒரு சிறு திவலை கூடயில்லை. ஆனந்தத்தின் இருப்பை உடையவள். எப்படி மலையின் உச்சியில் மண், மரம், கல் என்று எதுவும் இல்லையோ, அது போல ஆனந்த கனமாய் இருக்கக் கூடியவள் லலிதாம்பிகை.

ஸ்ருதி சொல்கிறது **'स भगवः कस्मिन् प्रतिष्ठित इति स्वे महिम्नीति होवाच' 'ஸ ப⁴க³வ: கஸ்மின் ப்ரதிஷ்டி²த இதி ஸ்வே மஹிம்நீதி ஹோவாச'** அதாவது பிரம்ம அபின்னமான சித் ஸ்வரூபமானது இங்கே நிலை பெற்றுயிருக்கிறது. அது சுயமாக உள்ள தனது விபூதி ஆகும். அந்த விபூதியான ஆனந்தத்தில் அது ப்ரதிஷ்டையாகி இருக்கிறது என்று ஸ்ருதி கூறுகிறது.

அந்த வடிவத்தை லலிதாம்பிகையாக பார்க்கும் போது ஆனந்தமய கோசமே நிலையமாக உடையவள் என்று சொல்லாம் **'ब्रह्म पुच्छं प्रतिष्ठा' 'ப்³ரஹ்ம புச்ச²ம்' ப்ரதிஷ்டா'** என்ற ஸ்ருதி வாக்கியத்தை இதற்கு ஒரு ப்ரமாணமாய் எடுத்துக் கொள்ளலாம். அல்லது **सुमेरुमध्य- शृङ्गस्थेत्यर्थः ஸுமேருமத்⁴ய- ஶ்ரு'ங்க³ஸ்தா** என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் கூறுப்பட்ட மஹாமேருவை இருப்பிடமாக கொண்டவள் லலிதாம்பிகை என்று இந்த நாமம் விளக்குகின்றது.

**ॐ कल्याणशैलनिलयायै नमः ||४||**
**ஓம் கல்யாண - ஶைலநிலயாயை நம: ||4||**

**कमनीया | (5)**
**கமநீயா | 5**

**परमानन्दस्वरूपत्वेन परमप्रेमास्पदा, 'को ह्येवान्यात्कः प्राण्यात् । यदेष आकाश आनन्दो न स्यात्' (तैत्तिरीयोपनिषत् २-७) इति श्रुतेः । सुखस्य मनोहरत्वेन सर्वेप्साविषयत्ववत् मायावृतानां सुखप्रापकत्वेन स्वस्वेष्टदेवतासु प्रीत्यतिशयेन तत्पूजादौ प्रवर्तमानानां तत्फलदानेन मनोहरत्वाद्वा कमनीया । ज्ञानिनामानन्दघनीभावात्मकसुन्द्रमूर्तिमत्तया वा कमनीया ||**

**பரமானந்த³ஸ்வரூபத்வேன பரமப்ரேமாஸ்பதா³, 'கோ ஹ்யேவான்யாத்கः ப்ராண் - யாத் | 'யதே³ஷ ஆகாஶ ஆனந்தோ³ ந ஸ்யாத்' (தைத்திரீயோபநிஷத் 2-7) இதி ஶ்ருதேः | ஸுக²ஸ்ய மனோஹரத்வேன ஸர்வேப்ஸாவிஷயத்வவத் மாயாவ்ரு'தானாம்' ஸுக² - ப்ராபகத்வேன ஸ்வஸ்வேஷ்டதே³வதாஸு ப்ரீத்யதிஶயேன தத்பூஜாதௌ³ ப்ரவர்தமா - னானாம்' தத்ப²லதா³னேன மனோஹரத்வாத்³வா கமநீயா | ஜ்ஞானிநாமானந்த³ - க⁴னீபா⁴வாத்மகஸுந்த்³ரமூர்திமத்தயா வா கமநீயா ||**

'கமநீயா' என்றால் பரமப்ரேமைக்கு விஷயமாக இருக்கக் கூடியவள். ஆனந்தமே ஸ்வருபமாக இருப்பதனால் **'को ह्येवान्यात्कः प्राण्यात् । यदेष आकाश आनन्दो न स्यात्' 'கோ ஹ்யேவான்யாத்கः ப்ராண்யாத் | 'யதே³ஷ ஆகாஶ ஆனந்தோ³ ந ஸ்யாத்'** என்று தைத்திரீய ஸ்ருதி சொல்கிறது.

இந்த ஆனந்த சுகமானது மனத்தை அபகரிக்க கூடிய ஒரு தன்மையை உடையது. எல்லோருக்கும் எப்போழுதும் ஆனந்தம் அல்லது சுகத்தில் தான் ஈடுபாடு இருக்கிறது. ஆசையோடு விரும்பிய பொருள் கிட்டிய பொழுது அந்த சுகமானது ஏற்படுகிறது. விஷய சுகம் என்பது மனத்தினுடைய மாற்றம். அல்லது பரிணாமம். அதனால் தான் அந்த சுகமானது மனத்தை அபகரிக்கிறது என்று சொல்லப் படுகிறது. பரம ப்ரேமைக்கு விஷயமாக இருக்க கூடியவள் பரதேவதையான லலிதாம்பிகை. அதனால் மாயையின் மயக்கத்திற்கு உட்பட்டவர்கள் மாயையின் வசத்திலே இருக்க கூடிய ஜீவர்கள். அவர்கள் விரும்பக்கூடிய விஷய சுகங்களை பெறுவதற்காக தங்களுக்கு இஷ்டமான தேவதையை அவர்கள் உபாசிக்கின்றார்கள்

**ये यथा मां प्रपद्यन्ते तांस्तथैव भजाम्यहम् | मम वर्त्मानुवर्तन्ते मनुष्या: पार्थ सर्वश: ||11||**
**யே யதா² மாம்' ப்ரபத்³யந்தே தாம்'ஸ்ததை²வ ப⁴ஜாம்யஹம் |**
**மம வர்த்மாநுவர்தந்தே மனுஷ்யா: பார்த² ஸர்வஶ: || 11|| (கீதை -4-11)**

கீதையில் சொன்னது போல அவர்கள் எப்படி உபாசிக்கின்றார்களோ அப்படி பக்தர்கள் விரும்பிய ஆனந்தரூப அல்லது ஸுகஸ்வரூப பலனை பரதேவதை அளிக்கின்றாள். அவரவருக்கு இஷ்ட தேவதையாக இருந்து அதை அனுக்கிரஹம் செய்கிறாள் என்பதினால் கமநீயா என்று கூறப்படுகிறது.

ஞானிகளுக்கு முமுக்ஷுக்களுக்கு **'न वा अरे सर्वस्य कामाय सर्वं प्रियं भवत्यात्मनस्तु कामाय सर्वं प्रियं भवति' 'ந வா அரே ஸர்வஸ்ய காமாய ஸர்வம்' ப்ரியம்' ப⁴வத்யாத்மனஸ்து காமாய ஸர்வம்' ப்ரியம்' ப⁴வதி'** என்ற ஸ்ருதி வாக்கியத்தின் படி ஆனந்த கனம் கேவல ஆனந்த ஸ்வரூபமாகவும் ஆத்ம ஸ்வரூபமாகவும் மனோகர சுந்தர ஸ்வருபமாயும் இருப்பதால் கமநீயா என்ற இந்த பெயர் லலிதாம்பிகைக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

அடிப்படையில் சைதன்யமே சத்தியம் என்று இருந்தாலும் அதை உருவக படுத்தி பார்க்கும் பொழுது, எதை பார்க்க முடியாதோ அதை பார்க்க கூடிய உருவத்தில்

ஏற்றி வைத்து பார்ப்பது என்பது நம்முடைய வழிபாட்டு முறையினால் கமநீயம் என்ற வார்த்தை பரதேவதைக்கு பொருத்தமாய் இருக்கிறது .

**ॐ कमनीयायै नमः ||५||**
**ஓம் கமநீயாயை நம꞉ ||5||**

**कलावती | (6)**
**கலாவதீ | 6**

**कलाः शिरः पाण्याद्यवयवाः, चतुःषष्टिकलाः विद्यारूपा वा, चन्द्रकला वा, भक्तध्यानाय अस्याः सन्तीति कलावती ||**

**கலா꞉ ஶிர꞉ பாண்யாத்³யவயவா꞉, சது꞉பஷ்டிகலா꞉ வித்³யாரூபா வா, சந்த்³ரகலா வா, ப⁴க்தத்⁴யானாய அஸ்யா꞉ ஸந்தீதி கலாவதீ ||**

கலைகள் என்று சொன்னால் அவயவங்கள் என்று கருத்துக் கொள்ளலாம். அல்லது ஆய கலைகள் 64 என்றும் எடுத்துக் கொள்ளலாம். அதேப் போல சந்திரனுடைய வளரும் தன்மையும் தேயும் தன்மையும் கலைகள் என்று எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஒரு வாக்கியம் இருக்கின்றது:

**यतीनां मन्त्रिणां चैव ज्ञानिनां योगिनां तथा । ध्यानपूजानिमित्तं हि तनुं गृह्णाति मायया ||**
**யதீனாம்' மந்த்ரிணாம்' சைவ ஜ்ஞானினாம்' யோகி³னாம்' ததா² |**
**த்⁴யானபூஜாநிமித்தம்' ஹி தனும்' க்³ரு'ஹ்ணாதி மாயயா || (ஸூத ஸம்ஹிதா)**

பக்தர்களுக்கு, ஞானிகளுக்கு அவர்களில் த்யானத்திற்காகவே பரமேஸ்வரி கை கால் முதலிய அவயவங்களோடும், சரீரத்தோடும் ஸர்வசாஸ்திரமே வடிவேடுத்த ரூபத்தோடும், சந்திர கலா ரூபத்தோடும் இருக்கின்றாள் என்று எடுத்துக் கொள்ளலாம். அதனால் கலாவதீ என்றால் கலையை உடையவள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

**ॐ कलावत्यै नमः ||६||**
**ஓம் கலாவத்யை நம꞉ ||6||**

**कमलाक्षी कल्मषघ्नी करुणामृतसागरा |**
**कदम्बकाननावासा कदम्बकुसुमप्रिया ||२||**
**கமலாக்ஷீ கல்மஷக்⁴னீ கருணாம்ரு'தஸாக³ரா |**
**கத³ம்ப³காநநாவாஸா கத³ம்ப³ - குஸும - ப்ரியா ||2||**

**कमलाक्षी | (7)**
**கமலாக்ஷீ | 7**

कमले इव अक्षिणी यस्याः सा तथा । कमलायाः लक्ष्म्याः अक्षिशब्देन तन्निमित्तकं ज्ञानं लक्ष्यते विषयतासंबन्धेन तद्वतीति वा । कमलायाः ऐहिकामुष्मिकश्रियः हेतुभूते अक्षिणी यस्याः सा — इति स्वकीयेक्षणमात्रेण महैश्वर्यप्रापिकेति भावः ॥

**கமலே இவ அக்ஷிணீ யஸ்யா: ஸா ததா² | கமலாயா: லக்ஷ்ம்யா: அக்ஷிஶப்³தே³ன தந்நிமித்தகம்' ஜ்ஞானம்' லக்ஷ்யதே விஷயதாஸம்ப³ந்தே⁴ன தத்³வதீதி வா | கமலாயா: ஐஹிகாமுஷ்மிகஶ்ரிய: ஹேதுபூ⁴தே அக்ஷிணீ யஸ்யா: ஸா' இதி ஸ்வகீயேக்ஷணமாத்ரேண மஹைஶ்வர்யப்ராபிகேதி பா⁴வ: ||**

'அக்ஷி' என்றால் கண். 'கமலம்' என்றால் தாமரை பூ. மலர்ந்த தாமரை பூவின் இதழ் போன்ற நேத்ரங்களை உடையவள். கமலா என்று சொன்னால் லஷ்மி. அதாவது லட்சியத்துக்கு உரிய விஷயங்களை லக்ஷ்மி என்று கூறலாம். சமஸ்கிருத வ்யுத்பத்தியின் மூலமாக இவ்வாறும் கூறலாம்.

அக்ஷி என்பது விஷய ஞானத்துக்கு நிமித்தமான பிரமாணம் என்பது பொருள். கண் என்று ஒரு ப்ரமாணம் அதன் லட்சியத்தின் ஞானத்துற்குறிய வ்ருத்திக் ஞானத்தோடு கூடியவள் கமலா.

கமலா என்று சொன்னாலும் லஷ்மி என்று சொன்னாலும் ஐஸ்வரியம் என்று சொன்னாலும் ஒன்றுதான் . அதனால் இகலோகத்திற்கு வேண்டிய ஐஸ்வர்யத்தையும் பரலோகத்தற்கு வேண்டிய ஞான கர்மத்தையும் அருளையும் தருவதற்கு காரணமான கண்களை உடையவள்

பரதேவதையின் கடைக்கண் பார்வையால் அருள் செல்வமும் பொருள் செல்வமும். உண்டாகும் என்பது கருத்து. பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவரின் கூற்றுப்போல இந்த கமலாக்ஷி என்ற நாமமானது நமக்கு பொருத்தமாய் இருக்கிறது.

**ॐ कमलाक्ष्यै नमः ||७||**

**ஓம் கமலாக்ஷ்யை நம: ||7||**

**कल्मषघ्नी | (8)**
**கல்மஷக்⁴னீ | 8**

कल्मषाणि पापानि हन्ति नाशयतीति कल्मषघ्नी, 'अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि' (गीता १८-६६) इति भगवद्वचनात् । अथवा वेदान्तमहावाक्यजन्यसाक्षात्काररूपब्रह्मविद्या 'ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा' (गीता ४-३७) इति स्मृतेः, 'न स पापं शृणोति' इति श्रुतेश्च ||

**கல்மஷாணி பாபானி ஹந்தி நாஶயதீதி கல்மஷக்⁴னீ, 'அஹம்' த்வா ஸர்வபாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி' (கீ³தா 18-66) இதி ப⁴க³வத்³வசனாத் . அத²வா வேதா³ந்தமஹாவாக்யஜன்யஸாக்ஷாத்காரரூபப்³ரஹ்மவித்³யா 'ஜ்ஞாநாக்³னி: ஸர்வகர்மாணி ப⁴ஸ்மஸாத்குருதே ததா²' (கீ³தா 4-37) இதி ஸ்ம்ரு'தே:, 'ந ஸ பாபம் ஶ்ரு'ணோதி' இதி ஶ்ருதேஶ்ச ||**

‘கல்மஷம்’ என்றால் பாபங்கள் என்று அர்த்தம். நமது பிறப்பிலே அழுத்தக் கூடிய பாபங்கள். அந்த பாபங்களை நாசம் செய்யக் கூடியவளாக இருக்கிறாள் பரதேவதை **‘अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि' (गीता १८-६६) ‘அஹம்’ த்வா ஸர்வபா - பேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி' (கீ³தா 18-66)** என்று கூறுகிறது. **‘ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा' (गीता ४-३७) ‘ஜ்ஞாநாக்³னி: ஸர்வகர்மாணி ப⁴ஸ்மஸாத்குருதே ததா²' (கீ³தா 4-37)** ஞானஸ்வரூபமாய் அந்த லலிதாம்பிகை இருக்கிறாள்

வேதாந்த மஹா வாக்கியங்களால் ஏற்படும் அபரோக்ஷ ஸ்வரூபமான ப்ரஹ்ம வித்யா வடிவமாய் இருக்க கூடியவள், அந்த லலிதாம்பிகை.

**ॐ कल्मषघ्न्यै नमः ||८||**

**ஓம் கல்மஷக்⁴ந்யை நம: ||8||**

**करुणामृतसागरा | (9)**

**கருணாம்ரு’தஸாக³ரா | 9**

**करुणया कृपया जातं यदमृतं मोक्षरूपं तस्य सागर इव सागरा। यथा अमृतसमुद्रः स्वयममृतस्वरूपः सन् अन्यानपि लोकान् अमृतपायिमेघाद्विमुक्तामृतेन संजीवयति, तथा ‘ब्रह्म बेद ब्रह्मैव भवति' (मुण्डकम् ३-२-९) ' ब्रह्मविदाप्रोति परम्' (तैत्तिरीयोपनिषत् २-१) इत्यादिश्रुत्या स्वयममृत-स्वरूपा सती । ‘लभते च ततः कामान्मयैव विहितान्हि तान्' (गीता ७-२२) इति भगवद्वचनेन तत्तदधिकारिकृतकर्मोपासनादिफलस्य देवताप्रापणीयस्य संप्राप्तो तत्तदधिकारिणां तत्तत्फलं स्थितमिति संभाव्यत इति सागरोपमा । अमृतवत्सर्वसंजीवनी करुणामृतस्य अभिन्नाश्रयत्वान् सागरा; करुणा च भक्तविषयकपरिपाल्यताबुद्धिः । यद्वा, करुणया कृपया अमृताः शाश्वतकीर्तिमत्त्वेन ब्रह्मादिलोकं गताः सागराः सगरराजवंश्याः यस्याः सा तथा; यद्वा, करुणया दयया हेतुना अमृताय प्राप्तः सागरः समुद्रो यया सा भागीरथी; करुणामृतसागरा ||**

**ஓம் ஈப்ஸிதார்த² - ப்ரதா³யின்யை நம: ||43||**

**ईदृगित्यविनिर्देश्या चेश्वरत्वविधायिनी |**
**ईशानादिब्रह्ममयी चेशित्वाद्यष्टसिद्धिदा ||१०||**
**ஈத்³ரு’கி³த்யவிநிர்தே³ஶ்யா சேஶ்வரத்வவிதா⁴யினீ |**
**ஈஶாநாதி³ப்³ரஹ்மமயீ சேஶித்வாத்³யஷ்டஸித்³தி⁴தா³ ||10||**

**ईदृगित्यविनिर्देश्या | (44)**
**ஈத்³ரு’கி³த்யவிநிர்தே³ஶ்யா | 44**

**ईदृक् एतल्लक्षणलक्षित एतादृशपरिमाण एवंस्वरूपः एतादृशधर्मवानिति प्रत्यक्षसिद्धार्थो विनिर्देष्टुं शक्यते । 'यच्चक्षुषा न पश्यति' {केनोपनिषत् १-६} इत्यादिश्रुत्या सर्वेन्द्रियगोचरत्वनिराकरणात् विनिर्दे - श्या न भवति । औपनिषदानां मते तु उपनिषदां वेदैकदेशत्वेनेतरप्रमाणानपेक्षतया अज्ञातार्थज्ञापक - त्वेन प्रामाण्यमुररीकृतम् । इदमेव एतादृगेवेति प्रत्यक्षसिद्धार्थज्ञापने तासामनुवादकत्वेन सापेक्षत्वरूप - मप्रामाण्यं प्रसज्येतेत्यभिप्रायः ||**

**ஈத்³ரு’க் ஏதல்லக்ஷணலக்ஷித ஏதாத்³ரு’ஶபரிமாண ஏவம்’ஸ்வரூப: ஏதாத்³ரு’ஶத⁴ர் - மவானிதி ப்ரத்யக்ஷஸித்³தா⁴ர்தோ² விநிர்தே³ஷ்டும் ஶக்யதே | 'யச்சக்ஷுஷா ந பஶ்யதி' {கேனோபநிஷத் 1-6} இத்யாதி³ஶ்ருத்யா ஸர்வேந்த்³ரியகோ³சரத்வநிராக - ரணாத் விநிர்தே³ஶ்யா ந ப⁴வதி | ஔபனிஷதா³னாம்’ மதே து உபனிஷதா³ம்’ வேதை³கதே³ஶத்வேனேதரப்ரமாணானபேக்ஷதயா அஜ்ஞாதார்த²ஜ்ஞாபகத்வேன ப்ராமாண்யமுரரீக்ரு’தம் | இத³மேவ ஏதாத்³ரு’கே³வேதி ப்ரத்யக்ஷஸித்³தா⁴ர்த²ஜ்ஞா - பனே தாஸாமனுவாத³கத்வேன ஸாபேக்ஷத்வரூபமப்ராமாண்யம்’ ப்ரஸஜ்யேதேத் - யபி⁴ப்ராய: ||**

ஈத்ரு - இதி - அ - விநிர் - தேஷ்யா

ஒரு சிறப்பான நாமம். 'ஈத்ருக்' என்றால் இன்ன மாதிரி ஒரு அடையாளம், ஒரு லக்ஷணம், இந்த விதமான பரிமாணம், இந்த ரூபம் என்று, இப்படிப்பட்ட தர்மங்கள் உடையவள் என்று அ - விநிர் - தேஷ்யா அப்படி வரையறுத்துக் கூற முடியாத ஒரு ஸ்வரூபத்தை உடையவள்.

**'यच्चक्षुषा न पश्यति' {केनोपनिषत् १-६} 'யச்சக்ஷுஷா ந பஶ்யதி' {கேனோபநிஷத் 1-6}** என்று கேனஉபநிஷத் கூறும் ஸ்ருதி பிரமாணங்கள் ஷ்ரோத்ராதி காது முதலிய ஞானேந்திரியங்களுக்கும் மனத்திற்கும் வாக்கிற்கும் அகோசரமாக இருக்கக்கூடியது. கோசரமாக இல்லாத காரணத்தினால் இப்படி பட்டவள் இப்படி பட்ட வரையறுப்புக்கு உட்பட்டவள் என்று யாராலும் நிர்தேஷம் செய்ய முடியாது.

உபநிஷத்தின் கூற்றின் படி ப்ரத்யக்ஷம், அனுமானம் முதலிய ப்ரமாணங்களின் அபேக்ஷிகை இல்லாமல் இவை அனைத்தும் ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தை சார்ந்து இருப்பதால், எங்கு ப்ரத்யக்ஷ ப்ரமாணம் இல்லையோ மற்ற ப்ரமாணங்களும் வலு இழந்து விடுகின்றன. அதனால் அனாதி அஞ்ஞானத்தினால் ஆவரணமாய் இருக்கும் ஸ்வரூபத்தை ஞாபகப்படுத்துதலால் அவைகள் ப்ரமாணங்கள் ஆகின்றன. ப்ரம்ம அபின்ன ஸ்வஸ்வரூப போதகமாய் உள்ள சப்த ப்ரமாணத்திற்கு எடுத்துக்காட்டாய் இருக்கும் மஹா வாக்கியங்களும் லக்ஷணையாகத்தான் ஸ்வரூபத்தை குறிப்பிடுகின்றன. பாகத் தியாக லக்ஷணத்திலே தத்வமஸி மஹா வாக்கியமானது குறிப்பிடப்படுகிறது. இவை ஆத்மாவை நிர்தேஷிக்கின்றது என்று ப்ரத்யக்ஷமாக கூற முடியாது. அவைகள் வாக்யார்த்தத்திற்கு பதிலாக லக்ஷ்யார்தத்தின் மூலமாக ஜீவேஸ்வர ஐக்கியத்தை குறிப்பிடுகின்றது என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அது போல இந்த லக்ஷணம், இந்த மாதிரி இந்த ஸ்வரூபம் என்று கண்டிப்பாக வரையறுத்துக் கூற முடியாத ஸ்வரூபிணியாக இருக்க கூடிய பரதேவதை என்று இந்த நாமமானது கூறுகின்றது.

**ॐ ईदृगित्यविनिर्देश्यायै नमः ||४४||**
**ஓம் ஈத்³ரு'கி³த்ய - விநிர்தே³ஶ்யாயை நம: ||44||**

**ईश्वरत्वविधायिनी | (45)**
**ஈஶ்வரத்வவிதா⁴யிநீ | 45**

**ईश्वरस्य भावः तस्यैक्यं विदधिति, आवरणविक्षेपशक्तिमदज्ञाननिवर्तकाखण्डाकारचैतन्यस्वरूपा सती भेदबुद्धिमात्रसंपादितैश्वर्यैक्यायोगभ्रमं निवर्तयतीत्यर्थः, 'स्वेन रूपेणाभिनिष्पद्यते' {छान्दोग्यो - पनिषत् ८-३} इति श्रुतेः । अथवा, ईश्वरत्वं नाम नानादेशविद्याधनोत्कर्षादिमत्वं तत्तत्प्राणिनिकायपु - ण्यप्रारब्धानुसारेण कर्मफलं प्रयच्छतीति वा ||**

**ஈஶ்வரஸ்ய பா⁴வ: தஸ்யைக்யம்' வித³தா⁴தி, ஆவரணவிக்ஷேபஶக்திமத³ - ஜ்ஞானநிவர்தகாக²ண்டா³காரசைதன்யஸ்வரூபா ஸதீ பே⁴த³பு³த்³தி⁴மாத்ரஸம்பாதி³ - தைஶ்வர்யைக்யாயோக³ப்⁴ரமம்' நிவர்தயதீத்யர்த²:, 'ஸ்வேன ரூபேணாபி⁴ -**

**நிஷ்பத்³யதே' {சா²ந்தோ³க்³யோபநிஷத் 8-3} இதி ஶ்ருதே꞉ | அத²வா, ஈஶ்வரத்வம்' நாம நாநாதே³ஶவித்³யாத⁴னோத்கர்ஷாதி³மத்வம்' தத்தத்ப்ராணிநிகாயபுண்யப்ரார - ப்³தா⁴னுஸாரேண கர்மப²லம்' ப்ரயச்ச²தீதி வா ||**

ஈச்வரத்வம் என்றால் ஈஸ்வர பாவத்தோடு ஐக்கியமாய் இருப்பவள். அகண்ட ஆகார சைதன்யஸ்வரூபம் லலிதா திரிபுர ஸுந்தரியின் ஸ்வரூபம். ஆதலால் ஏற்படக்கூடிய ஆவரண விக்ஷேப சக்திகளோடு கூடிய மாயையை நிவர்த்தி செய்து பேத புத்தியால் நாம் சம்பாதிக்கக்கூடிய இகலோக பரலோக ஐஸ்வர்யங்களை அத்யாஸத்தின் மூலமாய் கிடைக்கக்கூடிய ஐஸ்வர்யங்களை போக்க அடிக்க கூடியவள் **'स्वेन रूपेणाभिनिष्पद्यते' {छान्दोग्योपनिषत् ८-३} 'ஸ்வேன ரூபேணாபி⁴ - நிஷ்பத்³யதே' {சா²ந்தோ³க்³யோபநிஷத் 8-3}** என்ற ஸ்ருதி வாக்கியம் இருக்கின்றது. ஈஸ்வரத்வம் என்று சொல்லும் போது 'பக' என்று சாஸ்திரம் எப்படி அதை விமர்சிக்கின்றதோ ஸமக்ரம் வீர்யம், ஸமக்ரம் யஷஸ் , ஸமக்ரம் ஸ்ம்ருதி, ஸமக்ரம் ஞானம், ஸமக்ரம் வைராக்கியம், ஸமக்ரம் ஐஸ்வரியம், அப்படிப்பட்ட 'பக' என்று சொல்லக்கூடிய பதத்தினால் குறிப்பிடக்கூடிய அனைத்து ஐஸ்வர்யங்களையும் பெற்றவள் லலிதா த்ரிபுர ஸுந்தரி. அதைப்போல பிராணிகளின் புண்ணிய பாப கர்மாக்களை அனுசரித்து பலத்தை கொடுக்க கூடியவள் அல்லது அடைய செய்பவள் என்று சாஸ்திரம் கூறுகிறது. அதனால் தான் ஈஸ்வரத்வ விதாயினீ. ஈஸ்வரத்வம் அதாவது 'தஸ்ய பாவ: த்வதலௌ' என்று ஒரு ஸூத்ரம் இருக்கிறது. ஈஸ்வரனைப் போலவே காரியங்களை செய்யக்கூடியவள் என்று அர்த்தம் கொள்ளவேண்டும்.

**ॐ ईश्वरत्वविधायिन्यै नमः ||४५||**
**ஓம் ஈஶ்வரத்வவிதா⁴யின்யை நம꞉ ||45||**

**ईशानादिब्रह्ममयी | (46)**
**ஈஶாநாதி³ப்³ரஹ்மமயீ | 46**

**ईशानतत्पुरुपाघोरवामदेवसद्योजाताख्यानि पञ्च ब्रह्माणि, तानि मयं स्वरूपमस्या अस्तीति सा तथा। अथवा, ईशानः आदिर्येषां ते तथा अधिकारिपुरुषाः विष्णुब्रह्मेन्द्रादयः, तेपामपि तत्तन्नामरूपवि - शिष्टानाम् अहंबुद्धिमताम् अन्तर्यामिस्वरूपेण बुद्धिप्रेरकसच्चिदानन्दस्वरूपपरब्रह्मानन्दप्रकाशात्म - ना स्फुरनीति तथा ||**

**ஈஶானதத்புருபாகோ⁴ரவாமதே³வஸத்³யோஜாதாக்²யானி பஞ்ச ப்³ரஹ்மாணி, தானி மயம்' ஸ்வரூபமஸ்யா அஸ்தீதி ஸா ததா² | அத²வா, ஈஶான꞉ ஆதி³ர்யேஷாம்' தே ததா² அதி⁴காரிபுருஷா꞉ விஷ்ணுப்³ரஹ்மேந்த்³ராத³ய꞉, தேபாமபி தத்தந்நாமரூப - விஶிஷ்டானாம் அஹம்பு³த்³தி⁴மதாம் அந்தர்யாமிஸ்வரூபேண பு³த்³தி⁴ப்ரேரக - ஸச்சிதா³னந்த³ஸ்வரூபபரப்³ரஹ்மானந்த³ப்ரகாஶாத்மனா ஸ்பு²ரநீதி ததா² ||**

அடிக்கடி நாம் கர்மகாண்டத்தில் பார்க்கும் **ईशानतत्पुरुशघोरवामदेवसद्योजाताख्यानि ஈஶானதத்புருஷகோ⁴ரவாமதே³வஸத்³யோஜாதாக்²யானி** என்று பஞ்ச ப்ரஹ்ம ஸ்வரூபமாய் சொல்லக்கூடிய ஈஸ்வரன் தான் இந்த பஞ்ச ப்ரஹ்ம ஸ்வரூபிணியாய் இருக்க கூடிய லலிதா தேவி. அதாவது ஈஷானன் முதல் பஞ்ச

ப்ரஹ்ம ஸ்வரூபத்திலே நான் விஷ்ணு, நான் பிரம்மன், நான் மகேஷ்வரன், நான் ருத்ரன் , நான் தான் சதாசிவன், ஈஷானன் என்று அஹங்காரத்தோடு அவர்கள் கூடியுள்ளவர்கள். அந்த அஹங்காரத்திலே அந்தக்கரணத்திலே ஸாக்ஷிரூபமாய் அதை ஒளிரச் செய்பவள் லலிதாம்பிகை.

அகமிநாஷபாஜ் அஹம் அஹம் தயா ஸ்புரதி ஹ்ருத் ஸ்வயம் பரம பூர்ணஸத் ஸ்வயம் ஸ்புரதி பரம பூர்ண ஸத் என்ற கூற்று இருக்கிறது. அந்த கூற்றின் படி ஸாக்ஷிஸ்வரூபமாகவும் ஜோதிஸ்வரூபமாகவும் உள்ளவள் லலிதாம்பிகை என்று இந்த நாமமானது கூறப்படுகிறது.

**ॐ ईशानादिब्रह्ममय्यै नमः ||४६||**

**ஓம் ஈஶாநாதி³ - ப்³ரஹ்மமய்யை நம꞉ ||46||**

**ईशित्वाद्यष्टसिद्धिदा | (47)**

**ஈஶித்வாத்³யஷ்டஸித்³தி⁴தா³ | 47**

**ईशित्वमादिर्यासां तास्तथा । 'अणिमा महिमा लहिमा गरिमा प्राप्तिरीशिता । प्राकाम्यं च वशित्वं च यत्र कामाः परागताः ||' इति वचनान् । ताः सिद्धीरष्टौ ददातीति तथा। अणिमा क्षणमात्रेण अतिसू - क्ष्मभावः । महिमा महतो भावः । लघ्वी लाघवम् । गरिमा गुरोर्भावः, जडतरपर्वतादिवत् भारवशेनाप्रक - म्पितत्वमित्यर्थः । क्षणमात्रेण विराडाकृतिमत्त्वं प्राप्तिः हस्तेन चन्द्रमण्डलादिस्पर्शः । ईशिता इन्द्रादी - नामपि प्रेरकता । प्राकाम्यं अप्रतिहतकामनावत्त्वम्, वाञ्छितार्थफलप्राप्तिरित्यर्थः । वशित्वं सर्वलो - कवशीकरणसामर्थ्यम् । यत्र कामाः परागताः, काम्यन्त इति कामाः विषयाः यत्र यस्मिन् ऐश्वर्ये सति परागताः बहिर्भूता भवन्ति, विषयाणामनुभवाभावेऽपि तज्जन्यसुखवत्त्वं आप्तकामत्वमित्यर्थः । एताः अष्टसिद्धयः ॥**

**ஈஶித்வமாதி³ர்யாஸாம்' தாஸ்ததா² | 'அணிமா மஹிமா லஹிமா க³ரிமா ப்ராப்திரீஶிதா | ப்ராகாம்யம்' ச வஶித்வம்' ச யத்ர காமா꞉ பராக³தா꞉ ||' இதி வசனான் | தா꞉ ஸித்³தீ⁴ரஷ்டௌ த³தா³தீதி ததா²| அணிமா க்ஷணமாத்ரேண அதிஸூக்ஷ்மபா⁴வ꞉ | மஹிமா மஹதோ பா⁴வ꞉ | லக்⁴வீ லாக⁴வம் | க³ரிமா கு³ரோர்பா⁴வ꞉, ஜட³தரபர்வதா - தி³வத் பா⁴ரவஶேனாப்ரகம்பிதத்வமித்யர்த²꞉ | க்ஷணமாத்ரேண விராடா³க்ரு'திமத்த் - வம்' ப்ராப்தி꞉ ஹஸ்தேன சந்த்³ரமண்ட³லாதி³ஸ்பர்ஶ꞉ | ஈஶிதா இந்த்³ராதீ³நாமபி ப்ரேரகதா | ப்ராகாம்யம்' அப்ரதிஹதகாமனாவத்த்வம், வாஞ்சி²தார்த²ப²லப்ராப்தி - ரித்யர்த²꞉ | வஶித்வம்' ஸர்வலோகவஶீகரணஸாமர்த்²யம் | யத்ர காமா꞉ பராக³தா꞉, காம்யந்த இதி காமா꞉ விஷயா꞉ யத்ர யஸ்மின் ஐஶ்வர்யே ஸதி பராக³தா꞉ ப³ஹிர் - பூ⁴தா ப⁴வந்தி, விஷயாணாமனுப⁴வாபா⁴வே(அ)பி தஜ்ஜன்யஸுக²வத்த்வம்' ஆப்த - காமத்வமித்யர்த²꞉ | ஏதா꞉ அஷ்டஸித்³த⁴ய꞉ ||**

ஈஷித்வம் என்றால் எங்கும் நிறைந்து இருக்ககூடியவள் என்று அர்த்தம். ஈஷாவாஸ்யம் இதம் ஸர்வம் என்ற ஈஷாவாஸ்ய உபநிஷத்தின் வாக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்க கூடியவள். **'अणिमा महिमा लहिमा गरिमा प्राप्तिरीशिता । प्राकाम्यं च वशित्वं च यत्र कामाः परगताः ||' 'அணிமா மஹிமா லஹிமா க³ரிமா ப்ராப்திரீஶிதா | ப்ரகாம்யம்' ச வஶித்வம்' ச யத்ர காமா꞉ பராக³தா꞉ ||'** என்று அணிமாதி ஸித்திகளை பற்றி சொல்கிறது. அணிமா என்றால் நொடி நேரத்தில் அதி ஸூக்ஷ்ம பாவத்தை அடையக்கூடியது. மஹிமா என்றால் அதே க்ஷணத்தில்

மிகப் பெரிய வடிவை எடுக்க கூடிய சக்தி. லஹிமா என்றால் காற்றைப் போல் லேசாக இருக்க கூடிய தன்மை. கரிமா என்றால் கடினமாயும், ஜடமாயும் உள்ள பெரிய பர்வதத்தை போல் கனமாய் இருக்க கூடிய ஸ்வரூபம். ப்ராப்தி என்றால் வெகு சீக்கிரத்தில் நினைத்த ஸ்வரூபத்தை எடுக்க கூடிய சக்தி. ஈஷித்வம் என்றால் இந்திராதி தேவர்களை கூட ப்ரேரிக்கும் தன்மை. ப்ரேஷிதா அந்தஸ்திஷ்டன் யமயதி என்று இருக்க கூடிய ஸாக்ஷிஸ்வரூபிணி. ப்ரகாம்யம் என்றால் நினைத்த காரியத்தை சாதித்து, விரும்பியதை எல்லாம் அடையாக கூடிய ஆற்றல் பெற்றவள். வஷித்வம் அனைத்தையும் தன் வசத்தில் வைத்து இருப்பவள். ஈரேழு பதினாலு லோகங்களையும் தன் வசத்தில் வைத்து கொள்ளக் கூடிய சக்தி. இந்த ஸித்தி அனைத்தும் பாஹ்ய ப்ருவ்ருத்தி தான் இந்த ப்ருவ்ருத்தி. ஆதலால் ஆத்மஞானிகள் என்று அம்ருதத்வம் இச்சன் அந்தராத்மன் ஐக்ஷத என்று வழிபடக்கக்கூடிய ஆத்ம ஞானிகளுக்கு இதனால் யாதொரு பயனும் கிடையாது என்று குறிப்பிடப் படுகிறது.

**ॐ ईशित्वाद्यष्टसिद्धिदायै नमः ||४७||**
**ஓம் ஈஶித்வாத்³யஷ்ட - ஸித்³தி⁴தா³யை நம꞉ ||47||**

**ईक्षित्रीक्षणसृष्टाण्डकोटिरीश्वरवल्लभा |**
**ईडिता चेश्वरार्धाङ्गशरीरेशाधिदेवता ||११||**
**ஈக்ஷித்ரீக்ஷணஸ்ரு’ஷ்டாண்ட³கோடிரீஶ்வரவல்லபா⁴ |**
**ஈடி³தா சேஶ்வரார்தா⁴ங்க³ஶரீரேஶாதி⁴தே³வதா ||11||**

**ईक्षित्री | (48)**
**ஈக்ஷித்ரீ | 48**

**उदासीनद्रष्ट्री साक्षिणी असङ्गोदासीनज्ञानस्वरूपेत्यर्थः, 'साक्षी चेता' इति श्रुतेः, 'आविः संनिहितं गुहायाम्' {मुण्डकं २-२-१} इति श्रुतेः ॥**

**உதா³ஸீனத்³ரஷ்ட்ரீ ஸாக்ஷிணீ அஸங்கோ³தா³ஸீனஜ்ஞானஸ்வரூபேத்யர்த²꞉, 'ஸாக் - ஷீ சேதா' இதி ஶ்ருதே꞉, 'ஆவி꞉ ஸம்'நிஹிதம்' கு³ஹாயாம்' {முண்ட³கம்' 2-2-1} இதி ஶ்ருதே꞉ ||**

**'साक्षी चेता' इति श्रुतेः, 'आविः संनिहितं गुहायाम्' {मुण्डकं २-२-१} 'ஸாக்ஷீ சேதா' 'ஆவி꞉ ஸம்'நிஹிதம்' கு³ஹாயாம்' {முண்ட³கம்' 2-2-1}** என்று ஸ்ருதி சொல்கிறது. ஈக்ஷித்ரீ என்றால் அஸங்க உதாசீன ஞானஸ்வரூபம். 'அந்தஸ் திஷ்டன் யமயதி' என்று சொல்லப்படுகிறது.

**ॐ ईक्षित्र्यै नमः ||४८||**
**ஓம் ஈக்ஷித்ர்யை நம꞉ ||48||**

**ईक्षणसृष्टाण्डकोटिः | (49)**
**ஈக்ஷணஸ்ரு'ஷ்டாண்ட³கோடி꞉ | 49**

**अण्डानां ब्रह्माण्डानां कोटयः असङ्ख्याताः, भूतभाविकालभेदेन बहुवचनं कोटिशब्दस्य, अनादि - त्वात् संसारमण्डलस्य, ईक्षणेन भाविकार्यालोचनेन सृष्टाः अण्डकोटयो यया सा तथा, 'तदैक्षत बहु स्यां**

**प्रजायेयेति' {छान्दो ६-२} स ईक्षांचक्रे' 'आत्मा वा इदमेक एवाग्र आसीन् नान्यत्किंचन मिपत् स ईक्षत लोकान्नु सृजा इति स इमांल्लोकानसृजत' {ऐतरेय १-१} इत्यादिश्रुतेः, बाह्यकारणमनपेक्ष्य ऊर्णनाभ्या - दिदृष्टान्तप्रदर्शनेन चेतनस्याभिन्ननिमित्तोपादानत्वप्रदर्शनयुक्तेः, 'प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात्' {ब्रह्मसूत्रम् १-४-२३} इत्यादेश्चेति भावः ||**

**அண்டா³னாம்' ப்³ரஹ்மாண்டா³னாம்' கோடய: அஸங்க்²யாதா:, பூ⁴தபா⁴விகாலபே⁴ - தே³ன ப³ஹுவசனம்' கோடிஶப்³த³ஸ்ய, அநாதி³த்வாத் ஸம்'ஸாரமண்ட³லஸ்ய, ஈக்ஷி - ணேன பா⁴விகார்யாலோசனேன ஸ்ரு'ஷ்டா: அண்ட³கோடயோ யயா ஸா ததா², 'ததை³க்ஷத ப³ஹு ஸ்யாம்' ப்ரஜாயேயேதி' {சா²ந்தோ³ 6-2} ஸ ஈக்ஷாஞ்சக்ரே' 'ஆத்மா வா இத³மேக ஏவாக்³ர ஆஸீன் நான்யத்கிம்சன மிபத் ஸ ஈக்ஷத லோகான்னு ஸ்ரு'ஜா இதி ஸ இமா'ம்ல்லோகானஸ்ரு'ஜத' {ஐதரேய 1-1} இத்யாதி³ஶ்ருதே:, பா³ஹ்யகாரண - மனபேக்ஷ்ய ஊர்ணநாப்⁴யாதி³த்³ரு'ஷ்டாந்தப்ரத³ர்ஶனேன சேதனஸ்யாபி⁴ன்னநிமி - த்தோபாதா³னத்வப்ரத³ர்ஶனயுக்தே:, 'ப்ரக்ரு'திஶ்ச ப்ரதிஜ்ஞாத்³ரு'ஷ்டாந்தானுப - ரோதா⁴த்' {ப்³ரஹ்மஸூத்ரம் 1-4-23} இத்யாதே³ஶ்சேதி பா⁴வ: ||**

நினைத்த மாத்திரத்திலே 'ஸோ காமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேய' என்று ஸ்ருதி சொல்கிறது. 'ததைக்ஷத தத் அபவத் தத் அஸ்ருஜத' என்று நினைத்த மாத்திரத்திலே நொடி நேரத்தில் ப்ரஹ்மாண்டங்களை ஸ்ருஷ்டி செய்ய கூடியவள். **'आत्मा वा इदमेक एवाग्र आसीन् नान्यत्किचन मिपत् स ईक्षत लोकान्नु सृजा इति स इमॉल्लोकानसृजत' {ऐतरेय १-१} 'ஆத்மா வா இத³மேக ஏவாக்³ர ஆஸீன் நான்யத்கிசன மிபத் ஸ ஈக்ஷத லோகான்னு ஸ்ரு'ஜா இதி ஸ இமா'ல்லோகானஸ்ரு'ஜத' {ஐதரேய 1-1}** என்ற ஸ்ருதி வாக்கியங்களின் படி 'யதா ஊர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே .....' என்ற உபநிஷத் வாக்கியத்தின் படி சிலந்தி பூச்சி வலை பின்னுவது போல பாஹ்ய கரணங்களின் அபேக்ஷை இன்றி சுதந்திரமாகவே சித்சக்தியில் அபின்ன ப்ரஹ்மமே ஸர்வ ஜகத்திற்கும் நிமித்த உபாதான காரணமாய் இருக்கிறது. **'प्रकृतिश्च प्रतिज्ञादृष्टान्तानुपरोधात्' {ब्रह्मसूत्रम् १-४-२३} 'ப்ரக்ரு'திஶ்ச ப்ரதிஜ்ஞாத்³ரு'ஷ்டாந்தானு - பரோதா⁴த்' {ப்³ரஹ்மஸூத்ரம் 1-4-23}** என்று ப்ரஹ்மஸூத்ர பாஷ்யமும் இந்த விஷயத்தையே விமர்சிக்கின்றது. அபின்ன நிமித்த உபாதான காரண ரூபிணீ லலிதாம்பிகா என்று.

**ॐ ईक्षणसृष्टाण्डकोटये नमः ||४९||**

**ஓம் ஈக்ஷணஸ்ரு'ஷ்டாண்ட³ - கோடயே நம: ||49||**

## ईश्वरवल्लभा | (50)

**ஈஶ்வரவல்லபா⁴ | 50**

**ईश्वरः कामेश्वरः वल्लभः पतिः यस्याः सा तथा । ईश्वराणां ब्रह्मविष्णुरुद्रादीनां तत्तन्निष्ठमहिमोत्कर्ष - रूपेण प्रीत्यतिशयविषयत्वेन अभ्यर्हितेत्यर्थो वा ||**

**ஈஶ்வர: காமேஶ்வர: வல்லப⁴: பதி: யஸ்யா: ஸா ததா² | ஈஶ்வராணாம்' ப்³ரஹ்ம - விஷ்ணுருத்³ராதீ³னாம்' தத்தந்நிஷ்ட²மஹிமோத்கர்ஷரூபேண ப்ரீத்யதிஶயவிஷய - த்வேன அப்⁴யர்ஹிதேத்யர்தோ² வா ||**

காமேஸ்வரன் என்ற பரமேஸ்வரனை அர்த்நாரியாக (பாதியாக) அம்பாள் பாதி பாகத்திலே இருக்கிறாள். அந்த ப்ரஹ்மா, விஷ்ணு, சிவாத்மகர்கள் அவரவர்களுக்குள்ளே மஹிமையின் ஏற்றத்தாழ்வோடு பரமபிரேமையோடு பூஜிக்கத்தகுந்தவள். பரமேஸ்வரனை பூஜிப்பது போல பராசக்தி பூஜிக்க உகந்தவளாய் இருக்கிறாள் என்று ஈஸ்வர வல்லபா என்று அர்த்தநாரியாக லலிதாம்பிகை போற்றப்படுகிறாள்.

**ॐ ईश्वरवल्लभायै नमः ||५०||**
**ஓம் ஈஶ்வரவல்லபா⁴யை நம꞉ ||50||**

**ईडिता | (51)**
**ஈடி³தா | 51**

**ईड स्तुताविति धातुपाठात् स्तुतिभिः विषयीकृता, वेदान्तैरिति शेषः, 'एष नित्यो महिमा ब्राह्मणस्य' (बृह. ४-४-२३) इत्यादिश्रुतेः ||**

**ஈட³ ஸ்துதாவிதி தா⁴துபாடா²த் ஸ்துதிபி⁴꞉ விஷயீக்ரு'தா, வேதா³ந்தைரிதி ஶேஷ꞉, 'ஏஷ நித்யோ மஹிமா ப்³ராஹ்மணஸ்ய' (ப்³ரு'ஹ. 4-4-23) இத்யாதி³ஶ்ருதே꞉ ||**

ஸமஸ்க்ருதத்திலே ஈட் என்ற மூல தாதுவிற்கு துதிக்கப்பட்டவள் என்று அர்த்தம். துதி செய்யக்கூடிய அருகதை. ஞானகாண்ட வேதாந்த வாக்கியங்களால் துதிக்கப்பட்டவள் லலிதா த்ரிபுர ஸுந்தரி **'एष नित्यो महिमा ब्राह्मणस्य' (बृह. ४-४-२३) 'ஏஷ நித்யோ மஹிமா ப்³ராஹ்மணஸ்ய' (ப்³ரு'ஹ. 4-4-23)** ஏஷா ப்ராஹ்... **(2-72)** என்று கீதையிலே குறிப்பிடப்பட்ட அந்த ஸ்வரூபத்தை உடையவள்.

**ॐ ईडितायै नमः ||५१||**
**ஓம் ஈடி³தாயை நம꞉ ||51||**

**ईश्वरार्धाङ्गशरीरा | (52)**
**ஈஶ்வரார்தா⁴ங்க³ஶரீரா | 52**

**ईश्वरस्य सच्चिदानन्दात्मकस्य शिवस्य अर्धं च तत् अङ्गं च अर्धाङ्गम् आनन्दस्वरूपता शरीरं शरीरव - त्स्वरूपलक्षणं यस्याः सा तथा । 'सच्चिन्मयः शिवः साक्षात्तस्यानन्दमयी शिवा' इति स्मृतेः । अथवा, ईश्वरस्यार्धाङ्गं वामभागः शरीरं मूर्तिर्यस्याः सा । अथवा, ईश्वरस्य हकारस्य अधीङ्गं शक्तिबीजं शरीरं मन्त्रात्मिका मूर्तिर्यस्याः सा तथा ||**

**ஈஶ்வரஸ்ய ஸச்சிதா³னந்தா³த்மகஸ்ய ஶிவஸ்ய அர்த⁴ம்' ச தத் அங்க³ம்' ச அர்தா⁴ - ங்க³ம் ஆனந்த³ஸ்வரூபதா ஶரீரம்' ஶரீரவத்ஸ்வரூபலக்ஷணம்' யஸ்யா꞉ ஸா ததா² | 'ஸச்சின்மய꞉ ஶிவ꞉ ஸாக்ஷாத்தஸ்யானந்த³மயீ ஶிவா' இதி ஸ்ம்ரு'தே꞉ | அத²வா, ஈஶ்வ - ரஸ்யார்தா⁴ங்க³ம்' வாமபா⁴க³꞉ ஶரீரம்' மூர்திர்யஸ்யா꞉ ஸா | அத²வா, ஈஶ்வரஸ்ய ஹகாரஸ்ய அதீ⁴ங்க³ம்' ஶக்திபீ³ஜம்' ஶரீரம்' மந்த்ரத்மிகா மூர்திர்யஸ்யா꞉ ஸா ததா² ||**

ஸத் சித் ஸ்வரூபமாய் இருக்கின்ற பரமேஸ்வரனுடைய பாதி ஸரீரத்தை உடையவள். ஸ்வரூப மற்ற வடிவற்ற வன்பொருளாய் இருக்கும் பரமேஸ்வரன்

வடிவத்தை தாங்கி லோக அனுக்கிரஹம் தந்தது போல கற்பிக்கப்படுகிறாள். அந்த கற்பிக்கப்பட்ட ஸரீரத்திலே பாதி பாகத்தை (வாம பாகத்தை) பரமேஸ்வரி எடுத்துக் கொண்டு இருக்கிறாள். அதாவது ஆனந்தமே சரீரமாய் உடையவள்.**'सच्चिन्मयः शिवः साक्षात्तस्यानन्दमयी शिवा' 'ஸச்சின்மய: ஶிவ: ஸாக்ஷாத்தஸ்யானந்த³மயீ ஶிவா'** என்று ஸ்ம்ருதியானது ஆனந்த மய ஸ்வரூபமான லலிதாம்பிகை என குறிப்பிடுகிறது. பரமேஸ்வரனுடைய பாதி அங்கமான வாமபாகத்தை இருப்பாக உடையவள். பரமேஸ்வர வடிவ ‘ஹகாரத்தின்’ பாதி அங்க ஸரீரம் மந்த்ராத்மகமாய் இருக்க கூடியவள். ஏனென்றால் வித்யாஸ்வரூபிணீ மந்திராத்மக ரூபமாய் இருக்க கூடியவள். ‘ஹம்’ என்னும் பரமேஸ்வர பீஜத்தின் சப்தம் சக்தியின் வடிவம். பாதி சிவ வடிவம். ‘வாக் அர்த்தெள இவ’ என்று காளிதாஸரால் குறிப்பிடப்பட்ட பரமேஸ்வரி என்று எடுத்துக்கொள்ளலாம். இதன் அர்த்தமானது பார்வதியையும் பரமேஸ்வரனையும் நான் வணங்குகின்றேன். அவர்கள் பிரித்து பார்க்க முடியாதவர்கள். எப்படி வார்த்தையும் வார்த்தையின் அர்த்தமும் பிரித்து பார்க்க முடியாதோ அது போல பரமேஸ்வரனையும் லலிதா த்ரிபுர ஸுந்தரியையும் பிரித்து பார்க்க முடியாது என்று இந்த நாமத்தின் மூலமாக குறிப்பிடப்படுகிறது.

**ॐ ईश्वरार्धाङ्गशरीरायै नमः ||५२||**
**ஓம் ஈஶ்வராத்திர்தா⁴ங்க³ - ஶரீராயை நம: ||52||**

**ईशाधिदेवता | (53)**
**ஈஶாதி⁴தே³வதா | 53**

**ईगस्येत्युपलक्षणं जीवस्यापि, ईशस्य तत्त्वंपद्वाच्यार्थस्य मायाज्ञानोपाधिकस्य विशिष्टस्य अधि उपरि विशेपणद्वयस्य परित्यागे देवता द्योतमाना कूटस्थचिन्मात्रशोधिततत्त्वंपदार्थरूपेत्यर्थः । अथवा, ईशः कामेश्वरः अधिदेवता पूज्यः यस्याः सा तथा । परमपतिव्रतेत्यर्थः ||**

**ஈக³ஸ்யேத்யுபலக்ஷணம்’ ஜீவம்யாபி, ஈஶஸ்ய தத்த்வம்பத்³வாச்யார்த²ஸ்ய மாயா - ஜ்ஞானோபாதி⁴கஸ்ய விஶிஷ்டஸ்ய அதி⁴ உபரி விஶேபணத்³வயஸ்ய பரித்யாகே³ தே³வதா த்³யோதமானா கூடஸ்த²சின்மாத்ரஶோதி⁴ததத்த்வம்பதா³ர்த²ரூபேத்யர்த²: | அத²வா, ஈஶ: காமேஶ்வர: அதி⁴தே³வதா பூஜ்ய: யஸ்யா: ஸா ததா² | பரமபதிவ்ரதே - த்யர்த²: ||**

ஈஷா என்ற பதத்திற்கு பகவான் சங்கரர் உபலக்ஷணமாக ஜீவஸ்வரூபத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். மாயா உபாதியோடு கூடிய தத்பத வாக்யார்த்த ஸ்வரூபமான ஈஸ்வரனுக்கும் அவித்யா உபாதியோடு கூடிய த்வம் பத வாக்யார்த்த ஜீவனுக்கும் மேலே பாகத்தியாக லக்ஷணையால் நாம் எவற்றை எல்லாம் விலக்க முடியுமோ விலக்க முடிந்தவற்றை எல்லாம் விலக்கி பாகத்தியாக லக்ஷணத்தின் மூலமாக அந்த உபாதிகளை நிவர்த்தி செய்த பொழுது கூடஸ்த சின்மாத்ர அகண்ட ஏக ரசம் தான் பாக்கி இருக்கிறது. அப்படி பட்ட ஸ்வரூபமாய் இருக்க கூடியவள் லலிதா திரிபுர ஸுந்தரி. ‘ஸம்வித் ஏகா’ என்று பஞ்சதசீ சொல்கிறது. அப்படி பட்ட ஏகா பரதேவதா ரூபா. ‘சிவரூப விமர்ஷ … நிர்மலா சங்கரஸ்யாபி ஷங்கரீ’ என்று காமேஸ்வரனால் கூட பூஜிக்க

தகுந்தவளாய் இருக்கிறாள். பரம பதிவ்ரதை என்ற பொருள் கூட உண்டு. ‘ஸாமரஸ்ய பாவமே பூஜை’ என்பதற்கு தாத்பர்யமாய் கூறப்படுகிறது. ஆதலால் ஸம்வித்ரூப ஏகா பரதேவதா லலிதா த்ரிபுர ஸுந்தரி என்று உபாதியின் வசத்தால் சிவன் போலவும் அதே உபாதியின் வசத்தால் லலிதாம்பிகையாக தோன்றக் கூடிய சைதன்யஸ் ஸ்வரூபிணீ என்று இந்த நாமாவானது கூறுகின்றது.

**ॐ ईशाधिदेवतायै नमः ||५३||**
**ஓம் ஈஶாதி⁴தே³வதாயை நம: ||53||**

**ईश्वरप्रेरणकरी चेशताण्डवसाक्षिणी |**
**ईश्वरोत्सङ्गनिलया चेतिवाधाविनाशिनी ||१२||**
**ஈஶ்வரப்ரேரணகரீ சேஶ - தாண்ட³வ - ஸாக்ஷிணீ |**
**ஈஶ்வரோத்ஸங்க³ - நிலயா சேதிவாதா⁴ - விநாஶினீ ||12||**

**ईश्वरप्रेरणकरी | (54)**
**ஈஶ்வரப்ரேரணகரீ | 54**

**ईश्वरस्य बिम्वचैतन्यस्य स्वरूपा सती जगत्सर्जनादिकार्यप्रेरयित्री प्रेरणकरी आज्ञापिकेत्यर्थः । इच्छाज्ञानक्रियाशक्त्यावरणविक्षेपशक्तिप्रतिफलितचित्स्वरूपा भाविकार्यानुकूलप्रारब्धाध्यक्षपरमेश्वरे - क्षणनामधेयप्रकाशात्मिका भवतीति भावः । ईश्वरप्रेरणं तदाज्ञामनुल्लङ्घनेन करोतीति वा, तदीयभा - र्यात्वेन नितरां तद्वश्येति यावत् ||**

**ஈஶ்வரஸ்ய பி³ம்வசைதன்யஸ்ய ஸ்வரூபா ஸதீ ஜக³த்ஸர்ஜநாதி³கார்யப்ரேரயித்ரீ ப்ரேரணகரீ ஆஜ்ஞாபிகேத்யர்த²: | இச்சா²ஜ்ஞானக்ரியாஶக்த்யாவரணவிக்ஷேப - ஶக்திப்ரதிப²லிதசித்ஸ்வரூபா பா⁴விகார்யானுகூலப்ராரப்³தா⁴த்⁴யக்ஷபரமேஶ்வரே - க்ஷணநாமதே⁴யப்ரகாஶாத்மிகா ப⁴வதீதி பா⁴வ: | ஈஶ்வரப்ரேரணம்’ ததா³ஜ்ஞாமனு - ல்லங்க⁴னேன கரோதீதி வா, ததீ³யபா⁴ர்யாத்வேன நிதராம்’ தத்³வஶ்யேதி யாவத் ||**

இந்த ஜகத் என்பது அவ்யக்தமாய் இருந்து வியக்தமாய் இருக்க கூடிய மாயை என்று சாஸ்திரங்கள் சொல்கிறது. அப்படி பட்ட மாயையை உபாதியாய் வைத்து இருக்கும் ஈஸ்வரனுக்கு அதிஷ்டானமாய் இருந்து ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி முதலிய காரியங்களில் அந்த ஈஸ்வரனையே இயக்க கூடியவள் ப்ரேரிதா என்று இந்த நாமமானது கூறிப்பிடுகிறது. லலிதாம்பிகையான பரதேவதை இச்சா சக்தி, க்ரியா சக்தி, ஞான சக்தி என்று சக்திகளுக்கும், அஞ்ஞானத்திற்கு எடுத்துக் காட்டாய் இருக்க கூடிய ‘ஷக்தித் த்வயம் ஹி மாயா’ என்ற வாக்கியத்தின் படி ஆவரண விக்ஷேப ஆத்மகமாய் இருக்க கூடியது இந்த மாயை. அந்த அஞ்ஞானத்துக்கும் அதிஷ்டானமாய் விளங்குபவளாய் இருக்கின்றாள். இந்த மாயையோடு கூடியுள்ளவனாய் இருக்க கூடிய ஈஸ்வரன் இனிமேல் ஸ்ருஷ்டிக்கப்படுவதை பற்றி ஆலோசிக்கும் போது ‘தபஸா சீயதே ப்ரஹ்ம’ என்ற உபநிஷத் வாக்கியத்தின் படி அந்த ஆலோசனை அந்த ஞான விசாரத்திற்கு ஈக்ஷண வடிவ ப்ரகாச ஸ்வரூபமாய் இருக்கின்றாள். அதனால் அவள் ஈஸ்வரனையே இயக்குகின்றாள் என்று கூறப்படுகிறது. பரதேவதை லலிதாம்பிகை ஈஸ்வரனது வாம பாகத்திலே ஒரு பாதியை தனதாக்கிக் கொண்டு

பட்ட மஹிஷியாகவும் இருப்பதால், மிகவும் ஸ்வாதீனமாகவும் இருப்பதால், ஈஸ்வரனை இயக்குகின்றாள் என்பதுமே, ஈஸ்வரனின் ஆக்ஞையினாலே என்று தான் நாம் அறிய வேண்டும். அவன் அருளால் அவன் தாள் பற்றி என்று இந்த கருத்தானது இங்கே தொனிக்கின்றது.

**ॐ ईश्वरप्रेरणकर्यै नमः ||५४||**
**ஓம் ஈஶ்வரப்ரேரணகர்யை நம꞉ ||54||**

**ईशताण्डवसाक्षिणी | (55)**
**ஈஶதாண்ட³வஸாக்ஷிணீ | 55**

**ईशस्य तत्पदवाच्यार्थस्य ताण्डवं नर्तनवदप्रयत्नसंपाद्यं लीलामात्रमित्यर्थः, जगत्सर्जनादिरूपा क्रिया चलनरूपकर्मत्वसामान्यात्, तस्य साक्षिणी असंसर्गप्रकाशरूपिणीत्यर्थः, 'असंगो न हि सज्जते' (बृह. ४-४) इति श्रुतेः । अथवा, ईशताण्डवस्य परमेश्वरनृत्यनाट्याभिव्यञ्जितचतुःषष्टिकलोपदेशस्य साक्षिणी । तदुक्तम् - 'नर्तनाद्धि परेशस्य चतुःषष्टिकलाजनिः' इति । प्रदोषस्तोत्रे ईशताण्डवनर्तनवर्णनमतिस्फु - टमिति नेह लिख्यते||**

**ஈஶஸ்ய தத்பத³வாச்யார்த²ஸ்ய தாண்ட³வம்' நர்தனவத³ப்ரயத்னஸம்பாத்³யம்' லீலாமாத்ரமித்யர்த²꞉, ஜக³த்ஸர்ஜநாதி³ரூபா க்ரியா சலனரூபகர்மத்வஸாமான்யாத், தஸ்ய ஸாக்ஷிணீ அஸம்'ஸர்க³ப்ரகாஶரூபிணீத்யர்த²꞉, 'அஸங்கோ³ ந ஹி ஸஜ்ஜதே' (ப்³ரு'ஹ. 4-4) இதி ஶ்ருதே꞉ | அத²வா, ஈஶதாண்ட³வஸ்ய பரமேஶ்வரந்ரு'த்யநாட்யா - பி⁴வ்யஞ்ஜிதசது꞉ஷஷ்டிகலோபதே³ஶஸ்ய ஸாக்ஷிணீ | தது³க்தம் - 'நர்தநாத்³தி⁴ பரேஶஸ்ய சது꞉ஷஷ்டிகலாஜனி꞉' இதி | ப்ரதோ³ஷஸ்தோத்ரே ஈஶதாண்ட³வனர்தன - வர்ணனமதிஸ்பு²டமிதி நேஹ லிக்²யதே||**

பரமேஸ்வரனுடைய சிவ தாண்டவத்திற்கு ஸாக்ஷியாய் இருக்க கூடியவள் லலிதாம்பிகா. ஜகத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் (ஸம்ஹாரம்), திரோபாவம் என்று சொல்லக்கூடிய ஆவரணம், அந்த ஆவரணம் நீங்கிய அனுக்கிரஹம். இவைகள் தான் பரமேஸ்வரனுடைய தாண்டவம் என்று சொல்லப்படுகிறது. இவை பஞ்ச க்ருத்யம் என்றும் கூறப்படுகிறது. இந்த பஞ்ச க்ருத்ய தாண்டவத்திற்கு ஸாக்ஷியாய் இருக்க கூடியவள் பரதேவதை லலிதாம்பிகை. **'असंगो न हि सज्जते' (बृह. ४-४) 'அஸங்கோ³ ந ஹி ஸஜ்ஜதே' (ப்³ரு'ஹ. 4-4)** என்பது ஸ்ருதி வாக்கியம். பரமேஸ்வரன் தனது தாண்டவத்தினால் ஆனந்த தாண்டவத்தினால் 64 கலைகளையும் உபதேசிக்கிறார். அப்பொழுது அந்த உபதேசத்திற்கு வித்யாஸ்வரூபிணீயான லலிதாம்பிகை ஸாக்ஷியாக இருக்கின்றாள். **'नर्तनाद्धि परेशस्य चतुःषष्टिकलाजनिः' 'நர்தநாத்³ஹி பரேஶஸ்ய சது꞉ஷஷ்டிகலாஜனி꞉'** என்று பிரதோஷ சமயத்திலே இந்த வாக்கியமானது கூறப்படுகிறது. 64 கலைகளும் இந்த தாண்டவத்தில் ஜனிக்கின்றன என்று கூறப்படுகின்றன.

**ॐ ईशताण्डवसाक्षिण्यै नमः ||५५||**
**ஓம் ஈஶதாண்ட³வ - ஸாக்ஷிண்யை நம꞉ ||55||**

### ईश्वरोत्संगनिलया | (56)
**ஈஶ்வரோத்ஸங்க³நிலயா | 56**

**ईश्वरस्य स्वभर्तुः उत्सङ्गः ऊरू तौ निलयः यस्याः सा तथा ||**
**ஈஶ்வரஸ்ய ஸ்வப⁴ர்து: உத்ஸங்க³: ஊரூ தௌ நிலய: யஸ்யா: ஸா ததா² ||**

அம்பாள் எங்கே அமர்ந்து இருக்கிறாள் என்று சொன்னால், தன் பதியான காமேஸ்வரனுடைய மடியிலே ஸ்வாதீனமாய் அமர்ந்து இருக்கிறாள் என்று இந்த நாமம் கூறுகிறது.

**ॐ ईश्वरोत्सङ्गनिलयायै नमः ||५६||**
**ஓம் ஈஶ்வரோத்ஸங்க³ - நிலயாயை நம: ||56||**

### ईतिबाधाविनाशिनी | (57)
**ஈதிபா³தா⁴விநாஶினீ | 57**

**ईतिबाधा दैवाद्युपद्रवः, क्षुद्रजन्तुपीडा वा, तां विनाशयतीति तथा ||**
**ஈதிபா³தா⁴ தை³வாத்³யுபத்³ரவ:, க்ஷுத்³ரஜந்துபீடா³ வா, தாம்' விநாஶயதீதி ததா² ||**

உபத்திரவங்கலின்றி காப்பாற்று அதாவது 'ஆமையாத் பாஹி' என்று சொல்வது வழக்கம். குருவாயூரப்பனை பற்றி பாடும்போது ஆமையாத் பாஹி என்று உண்டு. கர்ம விதி வசத்தினால் துஷ்ட ஜந்துக்களால் ஏற்படக்கூடிய உபத்ரவத்தை போக்கக்கூடியவள் என்று அர்த்தம். 'பாப தாப நாஷினீ' என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ॐ ईतिबाधाविनाशिन्यै नमः ||५७||**
**ஓம் ஈதிபா³தா⁴விநாஶின்யை நம: ||57||**

**ईहाविरहिता चेशशक्तिरीषत्स्मितानना |**
**लकाररूपा ललिता लक्ष्मीवाणीनिषेविता ||१३||**
**ஈஹாவிரஹிதா சேஶ - ஶக்திரீஷத்ஸ்மிதாநநா |**
**லகாரரூபா லலிதா லக்ஷ்மீ - வாணீ - நிஷேவிதா ||13||**

### ईहाविरहिता | (58)
**ஈஹாவிரஹிதா | 58**

**अप्राप्तप्राप्तिं प्रति इच्छा ईहा, तया विरहिता; आप्तकामत्वात् तद्विरहितेत्यर्थः ||**

**அப்ராப்தப்ராப்திம்' ப்ரதி இச்சா² ஈஹா, தயா விரஹிதா; ஆப்தகாமத்வாத் தத்³ - விரஹிதேத்யர்த²: ||**

அடையப்படாத பொருளை அடைய வேண்டும் என்று இச்சைக்கு ஈஹா என்று பெயர். அந்த ஈஹா இல்லாதவள். ஏன் என்றால் 'க்ருத க்ருத்யதா. ஆப்தகாமத் தன்மை ஸமஸ்த கர்மக்ருத்' என்ற முழுமை இருப்பதினால் 'ஸம்ப்லுத உதக

ஸ்தானிய வத் ' என்று கீதையினிலே கூறப்பட்டது போல முழுமையானவள். பூர்ண வஸ்து. அதனால் அடையக்கூடிய வஸ்து என்று அவளுக்கு ஒன்றும் கிடையாது.

**ॐ ईहाविरहितायै नमः ||५८||**
**ஓ ஈஹாவிரஹிதாயை நம: ||58||**

**ईशशक्तिः | (59)**
**ஈஶஶக்தி: | 59**

**ईशस्य शक्तिः सर्वज्ञत्वादिस्वरूपसामर्थ्यं यस्याः सा तथा, 'देवात्मशक्तिम्' (श्वेता. १-३) इति श्रुतेः ||**

**ஈஶஸ்ய ஶக்தி: ஸர்வஜ்ஞத்வாதி³ஸ்வரூபஸாமர்த்²யம்' யஸ்யா: ஸா ததா², 'தே³வாத்மஶக்திம்' (ஶ்வேதா. 1-3) இதி ஶ்ருதே: ||**

ஈசுவரனுடைய சக்தி ஸ்வரூபமாய் இருப்பவள். அதில் ஸர்வஞத்வம், ஸர்வ கர்த்ருத்வம் முதலிய சாமர்த்தியங்கள் எல்லாம் சக்தியினுடைய ஸ்வரூபங்கள். அவைகள் தேவதா சக்தி என்று ஸ்ருதியானது கூறுகின்றது. தமிழ் இலக்கியத்திலே சிவம் என்ற சொல்லில் 'இ' என்பது சக்தியை குறிப்பிடுகிறது. அந்த சக்தி இல்லை இன்றேல் 'சிவம்', 'சவம்' என்று கூறப்படுகிறது. பரமேஸ்வரனுடைய சக்தி ஸ்வரூபமாய் இருக்க கூடியவள் லலிதாம்பிகை (சிவத்தில் 'இகாரத்தை' எடுத்தல் சவம் ஆகிவிடும்).

**ॐ ईशशक्तयै नमः ||५९||**
**ஓம் ஈஶஶக்தயை நம: ||59||**

**ईषत्स्मितानना | (60)**
**ஈஷத்ஸ்மிதானனா | 60**

**ईषत् स्मितं मन्दहासः यस्य तत् तथा,नादृगाननं यस्याः सा तथा, पर्याप्तकामत्वेन सर्वदा प्रसन्नमुखीत्यर्थः । दुःखास्पर्शिपरमानन्दरूपतया वा तथा ||**

**ஈஷத் ஸ்மிதம்' மந்த³ஹாஸ: யஸ்ய தத் ததா²,நாத்³ரு'கா³னனம்' யஸ்யா: ஸா ததா², பர்யாப்தகாமத்வேன ஸர்வதா³ ப்ரஸன்னமுகீ²த்யர்த²: | து³:கா²ஸ்பர்ஶி - பரமானந்த³ரூபதயா வா ததா² ||**

ஸ்மிதம் என்றால் மந்தஹாஸம் என்று அர்த்தம். மந்த ஹாசத்தோடு கூடிய முகத்தை உடையவள்.துக்கத்தின் சாயல் அறவே இல்லாதவள் பரமானந்த ஸ்வரூபிணீயான லலிதாம்பிகை. எப்பொழுதும் புன்சிரிப்பான முகத்தோடு இருக்க கூடியவள் லலிதாம்பிகை. தக்ஷிணாமூர்த்தி பற்றி சொல்லும் போது அதே ப்ரயோகமானது சொல்லப்படுகிறது. எப்பொழுதும் புன்னகை அரும்பிய இதழ்களோடு இருக்க கூடியவர் தக்ஷிணாமூர்த்தி, அதேபோல் இருக்க கூடியவள் லலிதாம்பிகை.

ॐ ईषत्स्मिताननायै नमः ||६०||
ஓம் ஈஷத்ஸ்மிதாநநாயை நம꞉ ||60||

**लकाररूपा | (61)**
**லகாரரூபா | 61**

रूप्यत इति रूपं मन्त्रस्य चतुर्थवर्णत्वेन ज्ञापकं यस्याः सा तथा ||

ரூப்யத இதி ரூபம்’ மந்த்ரஸ்ய சதுர்த²வர்ணத்வேன ஜ்ஞாபகம்’ யஸ்யா꞉ ஸா ததா² ||

மூல வித்யாவின் நான்காவது அக்ஷரம் (வர்ணம்) லகாரம். அந்த லகார வடிவமாய் இருக்க கூடியவள் லலிதாம்பிகை.

ॐ लकाररूपायै नमः ||६१||
ஓம் லகாரரூபாயை நம꞉ ||61||

**ललिता | (62)**
**லலிதா | 62**

‘ललितं त्रिपु सुन्दरम्’ इति वचनात् अत्यन्तसौन्दर्यवतीत्यर्थः । अनुपमसौन्दर्या वा ||

‘லலிதம்’ த்ரிபு ஸுந்த³ரம்’ இதி வசனாத் அத்யந்தஸௌந்த³ர்யவதீத்யர்த²꞉ | அனுபமஸௌந்த³ர்யா வா ||

‘ललितं त्रिषु सुन्दरम्’ ‘லலிதம்’ த்ரிஷு ஸுந்த³ரம்’ என்ற வாக்கியத்தின் படி ஒப்புயர்வற்ற (incomparable beauty) அழகை உடையவள்.

ॐ ललितायै नमः ||६२||
ஓம் லலிதாயை நம꞉ ||62||

**लक्ष्मीवाणीनिषेविता | (63)**
**லக்ஷ்மீவாணீநிஷேவிதா | 63**

लक्ष्मीः रमा सर्वैश्वर्यशक्तिः, वाणी सरस्वती सर्वज्ञानशक्तिः, ताभ्यां नितरां अकृत्रिमप्रेम्णा अनन्यभूता सती सेविता । सेवा नाम उन्मीलिताज्ञानतीक्षा, तद्वत्त्वादित्यर्थः ||

லக்ஷ்மீ꞉ ரமா ஸர்வைஶ்வர்யஶக்தி꞉, வாணீ ஸரஸ்வதீ ஸர்வஜ்ஞானஶக்தி꞉, தாப்⁴யாம்’ நிதராம்’ அக்ரு’த்ரிமப்ரேம்ணா அனன்யபூ⁴தா ஸதீ ஸேவிதா | ஸேவா நாம உன்மீலிதாஜ்ஞானதீக்ஷா, தத்³வத்த்வாதி³த்யர்த²꞉ ||

லக்ஷ்மீ என்பவள் ஸகல விதமான ஐஸ்வர்யங்களையும் தரக் கூடியவள். தான்ய லக்ஷ்மீ, வர லக்ஷ்மீ, வீர லக்ஷ்மீ, ஐஸ்வர்ய லக்ஷ்மீ என்று சொல்லக்கூடியது. ஸகல

வித்யா ஞானமும் தரக்கூடியவள் ஸரஸ்வதி. ஐஸ்வர்ய சக்தி ஞான சக்தி என்னும் லக்ஷ்மீ ஸரஸ்வதிகளால் ஸ்வபாவிகமாய் உள்ள ப்ரேமையோடு அனன்யமாய் அவள் ஸேவிக்கப்படுகிறாள். ஸேவை என்று சொன்னால் கண் இமைகள் கொட்டாமல், பரதேவதை எந்த நேரத்தில் என்ன ஆஞ்கை இடுவாளோ என்று பரதேவதையின் முகத்தையே பார்த்துக்கொண்டு இருப்பது போல் உள்ள ஒரு பாவனை. இங்கு, அங்கு என்று அலையாது வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருத்தல்.

**ॐ लक्ष्मीवाणीनिषेवितायै नमः ||६३||**
**ஓம் லக்ஷ்மீ - வாணீ - நிஷேவிதாயை நம: ||63||**

**लाकिनी ललनारूपा लसद्दाडिमपाटला |**
**ललन्तिकालसत्फाला ललाटनयनार्चिता ||१४||**
**லாகினீ லலனாரூபா லஸத்³தா³டி³மபாடலா |**
**லலந்திகாலஸத்பா²லா லலாடநயனார்சிதா ||14||**

**लाकिनी | (64)**
**லாகினீ | 64**

**कं सुखम्, ‘कं ब्रह्म’ इति श्रुतेः, तत्र भवतीत्यकं ब्रह्मभिन्नतया प्रतीयमानं दुःखात्मकं जगत् अकम्, लीयत इति लम्, उपलक्षणमुत्पत्त्यादेः, लमकमस्यास्तीति लाकिनी, अनृतजडदुःखरूपजगत्कारणत - व्यावृत्तस्वरूपब्रह्मभूता इत्यर्थः ||**

**கம்’ ஸுக²ம், ‘கம்’ ப்³ரஹ்ம’ இதி ஶ்ருதே:, தன்ன ப⁴வதீத்யகம்’ ப்³ரஹ்மபி⁴ன்னதயா ப்ரதீயமானம்’ து³:கா²த்மகம்’ ஜக³த் அகம், லீயத இதி லம், உபலக்ஷணமுத்பத்த்யா - தே³:, லமகமஸ்யாஸ்தீதி லாகினீ, அந்ரு’தஜட³து³:க²ரூபஜக³த்காரணதத்³வ்யாவ்ரு’த் - தஸ்வரூபப்³ரஹ்மபூ⁴தா இத்யர்த²: ||**

**‘कं ब्रह्म’ ‘கம்’ ப்³ரஹ்ம’** என்ற ஸ்ருதி ‘கம்’ என்றால் ஆனந்தம். ஆனந்தம் அல்லாதது ‘அகம்’. ப்ரஹ்மனுக்கு பின்னமாய் தோன்றக்கூடிய இந்த பிரபஞ்சமானது பெயரும் வடிவும் இருக்க கூடியது துக்கத்தின் ஸ்வரூபம் அதாவது துக்கதின் வடிவம். இத்தகைய ஜகத்தானது எங்கே லயத்தை அடைகிறதோ அது ‘லம்’. லயத்தின் உபலக்ஷணமாக உற்பத்தி ஸ்திதிகளை கொள்ளுதல் வேண்டும். அதாவது இந்த ஜகத்தானது எங்கிருந்து உற்பத்தியாகி நிலைபெற்று எங்கே லயத்தை அடைகின்றதோ அது லாகினீ. ‘மயிஏவ ஸகலம் ஜாதம் ஸ்திதிம் லயம் யாதி (கைவல்ய உப..)’ என்ற உபநிஷத்தின் வாக்கியத்தினுடைய அர்த்தம் பொதிந்ததாய் இந்த நாமமானது இருக்கின்றது. அந்ருத ஜட துக்க ப்ரபஞ்ச காரணமாயும், ப்ரபஞ்ச வடிவ நாம ரூபங்களின் வ்யாவ்ருத்தமாக ஸ்வயமாய் ப்ரகாசிக்கும் ப்ரஹ்மஸ்வரூபமாயும் இருக்ககூடியவள் லாகினீ என்று போற்றக்கூடிய லலிதாம்பிகை.

**ॐ लाकिन्यै नमः ||६४||**
**ஓம் லாகிந்யை நம: ||64||**

## ललनारूपा | (65)
**லலனாரூபா | 65**

**रूप्यते ज्ञाप्यते अनेनेति रूपं ज्ञापकं तद्व्याप्यलिङ्गंचिह्नमिति वा, ललनानां स्त्रीणां रूपं वेषः आभरणाद्यलङ्कारो वा आकृतिर्वा यस्याः सा तथा, ललनाः स्त्रियः रूपाणि भूतयः यस्याः सा तथा, 'लिङ्गाङ्कितमिदं पश्य जगदेतद्भगाङ्कितम्' इति पुराणवचनात् ॥**

**ரூப்யதே ஜ்ஞாப்யதே அனேனேதி ரூபம்' ஜ்ஞாபகம்' தவ்த்³யாப்யலிங்க³ம் - சிஹ்னமிதி வா, லலனானாம்' ஸ்த்ரீணாம்' ரூபம்' வேஷ: ஆப⁴ரணாத்³யலங்காரோ வா ஆக்ரு'திர்வா யஸ்யா: ஸா ததா², லலனா: ஸ்த்ரிய: ரூபாணி பூ⁴தய: யஸ்யா: ஸா ததா², 'லிங்கா³ங்கிதமித³ம்' பஶ்ய ஜக³தே³தத்³ப⁴கா³ங்கிதம்' இதி புராணவசனாத் ||**

ஒரு ரூபம் என்று சொன்னால் ஒரு வஸ்துவை பற்றிய உண்டான அறிவை ஞாபகப் படுத்துவது. அது வஸ்துவினுடைய அடையாளம் அல்லது லிங்கம் (தடஸ்த லக்ஷணம்). ஸ்த்ரீகளுடைய ரூபம் அதாவது அங்க வடிவம், அலங்காரம் முதலியவைகள் யாருக்கு உள்ளனவோ அவள் **'लिङ्गाङ्कितमिदं "पश्य" जगदेतद्भगाङ्कितम्' 'லிங்கா³ங்கிதமித³ம்' "பஶ்ய" ஜக³தே³தத்³ப⁴கா³ங்கிதம்'** என்று புராணங்களிலே சொல்லப்படுகிறது. அலங்கார ஸ்வரூபிணீ லலிதாம்பிகை.

**ॐ ललनारूपायै नमः ||६५||**
**ஓம் லலநாரூபாயை நம: ||65||**

## लसद्दाडिमपाटला | (66)
**லஸத்³தா³டி³மபாடலா | 66**

**दाडिमशब्देन विकसितं तत्पुष्पं लक्ष्यते, लसत् सद्यो विकसनप्रकाशं च तद्दाडिमं च, इदं उपलक्षणं बन्धूकादीनां; तद्वत्पाटला श्वेतमिश्ररक्तवर्णप्रधानमूर्तिमतीत्यर्थः, 'श्वेतरक्तं तु पाटलम्' इति वचनात् ||**

**தா³டி³மஶப்³தே³ன விகஸிதம்' தத்புஷ்பம்' லக்ஷ்யதே, லஸத் ஸத்³யோ விகஸனப்ரகாஶம்' ச தத்³தா³டி³மம்' ச, இத³ம்' உபலக்ஷணம்' ப³ந்தூ⁴காதீ³னாம்'; தத்³வத்பாடலா ஶ்வேதமிஶ்ரரக்தவர்ணப்ரதா⁴னமூர்திமதீத்யர்த²:, 'ஶ்வேதரக்தம்' து பாடலம்' இதி வசனாத் ||**

அம்பிகையின் ஸரீரத்தின் நிறமானது மலர்ந்து விளைந்த மாதுளம் பழத்தினுடைய வர்ணம். மாதுளம் புஷ்பத்திற்கு ஸஜாதியமான செம்பருத்தி முதலிய புஷ்பங்களையும் நாம் எடுத்துக் கொள்ளலாம். பாடலம் என்பது வெண்மை கலந்த சிவப்பு. அப்படி பட்ட நிறத்தை உடையவள்.

**ॐ लसद्दाडिमपाटलायै नमः ||६६||**
**ஓம் லஸத்³தா³டி³ம - பாடலாயை நம: ||66||**

## ललन्तिकालसत्फाला | (67)
**லலந்திகாலஸத்பா²லா | 67**

**ललन्तिकया परितः मुक्ताफलखचितनवरत्नमध्यया ललाटमध्यदेशभूषया, इदमुपलक्षणं ललाटप - ट्टादीनाम्, लसत् फालं यस्याः सा तथा ||**

**லலந்திகயா பரிதஃ முக்தாப2லக2சிதனவரத்னமத்4யயா லலாடமத்4யதே3ஶ பூ4ஷயா, இத3முபலக்ஷணம்’ லலாடபட்டாதீ3னாம், லஸத் பா2லம்’ யஸ்யாஃ ஸா ததா2 ||**

‘லலந்திகா’ என்பது ஒரு ஆபரணம் நெற்றியிலே சூடக்கூடியது. லலந்திகா என்னும் அந்த ஆபரணத்தினால் ப்ரகாசிக்க கூடிய நெற்றியை உடையவள். அந்த ஆபரணத்தின் மத்தியிலே நவரத்தினங்களை பொறுத்தி மேலே ஒரு முத்தை பதித்து இருக்க கூடியது தான் அந்த லலந்திகா என்ற ஆபரணம். இது நெற்றியிலே அணிவதால் நெற்றிப்பட்டம் என்றும் சொல்லப்படுகிறத்து. அப்படிப்பட்ட நெற்றிப்பட்டத்தை அணிந்து இருப்பவள் லலிதாம்பிகை.

**ॐ ललन्तिकालसत्फालायै नमः ||६७||**
**ஓம் லலந்திகா - லஸத்பா2லாயை நமஃ ||67||**

**ललाटनयनार्चिता | (68)**
**லலாடநயனார்சிதா | 68**

**ललाटे नयनं येषां ते, अत्र ललाटशब्देन भ्रूमध्यं लक्ष्यते, नयनशब्देन ज्ञानमपि तथा चोर्ध्वदृष्टिभिः खेचरीमुद्रया विलीनचित्तैः असिवरणयोर्मध्यदेशाभिधानाविमुक्तकृतपरमेश्वराराधनपरपुरुषप्राप्यत्वा - भिधायकात्रिप्रश्नोत्तर जाबालश्रुतिगत याज्ञवल्क्योत्तरवाक्यनिर्दिष्टभूमिकाजयसिद्धिमत्पुरुषैः अर्चिता सा - क्षात्कृतेत्यर्थः । अथवा, तृतीयनेत्रवता शिवेन तत्स्वरूपरुद्रैर्वा पूजितेत्यर्थः ||**

**லலாடே நயனம்’ யேஷாம்’ தே, அத்ர லலாடஶப்3தே3ன ப்4ரூமத்4யம்’ லக்ஷ்யதே, நயனஶப்3தே3ன ஜ்ஞானமபி ததா2 சோர்த்4வத்3ரு’ஷ்டிபி4ஃ கே2சரீமுத்3ரயா விலீனசி - த்தைஃ அஸிவரணயோர்மத்4யதே3ஶாபி4தா4னாவிமுக்தக்ரு’த பரமேஶ்வராராத4னப - ரபுருஷப்ராப்யத்வாபி4தா4யகாத்ரிப்ரஶ்னோத்தர ஜாபா3லஶ்ருதிக3த யாஜ்ஞவல்க் - யோத்தரவாக்யநிர்தி3ஷ்டபூ4மிகாஜயஸித்3தி4மத்புருஷைஃ அர்சிதா ஸாக்ஷாத்க்ரு’ - தேத்யர்த2ஃ | அத2வா, த்ரு’தீயநேத்ரவதா ஶிவேன தத்ஸ்வரூபருத்3ரைர்வா பூஜிதேத் - யர்த2ஃ ||**

‘லலாடம்’ என்பது ‘ப்ரூமத்யம்’ புருவத்தின் நடு என்று அர்த்தம். நயனம் என்று சொன்னால் ஞானம். அதனால் தான் நடு நெற்றியின் மத்தியில் இருப்பது ஆஞ்ஞா என்ற ஞானத்தின் நிலை. நெற்றிக்கண் உடையவர்களால் பூஜிக்கப் படுபவள். அதாவது ஞானிகளால் பூஜிக்கப்படுபவள். கேஸரி முத்திரையால் ஊர்த்வ த்ருஷ்டி உடைய மஹா யோகிகள் ‘அஸி’ என்ற சொல்லக்கூடிய வருணனுக்கு மத்தியில் வாரணா-அஸி என்று அவிமுக்த காசி க்ஷேத்திரத்தில் ஜாபால உபநிஷத்தில் அத்ரிக்கு யாஜ்ஞவல்க்யர் உபதேசித்த படி பாவித்து பரமேஸ்வரனை ஆராதனம் செய்பவர்கள். அவர்களாலும் பூஜிக்கப் படுபவள் லலிதாம்பிகை. அதாவது அத்தகைய மஹா யோகிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்படுபவள் லலிதாம்பிகை அல்லது முக்கண் படைத்த ருத்ர மூர்த்தியால் பூஜிக்கப்படுபவள் லலிதாம்பிகை.

**ॐ ललाटनयनार्चितायै नमः ||६८||**

ஓம் லலாட - நயநார்சிதாயை நம꞉ ||68||

**लक्षणोज्ज्वलदिव्याङ्गी लक्षकोट्यण्डनायिका |**
**लक्ष्यार्था लक्षणामम्या लब्धकामा लतातनुः ||१५||**
**லக்ஷணோஜ்ஜ்வல - தி³வ்யாங்கீ³ லக்ஷகோட்யண்ட³நாயிகா |**
**லக்ஷ்யார்தா² லக்ஷணாமம்யா லப்³த⁴காமா லதாதனு꞉ ||15||**

**लक्षणोज्ज्वलदिव्याङ्गी | (69)**
**லக்ஷணோஜ்ஜ்வலதி³வ்யாங்கீ³ | 69**

**दीव्यति प्रकाशत इति दिव्यं लक्षणैः स्वरूपतटस्थनामकैः उज्ज्वलं शोभितं शुद्धं अङ्गं स्वरूपं विग्र - हो वा । घृतकाठिन्यन्यायेन 'तदात्मानं स्वयमकुरुत' (तै. २-७) इति श्रुतेः सच्चिदानन्दघनीभूतजी - वात्मको विग्रहो यस्याः सा तथा । अथवा, सामुद्रिकशास्त्रोक्तदिव्यलक्षणैरुज्ज्वलानि संपूर्णानि दिव्यानि यानि अङ्गान्यवयवाः शिरः पाण्यादयः अस्याः सन्तीति वा तथा ||**

**தீ³வ்யதி ப்ரகாஶத இதி தி³வ்யம்’ லக்ஷணை꞉ ஸ்வரூபதடஸ்த²நாமகை: உஜ்ஜ்வலம்’ ஶோபி⁴தம்’ ஶுத்³த⁴ம்’ அங்க³ம்’ ஸ்வரூபம்’ விக்³ரஹோ வா | க்⁴ரு’தகாடி²ன்யந்யா - யேன 'ததா³த்மானம்’ ஸ்வயமகுருத' (தை. 2-7) இதி ஶ்ருதே꞉ ஸச்சிதா³னந்த³த⁴னீபூ⁴த - ஜீவாத்மகோ விக்³ரஹோ யஸ்யா꞉ ஸா ததா² | அத²வா, ஸாமுத்³ரிகஶாஸ்த்ரோக்த - தி³வ்யலக்ஷணைருஜ்ஜ்வலானி ஸம்பூர்ணானி தி³வ்யானி யானி அங்கா³ன்யவயவா꞉ ஶிர꞉ பாண்யாத³ய꞉ அஸ்யா꞉ ஸந்தீதி வா ததா² ||**

சாஸ்திரத்தில் வஸ்து ஸ்வரூப நிர்தேஷம் செய்வதிற்கு ஸ்வரூப லக்ஷணம் , தடஸ்த லக்ஷணம் என்ற இரண்டு விதமான லக்ஷணங்களால் ஸ்வரூபத்தை காண்பிக்கிறது. அப்படி இரண்டு விதமாகவும் சோபிக்க கூடிய ஸ்வரூபத்தை உடையவள் லலிதாம்பிகை. **तदात्मानं स्वयमकुरुत' (तै. २-७) 'ததா³த்மானம்’ ஸ்வயமகுருத' (தை. 2-7)** என்ற ஸ்ருதி படி பரதேவதையான லலிதாம்பிகா தனது ஸரீரத்தை தானே நிர்மாணம் செய்து கொள்கிறாள். ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஜீவாத்மக விக்ரஹம் உடையவள் (உபாதி இருப்பது போல) அல்லது சாமுத்ரிகா சாஸ்திரப்படி சகல லக்ஷணங்களும் பொருந்திய அங்கங்களை (சிரம், இடுப்பு, கைகள், கால்கள், முதலியன ) உடையவள் என்று சொல்லப்படுகிறது.

பகவான் கீதையில் **अजोऽपि सन्नव्ययात्मा भूतानामीश्वरोऽपि सन्। प्रकृतिं स्वामधिष्ठाय संभवाम्यात्ममायया॥६॥ அஜோ(அ)பி ஸந்நவ்யயாத்மா பூ⁴தாநாமீஶ்வரோ(அ)பி ஸன் | ப்ரக்ரு’திம்’ ஸ்வாமதி⁴ஷ்டா²ய ஸம்ப⁴வாம்யாத்மமாயயா ||6 || (கீதை 4-6)** என்று கூறுகிறார். அதேபோலவே இங்கு லலிதாம்பிகை ப்ரக்ருதியை உபயோகித்து தன்னுடைய மாயையை தானே உபயோகித்து தன்னுடைய ஸரீரத்தை தானே முடிவு செய்கிறாள். பரமேஸ்வரன் என்று சொன்னாலும் பரமேஸ்வரி என்று சொன்னாலும் ஒன்றே. இங்கு பெயரும் உருவமும் தான் வேறாக தெரிகிறது, ஆனால் அடிப்படை சைதன்யம் ஒன்று தான்.

**ॐ लक्षणोज्ज्वलदिव्याङ्ग्यै नमः ||६९||**
**ஓம் லக்ஷணோஜ்ஜ்வல - தி³வ்யாங்க்³யை நம꞉ ||69||**

## लक्षकोट्यण्डनायिका (70)
**லக்ஷகோட்யண்ட³நாயிகா | 70**

**लक्षानि च कोट्यश्च असंख्यातापरिमितानीत्यर्थः, संसारस्यानादित्वेन भूतभविष्यदादिभेदेन बहुसंख्यावत्त्वमण्डानाम्, तानि च तान्यण्डानि च हिरण्यगर्भविराड्रूपाणि समष्टिव्यष्ट्यात्मना विश्वतैजसोपाधिभूतानि, तेषाम् अधिष्ठानबिम्बचैतन्यात्मना नयति स्वसत्तामापादयतीति नायिका ||**

**லக்ஷானி ச கோட்யஶ்ச அஸங்க்²யாதாபரிமிதானீத்யர்த²:, ஸம்'ஸாரஸ்யாநாதி³த்வேன பூ⁴தப⁴விஷ்யதா³தி³பே⁴தே³ன ப³ஹுஸங்க்²யாவத்த்வமண்டா³னாம், தானி ச தான்யண்டா³னி ச ஹிரண்யக³ர்ப⁴விராட்³ரூபாணி ஸமஷ்டிவ்யஷ்ட்யாத்மனா விஶ்வதைஜஸோபாதி⁴பூ⁴தானி, தேஷாம் அதி⁴ஷ்டா²னபி³ம்ப³சைதன்யாத்மனா நயதி ஸ்வஸத்தாமாபாத³யதீதி நாயிகா ||**

லக்ஷம், கோடி என்பது எல்லாம் ஒரு எண்ணிக்கையே. ஆனால் இதன் அர்த்தம் எண்ணற்ற அண்டங்களுக்கு அவள் ஈஸ்வரியாய் விளங்கக்கூடியவள். கடந்த காலத்தில் உண்டானது, இனிமேல் உண்டாக கூடியது, வர்தமான காலத்திலே இருக்கக்கூடிய கணக்கற்ற கணக்கிலே அடங்காத அனைத்து அண்டங்களுக்கும் நாயகியாய் விளங்கக்கூடியவள். இந்த ஸம்ஸாரம் ஒரு பேத தோற்றம் (அது அனாதி) அஞ்ஞானத்தினால் ஏற்பட்டது. அஞ்ஞானம் என்ற பேத ஞானத்தோடு கூடிய ஜீவர்கள் மலின ஸத்வ மாயையிலே ப்ரதிபிம்பிக்க கூடியவர்கள். இவர்கள் வ்யஷ்டியிலே விஷ்வ, தைஜஸ என்று செல்லப்படுகிறார்கள். அவர்கள் விராட் என்று ஹிரண்யகர்பன் என்று ஸமஷ்டியிலே ஒரு ஒரு அண்டத்துக்கும் கூறப்படுகிறார்கள். பல கோடி அண்டங்களிலே உள்ள வ்யஷ்டி, ஸமஷ்டி ரூப ஜீவேஸ்வர உபாதிகளுக்கு அதிஷ்டானமாகக்கூடிய சப்தா ரூபஸ்வரூபி லலிதாம்பிகை என்று சொல்லப்படுகிறது.

**ॐ लक्षकोट्यण्डनायिकायै नमः ||७०||**
**ஓம் லக்ஷகோட்யண்ட³ - நாயிகாயை நம: ||70||**

## लक्ष्यार्था | (71)
**லக்ஷ்யார்தா² | 71**

**लक्षणया शोधनया जहदजहल्लक्षणया वा प्रतिपाद्यते वेदान्तमहावाक्यानां योऽर्थः तत्स्वरूपा। अथवा, योगशास्त्रप्रसिद्धबहिरन्तरूर्ध्वाधः प्रदेशविशेषरूपभूमिकासु स्वस्वमनोवाञ्छाविषयविशेपणत्वेन निर्गुणत्वेन वा मनोविलयरूपहठराजयोगादिसाधनपरिपाकवशेन साक्षात्कृतं चैतन्य लक्ष्य इत्युच्यते, अर्थ्यते याच्यते गुरुं प्रति इति अर्थः, लक्ष्यो योऽर्थः चित्स्वरूपपरमानन्दरूपः सोऽपि सैवेति तथा, 'ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म पश्चाद्ब्रह्म दक्षिणतश्चोत्तरेण' (मुण्ड. २-२-११) इति श्रुतेः ||**

**லக்ஷணயா ஶோத⁴னயா ஜஹத³ஜஹல்லக்ஷணயா வா ப்ரதிபாத்³யதே வேதா³ந்தமஹாவாக்யானாம்' யோ(அ)ர்த²: தத்ஸ்வரூபா | அத²வா, யோக³ஶாஸ்த்ரப்ரஸித்³த⁴ப³ஹிரந்தரூர்த்⁴வாத⁴: ப்ரதே³ஶவிஶேஷரூபபூ⁴மிகாஸு ஸ்வஸ்வமனோவாஞ்சா²விஷயவிஶேபணத்வேன நிர்கு³ணத்வேன வா மனோவிளயரூபஹட²ராஜயோகா³தி³ஸாத⁴னபரிபாகவஶேன ஸாக்ஷாத்க்ரு'தம்' சைதன்ய லக்ஷ்ய இத்யுச்யதே, அர்த்²யதே**

**யாச்யதே கு³ரும்’ ப்ரதி இதி அர்த²:, லக்ஷ்யோ யோ(அ)ர்த²: சித்ஸ்வரூபபரமானந்த³ - ரூப: ஸோ(அ)பி ஸைவேதி ததா², 'ப்³ரஹ்மைவேத³மம்ரு’தம்’ புரஸ்தாத்³ப்³ரஹ்ம பஶ் - சாத்³ப்³ரஹ்ம த³க்ஷிணதஶ்சோத்தரேண' (முண்ட³. 2-2-11) இதி ஶ்ருதே: ||**

இந்த லக்ஷ்யார்த்தம் என்பது சாஸ்திரத்தி குறிப்பிடக்கூடிய ஒரு முக்கியமான கோட்பாடு. மஹா வாக்கியத்திலே வாக்யார்த்தம் ‘தத்’, ‘த்வம்’ என்ற பதங்களுடைய ஐக்கியத்தை வாக்கியார்த்தத்தின் மூலமாக கொண்டு வர முடியாது.

‘தத்’ என்பது ஈஸ்வரன். ஸர்வசக்தி மத்வம், ஸர்வக்ஞ த்வம் உபாதியினால் உடையது. ஆனால் ‘த்வம்’ என்பது ஜீவன் அல்பசக்தி மத்வம் , அல்பக்ஞ த்வம் உடைய உபாதியை உடையது. அது இரண்டும் ஒன்று என்று சொல்ல வேண்டுமானால், பாகத்யாக லக்ஷணங்களால் தான் முடியும் என்று சாஸ்திரம் சொல்கிறது. ஜகத், அஜகத் லக்ஷணங்களின் மூலமாகத்தான் வேதாந்த மஹாவாக்கியங்களுக்கு அர்த்தமானது விமர்ச்சிக்கப் படுகின்றது.

அந்த அர்த்த ஸ்வரூபத்திலே எது விமர்ச்சிக்கப்படுகிறதோ அந்த ஸ்வரூபமாய் விளங்கக்கூடியவள் லலிதாம்பிகை. யோக சாஸ்திரத்திலே, கீதையிலும் பாஹ்ய, ஆந்தர, என்றெல்லாம் சொல்லப்படுகிறது. பாஹ்யம், ஆந்தரம், ஊர்த்வம், அத; (மேலே, கீழே, உள்ளே, வெளியே) என்று எல்லாப் பிரதேசங்களிலும் மனம் விரும்பும் வகையாக மனத்தை செலுத்தி மனோலய அப்பியாசம் செய்து ஸுகத்தை அடையும் வகையானது சாஸ்திரத்தில் குறிப்பிடப்படுகிறது. இவைகள் பஹிர் லக்ஷியம் (பஹிரங்க ஸாதனம்), அந்தரங்க லக்ஷியம் (அந்தரங்க ஸாதனம்) என்பதாகும். இத்தகைய லட்சியங்கள் ப்ரக்ருதியின் லயத்தை உண்டு செய்து அதனால் ஏற்படக்கூடிய ஆனந்த ஸித்தி ஏற்படுகிறது.

இப்படி பட்ட லக்ஷியங்களை அப்யஸிக்கும் லக்ஷணங்களை குரு முகமாகத்தான் நாம் தெரிந்து கொள்ளவேண்டும். குருவிடம் தான் நாமும் கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே அர்த்த ஸ்மரணமாகும். குண்டலினி யோகம் என்று சொல்ல கூடிய ராஜயோகம் ரீதியாக மேலே கூறப்பட்ட பாகதியாகாதி லக்ஷணங்களிலும் அவற்றின் ஸத் ஸ்வரூபமாய் விளங்கக்கூடிய சைதன்யமும், ஸாதனமும் அதனுடைய பலமாக கூறப்படுகிறது. லக்ஷ்யமும் பரமார்த்த ஸ்வரூபமே ஆகும். **'ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म पश्चाद्ब्रह्म दक्षिणतश्चोत्तरेण' (मुण्ड. २-२-११) 'ப்³ரஹ் - மைவேத³மம்ரு’தம்’ புரஸ்தாத்³ப்³ரஹ்ம பஶ்சாத்³ப்³ரஹ்ம த³க்ஷிணதஶ்சோத்தரேண' (முண்ட³. 2-2-11)** என்ற ஸ்ருதி படி ப்ரஹ்மமே எங்கும் உள்ளது. உள்ளெல்லாம், வெளியெல்லாம், முள்ளெல்லாம், மலர்யெல்லாம் மகிழ்விக்கும் கனியெல்லாம் நான் என்ற கண்ணன் கூற்றே இதனுடைய தாத்பர்யமாய் இருக்கிறது.

**ॐ लक्ष्यार्थायै नमः ||७१||**
**ஓம் லக்ஷ்யார்தா²யை நம: ||71||**

**लक्षणागम्या | (72)**
**லக்ஷணாக³ம்யா | 72**

लक्षणा नाम शक्यार्थे वाचकस्य पदस्य अन्वयाद्यनुपपत्त्या तत्संबन्धिपदार्थान्तरज्ञानहेतुः शक्यसंब - न्धादिपदजन्यपदार्थान्तरज्ञानहेतुः शब्दवृत्तिरित्युच्यते; तस्या वाच्यवाचकतत्संबन्धादिभेदज्ञानपूर्विकायाः परिच्छिन्नसावयवपदार्थसंबन्धज्ञानहेतोः केवलचिन्मात्रे निरुपाधिके वस्तुनि षष्ठीजात्यादीनां लक्ष्यतावच्छे - दकधर्माणामभावे प्रवृत्त्ययोगात्, तथा अगम्या, गन्तुं ज्ञातुं योग्यं गम्यं तत्र भवतीत्यगम्या । वेदान्तमते जहदजहल्लक्षणया विशेषणमात्रपरित्यागस्य अन्योन्यतादात्म्यानुपपत्त्या बोधितत्वात् तदर्थं सा अवश्यम - ङ्गीकर्तव्या । विशेष्यस्य ज्ञानस्वरूपत्वेन नित्यतया लक्षणाजन्यत्वात् तदर्थं सा न अपेक्ष्यत इति भावः । तथा च प्रकृताया देवतायाः शुद्धचैतन्यमात्रस्वरूपतया स्वयंप्रकाशत्वेन लक्षणागोचरत्वात् लक्षणागम्येति नाम युक्तमिति भावः ||

லக்ஷணா நாம ஶக்யார்தே² வாசகஸ்ய பத³ஸ்ய அன்வயாத்³யனுபபத்த்யா தத்ஸம்ப³ந்தி⁴பதா³ர்தா²ந்தரஜ்ஞானஹேது: ஶக்யஸம்ப³ந்தா⁴தி³பத³ஜன்யபதா³ர் - தா²ந்தரஜ்ஞானஹேது: ஶப்³த³வ்ரு'த்திரித்யுச்யதே; தஸ்யா வாச்யவாசகதத் - ஸம்ப³ந்தா⁴தி³பே⁴த³ஜ்ஞானபூர்விகாயா: பரிச்சி²ன்னஸாவயவபதா³ர்த²ஸம்ப³ந்த⁴ - ஜ்ஞானஹேதோ: கேவலசின்மாத்ரே நிருபாதி⁴கே வஸ்துனி ஷஷ்டீ²ஜாத்யாதீ³னாம்' லக்ஷ்யதாவச்சே²த³கத⁴ர்மாணாமபா⁴வே ப்ரவ்ரு'த்த்யயோகாத்³, ததா² அக³ம்யா, க³ந் - தும்' ஜ்ஞாதும்' யோக்³யம்' க³ம்யம்' தன்ன ப⁴வதீத்யக³ம்யா | வேதா³ந்தமதே ஜஹ - த³ஜஹல்லக்ஷணயா விஶேஷணமாத்ரபரித்யாக³ஸ்ய அன்யோன்யதாதா³த்ம்யானு பபத்த்யா போ³தி⁴தத்வாத் தத³ர்த²ம்' ஸா அவஶ்யமங்கீ³கர்தவ்யா | விஶேஷ்யஸ்ய ஜ்ஞானஸ்வரூபத்வேன நித்யதயா லக்ஷணாஜன்யத்வாத் தத³ர்த²ம்' ஸா ந அபேக்ஷ் - யத இதி பா⁴வ: | ததா² ச ப்ரக்ரு'தாயா தே³வதாயா: ஶுத்³த⁴சைதன்யமாத்ரஸ்வ - ரூபதயா ஸ்வயம்ப்ரகாஶத்வேன லக்ஷணாகோ³சரத்வாத் லக்ஷணாக³ம்யேதி நாம யுக்தமிதி பா⁴வ: ||

லக்ஷணை என்று சொல்லப்படும் வார்த்தைகளால் அறியப்பாடாதவள். ‘லக்ஷணம்’ என்றால் வாக்யார்த்தத்திற்கு இருக்க கூடிய பொருள் ஏற்படாவிடில் அந்த பதத்திற்கு கூடிய அர்த்தசக்ய ஸம்பந்தத்தை எடுத்து கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு கங்காயாம் கோஷா: என்றால் கங்கையிலே ஒரு கிராமம் இருக்கிறது. ஆயர்பாடி இருக்கிறது என்றும் ஒரு உதாரணத்தையும் பார்ப்போம். இதில் கங்கை என்பதற்கு முக்கியமான அர்த்தம் ஜலப்பிரவாகம். ஆயர்பாடி என்பது இடையர்களுடைய ஒரு கிராமம். ஜலப்ரவாகத்தில் எப்படி ஒரு கிராமம் இருக்க முடியும். இருக்கவே முடியாது. அதனால் அந்த முக்கியார்த்தத்தை விட்டு விட்டு அந்த ஜலப்பிரவாகத்துக்கு ஸம்பந்தமாக இருக்க கூடிய கங்கையின் கரை என்று எடுத்து கொள்ளுதல் லக்ஷணா வ்ருத்தி . இந்த லக்ஷணையை கொண்டு வாக்யார்த்தமாய் இருக்கும் கங்கை பதத்தோடு வாச்யமாவும் ஜலப் பிரவாகத்தோடு ஸம்பந்தம் உள்ளது வாசிய வாசக ஸம்பந்தம் என்பதை பரிச்சின்னமான ஒரு விஷயம் ஆகும். அதனால் முக்கிய ஸம்பந்த ரூபமான எந்த லக்ஷணை இருக்கிறதோ, அதனால் ஏற்படக்கூடிய ஞானம் அவயவயங்களோடு கூடிய பேதத்தோடு கூடிய பரிச்சின்னமே இருக்கிறது. நிரவயவமாகவும், அபேதமாயும், அபரிச்சின்னமாயும் உள்ளது தான் சித் ஸ்வரூபம். இப்படி பட்ட சித் ஸ்வரூபமானது பேதத்தோடு கூடிய ஞானத்தை உண்டு பண்ணும் லக்ஷணையால் அறிவிக்க முடியாது. ஆகவே அத்வைத ஸித்தாந்தத்தில் ஜகத், அஜகத் லக்ஷணம் என்று விட்டு விடாத லக்ஷணம் என்று தத் தவம் பதங்களிலே இரண்டு

பதங்களிலும் இந்த ஐக்கியத்திற்கு பொருந்தாத அத்யஸ்தமான உபாதிகளை நீக்கி மீதியிருக்க கூடிய சைதன்ய ஸ்வரூபத்தோடு அதனுடைய ஐக்கியம் கூறப்படுகிறது. ஆகவே பாகத் தியாக லக்ஷணமே ஜீவேஸ்வர ஐக்கியத்துக்கு பொருத்தமுடையதாக இருக்கிறது. உபாதியை நீக்குவதற்கு மாத்திரமே இந்த லக்ஷணையானது பொருந்துகிறது. அதிஷ்டானங்களின் ஐக்கியம் அல்ல, ஏனென்றால் அதிஷ்டானம் ஒன்று அது நித்ய ஸித்தம். ஸ்வயம் பிரகாச ப்ரஹ்ம லக்ஷணம். அக்ஷரம் என்று சாஸ்திரம் அறுதியிட்டு கூறுகிறது.

**ॐ लक्षणागम्यायै नमः ||७२||**
**ஓம் லக்ஷணாக³ம்யாயை நம꞉ ||72||**

**लब्धकामा | (73)**
**லப்³த⁴காமா | 73**

**लब्धाः काम्यन्त इति कामाः ऐहिकामुष्मिकसुखसाधनानि, लक्षणया तत्तज्जन्यसुखानि वा तथाभूताः कामाः यया सा तथा, पर्याप्तकामेत्यर्थः 'पर्याप्तकामस्य कृतात्मनस्तु इहैव सर्वे प्रविलीयन्ति कामाः' (मु. ३-२-२) इति श्रुतेः ||**

**லப்³தா⁴꞉ காம்யந்த இதி காமா꞉ ஐஹிகாமுஷ்மிகஸுக²ஸாத⁴னானி, லக்ஷணயா தத்தஜ்ஜன்யஸுகா²னி வா ததா²பூ⁴தா꞉ காமா꞉ யயா ஸா ததா², பர்யாப்தகாமேத் - யர்த²꞉ 'பர்யாப்தகாமஸ்ய க்ரு'தாத்மனஸ்து இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா꞉' (மு. 3-2-2) இதி ஶ்ருதே꞉ ||**

ஐஹிக, அமுஷ்மிக.. இகலோக பரலோக சுகசாதனங்கள் அவற்றால் அடையப்பட்டு இருக்கின்றனவோ. யாருக்கு ஏற்கனவே அடைய பட்டு இருக்கின்றனவோ அதாவது எல்லா காமனைகளையும் அடையப் பெற்றவள் என்று **यावानर्थ उदपाने सर्वत: सम्प्लुतोदके | तावान्सर्वेषु वेदेषु ब्राह्मणस्य विजानत: || 46|| யாவானர்த² உத³பானே ஸர்வத: ஸம்ப்லுதோத³கே | தாவான்ஸர்வேஷு வேதே³ஷு ப்³ராஹ்மணஸ்ய விஜானத: || 46|| (கீதை 2-46)** என்று கீதையில் சொன்ன படி ப்ரஹ்ம ஞானமானது அதாவது ப்ரஹ்ம ஸ்வரூப ஸித்தியானது விஷய ஞானங்களை எல்லாம் உள்ளடக்கியது என்று சாஸ்திரமானது சொல்லுகிறது. அதனால் 'ஸமஸ்த கர்ம க்ருத்.. க்ருத க்ருத்ய: பவதி' என்று எல்லாம் சாஸ்திரமானது பூர்த்த காமனையை ப்ரஹ்ம ஞானியை எடுத்து காட்டுகிறது. **'पर्याप्तकामस्य कृतात्मनस्तु इहैव सर्वे प्रविलीयन्ति कामाः' (मु. ३-२-२) 'பர்யாப்தகாமஸ்ய க்ரு'தாத்மனஸ்து இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா꞉' (மு. 3-2-2)** என்று இங்கேயே அனைத்து காமங்களும் ஆத்ம ஞானத்திலே கரைந்து விடுகிறது என்று சாஸ்திரம் அறுதியிட்டு கூறுகிறது. न हि **ज्ञानेन सदृशं पवित्रमिह विद्यते । तत्स्वयं योगसंसिद्धः कालेनात्मनि विन्दति ॥38॥ந ஹி ஜ்ஞானேன ஸத்³ரு'ஶம்' பவித்ரமிஹ வித்³யதே | தத்ஸ்வயம்' யோக³ஸம்'ஸித்³த⁴꞉ காலேனாத்மனி விந்த³தி ||38||** என்று கீதையில் சொல்வது போல இந்த புனிதமான ஞானத்தை உள்ளடக்கியவள், ஞானஸ்வரூபியாக இருக்க கூடியவள் லப்த காமா என்ற நாமத்தினால் வர்ணிக்கப்படுகிறாள்.

ॐ लब्धकामायै नमः ||७३||
ஓம் லப்³த⁴காமாயை நம꞉ ||73||

**लतातनुः | (74)**
**லதாதனு꞉ | 74**

**लत्ता इव, लताः कल्पादिवल्ल्यः सकलपुरुषार्थप्रदत्वेन जगति प्रसिद्धाः; ता इव सुकुमारत्वाद्याश्रया तनुः मूर्तिः यस्याः सा तथा ||**

**லதா இவ, லதா꞉ கல்பாதி³வல்ல்ய꞉ ஸகலபுருஷார்த²ப்ரத³த்வேன ஜக³தி ப்ரஸித்³தா⁴꞉; தா இவ ஸுகுமாரத்வாத்³யாஶ்ரயா தனு꞉ மூர்தி꞉ யஸ்யா꞉ ஸா ததா² ||**

'லதா' என்றால் கொடி என்று அர்த்தம். கல்ப லதா, சோம லதா என்பது கொடிகளாகும். ஸகல புருஷார்த்தங்களை கொடுக்க கூடிய மஹிமையும் பெற்றவை. அவைகளை போன்ற (கொடி போன்ற) கொடி இடை என்று சொல்லக் கூடிய அழகான ஶரீரத்துடன் கூடியவள் என்று சாஸ்திரத்தில் அவளுடைய அங்க லாவண்யங்களை வர்ணிக்கிறது. இதையே லதாதனவே என்ற நாமமானது கூறுகின்றது.

ॐ लतातनवे नमः ||७४||
ஓம் லதாதநவே நம꞉ ||74||

ललामराजदलिका लम्बिमुक्तालताञ्चिता |
लम्बोदरप्रसूर्लभ्या लज्जाढ्या लयवर्जिता ||१६||
லலாம - ராஜத³லிகா லம்பி³முக்தா - லதாஞ்சிதா |
லம்போ³த³ர - ப்ரஸூர்லப்⁴யா லஜ்ஜாட்⁴யா லயவர்ஜிதா ||16||

**ललामराजदलिका | (75)**
**லலாமராஜத³லிகா | 75**

**ललाम्ना कस्तुरीतिलकेन कस्तूरीपत्रेण वा राजत् विभ्राजत् परमशोभि अलिकं ललाटं यस्याः सा तथा ||**

**லலாம்னா கஸ்துரீதிலகேன கஸ்தூரீபத்ரேண வா ராஜத் விப்⁴ராஜத் பரமஶோபி⁴ அலிகம்' லலாடம்' யஸ்யா꞉ ஸா ததா² ||**

கஸ்தூரியை நெற்றி பொட்டாக வைத்து இருப்பதனால், ஒரு ஸுகந்தத்தோடு ப்ரகாசிக்கும் நெற்றி பொட்டை உடையவள் லலிதாம்பிகை என்று அங்க லாவண்யத்தை வர்ணிக்கிறது இந்த நாமம் .

ॐ ललामराजदलिकायै नमः ||७५||
ஓம் லலாமராஜத³லிகாயை நம꞉ ||75||

## लम्बिमुक्तालताञ्चिता | (76)
**லம்பி³முக்தாலதாஞ்சிதா | 76**

**लम्बिन्यः लम्बमानाः अधः प्रसृताः मुक्तालताः हाराः मुक्ताफलानि वा यस्याः सा तथा। नवरत्न - खचितसुवर्णमुक्तागुच्छेः सर्वाङ्गषु प्रलम्वमानैः ललाटपर्यन्तं लम्बमानकिरीटप्रथमभागललाटपट्ट नासाग्रताटङ्काधः कर्णदेशकण्ठप्रदेश हस्तचतुष्टयाङ्गद समानप्रदेशकूर्पासपरितःपदकाग्रदेशकटिनिब - द्धकाञ्चयादिषु परिलम्बमानैरित्यर्थः ||**

**லம்பி³ன்யஃ லம்ப³மானாஃ அத⁴ஃ ப்ரஸ்ரு’தாஃ முக்தாலதாஃ ஹாராஃ முக்தாப²லானி வா யஸ்யாஃ ஸா ததா² | நவரத்நக²சிதஸுவர்ணமுக்தாகு³ச்சே²ஃ ஸர்வாங்க³ஷு ப்ரள - ம்வமானைஃ லலாடபர்யந்தம்’ லம்ப³மானகிரீடப்ரத²மபா⁴க³ளலாடபட்ட நாஸாக்³ர - தாடங்காத⁴ஃ கர்ணதே³ஶகண்ட²ப்ரதே³ஶ ஹஸ்தசதுஷ்டயாங்க³த³ ஸமானப்ரதே³ - ஶகூர்பாஸபரிதஃபத³காக்³ரதே³ஶகடிநிப³த்³த⁴காஞ்சயாதி³ஷு பரிலம்ப³மானைரித் - யர்த²ஃ ||**

‘லம்பி’ என்றால் தொங்கிக்கொண்டு இருப்பது என்று அர்த்தம். அழகான முத்து மாலைகள் தொங்கிக்கொண்டு இருப்பதினால் மிக அழகை உடையவள். ஸுவர்ணத்தினால் செய்யப்பட்டு, நவரத்தினங்கள் உடைய அழகிய கிரீடத்தின் முன் பாகத்தின் இருந்தும், அவளின் நெற்றிச் சுட்டியில் இருந்தும், நாஸாக்ரம் என்று சொல்லக்கூடிய மூக்கின் நுனியில் இருந்தும், காதுகளில் இருக்க கூடிய குண்டலங்களின் கீழ் பக்கத்திலிருந்தும் இருந்தும், கழுத்து, நான்கு கைகள், முழங்கைக்கு மேலே தோள் இவைகளில் இருந்தும், மற்றும் பாதங்களின் நுனிகளிலிருந்தும், இடுப்பிலே ப்ரகாசிக்க கூடிய ஒட்டியாணத்திலிருந்தும் கீழே ஆடிக்கொண்டே தொங்கிக்கொண்டு இருக்கும் முத்து மாலையால் விளங்கக்கூடியவள் லலிதாம்பிகை என்று அவளின் ஆபரண சோபையை அது குறிப்பிடுகிறது.

**ॐ लम्बिमुक्तालताञ्चितायै नमः ||७६||**
**ஓம் லம்பி³முக்தா - லதாஞ்சிதாயை நமஃ ||76||**

## लम्बोदरप्रसूः | (77)
**லம்போ³த³ரப்ரஸூஃ | 77**

**लम्बोदरस्य महागणेशस्य प्रसूः जनयित्री मातेत्यर्थः । लम्बोदरं प्रसूत इति वा ||**

**லம்போ³த³ரஸ்ய மஹாக³ணேஶஸ்ய ப்ரஸூஃ ஜனயித்ரீ மாதேத்யர்த²ஃ . லம்போ³த³ரம்’ ப்ரஸூத இதி வா ||**

‘ஸூ’ என்றால் கர்ப்ப விமோசனம் என்று அர்த்தம். லம்போதரர் என்றால் மஹாகணபதி என்று அர்த்தம். அதாவது மஹாகணபதியை பிரசவித்தவள். மஹாகணபதியின் மாதாவாக விளங்கக்கூடியவள் லலிதாம்பிகை என்று இந்த நாமாவில் சிறப்பாய் கூறப்படுகிறது.

**ॐ लम्बोदरप्रसुवे नमः ||७७||**
**ஓம் லம்போ³த³ர - ப்ரஸுவே நம꞉ ||77||**

**लभ्या | (78)**
**லப்⁴யா | 78**

**संसारदशायामावारकाज्ञानेन स्फुटमप्रकाशमाना सती श्रवणादिसंस्कृतान्तःकरणवृत्तावखण्डा - कारज्ञानभूमिकायां प्रतिफलितस्वरूपेण विस्मृतकण्ठगतकनकभूषणवत् प्राप्तप्राप्तिरूपतया लब्धुं योग्येति तथा ||**

**ஸம்’ஸாரத³ஶாயாமாவாரகாஜ்ஞானேன ஸ்பு²டமப்ரகாஶமானா ஸதீ ஶ்ரவணாதி³ - ஸம்’ஸ்க்ரு’தாந்த꞉கரணவ்ரு’த்தாவக²ண்டா³காரஜ்ஞானபூ⁴மிகாயாம்’ ப்ரதிப²லிதஸ் - வரூபேண விஸ்ம்ரு’தகண்ட²க³தகனகபூ⁴ஷணவன் ப்ராப்தப்ராப்திரூபதயா லப்³ - து⁴ம் யோக்³யேதி ததா² ||**

ஸம்ஸாரம் என்று சொல்லக் கூடிய அஞ்ஞான திசையிலே, அஞ்ஞானத்தின் ஆவரண சக்தியினால் மறைக்கப்பட்டு அறிய முடியாத படி எல்லா ஸாதனங்களையும் பெற்ற அதிகாரி ஸாதன ஸம்பன்ன அதிகாரி முமுக்ஷு அவர்களால் ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலியவைகளால் ஏற்பட்ட அகண்ட ஆகார விருத்தியில் ஸ்வரூப ஸித்தியாய் விளங்க கூடியவள் லலிதாம்பிகை. ஆத்ம ஸ்வரூபம் நித்திய ஸித்தமாய் இருந்தாலும் கழுத்திலே இருக்கும் ஹாரத்தை மறந்து இங்கும் அங்கும் தேடி கிடைக்காமல் மறுபடியும் பிறரால் ஞாபகப் படுத்த பட்டு தன் கழுத்திலே தொட்டு பார்த்து கிடைத்த ஹாரம் போல் அடையப்படுபவள். கீதையில் அர்ஜுனன் சொல்கிறான் **नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत | स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव || 73|| நஷ்டோ மோஹ꞉ ஸ்ம்ரு’திர்லப்³தா⁴ த்வத்ப்ரஸாதா³ன்மயாச்யுத | ஸ்தி²தோ(அ)ஸ்மி க³தஸந்தே³ஹ꞉ கரிஷ்யே வசனம்’ தவ || 73||** (கீதை (18-73) மறந்து போய் இருந்தது ஞாபகம் வந்தது என்று. அது போல மறந்ததை குருவின் அருளினால் நாம் தேடி கண்டு பிடிப்பது என்ற ஒரு சாரத்தை கொடுக்க கூடிய லப்யா என்று இந்த நாமமானது சொல்கிறது.

**ॐ लभ्यायै नमः ||७८||**
**ஓம் லப்⁴யாயை நம꞉ ||78||**

**लज्जाढ्या | (79)**
**லஜ்ஜாட்⁴யா | 79**

**लज्जया, उपलक्षणमन्तःकरणधर्माणां सर्वेषाम्, आढ्या तद्वत्त्वेन आकारवतीत्यर्थः | तिरोधानादिना अन्तर्हिता सती वरादि प्रयच्छतीति लज्जाढ्या भवतीति च उपचर्यते ||**

**லஜ்ஜயா, உபலக்ஷணமந்த꞉கரணத⁴ர்மாணாம்’ ஸர்வேஷாம், ஆட்⁴யா தத்³வத்த் - வேன ஆகாரவதீத்யர்த²꞉ | திரோதா⁴நாதி³னா அந்தர்ஹிதா ஸதீ வராதி³ ப்ரயச்ச²தீதி லஜ்ஜாட்⁴யா ப⁴வதீதி ச உபசர்யதே ||**

'லஜ்ஜை' என்ற ஸம்ஸ்க்ருத வார்த்தைக்கு தமிழில் நாணம் அதாவது வெட்கம் என்று அர்த்தம். இது அந்தக்கரண தர்மங்களிலே ஒன்று. இதனால் இதனை உபலக்ஷணமாக வைத்து எல்லா விதமான தர்மங்களையும் கொள்ள வேண்டும். ஆட்யா என்பது அத்தகைய தர்மத்தை விருத்திக் ஞானமாக கொண்டு அந்த வடிவை உடைய லலிதாம்பிகை. அந்த நாணத்தினால் தன்னை வெளிக்கு நன்றாய் காட்டாமல் மறைவாக நிற்பது போல் இருக்க கூடிய பரதேவதை. திரோதா பாவம் என்று சொல்லக்கூடிய மறைக்க கூடிய சக்தியினால் தன்னை மறைத்துக் கொண்டு பக்தர்களுக்கு மட்டும் வரங்களை அருளச் செய்கின்றவள் என்று லஜ்ஜாட்யாயை நமஹ என்ற இந்த நாமாவானது நமக்கு விளக்குகிறது.

**ॐ लज्जाढ्यायै नमः ||७९||**
**ஓம் லஜ்ஜாட்⁴யாயை நம꞉ ||79||**

**लयवर्जिता | (80)**
**லயவர்ஜிதா | 80**

**'अविनाशी वा अरेऽयमात्मा अनुच्छित्तिधर्मा' (बृद्. ४-५) इत्यादिश्रुतेः, लयो विनाशः, तेन रहिता वर्जितेत्यर्थः । इदमुपलक्षणं षड्भावविकाराणाम्, 'सत्यं ज्ञानमनन्तं ब्रह्म' (ते. २-१) इत्यादिश्रुतेः ||**

**'அவிநாஶீ வா அரே(அ)யமாத்மா அனுச்சி²த்தித⁴ர்மா' (ப்³ரு'த்³த³. 4-5) இத்யாதி³ஶ்ருதே꞉, லயோ விநாஶ꞉, தேன ரஹிதா வர்ஜிதேத்யர்த²꞉ | இத³முபலக்ஷணம்' ஷட்³பா⁴வவிகாராணாம், 'ஸத்யம்' ஜ்ஞானமனந்தம்' ப்³ரஹ்ம' (தே. 2-1) இத்யாதி³ஶ்ருதே꞉ ||**

**'अविनाशी वा अरेऽयमात्मा अनुच्छित्तिधर्मा' (बृद्. ४-५) 'அவிநாஶீ வா அரே(அ)யமாத்மா அனுச்சி²த்தித⁴ர்மா' (ப்³ரு'த்³த³. 4-5)** என்ற ஸ்ருதி படி நாசமில்லாமல் நித்தியமாய் அவிநாசியாய் இருப்பவள். 'அஸ்தி ஜாயதே வர்ததே ...' என்ற ஷட் விகாரங்கள் இல்லாதவள். அவைகள் தடஸ்த லக்ஷணங்களுக்கு உபலக்ஷணமாய் இருக்கின்றது. நாசம் முதலிய எந்த விதமான பாவ விகாரங்களும் அற்றவள் என்று கருத்து. ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம என்று ஸ்ருதி, ஸ்ரூப ஸித்தியை (லக்ஷணத்தை) கொடுக்கிறது. நீக்கக்கூடிய தடஸ்த லக்ஷணத்தின் மூலமாகவும் அல்லது ஸ்வரூப லக்ஷணத்தின் மூலமாகவும் அந்த ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம என்ற ஸ்வரூபத்தை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது. ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம என்ற ஸ்வரூபமே சைதன்ய ஸ்வரூபம் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**ॐ लयवर्जितायै नमः ||८०||**
**ஓம் லயவர்ஜிதாயை நம꞉ ||80||**

**ह्रींकाररूपा ह्रींकारनिलया ह्रींपदप्रिया |**
**ह्रींकारबीजा ह्रींकारमन्त्रा ह्रींकारलक्षणा ||१७||**
**ஹ்ரீங்காரரூபா ஹ்ரீங்காரநிலயா ஹ்ரீம்பத³ப்ரியா |**
**ஹ்ரீங்காரபீ³ஜா ஹ்ரீங்காரமந்த்ரா ஹ்ரீங்காரலக்ஷணா ||17||**

**ह्रींकाररूपा | (81)**
**ஹ்ரீங்காரரூபா | 81**

**ह्रींकारः रूप्यते निरूप्यते निर्देश्यत इति रूपं मन्त्रपञ्चमावयवः यस्याः सा तथा ||**

**ஹ்ரீங்காரஃ ரூப்யதே நிரூப்யதே நிர்தே³ஶ்யத இதி ரூபம்’ மந்த்ரபஞ்சமாவயவஃ யஸ்யாஃ ஸா ததா² ||**

ஹ்ரீங்காரம் என்ற இந்த அக்ஷரமானது ஸ்ரீ வித்யாவில் ஐந்தாவது பீஜாக்ஷரம் “ஹ்ரீம்”. இந்த ஹ்ரீம் என்ற பீஜாக்ஷரத்தினால் நிரூபணம் செய்யப்படுபவள் லலிதாம்பிகை என்று ஹ்ரீங்கார ரூபா என்ற நாமமானது கூறுகிறது.

**ॐ ह्रींकाररूपायै नमः ||८१||**
**ஓம் ஹ்ரீங்காரரூபாயை நமஃ ||81||**

**ह्रींकारनिलया | (82)**
**ஹ்ரீங்காரநிலயா | 82**

**ह्रीमक्षरं निलयः गृहवदवच्छेदकं यस्याः सा तथा । स्वीयवाचकत्वारोपितवाच्यतावच्छेदकधर्मावच्छि - न्नतादिसंपादनेन गृहवर्तिपुरुषवत् व्यावृत्तस्वरूपेण ज्ञापकं भवति । अन्यथा, नाम्नो वाच्यार्थ प्रवृत्त्ययो - गादिति भावः ||**

**ஹ்ரீமக்ஷரம்’ நிலயஃ க்³ரு’ஹவத³வச்சே²த³கம்’ யஸ்யாஃ ஸா ததா² | ஸ்வீயவா - சகத்வாரோபிதவாச்யதாவச்சே²த³கத⁴ர்மாவச்சி²ந்னதாதி³ஸம்பாத³னேன க்³ரு’ஹ - வர்திபுருஷவத் வ்யாவ்ரு’த்தஸ்வரூபேண ஜ்ஞாபகம்’ ப⁴வதி | அன்யதா², நாம்னோ வாச்யார்த² ப்ரவ்ரு’த்த்யயோகா³தி³தி பா⁴வஃ ||**

‘ஹ்ரீம்’ என்ற அக்ஷரத்தால் குறிப்பிடப்படுகின்ற லலிதாம்பிகை அந்த அக்ஷரத்தையே அதிஷ்டானமாக நிலையமாக உடையவள். எங்கும் வ்யாபகமாக உள்ள பரதேவதையை இந்த ஹ்ரீம் என்னும் அக்ஷரமானது பரிச்சின்ன படுத்துவது போல் தோன்றுகிறது. பரிச் சின்ன பட்ட விஷயங்களின் மூலமாக அபரிச்சின்ன வஸ்து நிர்தேஷணம் என்று சாஸ்திரத்தின் ஒரு முறையீடு அல்லது ஒரு ப்ரக்ரியா. அதுவே தடஸ்த லக்ஷணம் என்று கூறப்படுகிறது. சமுத்திர ஜலத்திலே கட்டப்பட்ட ஒரு தடுப்பு சுவரானது தனக்குள் அடங்கிய தண்ணீரை ஒரு எல்லைக்கு உட்படுத்தி அதற்கு வெவ்வேறு பெயரை பெறும்படி செய்கின்றது. (எ.க) கிணறு, குளம் என்று. சுவர் என்பது அவச்சேதக பொருள். ஜலம் என்பது அவச்சேத்யம் போல் தோன்றக்கூடிய பொருள். இது போல ஹ்ரீம் என்ற அக்ஷரமானது அவச்சேதகம். அவச்சேத்யம் என்பது சைதன்ய ஸ்வரூபம். வாச்ய வாசக ஸம்பந்தம் பொருந்தக் கூடிய ஹ்ரீம் என்ற வாசகத்தை இருப்பிடமாக வைத்து இருப்பவள் லலிதாம்பிகை. சொல்லுக்கும் பொருளுக்கும் அபேதம். சொல் தனது அர்த்தமாய் உள்ள பொருளை ஞாபகப்படுத்துகின்றது. இந்த இடத்தில் காளிதாஸர் அவர்கள் கூறிய ஒரு கருத்து நினைவுக்கு வருகின்றது. அவர் கூறுகிறார் ‘வாகர்த்தௌ இவ ஸம்ப்ருக்தௌ

வாகர்த்த ப்ரதிபத்தயே ஜகத பிதரௌ வந்தே பார்வதி பரமேஸ்வரௌ' . பராசக்தியும் ஈஸ்வரனும் வேறு வேறு அல்ல. ஒரு வார்த்தையும் அதன் பொருளும் எப்படி பிரித்து பார்க்க முடியாதோ அப்படி பட்டது என்று அந்த அவச்சேதக அவச்சேத்ய விஷயத்தை காளிதாஸர் கவியின் மூலமாக குறிப்பிடுகிறார்.

**ॐ ह्रींकारनिलयायै नमः ||८२||**

**ஓம் ஹ்ரீங்காரநிலயாயை நமஃ ||82||**

**ह्रींपदप्रिया | (83)**
**ஹ்ரீம்பத³ப்ரியா | 83**

**पद्यते गम्यते ज्ञायते अनेनेति पदम्, पद्यते गम्यते प्राप्यत इति वा पदम्, ह्रींकारस्य मन्त्रावयवतया तद्देवताप्रकाशकत्वेन तस्यां शक्तत्वात् 'शक्तं पदम्' इति तल्लक्षणत्वात् तथा प्रथमं व्याख्यानम् । हकारे - रेफेकारानुस्वाराणां वर्णानां समष्टिस्वरूपेण समुदायात्मकत्वात् 'वर्णसमुदायः पदम्' इत्यपि पलक्ष - णवत्त्वमस्य घटते । पुरश्चर्यावतां खदेवनासाक्षात्कारद्वारा सकलपुरुषार्थप्रापकत्वात् द्वितीयव्याख्यानं तथा कृतम् । तस्मिन् प्रिया प्रीतिमतीत्यर्थः ||**

**பத்³யதே க³ம்யதே ஜ்ஞாயதே அனேனேதி பத³ம், பத்³யதே க³ம்யதே ப்ராப்யத இதி வா பத³ம், ஹ்ரீம்காரஸ்ய மந்த்ராவயவதயா தத்³தே³வதாப்ரகாஶகத்வேன தஸ்யாம்' ஶக்தத்வாத் 'ஶக்தம்' பத³ம்' இதி தல்லக்ஷணத்வாத் ததா² ப்ரத²மம்' வ்யாக்²யானம் | ஹகாரேரேபே²காரானுஸ்வாராணாம்' வர்ணானாம்' ஸமஷ்டிஸ்வரூபேண ஸமுதா³ - யாத்மகத்வாத் 'வர்ணஸமுதா³யஃ பத³ம்' இத்யபி பலக்ஷணவத்த்வமஸ்ய க⁴டதே | புரஶ்சர்யாவதாம்' க²தே³வனாஸாக்ஷாத்காரத்³வாரா ஸகலபுருஷார்த²ப்ராபகத்வாத் த்³விதீயவ்யாக்²யானம்' ததா² க்ரு'தம் | தஸ்மின் ப்ரியா ப்ரீதிமதீத்யர்த²ஃ ||**

ஹ்ரீம் என்ற அக்ஷரம் லலிதாதேவியின் ஸ்வரூபம். அந்த அவச்சேதக பதத்தினால் அவச்சேத்ய ஸ்வரூபமானது குறிப்பிடப் படுகிறது. பதம் என்று சொன்னால் பத்யதே ஞாயதே இதி பதம். எது எதனால் அறியப்படுகிறதோ அதுவே பதம் என்று கூறப் படுகிறது. ஹ்ரீம் என்பது இந்த மந்திரத்திலே ஒரு அம்சம் அல்லது அவயவம். மந்த்ரார்த்த ஸ்வரூப அதிஷ்டான பரதேவதையை அறிவிக்கும் சக்தியானது அந்த அக்ஷரத்துக்கு உண்டு. **'शक्तं पदम्' 'ஶக்தம்' பத³ம்'** என்ற நியாயத்தினால் இந்த ஹ்ரீம் என்ற பதத்திற்கு இப்படி பட்ட பொருளானது கொடுக்கப்பட்டது என்று பகவான் சங்கரர் கூறுகிறார். **'वर्णसमुदायः पदम्' 'வர்ணஸமுதா³யஃ பத³ம்'** என்னும் லக்ஷணத்தின் படி ஹ்ரீங்காரத்திலே ஹகாரம், ரேப்பா, ஈகாரம், அனுஸ்வாரம் என்னும் நான்கு வர்ணங்கள் உண்டு. ஹகார, ரேப, ஈகார, அனுஸ்வார என்று. இந்த ஹரீம்காரத்துக்கு பத சமூக லக்ஷணம் பொருந்துகின்றது. இத்தகைய பத சமூக லக்ஷணமான ஹ்ரீம் என்னும் மந்திரத்தை பக்தர்கள் புரஸ் சரணம் செய்து ஸகல புருஷார்த்தங்களையும் அடைய முடியும் என்பது ஆன்றோர் வாக்கு. ஸகல புருஷார்த்தங்களையும் பரதேவதையின் மூலமாக அடைவிக்கும் சக்தி, அடையப்படும் சக்தி இந்த ஹ்ரீங்காரத்துக்கு ஏற்பட்டது. அம்பாளுக்கு ஹ்ரீம் என்பது அதிக பிரியமான மந்திரமாய் இருப்பதால் அந்த சக்தியானது ஏற்பட்டது என்று பகவான் சங்கரர் குறிப்பிடுகிறார்.

ॐ ह्रींपदप्रियायै नमः ||८३||
ஓம் ஹ்ரீம்பத³ப்ரியாயை நம꞉ ||83||

## ह्रींकारबीजा | (84)
ஹ்ரீங்காரபீ³ஜா | 84

**ह्रींकार एव बीजं स्ववाचकमन्त्रभागः, 'ज्ञापकं देवतानां यत् बीजमक्षरमुच्यते' इति वचनात्, ह्रींकारस्य मायाप्रकाशकत्वेन, वटधानादिः स्वनिष्ठवृक्षाभिव्यञ्जकत्वेन कारणतया यथा बीजमित्युच्यते - सत्कार्यवादिनामव्यक्तनामरूपकारणं बीजम्, अभिव्यक्तनामरूपात्मकं पश्चाद्भावि कार्यमित्यङ्गीकारः, सकलकारणसमवधाने विशेषनामरूपवत्तया कारणस्याभिव्यक्तिरुत्पत्तिः, तथा चोक्तबीजस्य मायावच्छिन्नचैतन्याभिव्यञ्जकत्वेनापि बीजत्वम्, तादृशं ह्रींकारबीजं यस्याः सा तथा ||**

**ஹ்ரீங்கார ஏவ பீ³ஜம்' ஸ்வவாசகமந்த்ரபா⁴க³꞉, 'ஜ்ஞாபகம்' தே³வதானாம்' யத் பீ³ஜமக்ஷரமுச்யதே' இதி வசனாத், ஹ்ரீங்காரஸ்ய மாயாப்ரகாஶகத்வேன, வடதா⁴ - நாதி³꞉ ஸ்வநிஷ்ட²வ்ரு'க்ஷாபி⁴வ்யஞ்ஜகத்வேன காரணதயா யதா² பீ³ஜமித்யுச்ய - தேஸத்கார்யவாதி³நாமவ்யக்தநாமரூபகாரணம்' பீ³ஜம், அபி⁴வ்யக்தநாமரூபாத்ம - கம்' பஶ்சாத்³பா⁴வி கார்யமித்யங்கீ³கார꞉, ஸகலகாரணஸமவதா⁴னே விஶேஷநாம - ரூபவத்தயா காரணஸ்யாபி⁴வ்யக்திருத்பத்தி꞉, ததா² சோக்தபீ³ஜஸ்ய மாயாவச் - சி²ன்னசைதன்யாபி⁴வ்யஞ்ஜகத்வேனாபி பீ³ஜத்வம், தாத்³ரு'ஶம்' ஹ்ரீங்காரபீ³ஜம்' யஸ்யா꞉ ஸா ததா² ||**

ஹ்ரீம் என்பது பரதேவதையினுடைய வாசகம். அது ஒரு வாசக மந்திரம். சங்கர பகவான் வாசக மந்திரத்தில் ஒரு பாகம் என்று சொல்லுகிறார். **'ज्ञापकं देवतानां यत् बीजमक्षरमुच्यते' 'ஜ்ஞாபகம்' தே³வதானாம்' யத் பீ³ஜமக்ஷரமுச்யதே'** என்ற வாக்கின் படி அது ஒரு பாகம் என்று சொல்லுகிறார். பரதேவதையின் ஸ்வரூபத்தை நமக்கு ஞாபக படுத்துவதாய் இருக்கின்றது. எப்படி ஒரு ஆல வ்ருக்ஷத்தின் பீஜமானது அதி ஸூக்ஷமமாய் இருப்பினும் தனக்குள் அடங்கி இருக்கும் பெரிய வ்ருக்ஷத்தின் அபிவ்யஞ்சகமாய் இருக்கக்கூடிய தன்மையை உள்ளடக்கியதாக இருக்க கூடியதோ அது போல ஹ்ரீம் என்னும் பீஜாக்ஷரமும் மாயை, மாயா அவச்சின்ன சைதன்யம் கார்யானுமேய மாயா என்ற ப்ரகாரத்தின் படி மாயா காரிய ரூப ப்ரபஞ்ஜம். இவற்றினுடைய அபிவ்யஞ்சகமாய் இருக்கிறது. நாம ரூபங்கள் வ்யக்தமாகாமல் உள்ள காரண ஸ்திதியை பீஜம் என்று கூறுகின்றனர். நாம ரூபங்கள் வ்யக்தமாய் தோறும் நிலையை ஸ்ருஷ்டி (கார்யம்) என்று கூறப்படுகிறது. அதனால் காரணமே விசேஷமான நாம ரூபங்களோடு வ்யக்தமாதலை தான் காரியம் என்று நாம் கூறுகின்றோம். ஹரீம்காரமானது ஹகாராரத்தினால் மாயையும் ரேப அக்ஷரத்தினால் மாயா அவச்சின்ன சைதன்யத்தையும், ஈகாரத்தினால் சுத்த சைத்தன்யத்தையும் ஞாபகப் படுத்துவதால் அது பீஜம் என்ற நிலையை அடைகிறது. ஆதலால் ஸர்வாத்மகமாய் உள்ள பரதேவதைக்கு ஹ்ரீம்காரம் பீஜம் என்று குறிப்பிடப்படுகிறது.

இந்த இடத்திலே உபநிஷத்தில் உள்ள ஒரு கருத்தை பார்ப்போம். குரு சொல்கிறார் சிஷ்யனிடத்திலே :

“ந்யக்ரோத பலம் ஆநய” = ந்யக்ரோத வ்ருக்ஷத்தின் ஒரு பழத்தை கொண்டு வா.

“பிந்தி இதி கிமத்ர பஷ்யஸி” = உடை. உடைத்த அதன் பாகங்ளில் என்ன பார்க்கிறாய்...?

“அணுமாத்ராணி பீஜாநி ஸந்தி ப்ரபோ” = ஏகப்பட்ட சின்ன சின்ன விதைகள் இருக்கின்றது ப்ரபோ என்று சொல்கிறான் சிஷ்யன்.

“ஏகம் ப்ருதக் க்ருத்வா ததபி பிந்தி” = ஒரே ஒரு விதையை மட்டும் எடுத்து அதை உடைத்து பார். அதில் நீ என்ன பார்க்கிறாய்..? என்று குரு கேட்டதற்கு

“கிமபி துல்யம் ந பஷ்யாமி” = ஒன்றுமே எனக்கு தெரியவில்லை ப்ரபோ என்று சிஷ்யன் கூறுகிறான்.

“ச்ரத்தாம் லபஸ்வ மஹான் ந்யக்ரோத வ்ருக்ஷஸ்ய ஸம்ஹிதா அத்ர அஸ்தி ஸ்ரத்தாம் லபஸ்வ” = ஸ்ரத்தாவான் லபதே ஞானம் என்பதற்கு எடுத்துக்காட்டு ஹரீம்காரம் என்ற பீஜாக்ஷரமானது சைதன்ய ஸ்வரூபத்தை உள்ளடக்கி இருக்கக்கூடியது. வ்யக்தமாய் இருக்க கூடிய வ்ருக்ஷத்தை உள்ளடக்கிய பீஜத்தைப் போல் வியக்தமாய் இருக்கக்கூடிய இந்த ஜகத்தை உள்ளடக்கியது இந்த ஹ்ரீம்கார பீஜம் என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**ॐ ह्रींकारबीजायै नमः ||८४||**
**ஓம் ஹ்ரீங்காரபீ³ஜாயை நமঃ ||84||**

**ह्रींकारमन्त्रा | (85)**
**ஹ்ரீங்காரமந்த்ரா | 85**

**ह्रींकारस्य मननात् त्रायते रक्षति वाच्यवाचकयोरभेदादिति तथा। ह्रींकारघटितो मन्त्रो वा यस्याः सा इति वा तथा ||**

**ஹ்ரீங்காரஸ்ய மனனாத் த்ராயதே ரக்ஷதி வாச்யவாசகயோரபே⁴தா³தி³தி ததா². ஹ்ரீங்காரக⁴டிதோ மந்த்ரோ வா யஸ்யாঃ ஸா இதி வா ததா² ||**

ஹ்ரீம் என்னும் அக்ஷரத்திலே மந்த்ர ஸ்வரூபமாய் விளங்கக்கூடியவள். தன்னை இந்த அக்ஷரத்தின் மூலமாக மனனம் (அப்யாஸம்) செய்யும் அப்யாஸிகளுக்கு சோகத்தில் இருந்து காப்பாற்றுகின்ற ஒரு அக்ஷரமாய் (மந்திரமாய்) இருக்கிறது. ஹ்ரீம்காரம் ஏற்கனவே குறிப்பிட்ட படி லலிதாம்பிகையின் வாசகம். வாச்ய வாசகங்களுக்கு பரஸ்பரம் அபேதம் என்றே சொல்ல வேண்டும். அதாவது வாச்ய வாசக அபேதம் என்று வாசகமே வாச்யமாய் தோன்றுகிறது (விவர்த்தமாக) என்ற கருத்து இங்கே குறிப்பிடப்படுகின்றது. ஹ்ரீம் என்பது தனது வாச்ய ரூபமான பரதேவதையை அபரோக்ஷமாய் காண்பிக்கிறது. ஹரீம்காரத்தை பெற்ற மந்த்ரஸ்வரூபிணியாய் உள்ள அவள் பரதேவதை லலிதாம்பிகை என்று குறிப்பிடுகிறது இந்த நாமா.

ॐ ह्रींकारमन्त्रायै नमः ||८५||
ஓம் ஹ்ரீங்காரமந்த்ராயை நம꞉ ||85||

**ह्रींकारलक्षणा | (86)**
**ஹ்ரீங்கார லக்ஷணா | 86**

**हकारः शिवः, आकाशबीजत्वादाकाशवन्निर्लेपः, रेफः वह्निवीजं कार्योत्पादसंनिहितशक्तिमदीश्व - रवाचकम्, तथा च हकारयुक्तरेफः शुद्धचैतन्यमेव कारणतावच्छिन्नम् - इति वदति । ईकारः मन्मथबीजं तत्कारणलक्षकतया स्थितिहेतु विष्णुरूपचैतन्यमभिदधाति । अनुस्वारस्तस्मिन्नेव पदार्थे अभिन्ननिमि - त्तोपादाने लयं वक्ति । तथा च ह्रीमित्युक्ते जगदुत्पत्तिस्थितिलयकारणं चैतन्यं शक्त्या वाच्यार्थः प्रतीयते । तस्यैवोपाधिपरित्यागरूपलक्षणं यस्याः सा तथा । ह्रींकारः लक्षणं तटस्थलक्षणं यस्याः सेति वा तथा ||**

**ஹகார꞉ ஶிவ꞉, ஆகாஶபீ³ஜத்வாதா³காஶவந்நிர்லேப꞉, ரேப²꞉ வஹ்னிவீஜம்’ கார் - யோத்பாத³ஸம்’நிஹிதஶக்திமதீ³ஶ்வரவாசகம், ததா² ச ஹகாரயுக்தரேப²꞉ ஶுத்³த⁴ - சைதன்யமேவ காரணதாவச்சி²ன்னம் - இதி வத³தி | ஈகார꞉ மன்மத²பீ³ஜம்’ தத் - காரணலக்ஷகதயா ஸ்தி²திஹேது விஷ்ணுரூபசைதன்யமபி⁴த³தா⁴தி | அனுஸ்வார - ஸ்தஸ்மின்னேவ பதா³ர்தே² அபி⁴ன்னநிமித்தோபாதா³னே லயம்’ வக்தி | ததா² ச ஹ்ரீமித்யுக்தே ஜக³து³த்பத்திஸ்தி²திலயகாரணம்’ சைதன்யம்’ ஶக்த்யா வாச்யார்த²꞉ ப்ரதீயதே | தஸ்யைவோபாதி⁴பரித்யாக³ரூபலக்ஷணம்’ யஸ்யா꞉ ஸா ததா² | ஹ்ரீம் - கார꞉ லக்ஷணம்’ தடஸ்த²லக்ஷணம்’ யஸ்யா꞉ ஸேதி வா ததா² ||**

இந்த ஹ்ரீம் காரத்தை பிரித்து பகவான் சங்கரர் சொல்கிறார் : ஹகாரம் என்பது சிவன். ஹகாரம் ஆகாச பீஜம் ஆதலால் ஆகாசம் போல் எதிலும் ஸங்கம் இன்றி ஒட்டாமல் இருக்க கூடிய சிவன் என்று பொருள். ரேபம் என்று சொல்லக்கூடிய ரகாரா அக்னியின் பீஜம். காரியத்தை உண்டு பண்ணக்கூடிய சக்தியோடு கூடிய ஈசுவரனுடைய வாசக அக்ஷரம். ஹகாரத்தோடு கூடிய ரேபா காரணத்வத்தினால் சுத்த சைதன்யமே என்று நாம் கூறலாம். ஈகாரம் ஸ்திதி காரணமான விஷ்ணு சைதன்யமே. அனுஸ்வாரம் லயஸ்வரூபம்.

அதனால் ஹ்ரீம் என்பது ஸர்வ ப்ரபஞ்ஜத்தின் உற்பத்தி, ஸ்திதி, லய காரணமாகும். சைதன்யமே என்பது தெளிவாய் பகவான் சங்கரர் நமக்கு குறிப்பிடுகிறார். உபாதியை நீக்கி உபஹித ஸ்வரூபத்தை அறிவிப்பது தடஸ்த லக்ஷணம். லக்ஷணத்தின் லக்ஷணம். ப்ரபஞ்சத்தின் உற்பத்தி ஸ்திதி லய காரணம் தன்மையுடைய சைதன்யஸ்வரூபத்தின் தடஸ்த லக்ஷணமாகிறது. ஹ்ரீம் காரத்தை தடஸ்த லக்ஷணமாய் உடையவள் பரதேவதை லலிதாம்பிகா என்று இந்த நாமமானது குறிப்பிடுகிறது.

ॐ ह्रींकारलक्षणायै नमः ||८६||
ஓம் ஹ்ரீங்கார - லக்ஷணாயை நம꞉ ||86||

**ह्रींकारजपसुप्रीता ह्रींमती ह्रींविभूषणा |**
**ह्रींशीला ह्रींपदाराध्या ह्रींगर्भा ह्रींपदाभिधा ||१८||**

ஹ்ரீங்கார - ஜப - ஸுப்ரீதா ஹ்ரீம்’மதீ ஹ்ரீம்’விபூ⁴ஷணா |
ஹ்ரீம்’ஶீலா ஹ்ரீம்பதா³ராத்⁴யா ஹ்ரீங்க³ர்பா⁴ ஹ்ரீம்பதா³பி⁴தா⁴ ||18||

**ह्रींकारजपसुप्रीता | (87)**
**ஹ்ரீங்காரஜபஸுப்ரீதா | 87**

**ह्रींकारस्य जपः ह्रींकारजपः तेन सुप्रीता ||**

**ஹ்ரீங்காரஸ்ய ஜப: ஹ்ரீங்காரஜப: தேன ஸுப்ரீதா ||**

இந்த ஹ்ரீம்கார ஜபத்தினால் மிகுந்த திருப்தியையும் சந்தோஷத்தையும் அடையக்கூடியவள் பரதேவதை லலிதாம்பிகை.

**ॐ ह्रींकारजपसुप्रीतायै नमः ||८७||**
**ஓம் ஹ்ரீங்காரஜப - ஸுப்ரீதாயை நம: ||87||**

**ह्रींमती | (88)**
**ஹ்ரீம்’மதீ | 88**

**वाचकत्वेन लक्षकत्वेन वा लक्ष्यपदार्थरूपेण वा वाच्यवाचकयोरभेदेन वा अस्या अस्तीति ह्रींमती ||**

**வாசகத்வேன லக்ஷகத்வேன வா லக்ஷ்யபதா³ர்த²ரூபேண வா வாச்யவாசகயோர - பே⁴தே³ன வா அஸ்யா அஸ்தீதி ஹ்ரீம்’மதீ ||**

ஹ்ரீம் என்னும் மந்திரத்தை வாச்சிய வாசகத்திற்கு அபேதமாய் இருக்க கூடிய இந்த மந்திரத்தை வாசகமாகவோ அல்லது வாச்யமாகவோ உடையவள். வாசக வாச்ய அபேதத்தை இந்த இடத்தில் பகவான் சங்கரர் குறிப்பிடுகிறார். அதனால் பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமற நிறைந்திருப்பது பரம்பொருள் ஒன்றே என்ற கருத்தானது வாச்ய வாசக அபேதத்தை குறிப்பிடுகின்றது. வாச்யமே வாசகமாக, வாசகமே வாச்யமாக என்று.

**ॐ ह्रींमत्यै नमः ||८८||**
**ஓம் ஹ்ரீம்’மத்யை நம: ||88||**

**ह्रींविभूषणा | (89)**
**ஹ்ரீம்’விபூ⁴ஷணா | 89**

**केवलजडमायावाचकः ह्रींकारः, तथा हि-हकारः श्वेतवाचकः, रेफः रोहितार्थकः, ईकारः नीलार्थकः; तथा च विशिष्टस शुक्लरक्तनीलवत्पदार्थवाचकतया सत्त्वरजस्तमोगुणवत्प्रकृतिवाचकत्वेन परिच्छिन्नान् - तजडदुःखरूपवाच्यार्थकतया प्रकाशराहित्येन अनुपादेयतायां सत्यां तदवच्छिन्नस्वप्रकाशचैतन्या - कारतया विशिष्टार्थस्य आपादमस्तकभूषिततरुणीवदानन्दस्वरूपतयो तद्वाचकह्रींपदस्य अष्टैश्वर्यसिद्धि - प्रदानशक्तत्याधायकतया शोभायमानं भूषणवत्, 'कुण्डली पुरुषः' इत्यत्र कुण्डलस्योपलक्षणतया**

**इतरसजातीयादिव्यावर्तकत्वम् तथास्यापि बीजस्येतरव्यावृत्तवाच्यार्थगोचरप्रभाजनकत्वेन भूषणवत् यस्याः सा तथा ॥**

**கேவலஜட3மாயாவாசக: ஹ்ரீங்கார:, ததா2 ஹி-ஹகார: ஶ்வேதவாசக:, ரேப2: ரோஹிதார்த2க:, ஈகார: நீலார்த2க:; ததா2 ச விஶிஷ்டஸ ஶுக்லரக்தநீலவத்பதா3ர் - த2வாசகதயா ஸத்த்வரஜஸ்தமோகு3ணவத்ப்ரக்ரு’திவாசகத்வேன பரிச்சி2ந்நாந்ரு’த ஜட3து3:க2க2ரூபவாச்யார்த2கதயா ப்ரகாஶராஹித்யேன அனுபாதே3யதாயாம்’ ஸத் - யாம்’ தத3வச்சி2ன்னஸ்வப்ரகாஶசைதன்யாகாரதயா விஶிஷ்டார்த2ஸ்ய ஆபாத3ம - ஸ்தகபூ4ஷிததருணீவதா3னந்த3ஸ்வரூபதயோ தத்3வாசகஹ்ரீம்பத3ஸ்ய அஷ்டைஶ் - வர்யஸித்3தி4ப்ரதா3னஶக்தத்யாதா4யகதயா ஶோபா4யமானம்’ பூ4ஷணவத், 'குண் - ட3லீ புருஷ:' இத்யத்ர குண்ட3லஸ்யோபலக்ஷணதயா இதரஸஜாதீயாதி3வ்யாவர்த கத் - வம் ததா2ஸ்யாபி பீ3ஜஸ்யேதரவ்யாவ்ரு’த்தவாச்யார்த2கோ3சரப்ரபா4ஜனகத்வேன பூ4ஷணவத் யஸ்யா: ஸா ததா2 ||**

இந்த ஹ்ரீம்காரத்தின் பெருமையை மேலும் சங்கரர் கூறுகிறார். கேவலம் ஜட மாயா வாசகமாய் உடைய ஹ்ரீம்காரத்தையே ஆபரணமாக (பூஷணம்) உடையவள் லலிதாம்பிகை. ஹகாரம் வெண்மை நிறம். ரேபா சிவப்பு நிறம். ஈகாரம் நீல நிறம். அதனால் இந்த ஹ்ரீம்காரமானது ஸத்வ, ரஜஸ், தமோ குணத்தின் பிரகிருதி வாசகமாக குறிப்பிடப்படுகிறது. இந்த ப்ரக்ருதி பரதேவதையை விட வேறானது அல்ல. பரதேவதையே ப்ருக்ருதி (மாயாஸ்வரூபிணி) ஆயினும் த்ரிகுணாத்மிகா மாயா என்று சொல்கிறோம். இந்த ப்ருக்ருதி காலதேச வஸ்து பரிச்சேதங்களை உடைய அஸத் ஜட துக்க ப்ரபஞ்ச ரூபமாய் வ்யக்தமாய் தோன்றுவதால் வேறாக காணப்படுவது போல் ப்ரகாசமற்று அது ஒதுக்குவதற்கு உடைய விஷயமாக ஆகின்றது.

சித் சக்தி ஸ்வரூப பரதேவதை அந்த அஸத் ஜட துக்க ரூப ப்ரக்ருதிக்கு அதிஷ்டானமாக இருந்து கொண்டு அதை ஒளிர வைக்கின்றாள். ஹ்ரீம்கார அவச்சின்ன பரதேவதைக்கு ஹ்ரீம்காரம் என்பதே அலங்கார பூஷணமாய் ஆகின்றது அல்லது உச்சி முதல் உள்ளங்கால் வரை பல பூஷணங்களை (நகைகளை) அணிந்த ஒரு யௌவனமான ஸ்திரீயை போல ஸ்வஸ் ஸ்வரூப ஆனந்தத்தினால் ஹ்ரீம்காரத்துக்கு ஸத்தா ஸ்பூர்த்தியை தந்து எட்டு விதமான ஐஸ்வர்யங்களையும் அள்ளித்தரும் சக்தியும் அம்பாளிடத்தில் இருப்பதால் அந்த மந்திரத்துக்கு இருப்பதால் ஹ்ரீம்காரமே பரதேவதை. அந்த ஹ்ரீம்காரமே பரதேவதைக்கு ஒரு ஆபரணமாய் விளங்குகின்றது என்று பகவான் சங்கரர் கூறுகிறார். இதனால் ஸஜாதியமான இதர பீஜாக்ஷரங்களும் பரதேவதைக்கே பூஷணமாய் இருக்கிறது என்ற அர்த்தமானது தொனிக்கிறது. பூஷணமும் பரதேவதையும் அபேதம் என்று என்று நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**ॐ ह्रींविभूपणायै नमः ||८९||**

**ஓம் ஹ்ரீம்’விபூ4பணாயை நம: ||89||**

**ह्रींशीला | (90)**

**ஹ்ரீம்’ஶீலா | 90**

**ह्रीमित्यनेन तद्वाच्यार्थाः ब्रह्मविष्णुरुद्राः लक्ष्यन्ते, तेषां शीलं स्वभावः पारमार्थिकं रूपं सच्चिदान - न्दात्मकता यस्याः सा तथा; तन्निष्ठधर्मा सत्त्वरजस्तमोगुणादयो वा यस्याः सा तथा; 'शीलं स्वभावे धर्मे च' इति वचनात् ||**

**ஹ்ரீமித்யனேன தத்³வாச்யார்தா²꞉ ப்³ரஹ்மவிஷ்ணுருத்³ரா꞉ லக்ஷ்யந்தே, தேஷாம்’ ஶீலம்’ ஸ்வபா⁴வ꞉ பாரமார்தி²கம்’ ரூபம்’ ஸச்சிதா³னந்தா³த்மகதா யஸ்யா꞉ ஸா ததா²; தந்நிஷ்ட²த⁴ர்மா ஸத்த்வரஜஸ்தமோகு³ணாத³யோ வா யஸ்யா꞉ ஸா ததா²; 'ஶீலம்’ ஸ்வபா⁴வே த⁴ர்மே ச' இதி வசனாத் ||**

பரம ப்ரேமஸ்வரூபமான மந்திரம் ஹ்ரீம் என்பது பரதேவதைக்கு. அதனுடைய வாச்யர்கள் யார் என்று கேட்டால் ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் (ருத்திரன்). அவர்களுடைய ஸ்வபாவம் பாரமார்த்திக சைதன்ய ஸ்வரூபம் (ஸச்சிதானந்த ஸ்வரூபம்). இத்தகைய ஸ்வரூபத்தை உடையவள் அல்லது இந்த மூவர்களின் ஸ்வபாவமான (தர்மமான) ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களும் ஷீலம் (இயற்கை/ஸ்பாவம்) என்பதற்கு பொருளாக எடுத்துக் கொள்ளலாம். மாயா த்ரிகுணாத்மிகா.. த்ரிகுணாத்மிக வடிவினள் பரதேவதை. **'शीलं स्वभावे धर्मे च' 'ஶீலம்’ ஸ்வபா⁴வே த⁴ர்மே ச'** என்பதை ப்ரமாண வாக்கியமாய் எடுத்து கொள்ளவேண்டும் என்பதை பகவான் சங்கரர் கூறுகிறார்.

**ॐ ह्रीशीलायै नमः ||९०||**
**ஓம் ஹ்ரீம்’ஶீலாயை நம꞉ ||90||**

## ह्रींपदाराध्या | (91)
**ஹ்ரீம்பதா³ராத்⁴யா | 91**

**ह्रींपदेन एकाक्षरबीजमन्त्रेण आराधितुं योग्या तथा । 'ह्रींकारेणैव संसिद्धो भुक्तिं मुक्तिं च विन्दति' इति भुवनेश्वरीकल्पवचनादिति यावत् ||**

**ஹ்ரீம்பதே³ன ஏகாக்ஷரபீ³ஜமந்த்ரேண ஆராதி⁴தும்’ யோக்³யா ததா² | 'ஹ்ரீங்கா - ரேணைவ ஸம்’ஸித்³தோ⁴ பு⁴க்திம்’ முக்திம்’ ச விந்த³தி' இதி பு⁴வனேஶ்வரீகல்பவச - நாதி³தி யாவத் ||**

ஹ்ரீம் என்னும் பிரியமான ஏகாக்ஷர மந்திரத்தினால் ஆராதனைக்கு உரியவள் லலிதாம்பிகை. **'ह्रींकारेणैव संसिद्धो भुक्तिं मुक्तिं च विन्दति' 'ஹ்ரீங்காரேணைவ ஸம்’ஸித்³தோ⁴ பு⁴த்³தி⁴ம்’ ' முக்திம்’ ச விந்த³தி'** என்று ஹ்ரீம்காரத்தை அப்யாசிப் பதினாலேயே எல்லா விதமான லக்ஷ்மியையும் அடைந்து முக்தியையும் அடைகிறார்கள் என்பது புவனேஸ்வரி கல்ப வாக்கியம். ஹ்ரீம்காரத்தை ஆராதித்து புக்தி, முக்தி பெறுவது அதாவது புத்திமுக்தி ப்ரதாயின்யை என்பது லலிதாம்பிகைக்கு ஒரு நாமமாக குறிப்பிடப்படுகிறது.

**ॐ ह्रींपदाराध्यायै नमः ||९१||**
**ஓம் ஹ்ரீம்பதா³ராத்⁴யாயை நம꞉ ||91||**

**ह्रींगर्भा | (92)**
**ஹ்ரீங்க³ர்பா⁴ | 92**

**ह्रींशब्दार्या: सगुणमूर्तयस्तिस्र: गर्भे स्वस्वरूपे सशक्तिकाः अविनाभावसंबन्धेन यस्याः सा तथा, 'मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम्' (गीता १४-३) इति वचनात् ||**

**ஹ்ரீம்'ஶப்³தா³ர்யா: ஸகு³ணமூர்தயஸ்திஸ்ர: க³ர்பே⁴ ஸ்வஸ்வரூபே ஸஶக்திகாː அவிநாபா⁴வஸம்ப³ந்தே⁴ன யஸ்யாː ஸா ததா², 'மம யோநிர்மஹத்³ப்³ரஹ்ம தஸ்மின் க³ர்ப⁴ம்' த³தா⁴ம்யஹம்' (கீ³தா 14-3) இதி வசனாத் ||**

சங்கரர் குறிப்பிடுகிறார் ஹ்ரீம் என்னும் சப்தம் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஸகுண ப்ரஹ்ம ஸ்வரூபமான த்ரிமூர்த்திகள் அதாவது ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் இவர்களையும் இவர்களின் சக்திகளையும் வாமா, ஜேஷ்டா, ரௌத்திரி அவைகளையும் தனது கர்ப்பத்திலே அவ்யக்தமாய் அடக்கி வைத்து கொண்டு இருப்பவள் லலிதாம்பிகை. **'मम योनिर्महद्ब्रह्म तस्मिन् गर्भं दधाम्यहम्' 'மம யோநிர்மஹ - த்³ப்³ரஹ்ம தஸ்மின் க³ர்ப⁴ம்' த³தா⁴ம்யஹம்'** என்று கீதையினுடைய ப்ரமாண வாக்கியம் இதையே கருத்தாய் கூறுகிறது. 'நாராயண: பரோ வ்யக்தாத்…' என்று அவ்யக்தமாய் இருக்க கூடியது வ்யக்தமாய் வெளியே வருகிறது என்று ஸ்ருஷ்டியுனுடைய ப்ரகரணத்திலே சாஸ்திரத்திலே பார்க்கின்றோம்.

**ॐ ह्रींगर्भायै नमः ||९२||**
**ஓம் ஹ்ரீங்க³ர்பா⁴யை நமː ||92||**

**ह्रींपदाभिधा | 93**
**ஹ்ரீம்பதா³பி⁴தா⁴ | 93**

**ह्रींकारः अभिधा नाम यस्याः सा तथा । समष्टिरूपायाः समष्टिशब्दवाच्यत्वनियमादित्यभिसन्धिः ||**

**ஹ்ரீங்காரː அபி⁴தா⁴ நாம யஸ்யாː ஸா ததா² | ஸமஷ்டிரூபாயாː ஸமஷ்டிஶப்³த³ - வாச்யத்வநியமாதி³த்யபி⁴ஸந்தி⁴ː ||**

'அபிதா' என்றால் நாமம் என்று அர்த்தம். ஹ்ரீம்காரத்தையே நாமமாய் உடையவள். ஸமஷ்டி ஸ்வரூப பரதேவதைக்கு ஸமஷ்டி சப்தமான ஹ்ரீம்காரம் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்தை குறிக்ககூடிய ஹ்ரீம்காரம் அந்த வாச்சிய தன்மை பொருந்தும் என்று சங்கரர் குறிப்பிடுகிறார்.

**ॐ ह्रींपदाभिधायै नमः ||९३||**
**ஓம் ஹ்ரீம்பதா³பி⁴தா⁴யை நமː ||93||**

**ह्रींकारवाच्या ह्रींकारपूज्या ह्रींकारपीठिका |**
**ह्रींकारवेद्या ह्रींकारचिन्त्या ह्रीं ह्रींशरीरिणी ||१९||**
**ஹீங்காரவாச்யா ஹ்ரீங்காரபூஜ்யா ஹ்ரீங்காரபீடி²கா |**
**ஹீங்காரவேத்³யா ஹ்ரீங்காரசிந்த்யா ஹ்ரீம்' ஹ்ரீம்'ஶரீரிணீ ||19||**

**ह्रींकारवाच्या | (94)**
**ஹ்ரீங்காரவாச்யா | 94**

**मायोपाधिकब्रह्माणि कल्पितधर्मेण शब्दप्रवृत्त्युपपत्तेः ह्रींपदस्य वाच्या रूढ्येत्यर्थः ||**

**மாயோபாதி⁴கப்³ரஹ்மாணி கல்பிதத⁴ர்மேண ஶப்³த³ப்ரவ்ருʼத்த்யுபபத்தே: ஹ்ரீம் பத³ஸ்ய வாச்யா ரூட்⁴யேத்யர்த²: ||**

ஹ்ரீம்கார வாச்யை நம: என்று ஒரு கருத்து இருக்கிறது. ஹ்ரீம்காரவாச்யாயை நம: என்றும் சொல்லலாம். மாயையை உபாதியாக உடைய ப்ரஹ்மஸ்வரூபத்தில் கல்பிதமாக கற்பிக்கப்பட்ட தர்மங்கள், அந்த தர்மத்தினால் ப்ரவ்ருத்தியானது ஸம்பவிக்கிறது. அந்த ஹ்ரீம் என்னும் பீஜாக்ஷரம் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்தை உள்ளடக்கியது. ஹ்ரீம்காரத்தையே வடிவமாக உடையவள் என்று ஒரு ரூடி அர்த்தமானது குறிப்பிடப்படுகிறது.

**ॐ ह्रींकारवाच्यायै नमः ||९४||**
**ஓம் ஹ்ரீங்கார - வாச்யாயை நம: ||94||**

**ह्रींकारपूज्या | (95)**
**ஹ்ரீங்காரபூஜ்யா | 95**

**'मूलमन्त्रेण पूजयेत्' इति पूजाङ्गत्वेन मूलमनोर्विनियोगः श्रूयते । मूलमनुश्च देवतायाः स्वकं नामेति वचनात् अन्तर्मुखानामेव मन्त्रशास्त्रेषु तन्नाम्ना व्युत्पन्नत्वात् ह्रींकारं नमोऽन्तमुच्चार्य यथागुरुसंप्रदायं श्रीचक्रादौ मूलदेवता पूजनीयेत्यागमरहस्यात् ह्रींबीजेनैव पूजयितुं योग्या, अतिप्रियबीजनामत्वा - दित्यभिप्रायः ||**

**'மூலமந்த்ரேண பூஜயேத்' இதி பூஜாங்க³த்வேன மூலமனோர்விநியோக³: ஶ்ரூயதே | மூலமனுஶ்ச தே³வதாயா: ஸ்வகம்' நாமேதி வசனாத் அந்தர்முகா²நாமேவ மந்த்ரஶாஸ்த்ரேஷு தன்நாம்னா வ்யுத்பன்னத்வாத் ஹ்ரீங்காரம்' நமோ(அ)ந்த - முச்சார்ய யதா²கு³ருஸம்ப்ரதா³யம்' ஶ்ரீசக்ராதௌ³ மூலதே³வதா பூஜனீயேத்யாக³ - மரஹஸ்யாத் ஹ்ரீம்பீ³ஜேனைவ பூஜயிதும்' யோக்³யா, அதிப்ரியபீ³ஜநாமத்வாதி³ - த்யபி⁴ப்ராய: ||**

ஒரு வாக்கியம் இருக்கிறது சங்கரர் கூறிப்பிடுகிறார் **'मूलमन्त्रेण पूजयेत्' 'மூலமந்த்ரேண பூஜயேத்'.** மூல மந்திரத்தினால் பூஜிக்க வேண்டும். அந்த மூல மந்திரம், அந்த மூல மந்திரத்தின் அதிஷ்டானம் தேவதையின் பெயர் அவளை குறிப்பிடக்கூடியது. **मूलमनुश्च देवतायाः स्वकं नामं மூலமனுஶ்ச தே³வதாயா: ஸ்வகம்' நாமம்** என்ற வாக்கியத்தின் படி கேவலம் அந்தர்முகப்பட்ட (ஒருமிக்கபட்ட) மனமுடையவர்கள் மூலமந்திரத்தின் மூலம் பூஜிப்பதற்கு அதிகாரிகள் என்று மந்திர சாஸ்திரத்தில் கூறப்பட்டு இருக்கிறது. ஹ்ரீம் நமஹ என்று ஸத்குருவின் உபதேசப்படி ஸ்ரீசக்ரத்திலே பூஜை செய்யலாம் என்பது ஸ்ரீவித்யா சாஸ்திர ஸித்தாந்தமாகும். இந்த பீஜமானது பரதேவதைக்கு அதிக பிரியமானதால்

இதனாலேயே மட்டும் பூஜிக்க தகுந்தவளாகின்றாள். எல்லா அக்ஷரங்களை காட்டிலும் இந்த ஹ்ரீம்காரம் ப்ரஸித்தியானது என்று நமக்கு தெரிகின்றது.

**ॐ ह्रींकारपूज्यायै नमः ||९५||**
**ஓம் ஹ்ரீங்கார - பூஜ்யாயை நம꞉ ||95||**

**ह्रींकारपीठिका | (96)**
**ஹ்ரீங்காரபீடி²கா | 96**

**अत्र पीठशब्दः आधारलक्षकः । वाच्यार्थो हि वाचकशब्दस्य सत्ताप्रदत्वेन आधारो भवति । मन्त्रदे - वतयोरभेदेऽपि अर्थनिष्ठमहिम्नः तद्वाचकपदेऽदृश्यमानत्वात् कल्पितभेदं संपाद्य इदमुच्यते । ह्रींकारस्य पीठिका वृत्तिस्थानं शक्त्या गोचरतया विषयीभूतेत्यर्थः ||**

**அத்ர பீட²ஶப்³த³꞉ ஆதா⁴ரளக்ஷக꞉ | வாச்யார்தோ² ஹி வாசகஶப்³த³ஸ்ய ஸத்தாப்ர - த³த்வேன ஆதா⁴ரோ ப⁴வதி | மந்த்ரதே³வதயோரபே⁴தே³(அ)பி அர்த²நிஷ்ட²மஹிம்ன꞉ தத்³வாசகபதே³(அ)த்³ரு'ஶ்யமானத்வாத் கல்பிதபே⁴த³ம்' ஸம்பாத்³ய இத³முச்யதே | ஹ்ரீங்காரஸ்ய பீடி²கா வ்ரு'த்திஸ்தா²னம்' ஶக்த்யா கோ³சரதயா விஷயீபூ⁴தேத்யர்த²꞉ ||**

வாச்ய வாசக அர்த்தத்துக்கு பேதமில்லை வாச்யமே வாசகம், வாசகமே வாச்யம் என்று விவர்த்தமான அர்த்தத்தை கொடுப்பதால் பீடம் என்று இந்த நாமத்திலே குறிப்பிட கூடிய சப்தம் ஆதாரம் அல்லது அதிஷ்டானம் என்று பொருள் எடுத்துக் கொள்ளலாம். ஹ்ரீம் காரத்துக்கு ஆதாரமாக இருக்க கூடியவள் பரதேவதை. சைதன்ய ஸ்வரூபிணீ. மந்திரத்துக்கும் தேவதைக்கும் பேதமில்லை. மந்திரமே தேவதையாக இருக்கின்றது. தேவதையே மந்திரமாக இருக்கின்றது. விவர்த்தம் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த மந்திரத்திற்கு அர்த்தமாயுள்ள தேவதைக்கு இருக்க கூடிய மஹிமா அந்த வாசகத்திலே காணப்படுவதில்லை. ஆனால் அவற்றிக்கு பரஸ்பரம் கற்பிதமான சிறிது பேதம் இருப்பது போல் தோற்றம் உண்டு. அந்த பேதத்தை ஒத்துக்க கொண்டே இங்ஙனம் கூறப்பட்டுள்ளது.

பேதம் என்று சொன்னாலும் பரிச்சின்னம் என்று அர்த்தம். பரிச்சின்னத்தை ஒத்துக்க கொண்டே இந்த விவர்த்தமானது கூறப்படுகிறது. ஹ்ரீம் காரத்தை விருத்திக்கு ஸ்தானமாயும் சக்தி வ்ருத்தியினால் அறியப்படுபவளாய் இருக்க கூடியவள் லலிதாம்பிகை என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**ॐ ह्रींकारपीठिकायै नमः ||९६||**
**ஓம் ஹ்ரீங்கார - பீடி²காயை நம꞉ ||96||**

**ह्रींकारवेद्या | (97)**
**ஹ்ரீங்காரவேத்³யா | 97**

**स्वरूपतः निर्गुणब्रह्मतया अज्ञानविषयत्वाश्रयत्वाभ्यामप्राप्तपुरुषार्थरूपतया संसारदशायां प्रतीयमा - नत्वात् गुरूपसदनश्रवणादिरूपविध्यप्रामाण्यनिरासाय लक्षणया शुद्धस्वरूपपरमानन्दतया प्रेप्सित - त्वात् श्रवणादिजन्यवृत्तिव्याप्यत्वरूपवेदनाविषयत्वम् 'ब्रह्मण्यज्ञाननाशाय वृत्तिव्याप्तिरितीर्यते' 'मामेव ये प्रपद्यन्ते मायामेताम्' (गी. ७-१४) इत्यादिवचनात् भगवताऽप्यङ्गीकृतमिति ह्रींकारेण गुरुमुखोद्भूतेन वेद्या वेदितुं योग्या । तत्स्वरूपपरिज्ञानद्वारा तत्प्राप्तिरूपपुरुषार्थहेतुत्वादिति तात्पर्यम् ॥**

**ஸ்வரூபத: நிர்கு³ணப்³ரஹ்மதயா அஜ்ஞானவிஷயத்வாஶ்ரயத்வாப்⁴யாம - ப்ராப்தபுருஷார்த²ரூபதயா ஸம்’ஸாரத³ஶாயாம்’ ப்ரதீயமானத்வாத் கு³ரூபஸத³ன - ஶ்ரவணாதி³ரூபவித்⁴யப்ராமாண்யநிராஸாய லக்ஷணயா ஶுத்³த⁴ஸ்வரூப பரமா - னந்த³தயா ப்ரேப்ஸிதத்வாத் ஶ்ரவணாதி³ஜன்யவ்ரு’த்திவ்யாப்யத்வரூபவேத³னா - விஷயத்வம் 'ப்³ரஹ்மண்யஜ்ஞானநாஶாய வ்ரு’த்திவ்யாப்திரி தீர்யதே' 'மாமேவ யே ப்ரபத்³யந்தே மாயாமேதாம்' (கீ³. 7-14) இத்யாதி³வசனாத் ப⁴க³வதா(அ)ப்யங்கீ³க்ரு’ - தமிதி ஹ்ரீங்காரேண கு³ருமுகோ²த்³பூ⁴தேன வேத்³யா வேதி³தும்’ யோக்³யா | தத்ஸ்வ - ரூபபரிஜ்ஞானத்³வாரா தத்ப்ராப்திரூபபுருஷார்த²ஹேதுத்வாதி³தி தாத்பர்யம் ||**

‘வேதனம்’ என்றால் அறிதல் என்று அர்த்தம். ஹ்ரீம் காரத்தினால் அறியப்படக் கூடியவள். அவள் (லலிதாம்பிகை) ஸ்வபாவத்திலே நிர்குண பரப்ரஹ்ம ஸ்வரூபமாய் இருந்தாலும் அஞ்ஞான திசையிலே ஆஸ்ரயமாயும் விஷயமாயும் இருக்கும் காரணத்தினால் அவள் அபரோக்ஷமாய் அறியப்படுவது இல்லை. அதனால் புருஷார்த்தத்தினுடைய நிறைவு ஏற்படுவது இல்லை. புருஷார்த்த ப்ராப்தியின் பொருட்டு குரு உப ஸதனம். அவரிடத்தில் வேதாந்த ஸ்ரவணம், மனனம் , நிதித்யாஸனம் முதலியவைகள் இருந்தால் தான் நம்மிடத்தில் ப்ரஹ்ம ஸித்தி ஏற்படுகின்றது.

சில சமயங்களிலே இந்த ஸ்ரவண, மனன, நிதித்யாஸங்கள் அப்ராமாண்யங் - களாக தோன்றுகின்றன. ஏன் என்றால் ஒரு உருவத்தை உபாஸனம் செய்கின்ற போது ஒவ்வொருவரும் விரும்பக் கூடிய ஆனந்தமே அவர்களின் புருஷார்த்தமாக குறிப்பிடப்படுகிறது. தனது சுத்தஸ்வரூபமாக ஸ்ரவண, மனன, நிதித்யாசனம் முதலியவற்றினால் அடையக்கூடிய ஹ்ரீம் கார வடிவ அகண்ட ஆகாரம் வ்ருத்தி. வியாப்யமான அபரோக்ஷ ஞான விஷயமாக பரதேவதை இருக்கின்றாள். உருவத்தால், மந்திரத்தால் பரிச்சின்னப்படுத்துவது போல் தோன்றினாலும் **'ब्रह्मण्यज्ञाननाशाय वृत्तिव्याप्तिरितीर्यते' 'मामेव ये प्रपद्यन्ते मायामेताम् ' 'ப்³ரஹ்மண்யஜ்ஞான - நாஶாய வ்ரு’த்திவ்யாப்திரி தீர்யதே' 'மாமேவ யே ப்ரபத்³யந்தே மாயாமேதாம் '** என்ற வாக்கியங்கள் ப்ரமாண வாக்கியங்களாய் கூறப்படுகின்றன. குரு முகமாய் உபதேசிக்கப்பட்ட ஹ்ரீம் காரத்தினால் பரதேவதை அறியப்படுகிறாள். பரதேவதையே அதிஷ்டானமான சைதன்யமாய் இருப்பதால் பரிச்சின்ன படுத்தப்பட்ட உருவமும் பெயரும் அபரிச்சின்னமான சைதன்யத்தை விளக்குகிறது என்று இந்த வாக்கியங்கள் ப்ரமாணம் இல்லாமல் தோன்றியவை ப்ரமாணங்களாக நமக்கு ஸித்திக்கின்றன என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஸம்ஸார திசையிலே (அஞ்ஞான திசையிலே) அதிஷ்டான ப்ரஹ்ம அபின்ன பரதேவதையை ஆஸ்ரயித்து, அந்த பரதேவதையுடைய ஆவரண சக்தியே அதை

மறைக்கின்றது. பரதேவதை அஞ்ஞானத்தினால் மறைக்கப்படுவதை ஆவரண விக்ஷேப ரூபா பரதேவதையின் சக்தியாக இருக்கின்றது. இதனால் தான் ஸ்வத ஆஸ்ரயவிஷயம் என்று இந்த ஆவரணமும் விக்ஷேபமும் மாயையை ஆஸ்ரயித்து இருக்கிறது என்று கூறப்படுகிறது. மறைத்துள்ள அஞ்ஞானம் க்ஷண நேரத்தில் நசிக்கின்றது. அந்த க்ஷணத்திலேயே பரதேவதையின் அபரோக்ஷ ஞானமானது ஸித்திக்கின்றது ஸ்வப்ரகாச வடிவமாக.

**ॐ ह्रींकारवेद्यायै नमः ||९७||**
**ஓம் ஹ்ரீங்கார - வேத்³யாயை நம꞉ ||97||**

**ह्रींकारचिन्त्या | (98)**
**ஹ்ரீங்காரசிந்த்யா | 98**

**अस्य बीजस्य पञ्चप्रणवान्तर्गतत्वेन ॐकारभेदे ब्रह्मप्रतीकत्वाविशेषात् । प्रणवे यथा परापरब्रह्मो - पासनहेतुवदस्मिन् वा प्रतीके तद्भवतीति विकल्पः । यदा भक्तिः पार्थक्येन मन्त्रविशेषेषु भवतीति योगवे - दमार्गरहस्यं न वादजल्पाद्यवकाशः । ह्रींकारे उभयविधब्रह्मस्वरूपतया चिन्तितुं योग्या । ध्यानस्य साक्षात्कारं प्रत्यारादुपकारकत्वेन ध्यातव्येत्यर्थः ||**

**அஸ்ய பீ³ஜஸ்ய பஞ்சப்ரணவாந்தர்க³தத்வேன ஓகாரபே⁴தே³ ப்³ரஹ்மப்ரதீகத்வா - விஶேஷாத் | ப்ரணவே யதா² பராபரப்³ரஹ்மோபாஸன - ஹேதுவத³ஸ்மின் வா ப்ரதீகே தத்³ப⁴வதீதி விகல்ப꞉ | யதா³ ப⁴க்தி꞉ பார்த²க்யேன மந்த்ரவிஶேஷேஷு ப⁴வ - தீதி யோக³வேத³மார்க³ரஹஸ்யம்' ந வாத³ஜல்பாத்³யவகாஶ꞉ | ஹ்ரீங்காரே உப⁴ய - வித⁴ப்³ரஹ்மஸ்வரூபதயா சிந்திதும்' யோக்³யா | த்⁴யானஸ்ய ஸாக்ஷாத்காரம்' ப்ரத் - யாராது³பகாரகத்வேன த்⁴யாதவ்யேத்யர்த²꞉ ||**

ஹ்ரீம்காரம் என்பது பஞ்ச ப்ரணவங்களிலே ஒன்று. ஓம்காரத்தைப் போலவே அதுவும் பொருள் உள்ளடக்கிய ஒரு அக்ஷரம். அதுவே ப்ரஹ்ம உபாஸனைக்கு காரணமாய் இருக்கின்றது. ஓம்காரத்திலும் ஹ்ரீம்காரத்திலும் நிர்குண பரஸ்வரூபமும் ஸகுண அபரப்ரஹ்ம ஸ்வரூபமும் உள்ளடக்கமாய் இருக்கிறது. இது யோக வேதாந்த மார்கங்களின் ரஹஸ்யமாய் கூறப்படுகிறது. இதிலே விவாதத்திற்கு எந்த விதமான இடமும் இல்லை. ஹ்ரீம் காரத்தில் இரண்டு வித ப்ரஹ்ம ஸ்வரூபங்களும் இருப்பதினால் அதனால் சிந்திப்பதிற்கு உரியவள் பரதேவதை. பரம், அபரம் இவற்றை உள்ளடக்கியவள் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். 'தஸ்மின் த்ருஷ்டே பராவரே …' என்று உபநிஷத் வாக்கியம்.

**ॐ ह्रींकारचिन्त्यायै नमः ||९८||**
**ஓம் ஹ்ரீங்கார - சிந்த்யாயை நம꞉ ||98||**

**ह्रीं | (99)**
**ஹ்ரீம்' | 99**

**हृञ् हरणे इति धातुपाठात् समस्तविद्यैश्वर्यप्रदानादिशक्त्यारोपाधिष्ठानत्वे सत्यपवादावशेषितपर - मानन्दरूपमुक्तिरित्यर्थः ||**

**ஹ்ரு’ஞ் ஹரணே இதி தா⁴துபாடா²த் ஸமஸ்தவித்³யைஶ்வர்யப்ரதா³நாதி³ஶக்த் - யாரோபாதி⁴ஷ்டா²னத்வே ஸத்யபவாதா³வஶேஷிதபரமானந்த³ரூபமுக்திரித்யர்த²: ||**

ஹ்ரீம் - - ஹரணே இந்த ஹ்ரீம் என்பதற்கு பகவான் சங்கரர் **हञ् हरणे ஹ்ரு’ஞ் ஹரணே** என்று அர்த்தத்தை கொடுத்து அந்த நாமத்தை சேர்த்து த்ரிஷதியில் குறிப்பிடப்படுகிறது. ஓம் ஹ்ரீம் நம: இதுதான் நாமம். அந்த ஹ்ருஞ் என்ற அந்த மூல தாதுவினாலே அதிஷ்டான ஸ்வரூபமாய் உள்ள பர தேவதையின் இடத்திலே ஸகல வித்யைகள், ஐஸ்வர்யங்கள் அவற்றை அருளக்கூடிய சக்தி அத்யஸிக்க பட்டு இருக்கின்றது. இங்ஙனம் அத்யஸிக்க பட்டுள்ள சக்தி, ஆரோபிக்கப்பட்ட சக்தியை அபவாதம் செய்வது மேற்படி மூல தாதுவிற்கு உண்மையான பொருளாக கிடைக்கிறது. ஆரோபமும் அபவாதமும் சாஸ்திரத்தின் ஒரு முறை. இந்த பரமானந்த வடிவ மோக்ஷம் அவசிஷ்டம் என்று சாஸ்திரம் அறுதியிட்டு கூறுகிறது. இதுவே ஹ்ரீம் காரத்தின் லக்ஷ்யார்த்தம்.

**ॐ ह्रीं नमः ||९९||**
**ஓம் ஹ்ரீம்’ நமః ||99||**

**ह्रींशरीरिणी | (100)**
**ஹ்ரீம்’ஶரீரிணீ | 100**

**मूलमन्त्रात्मिकेति यावत् | ह्रीमेव शरीरं मूर्तिरस्या अस्तीति ह्रींशरीरिणी ||**

**மூலமந்த்ராத்மிகேதி யாவத் | ஹ்ரீமேவ ஶரீரம்’ மூர்திரஸ்யா அஸ்தீதி ஹ்ரீம்’ - ஶரீரிணீ ||**

ஹ்ரீம் காரத்தின் பெருமையை ஒரு முத்தாய்ப்பு வைப்பது போல ஹ்ரீம்காரமே ஸரீரமாய் உடையவள் லலிதாம்பிகை. மூல மந்த்ராத்மிக ஸ்வரூபமாய் உள்ளவள் என்று இந்த நாமத்திலே எடுத்து காட்டப் பட்டுள்ளது.

**ॐ ह्रींशरीरिण्यै नमः ||१००||**
**ஓம் ஹ்ரீம்’ஶரீரிண்யை நமః ||100||**

**हकाररूपा हलधृक्पूजिता हरिणेक्षणा |**
**हरप्रिया हराराध्या हरिब्रह्मेन्द्रवन्दिता ||२०||**
**ஹகாரரூபா ஹலத்⁴ரு’க்பூஜிதா ஹரிணேக்ஷணா |**
**ஹரப்ரியா ஹராராத்⁴யா ஹரிப்³ரஹ்மேந்த்³ர - வந்தி³தா ||20||**

**हकाररूपा | (101)**
**ஹகாரரூபா | 101**

**हकारः रूपं षष्ठावयवः यस्याः सा, मूलविद्यावाच्यार्थवाचकं यस्याः सा तथा ||**
**ஹகாரः ரூபம்’ ஷஷ்டா²வயவः யஸ்யாः ஸா, மூலவித்³யாவாச்யார்த²வாசகம்’ யஸ்யாः ஸா ததா² ||**

இந்த சக்தி வித்தையின் ஆறாவது வர்ணமாக அதாவது ஆறாவது அங்கமாக உள்ள ஹகாரத்தை வடிவமாய் உடையவள். ஆறு அங்கங்கள் என்ன என்பதை பார்ப்போம். ரிஷி = மந்த்ர த்ரஷ்டா; துதிக்கப்படக் கூடிய தேவதை; பீஜம் = மூலத்வனி ரூபமாக தன்னை வெளிப்படுத்திக்க கூடிய அந்த பீஜம்; சக்தி; சந்தஸ்; கீலகம் = அன்னையின் சக்தியை வெளிக் கொண்டு வரக்கூடிய திறவுகோல் (ஒடுங்கி இருக்க கூடிய சக்தியை வெளிக்கொண்டு வரக்கூடிய அங்கம்) இந்த ஆறாவது அங்கம் என்று சொல்லப்படுகின்றது. அப்படி பட்ட ஹகாரத்தை வடிவமாய் உடையவள்.

**ॐ हकाररूपायै नमः ||१०१||**
**ஓம் ஹகாரரூபாயை நமः ||101||**

## हलधृक्पूजिता | (102)
**ஹலத்⁴ரு’க்பூஜிதா | 102**

**हलं युगं धरति हलधृक् बलरामः, तेन पूजिता ध्यानादिभिराराधितेत्यर्थः ॥**

**ஹலம்’ யுக³ம்’ த⁴ரதி ஹலத்⁴ரு’க் ப³லராமः, தேன பூஜிதா த்⁴யாநாதி³பி⁴ராராதி⁴ - தேத்யர்த²ः ||**

‘ஹலத்ருக்’ என்றால் கலப்பையை ஆயுதமாய் தரித்து இருக்க கூடிய ஶ்ரீ பலராம சுவாமியை குறிப்பிடுகிறது. அப்படி பட்ட ஶ்ரீ பலராமரால் பூஜிக்கப்பட்டவள். பூஜை என்பது த்ரிகரண பூஜையாக எடுத்துக்கொள்ள வேண்டும். காயிகம், வாசிகம், மானஸம், ஆராதனை, அர்ச்சனை, தியானம் இப்படி பட்ட பூஜை என்று கொள்ள வேண்டும்.

**ॐ हलधृक्पूजितायै नमः ||१०२||**

**ஓம் ஹலத்⁴ரு’க்பூஜிதாயை நமः ||102||**

## हरिणेक्षणा | (103)
**ஹரிணேக்ஷணா | 103**

**हरिण्याः एण्याः ईक्षणमिव ईक्षणं यस्याः सा तथा, अतिसंतोषेण कातराक्षीति भावः । सर्वत्र सर्वदा सर्वद्रष्ट्रीति वा । भक्तेष्वादरहेतुदर्शनवतीति भावः ||**

**ஹரிண்யாः ஏண்யாः ஈக்ஷணமிவ ஈக்ஷணம்’ யஸ்யாः ஸா ததா², அதிஸந்தோஷே - ண காதராக்ஷீதி பா⁴வः | ஸர்வத்ர ஸர்வதா³ ஸர்வத்³ரஷ்ட்ரீதி வா | ப⁴க்தேஷ்வாத³ர - ஹேதுத³ர்ஶனவதீதி பா⁴வः ||**

‘ஹரிண:’ என்றால் மான் என்று அர்த்தம். ஹரிணா என்றால் பெண் மான் என்று அர்த்தம். ஹரிணா ஈக்ஷணா என்பதை சுருக்கி ஹரிணாக்ஷி என்று வைத்துக் கொள்ளலாம். மீனாக்ஷி என்றால் மீனைப் போல் கண்களை உடையவள்.

விசாலாக்ஷி என்றால் விசாலமான கண்களை உடையவள். காமாக்ஷி என்றால் வேண்டிய காமனைகளை கொடுக்கக்கூடிய கண்களை உடையவள். அது போல ஹரிணாக்ஷி என்றால் மானின் கண்களை போல் விஸாலமான சஞ்சலமான கண்களையுடையவள். எங்கும் பார்ப்பவள் என்றும் கொள்ள வேண்டும். அதாவது உண்மையான பக்தர்களை விடாமல் நான் பார்த்து அருள் புரிகிறேன் என்ற குறிப்பை தெரிவிக்கக்கூடிய அலைந்து கொண்டு இருக்க கூடிய பார்வை. அப்படி பட்ட பார்வையோடு கூடியவள் என்று அந்த பாவார்த்தமாய் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். பயத்தினால் மானின் கண்கள் அலைந்து கொண்டு இருக்கிறது, ஆனால் பரமேஸ்வரி அருள் புரிய வேண்டும் என்ற நோக்கத்தோடு, யாரையும் விட்டு விடக்கூடாது என்ற நோக்கத்தோடு அங்கும் இங்கும் பரந்த பார்வையுடையவளாக இருக்கிறாள் என்பது அர்த்தம்.

**ॐ हरिणेक्षणायै नमः ||१०३||**
**ஓம் ஹரிணேக்ஷணாயை நம꞉ ||103||**

**हरप्रिया | (104)**
**ஹரப்ரியா | 104**

**हरस्य प्रिया शिववल्लभेत्यर्थः | हरः प्रियो यस्याः सा इति वा ||**

**ஹரஸ்ய ப்ரியா ஶிவவல்லபே⁴த்யர்த²꞉ | ஹர꞉ ப்ரியோ யஸ்யா꞉ ஸா இதி வா ||**

‘ஹரன்’ என்றால் பரமேஸ்வரன் என்று அர்த்தம். பரமேஸ்வரனுக்கு ப்ரிய பத்தினியாக இருக்க கூடியவள். சங்கரஸ்யாபி சங்கரி என்ற ஒரு ப்ரமாண வாக்கியம் இருக்கிறது. கேனஉபநிஷத்தில் ‘மனஸோ மன: …’ என்று சைதன்யஸ்வரூபத்தை ,வஸ்துவை குறிப்பிடுகிறதை போல சங்கரஸ்யாபி சங்கரி சங்கரனுக்கு சங்கரனாய் இருக்ககூடியது என்பது மூல வஸ்துவை குறிப்பிடுகிறது. பரமேஸ்வரனுடைய ப்ரேமைக்கு விஷயமாய் இருப்பவள் என்பதும் ஒரு வாக்கியார்த்தமாக பொருந்தக் கூடியதாய் இருக்கிறது.

**ॐ हरप्रियायै नमः ||१०४||**
**ஓம் ஹரப்ரியாயை நம꞉ ||104||**

**हराराध्या | (105)**
**ஹராராத்⁴யா | 105**

**हरेण स्वभर्त्रा आराधितुं योग्या, केवलसच्चिदानन्दस्वरूपत्वात् ||**

**ஹரேண ஸ்வப⁴ர்த்ரா ஆராதி⁴தும்’ யோக்³யா, கேவலஸச்சிதா³னந்த³ஸ்வரூபத்வாத் ||**

ஹரன் என்ற பரமேஸ்வரனால் ஆராதனைக்கு இருக்க கூடியவள் இந்த பரதேவதை. ஸச்சிதானந்த ஸ்வரூபிணியாய் இருப்பதினால் இத்தகையது என

கூறாமல் கூறுகின்றது சங்கரஸ்ய சங்கரன் என்பது ஸச்சிதானந்த ஸ்வரூபத்தை சொல்கிறது. கேனோபநிஷத்தினுடைய தத்துவார்த்தம் இங்கே வெளிப்படுகிறது.

**ॐ हराराध्यायै नमः ||१०५||**
**ஓம் ஹராராத்⁴யாயை நம: ||105||**

**हरिब्रह्मेन्द्रवन्दिता | (106)**
**ஹரிப்³ரஹ்மேந்த்³ரவந்தி³தா | 106**

**हरिः रमेशः | ब्रह्मा वाणीशः | इन्द्रो देवेशः उपलक्षणं सर्वदेवभेदानाम् | तैर्वन्दिता नमस्कृता ||**

**ஹரி: ரமேஶ: | ப்³ரஹ்மா வாணீஶ: | இந்த்³ரோ தே³வேஶ: உபலக்ஷணம்' ஸர்வதே³வ - பே⁴தா³னாம் | தைர்வந்தி³தா நமஸ்க்ரு'தா ||**

லக்ஷ்மீபதி, வாணீபதி, தேவபதி மற்ற இதர தேவதைகளாலும் ஆராதனைக்கு அருகதையாய் உடையவள். ஆராதனை செய்யப்பட்டவள் . ஹரிப்ரஹ்மேந்திர ஸேவிதா என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமம் உண்டு.

**ॐ हरिब्रह्मेन्द्रवन्दितायै नमः ||१०६||**
**ஓம் ஹரிப்³ரஹ்மேந்த்³ர - வந்தி³தாயை நம: ||106||**

**हयारूढासेविताङ्घ्रिर्हयमेधसमर्चिता ।**
**हर्यक्षवाहना हंसवाहना हतदानवा ॥ २१ ॥**
**ஹயாரூடா⁴ஸேவிதாங்க்⁴ரிர் - ஹயமேத⁴ - ஸமர்சிதா |**
**ஹர்யக்ஷவாஹநா ஹம்'ஸவாஹநா ஹததா³நவா ||21||**

**हयारूढासेविताङ्घ्रिः | (107)**
**ஹயாரூடா⁴ஸேவிதாங்க்⁴ரி: | 107**

**हयारूढा नाम अश्वमात्रसेनानीशक्तिः वश्यकरी | तया सेवितौ अङ्घ्रि यस्याः सा तथा ||**

**ஹயாரூடா⁴ நாம அஶ்வமாத்ர ஸேனானீஶக்தி: வஶ்யகரீ | தயா ஸேவிதௌ அங் - க்⁴ரி யஸ்யா: ஸா ததா² ||**

ஹயன் என்றால் குதிரை (அஸ்வம்) . அஸ்வ சேனைக்கு மாத்திரம் அதிபதியாயும் இஷ்ட வசியத்தை செய்யக்கூடிய வசிய சக்தியாயும் உள்ள அஸ்வாரூடர் என்ற தேவதையால் பூஜிக்கப்பட்ட பாதார விந்தங்களை உடையவள் பராசக்தி. ஹயா - ஆரூட - தேவதா - ஸேவித என்றும் நாம் எடுத்துக் கொள்ளலாம். ஹயாரூடர் என்பவர் தான் அந்த தேவதையை இங்கு ஆராதனை செய்கிறார்.

**ॐ हयारूढासेविताङ्घ्र्यै नमः ||१०७||**
**ஓம் ஹயாரூடா⁴ - ஸேவிதாங்க்⁴ர்யை நம: ||107||**

**हयमेधसमर्चिता | (108)**
**ஹயமேத4ஸமர்சிதா | 108**

**हयमेधेन अश्वमेधेन समर्चिता पूजिता | पुरुषत्वादिप्राप्त्यै इलादिभिरित्यर्थः ||**

**ஹயமேதே4ன அஶ்வமேதே4ன ஸமர்சிதா பூஜிதா | புருஷத்வாதி3ப்ராப்த்யை இலாதி3 - பி4ரித்யர்த2: ||**

அஸ்வமேதம் என்ற சிறந்த உத்க்ருஷ்ட யாகத்தினால் அர்ச்சிக்கப்படுபவள். சில தேவதைகள் புருஷத்வத்தை அடைவதற்காக இந்த யாகத்தை செய்து பராசக்தியை திருப்தி செய்வித்து விரும்பிய பலனை அடைந்தனர். இந்த கதையானது தேவி பாகவதத்தில் குறிப்பிடப் படுகிறது. அப்படி பட்ட சிறந்த சக்தியை உடையவள்.அஸ்வமேதம் என்ற யாகத்தினாலேயே பூஜிக்கப் படுபவள்.

**ॐ हयमेधसमर्चितायै नमः ||१०८||**
**ஓம் ஹயமேத4ஸமர்சிதாயை நம: ||108||**

**हर्यक्षवाहना | (109)**
**ஹர்யக்ஷவாஹனா | 109**

**वाहयतीति वाहनम्, हर्यक्षः केसरी वाहनं यस्याः सा तथा । महालक्ष्मीरूपदुर्गेत्यर्थः ॥**

**வாஹயதீதி வாஹனம், ஹர்யக்ஷ: கேஸரீ வாஹனம்' யஸ்யா: ஸா ததா2 | மஹா - லக்ஷ்மீரூபது3ர்கே3த்யர்த2: ||**

எந்த தேவதைக்கு ஸிம்ஹம் வாகனமாய் உள்ளதோ அந்த தேவதை லலிதா த்ரிபுர ஸுந்தரி. அதாவது மஹாலக்ஷ்மி ரூப துர்க்கையின் வடிவம். அப்படி பட்ட அம்பாள் என்று இந்த நாமத்திலே குறிப்பிடப் படுகின்றது.

**ॐ हर्यक्षवाहनायै नमः ||१०९||**
**ஓம் ஹர்யக்ஷவாஹனாயை நம: ||109||**

**हंसवाहना | (110)**
**ஹம்'ஸவாஹனா | 110**

**हन्ति गच्छतीति हंसः सूर्यः प्राणो वा, वाहनवत् आधारभूतप्रतीकमित्यर्थः, अभिव्यक्तिस्थानमिति यावत्, 'स यश्चायं पुरुषे । यश्चासावादित्ये। स एकः' (तै. २-८) इति श्रुतेः । अथवा, हंसवाहना ब्राह्मीरू - पेणेत्यर्थः ||**

**ஹந்தி க3ச்ச2தீதி ஹம்'ஸ: ஸூர்ய: ப்ராணோ வா, வாஹனவத் ஆதா4ரபூ4தப்ர - தீகமித்யர்த2:, அபி4வ்யக்திஸ்தா2னமிதி யாவத், 'ஸ யஶ்சாயம்' புருஷே | யஶ்சாஸா - வாதி3த்யே | ஸ ஏக:' (தை. 2-8) இதி ஶ்ருதே: | அத2வா, ஹம்'ஸவாஹனா ப்3ராஹ்மீ - ரூபேணேத்யர்த2: ||**

ஹம்ஸ: என்று சொன்னால் **हन्ति गच्छतीति हंसः ஹந்தி க³ச்ச²தீதி ஹம்'ஸ:** என்று பாணினியின் தாது பாடத்திலே இருக்கிறது. ஹந்தி என்றால் செல்வது என்னும் பொருளிலே குறிப்பிடப்படுகிறது. ஹம்ஸ: என்பதற்கு ஸூரியன் என்ற அர்த்தமானது ஏற்படுகிறது. ப்ராணன் என்ற அர்த்தம் கூட கூறலாம். ஆதார ரூபமாய் இருக்க கூடிய வாஹனம் போல சூரியனனும் ப்ராணனும் சித் சக்தியின் அவ்யக்தி (ஸாக்ஷாத் காரத்திற்கு) ஸ்தானமாய் இருக்கின்றனர். **'स यश्चायं पुरुषे । यश्चासावादित्ये। स एकः' (तै. २-८) 'ஸ யஶ்சாயம்' புருஷே | யஶ்சாஸாவாதி³த்யே | ஸ ஏக:' (தை. 2-8)** என்று ஸ்ருதி வாக்கியம் இங்கே குறிப்பிடுகின்றது. இதுவே இந்த நாமத்திற்கு ப்ரமாணமாய் அமைந்து இருக்கிறது. அன்னவாஹன தேவி என்று குறிப்பிடப்படுபவள் பிராஹ்மீ ஸ்வரூபமாய் இருக்கக்கூடியவள் **नष्टो मोहः स्मृतिर्लब्धा त्वत्प्रसादान्मयाच्युत । स्थितोऽस्मि गतसन्देहः करिष्ये वचनं तव || 73|| நஷ்டோ மோஹ: ஸ்ம்ரு'திர்லப்³தா⁴ த்வத்ப்ரஸாதா³ன்மயாச்யுத | ஸ்தி²தோ(அ)ஸ்மி க³தஸந்தே³ஹ: கரிஷ்யே வசனம்' தவ ||73||** (கீதை 2-73) என்று கீதையிலே வாக்கியமானது ப்ரமாணமாய் அமைந்து இருக்கிறது.

**ॐ हंसवाहनायै नमः ||११०||**
**ஓம் ஹம்'ஸவாஹனாயை நம: ||110||**

**हतदानवा | (111)**
**ஹததா³னவா | 111**

**हताः दानवाः अनेकप्रकारशक्तिरूपधरया भण्डासुरादयः यया सा तथा ||**

**ஹதா: தா³னவா: அனேகப்ரகாரஶக்திரூபத⁴ரயா ப⁴ண்டா³ஸுராத³ய: யயா ஸா ததா² ||**

பலவிதமான அஸுரர்களை அழித்தவள். ஹத என்றால் கொன்றவள் (ஸம்ஹாரம்) என்று அர்த்தம். அநேக விதமான சக்திகளை கொண்ட பண்டாஸுரன், பாண்டகாஸுரன், மஹிஷாஸுரன், சண்ட முண்டாஸுரன் போன்றவர்களை ஸம்ஹாரம் செய்தவள். லலிதா ஸஹஸ்ரநாமத்திலே தனி தனி நாமாவாக உண்டு. இங்கே ஸமஷ்டியாக ஒரு நாமாவாக அஸுரர்களை வதம் செய்தவள் என்று குறிப்பிடுகின்றோம்.

**ॐ हतदानवायै नमः ||१११||**
**ஓம் ஹததா³நவாயை நம: ||111||**

**हत्यादिपापशमनी हरिदश्वादिसेविता |**
**हस्तिकुम्भोत्तुङ्गकुचा हस्तिकृत्तिप्रियाङ्गना ||२२||**
**ஹத்யாதி³பாபஶமநீ ஹரித³ஶ்வாதி³ஸேவிதா |**
**ஹஸ்திகும்போ⁴த்துங்க³குசா ஹஸ்திக்ரு'த்திப்ரியாங்க³நா ||22||**

**हत्यादिपापशमनी | (112)**

**ஹத்யாதி³பாபஶமனீ | 112**

**हत्या ब्रह्महत्या आदिर्येषां तानि तथा पापानि शमयतीति तथा, 'हरिर्हरति पापानि' इति वचनात् ॥**

**ஹத்யா ப்³ரஹ்மஹத்யா ஆதி³ர்யேஷாம்' தானி ததா² பாபானி ஶமயதீதி ததா², 'ஹரிர்ஹரதி பாபானி' இதி வசனாத் ||**

இது ஒரு ஸ்துதி வாக்கியம். ப்ரஹ்ம ஹத்தி போன்ற ஸகல பாபங்களையும் தகிக்க செய்யக் கூடியவள். **'हरिर्हरति पापानि' 'ஹரிர்ஹரதி பாபானி'** என்ற ப்ரமாண வாக்கியம் இருக்கின்றது. ஹரதி பாபானி என்றால் பாபங்களை ஸம்ஹாரம் கூடியவள்.

**ॐ हत्यादिपापशमन्यै नमः ||११२||**
**ஓம் ஹத்யாதி³பாபஶமந்யை நம꞉ ||112||**

**हरिदश्वादिसेविता | (113)**
**ஹரித³ஶ்வாதி³ஸேவிதா | 113**

**हरित् हरिद्वर्णः मरकत इव अश्वो यस्येन्द्रस्य स तथा आदिर्येषां दिक्पतीनां तैः सेविता चरणारविन्दसंनिधिं किंकरतयाश्रितेत्यर्थः ॥**

**ஹரித் ஹரித்³வர்ண꞉ மரகத இவ அஶ்வோ யஸ்யேந்த்³ரஸ்ய ஸ ததா² ஆதி³ர்யே - ஷாம்' தி³க்பதீனாம்' தை꞉ ஸேவிதா சரணாரவிந்த³ஸந்நிதி⁴ம் கிங்கரதயாஶ்ரிதேத் - யர்த²꞉ ||**

ஹரிதம் என்றால் பச்சை என்று அர்த்தம். மரகதம் போன்ற பச்சை குதிரையை (ஹரிதஸ்வம்) வாஹனமாய் உடைய தேவேந்திரன், அக்னி, எமன் முதலிய அஷ்டதிக் பாலர்களால் ஸேவிக்கப் பட கூடியவள். அம்பாளின் சரணங்களில் அவளுடைய சன்னிதியில் திக்பாலகர்கள் (தேவதைகள்) அனைத்தும் சேவகர்கள் போல கைகட்டி வாய் பொத்தி பரதேவதையின் கட்டளையை எதிர் பார்த்து நிற்கின்றனர் என்று ஒரு கருத்து இந்த நாமத்திலே குறிப்பிடப்படுகிறது.

**ॐ हरिदश्वादिसेवितायै नमः ||११३||**
**ஓம் ஹரித³ஶ்வாதி³ - ஸேவிதாயை நம꞉ ||113||**

**हस्तिकुम्भोत्तुङ्गकुचा | (114)**
**ஹஸ்திகும்போ⁴த்துங்க³குசா | 114**

**हस्तः अस्यास्तीति हस्ती, तस्य कुम्भौ तद्वदुन्नतौ कुचौ सान्द्रौ यस्याः सा तथा ||**

**ஹஸ்த꞉ அஸ்யாஸ்தீதி ஹஸ்தீ, தஸ்ய கும்பௌ⁴ தத்³வது³ன்னதௌ குசௌ ஸாந்த்³ரௌ யஸ்யா꞉ ஸா ததா² ||**

குசம் என்றால் ஸ்தனங்கள் என்று அர்த்தம். யானையின் மத்தகங்கள் போல பருத்த ஸ்தனங்களை உடையவள். இதனுடைய உள்ளர்த்தம் என்ன என்றால் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் ஸ்தனங்கள். இந்த முழு ப்ரபஞ்சத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவளிக்க கூடிய ஸ்தனங்களை உடையவள். உணவை அளிப்பவள், அதனால் அனைவருக்கும் அன்னையின் ஸ்தானமாய் இருப்பவள்.

**ॐ हस्तिकुम्भोत्तुङ्गकुचायै नमः ||११४||**
**ஓம் ஹஸ்திகும்போ⁴த்துங்க³ - குசாயை நம꞉ ||114||**

**हस्तिकृत्तिप्रियाङ्गना | (115)**
**ஹஸ்திக்ரு’த்திப்ரியாங்க³னா | 115**

**हस्तिनः कृत्तौ चर्मणि प्रियः प्रीतिमान् शिवः, तस्याङ्गना भामिनीत्यर्थः ॥**

**ஹஸ்தின꞉ க்ரு’த்தௌ சர்மணி ப்ரிய꞉ ப்ரீதிமான் ஶிவ꞉, தஸ்யாங்க³னா பா⁴மினீத் - யர்த²꞉ ||**

ஹஸ்திக்ருத் என்றால் யானைத் தோலை அணிந்து இருக்க கூடிய பரமேஸ்வரன். அந்த பரமேஸ்வரனுக்கு ப்ரீதியை உடைய பார்யையாய் இருக்க கூடியவள். பரமேஸ்வர ப்ரீதி பார்யாயை நம: என்று ஒரு நாமா உள்ளது.

**ॐ हस्तिकृत्तिप्रियाङ्गनायै नमः ||११५||**
**ஓம் ஹஸ்திக்ரு’த்தி - ப்ரியாங்க³நாயை நம꞉ ||115||**

**हरिद्राकुङ्कुमादिग्धा हर्यश्वाद्यमरार्चिता |**
**हरिकेशसखी हादिविद्या हालामदालसा ||२३||**
**ஹரித்³ராகுங்குமாதி³க்³தா⁴ ஹர்யஶ்வாத்³யமராார்சிதா |**
**ஹரிகேஶஸகீ² ஹாதி³வித்³யா ஹாலாமதா³லஸா ||23||**

**हरिद्राकुङ्कुमादिग्धा | (116)**
**ஹரித்³ராகுங்குமாதி³க்³தா⁴ | 116**

**हरिद्राकुङ्कुमाभ्यां उपलक्षणं कस्तूरीपत्रादीनाम् । आदिग्धा लिप्तेत्यर्थः ||**

**ஹரித்³ராகுங்குமாப்⁴யாம்’ உபலக்ஷணம்’ கஸ்தூரீபத்ராதீ³னாம் | ஆதி³க்³தா⁴ லிப்தே - த்யர்த²꞉ ||**

அறிஞர்கள் இதை ஹரித்ரா - குங்குமாதிக் தாயை நம: என்று சொல்லலாம் என்று பிரித்து சொல்கிறார்கள். இந்த ஆதி பதம் போட்டதினால் முதலிய என்று பல பொருட்கள் உடையது என்று அர்த்தம். மஞ்சள், குங்குமம், குங்குமப்பூ, கஸ்தூரீ, சம்பகம் போன்ற திவ்ய வாசனைகளை கொடுக்க கூடிய திரவியங்களால் பூசப்பட்ட திருமேனியை உடையவள் லலிதாம்பிகை. இதில்

என்ன ஒரு தாத்பரியம் என்றால் தெளிவான ஆற்றல், திறமை இவற்றை உண்டாக்க கூடிய சூழலை உண்டுபண்ணுவது அந்த நறுமணம். அந்த நறுமணத்தினால் ஒரு ப்ரதி பலனை எதிர்பார்க்காத அன்பு, மகிழ்ச்சி, மன அமைதி இவைகள் தானாய் கிடைக்கின்றன.

**ॐ हरिद्राकुङ्कुमादिग्धायै नमः ||११६||**
**ஓம் ஹரித்³ராகுங்குமா - தி³க்³தா⁴யை நம: ||116||**

**हर्यश्वाद्यमरार्चिता | (117)**
**ஹர்யஶ்வாத்³யமரார்சிதா | 117**

**हर्यश्वः सुरेशः आदिर्येपाम् अमराणां तैरर्चिता किंकरतया नियामकत्वेन पूजितेत्यर्थः ॥**

**ஹர்யஶ்வ: ஸுரேஶ: ஆதி³ர்யேபாம் அமராணாம்' தைரர்சிதா கிங்கரதயா நியாமகத்வேன பூஜிதேத்யர்த²: ||**

ஹர்யஷ்வ: என்றால் ஸுரேஸ: அதாவது ஸுரானாம் ஈஷ: தேவர்களின் அதிபதி (தேவேந்திரன்). ஆதி பதம் போட்டதினால் தேவேந்திரன் போன்ற தேவர்களால் க்ரமமாய் பூஜிக்கப்பட்டவள். அர்ச்சிதா க்ரமமாய் பூஜிக்கப் பட்டவள். நியாமக ரூபேண என்பது அந்தர்யாமியாய் தன்னை கட்டுப்படுத்த கூடிய ரூபத்திலே பரதேவதை இருக்கிறாள் என்று அமரர்கள் தேவதையை பூஜிக்கிறார்கள்.

**ॐ हर्यश्वाद्यमरार्चितायै नमः ||११७||**
**ஓம் ஹர்யஶ்வாத்³ய - மரார்சிதாயை நம: ||117||**

**हरिकेशसखी | 118**
**ஹரிகேஶஸகீ² | 118**

**हरयः हरिद्वर्णाः केशाः शिरोरुहाः यस्य, 'हिरण्यश्मश्रुर्हिरण्यकेशः' (छा. १-६) इति श्रुतेः । तस्य सखी प्रयोजनमनपेक्ष्योपकारिणीत्यर्थः । यद्वा वर्णेन नीलेन हरिणा विष्णुना समाः केशाः अस्य सन्तीति सर्वाङ्गसुन्दरनित्ययौवनचिद्रूपसहितकामेश्वरः तस्य सखी ||**

**ஹரய: ஹரித்³வர்ணா: கேஶா: ஶிரோருஹா: யஸ்ய, 'ஹிரண்யஶ்மஶ்ருர்ஹிரண் - யகேஶ:' (சா². 1-6) இதி ஶ்ருதே: | தஸ்ய ஸகீ² ப்ரயோஜனமனபேக்ஷ்யோபகாரிணீத் - யர்த²: | யத்³வா வர்ணேன நீலேன ஹரிணா விஷ்ணுனா ஸமா: கேஶா: அஸ்ய ஸந்தீதி ஸர்வாங்க³ஸுந்த³ரநித்யயௌவனஶ்சித்³ரூபஸஹிதகாமேஶ்வர: தஸ்ய ஸகீ² ||**

இந்த நாமத்திற்கு பகவான் சங்கரர் இரண்டு விதமாய் விளக்கம் சொல்கிறார். ஆனால் த்ரிசதிக்கு ஒரு தீபிகா இருக்கிறது. அந்த தீபிகாவில் இதை ஏழு எட்டு விதமாக பிரித்து அனுபவ ரீதியாக விளக்கத்தை கொடுத்து இருக்கிறார்கள். அதையும் நாம் பார்க்கலாம்.

ஹிரண்மயமாய் உள்ள அதாவது தங்க நிறமாய் உள்ள ஜடா தாரியான பரமேஸ்வரனுக்கு ஸகியாய் இருக்க கூடியவள். ஒரு வாக்கியம் இருக்கிறது ‘ஹிரண்மயம் ஷ்மஷ்ருஹு: ஹிரண்ய கேஸ:’ ஹிரண்ய ஷ்மஷ்ருஹு: என்றால் தங்கமயமான என்று அர்த்தம். ஸகி என்று சொன்னால் எந்தவிதமான ப்ரதி பலனையும் எதிர்பார்க்காமல், ப்ரயோஜனத்தையும் எதிர்பார்க்காமல் உதவிக்கரத்தை நீட்ட கூடியவள் பரதேவதை. மற்றொரு அர்த்தத்தை சங்கரர் சொல்கிறார். பகவான் விஷ்ணுவுக்கு ஸமமான நீல நிறமான கேசங்களை உடைய ஸர்வாங்க ஸுந்தரனாய் இருக்க கூடிய எப்பொழுதும் யௌவன புருஷனாய் இருப்பவனும், சித் ஸ்வரூபமாய் இருக்கும் காமேச்வரனுக்கு ஸகியாய் இருப்பவள்.

இந்த நாமாவிற்கு தீபிகாவில் வித விதமாக விளக்குகிறார்கள். அவை ஹரி:என்றால் விஷ்ணு. க என்றால் ப்ரஹ்மன். ஈஷ என்றால் ருத்ரன். அதாவது இந்த த்ரிமூர்த்திகளுக்கு ஸகியாய் இருக்க கூடியவள் அல்லது ஹரிகேஸா என்றால் ருத்ரன் என்று அர்த்தம். “ஹரி கேஸாயோப ...” என்று ஸ்ரீருத்ரத்திலே ஒரு நாமா வருகிறது. அப்படி பட்ட பரமேஸ்வரனுக்கு ஸகியாய் இருக்க கூடியவள்.

மற்றொரு அர்த்தம் ஹரி என்று சொன்னால் குதிரை என்று அர்த்தம். கம் என்று சொன்னால் அந்த குதிரையினினுடைய தலை என்று அர்த்தம். ஹரிகேஸா என்று சொன்னால் குதிரைத்தலையினைனுடைய பகவான் ஹயக்ரீவர். அல்லது ஹயக்ரீவர் லலிதாம்பிகையை வணங்கினார், துதி செய்தார் அல்லது பூஜை செய்தார் என்றும் எடுத்துக் கொள்ளலாம். அல்லது யாருக்கு ஹயக்ரீவர் இஷ்ட தெய்வமாக இருக்கிறாரோ அவருக்கு ஸகியாய் இருக்க கூடியவள். ஹயக்ரீவரை உபாஸனை செய்யக்கூடியவர் அகஸ்திய பெருமான். அகஸ்திய பெருமானுக்கு சகியாய் இருப்பவள்.

ஹரி என்று சொன்னால் சிங்கம் என்று ஒரு அர்த்தம் உண்டு. கம் என்று சொன்னால் தலை. அதாவது ப்ரஹலாதரால் பூஜிக்கப்பட்ட ந்ருஸிம்ஹ ஸ்வாமி . அவருக்கு சகியாய் இருக்க கூடியவள்.

ஹரி என்று சொன்னால் ஹனுமான் என்று அர்த்தம். குரங்குகளில் தலை சிறந்தவர் ஹனுமான். கம் என்று சொன்னால் சந்தோஷத்தை கொடுக்க கூடியது என்று அர்த்தம். அனுமனுக்கு ஸந்தோஷத்தை கொடுக்க கூடியவர் ராமர். அதனால் ஸ்ரீ ராமனுக்கு ப்ரிய சகி. அப்படி இருக்க கூடியவள் லலிதாம்பிகை என்றும் எடுத்து கொள்ளலாம்.

ஹரி என்று சொன்னால் விஷ்ணு. கம் என்று சொன்னால் ப்ரஹ்ம, ஈஷ என்றால் ஈஸ்வரன். முதல் இரண்டை மட்டும் எடுப்பதினால் விஷ்ணு மற்றும் ப்ரஹ்மா. இவர்களுக்கு ஈசன் என்று எடுத்து கொள்ளலாம். அதாவது இவர்கள் யாருக்கு ஈசனோ. விஷ்ணு யாருக்கு ஈசனோ, ப்ரஹ்மா யாருக்கு ஈசனோ அதாவது லக்ஷ்மீயையும் ஸரஸ்வதியையும் குறிக்கிறது. அதனால் லக்ஷ்மீயாலும்

ஸரஸ்வதியாலும் பூஜிக்கப் பட்டவள் லலிதாம்பிகை. ‘ஸசா வர ரமாவாணீ .... என்று ஸஹஸ்ரநாமத்தில் ஒரு நாமா இருக்கிறது.

ஹரி என்றாலும் ஹரிகம் என்றாலும் குதிரை என்று அர்த்தம் உள்ளது. ஈஷா என்றால் அதனை ஆள்பவன் என்று அர்த்தம் உள்ளது. அதனால் குதிரையை ஆள்பவன் அஷ்வாரூடா. அதேப்போல் லலிதாம்பிகை அஷ்வாரூரருடைய சகி. அஷ்வாரூட திஷ்டிதாஷ்வ கோடி கோடி பிராவ்ருதா என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் ஒரு உள்ளது.

ஹரிக என்று சொன்னாலே அது ஹயக்ரீவ மூர்த்தி. ஹயக்ரீவ மூர்த்தியின் அவதாரமாக இருக்கக்கூடிய காமாக்ஷியாக இருப்பவள் என்று அர்த்தம். வேறு ஒரு அர்த்தமும் உள்ளது. ப்ரத்தியங்கரா ஸிம்ஹ முகீ என்று. ஹரிக என்றால் ஸிம்ஹம் என்று அர்த்தம். ஈஷா என்றால் அந்த ஸிம்ஹத்தை ஆள்பவள் அதாவது ஸிம்ஹ வாஹினி என்றும் எடுத்துக்கொள்ளலாம். அல்லது இதில் சரபேஸ்வரவரையும் நாம் எடுத்துக் கொள்ளலாம். சரபேஸ்வரருக்கு பிரியமானவள் என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

கடைசியாக தீபிகாவில் ஹரி என்று சொன்னால் அஞ்ஞானத்தை அழிக்க கூடியவன் ‘ஹரதி அஞ்ஞானம்’. ‘க’ என்பது ஞானத்தை குறிப்பது. அதாவது ஞானத்தை கொடுத்து அஞ்ஞானத்தை அழிக்கக் கூடியவனை ஆளக்கூடியவள். ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் ஆளக்கூடியவன். சித் ஸ்வரூபமாய் இருக்கக்கூடிய ஹரிகேசன் என்ற நாமம். அதாவது சிதானந்த ஸ்வரூபம் என்று எடுத்துக் கொள்ளலாம். அல்லது அஹம் என்பதின்னுடைய உண்மையான அர்த்தம். மஹாவாக்கியத்திலே அஹம் ப்ரஹ்மாஸ்மி என்ற தத்வ ஸ்வரூபமாய் இருக்க கூடியவள் லலிதாம்பிகை. இந்த நாமத்திற்கு பலவிதமாய் தீபிகாவிலே குறிப்பிடப்பட்டு இருந்தாலும் ஒரு நேரடியான அர்த்தத்தை பகவான் சங்கரர் கொடுத்து இருப்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும்.

**ॐ हरिकेशसख्यै नमः ||११८||**
**ஓம் ஹரிகேஶஸக்²யை நம꞉ ||118||**

**हादिविद्या | (119)**
**ஹாதி³வித்³யா | 119**

**लोपामुद्रोपासितमनुरूपेत्यर्थः ||**

**லோபாமுத்³ரோபாஸிதமனுரூபேத்யர்த²꞉ ||**

லோபாமுத்ரா என்ற ஒரு ஞானி. அவளால் உபாஸிக்கப்பட்ட வித்யா ஸ்வரூபத்தை உடையவள் லலிதா த்ரிபுர ஸுந்தரி. இந்த ஹாதி வித்யா என்றால் . ஒரு வாக்கியம் இருக்கிறது ‘ஸா யேஷாம் சாம்பவி வித்யா, காதி வித்யா இதி வா, ஹாதி வித்யா இதி வா, ஸாதி வித்யா இதி வா ரஹஸ்யம் ஓம் ஓம் வாசி பிரதிஷ்டா’ அதாவது பரம கல்யாணகாரி ஹாதி வித்யா மூலமாய் பரம

கல்யாணத்தை கொடுக்கக்கூடியவள் என்று அர்த்தம் . விளக்கத்திற்காக ஹாதி, ஸாதி, காதி என்றால் ஹ வை முதல் அக்ஷரமாய் கொண்டது மற்ற அக்ஷரங்கள். அது பீஜத்திலே இருக்கிறது. அது போல க வை முதல் அக்ஷரமாக கொண்டு வேறு பீஜாக்ஷரங்களை கொண்டவை என்று நாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

**ॐ हादिविद्यायै नमः ||११९||**
**ஓம் ஹாதி³வித்³யாயை நம꞉ ||119||**

**हालामदालसा | (120)**
**ஹாலாமதா³ளஸா | 120**

**हालायाः अमृतमथनोद्भूतवारुण्याः मदेन उल्लासेन अलसा आरक्तनेत्रान्तरोमाञ्चादिचिह्नवतीत्यर्थः ||**

**ஹாலாயா꞉ அம்ரு’தமத²னோத்³பூ⁴தவாருண்யா꞉ மதே³ன உல்லாஸேன அலஸா ஆரக்தநேத்ராந்தரோமாஞ்சாதி³சிஹ்னவதீத்யர்த²꞉ ||**

திருப்பாற்கடலை கடைந்த பொழுது அதனால் ஏற்பட்ட வாருணியின் ஆனந்தத்தினால் கண்கள் சிவந்து மயிர் சிலிர்ப்பு அடைக்க கூடிய குறிகளை உடைய பரதேவதை. ஆனந்தத்தால் சிவந்த கண்கள், மயிர்கூச்சத்தினால் உடைய உடம்பு அது போன்று அடையாளங்களை உடையவள் பராசக்தி.

**ॐ हालामदालसायै नमः ||१२०||**
**ஓம் ஹாலாமதா³லஸாயை நம꞉ ||120||**

**सकाररूपा सर्वज्ञा सर्वेशी सर्वमङ्गला |**
**सर्वकर्त्री मर्वभर्त्री सर्वहन्त्री सनातना ||२४||**
**ஸகாரரூபா ஸர்வஜ்ஞா ஸர்வேஶீ ஸர்வமங்க³ளா |**
**ஸர்வகர்த்ரீ ஸர்வப⁴ர்த்ரீ ஸர்வஹந்த்ரீ ஸநாதநா ||24||**

**सकाररूपा | (121)**
**ஸகாரரூபா | 121**

**द्वितीयखण्डद्वितीयावयवत्वेन ज्ञापकं यस्याः सा तथा ||**

**த்³விதீயக²ண்ட³த்³விதீயாவயவத்வேன ஜ்ஞாபகம்’ யஸ்யா꞉ ஸா ததா² ||**

ஏற்கனவே நாம் பார்த்த மாதிரி ஸாதி வித்யா. மஹாவித்யையின் இரண்டாவது கண்டத்தில் இரண்டாவது வர்ணத்தினால் அறியப்படுபவள். ஏற்கனவே நாம் இந்த வித்யாவில் ஆறு அங்கங்கள் இருக்கின்றது என்பதை பார்த்தோம். முதல் அங்கம் த்ரஷ்டா அதாவது துதிக்க கூடிய ரிஷி. இரண்டாவது அதில் துதிக்க கூடிய இறைவன் (தேவதாஸ்வரூபம்). இந்த ஸகார ஸ்வரூபம் என்பது அந்த

வித்தையினால் துதிக்க கூடிய தேவதையை குறிக்கக்கூடியது அவளே லலிதா த்ரிபுர ஸுந்தரி.

**ॐ सकाररूपायै नमः ||१२१||**
**ஓம் ஸகாரரூபாயை நம꞉ ||121||**

**सर्वज्ञा | (122)**
**ஸர்வஜ்ஞா | 122**

**अलुप्तनित्यज्ञानस्वरूपेण सामान्यरूपेण सर्वं जानातीति सर्वज्ञा, 'यः सर्वज्ञः सर्ववित्' (मुण्ड १-१) इति श्रुतेः ||**

**அலுப்தநித்யஜ்ஞானஸ்வரூபேண ஸாமான்யரூபேண ஸர்வம்' ஜானாதீதி ஸர்வ - ஜ்ஞா, 'ய꞉ ஸர்வஜ்ஞ꞉ ஸர்வவித்' (முண்ட³ 1-1) இதி ஶ்ருதே꞉ ||**
.
குறையாதது, நாசமாகாதது, ஞான விசேஷத்தால் அனைத்தையும் அறிந்து கொண்டிருக்க கூடியவள் **'यः सर्वज्ञः सर्ववित्' (मुण्ड १-१) 'ய꞉ ஸர்வஜ்ஞ꞉ ஸர்வவித்' (முண்ட³ 1-1)** என்ற ஸ்ருதி வாக்கியத்திற்கு பாத்திரமாக இருக்க கூடியவள் பராம்பிகை.

**ॐ सर्वज्ञायै नमः ||१२२||**
**ஓம் ஸர்வஜ்ஞாயை நம꞉ ||122||**

**सर्वेशी | (123)**
**ஸர்வேஶீ | 123**

**सर्वस्य कार्यस्य अन्तर्यामिरूपेण ईष्टे प्रेरयतीति तथा ||**

**ஸர்வஸ்ய கார்யஸ்ய அந்தர்யாமிரூபேண ஈஷ்டே ப்ரேரயதீதி ததா² ||**

ஈஷா என்ற வார்த்தை என்னவென்றால் ‘ஈஷாவாஸ்யம் இதம் ஸர்வம்’ என்று கேனோபநிஷத் சொல்கிறது. ‘அந்தஸ் திஷ்டன் யமயதி’ என்று ப்ரவேஷம் செய்து உள்ளே இருந்து ப்ரேமிக்க கூடியவள் என்று அர்த்தம் இருக்கிறது. அதை தான் அந்தர்யாமியாக இருந்து எல்லா காரியங்களுக்கும் ப்ரேஷிதாவாக அதாவது அனைத்தையும் ஆமோதிக்க கூடிய ஸ்வரூப சைதன்யமாய் இருக்ககிறேன் என்று இந்த நாமாவில் குறிப்பிடப்படுகின்றது. கேனோபநிஷத்திலே ‘கேனேஷிதம் ப்ரேஷிதம் மன:’ என்று சொல்கிறது. ப்ரேஷிதம் என்றால் ப்ரேரிதா. பிரேரிப்பிக்கின்றவள் என்று அர்த்தம் ஆகின்றது.

**ॐ सर्वेश्यै नमः ||१२३||**
**ஓம் ஸர்வேஶ்யை நம꞉ ||123||**

**सर्वमङ्गला | (124)**
**ஸர்வமங்க³ளா | 124**

सर्वप्रकारेण शुद्धविशिष्टचैतन्यरूपेण मङ्गला परमानन्दस्वरूपा । अत्र बहुव्रीहेरविवक्षितत्वात् । विबक्षितायां वा सुन्दरकायो राजेत्यादिवत् समासार्थः । अथवा, सर्वेषां मङ्गलं यस्याः सा तथा । सर्वैः प्रकारैः ध्यानकीर्तनपूजानमस्काराद्यर्चनभक्तिजन्यकैङ्कर्यैः जडानामपि मङ्गलं सुखं यस्याः जायते सा तथा । सर्वेषामात्मरूपतया प्रतीयमानं मङ्गलं सुखस्वरूपं यस्याः सेति वा । सर्वशब्दवाच्यः सर्वकारणं शिवः, तस्य मङ्गलं सुखं यस्याः जायते सा तथा, 'सच्चिन्मयः शिवः साक्षात्तस्यानन्दमयी शिवा' इति वचनात् । अथवा, मङ्गलशब्देन मङ्गलहेतुभूताः स्त्रियो लक्ष्यन्ते । सर्वेषां प्राणिनां मङ्गलं मङ्गलसाधनभूताः योषाः स्वाभिन्नसच्चिदानन्दद्वत्त्वेन यस्याः सा तथा, 'एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति' (बृ. ४-३) इति श्रुतेरित्यर्थः । 'अशुभानि निराचष्टे तनोति शुभसंततिम् । स्मृतिमात्रेण यत्पुंसां ब्रह्म तन्मङ्गलं विदुः || अतिकल्याणरूपत्वात् नित्यकल्याणसंश्रयात् । स्मतॄणां वरदत्वाच्च ब्रह्म तन्मङ्गलं विदुः ||' इत्यादिवचनात् ||

**ஸர்வப்ரகாரேண ஶுத்³த⁴விஶிஷ்டசைதன்யரூபேண மங்க³ளா பரமானந்த³ - ஸ்வரூபா | அத்ர ப³ஹுவ்ரீஹேரவிவக்ஷிதத்வாத் | விவக்ஷிதாயாம்’ வா ஸுந்த³ர - காயோ ராஜேத்யாதி³வத் ஸமாஸார்த²ꞏ | அத²வா, ஸர்வேஷாம்’ மங்க³ளம்’ யஸ்யாꞏ ஸா ததா² | ஸர்வைꞏ ப்ரகாரைꞏ த்⁴யானகீர்தனபூஜாநமஸ்காராத்³யர்சனப⁴க்திஜன்ய - கைங்கர்யைꞏ ஜடா³நாமபி மங்க³ளம்’ ஸுக²ம்’ யஸ்யாꞏ ஜாயதே ஸா ததா² | ஸர்வே - ஷாமாத்மரூபதயா ப்ரதீயமானம்’ மங்க³ளம்’ ஸுக²ஸ்வரூபம்’ யஸ்யாꞏ ஸேதி வா | ஸர்வஶப்³த³வாச்யꞏ ஸர்வகாரணம்’ ஶிவꞏ, தஸ்ய மங்க³ளம்’ ஸுக²ம்’ யஸ்யாꞏ ஜாய - தே ஸா ததா², ‘ஸச்சின்மயꞏ ஶிவꞏ ஸாக்ஷாத்தஸ்யானந்த³மயீ ஶிவா’ இதி வசனாத் | அத²வா, மங்க³ளஶப்³தே³ன மங்க³ளஹேதுபூ⁴தாꞏ ஸ்த்ரியோ லக்ஷ்யந்தே | ஸர்வே - ஷாம்’ ப்ராணினாம்’ மங்க³ளம்’ மங்க³ளஸாத⁴னபூ⁴தாꞏ யோஷாꞏ ஸ்வாபி⁴ன்னஸச் - சிதா³னந்த³த்³வத்த்வேன யஸ்யாꞏ ஸா ததா², ‘ஏதஸ்யைவானந்த³ஸ்யான்யானி பூ⁴தா - னி மாத்ராமுபஜீவந்தி' (ப்³ரு’. 4-3) இதி ஶ்ருதேரித்யர்த²ꞏ | ‘அஶுபா⁴னி நிராசஷ்டே தனோதி ஶுப⁴ஸந்ததிம் ஸ்ம்ரு’திமாத்ரேண யத்பும்’ஸாம்’ ப்³ரஹ்ம தன்மங்க³ளம்’ விது³ꞏ || அதிகல்யாணரூபத்வாத் நித்யகல்யாணஸம்’ஶ்ரயாத் | ஸ்மத்ரு’ணாம்’ வரத³ - த்வாச்ச ப்³ரஹ்ம தன்மங்க³ளம்’ விது³ꞏ ||’ இத்யாதி³வசனாத் ||**

பராம்பிகை யினுடைய ஸ்வரூபம் ஸுத்த சைதன்யம். அந்த ஸுத்த சைதன்ய ஸ்வரூபத்தினால் எல்லா வகைகளிலும் மங்கள வடிவமாய் இருக்க கூடியவள். ‘ப்ரபஞ்ஜோபஷமம் சாந்தம் சிவம் ...’ என்று மாண்டூக்ய உபநிஷத்தில் குறிப்பிடக்கூடிய ஸுத்த சைதன்யம். அஞ்ஞானிகளுக்கு கூட தியானம், கீர்த்தனம், பூஜை, நமஸ்காரம், அர்ச்சனை முதலிய வழிகளால் பரதேவதையை பூஜை செய்து த்ருப்தி செய்வித்து அவர்கள் விரும்பிய ஸுகத்தை அடைகிறார்கள் என்பது உலக ப்ரஸித்தமாய் இருக்க கூடியது. அப்படி பட்டவர்களுக்கும் மங்கள வடிவமாய் இருக்க கூடியவர்கள். ஸ்வாத்ம ரூபம், எல்லா ப்ராணிகளுக்கும் ஆத்ம ஸ்வரூபமாய் விளங்கக்கூடிய காரணத்தினால் ஆனந்த ரூபமாயும், மங்கள வடிவமாயும், ஷம் கரோதி என்ற சங்கரர் ஸ்வரூபமாயும் இருக்க கூடியவள்.

இந்த ஸர்வம் என்ற சப்தம் ஜகத் காரண பரமேஸ்வரனை குறிப்பதினால் பரமேஸ்வரனுக்கு ப்ரிய பத்னியாக இருக்க கூடியவள். **‘सच्चिन्मयः शिवः साक्षात्तस्यान - न्दमयी शिवा’ ‘ஸச்சின்மயꞏ ஶிவꞏ ஸாக்ஷாத்தஸ்யானந்த³மயீ ஶிவா’** என்று ஸ்ருதி கூறுகிறது. மங்களம் என்பதற்கு கூடிய பதமானது மங்கள காரணமான

ஸ்திரீகளை குறிப்பது. எல்லா ப்ராணிகளுக்கும் மங்களத்தை செய்வது சாஸ்திரத்தில் தாய்மார்களே என்று குறிப்பிடப்படுகிறது. இந்த தாய்மார்கள் ஸச்சிதாநந்த வடிவமான பரதேவதா ரூபிணிகள் என்பதால் லலிதாம்பிகை ஸுவாஸினி வடிவை உடையவளாக இந்த த்ரிசதியிலே குறிப்பிடப்படுகிறது. சக்தி வித்தையிலும் குறிப்பிடப்படுகிறது. ஸுவாஸின்யர்ச்சிதாயை நம: ஸுவாஸின்யை நம: என்று நாமாக்களை நாம் பார்க்கின்றோம்.

ஆனந்தஸ்வரூபம் **'एतस्यैवानन्दस्यान्यानि भूतानि मात्रामुपजीवन्ति' (बृ. ४-३) 'ஏதஸ்யை - வானந்த³ஸ்யான்யானி பூ⁴தானி மாத்ராமுபஜீவந்தி' (ப்³ரு'. 4-3)** என்று ஸ்ருதி சொல்கிறது. இதை அனைவரும் அனுபவிக்கின்றனர் என்று சொல்கிறது. **'अशुभानि निराचष्टे तनोति शुभसंततिम् । स्मृतिमात्रेण यत्पुंसां ब्रह्म तन्मङ्गलं विदुः || अतिकल्याणरूपत्वात् नित्यकल्याणसंश्रयात् । स्मतृणां वरदत्वाच्च ब्रह्म तन्मङ्गलं विदुः ||' 'அஶுபா⁴னி நிராசஷ்டே தனோதி ஶுப⁴ஸந்ததிம் ஸ்ம்ரு'திமாத்ரேண யத்பும்'ஸாம்' ப்³ரஹ்ம தன்மங்க³ளம்' விது³: || அதிகல்யாணரூபத்வாத் நித்யகல்யாணஸம்'ஶ்ரயாத் | ஸ்மத்ரு'ணாம்' வரத³ - த்வாச்ச ப்³ரஹ்ம தன்மங்க³ளம்' விது³: ||'** ப்ரஹ்ம ஸூத்திரத்தில் பூர்வாங்கமாய் உள்ள இந்த வாக்கியங்களினால் ப்ரம்ஹத்துக்கு அபின்னமாய் இருக்க கூடிய சித் ஸ்வரூபமான சக்தியே மங்கள ஸ்வரூபமாக இருக்கிறாள் என்று ஸர்வமங்களம் என்ற நாமத்திலே குறிப்பிடப்படுகிறது.

**ॐ सर्वमङ्गलायै नमः ||१२४||**
**ஓம் ஸர்வமங்க³ளாயை நம: ||124||**

**सर्वकर्त्री | (125)**
**ஸர்வகர்த்ரீ | 125**

**सर्वं समस्तं स्वशक्त्या मायारूपया करोतीति तथा, 'ईशत ईशनीभिः' (श्वेत. ३-१) इति श्रुतेः ॥**

**ஸர்வம்' ஸமஸ்தம்' ஸ்வஶக்த்யா மாயாரூபயா கரோதீதி ததா², 'ஈஶத ஈஶனீபி⁴:' (ஶ்வேத. 3-1) இதி ஶ்ருதே: ||**

பரதேவதை எல்லாவற்றையும் தனது மாயா சக்தியின் மூலமாக நிறைவேற்றுகிறாள். த்ரிகுணாத்மிகா மாயா என்று சொல்கிறோம். இச்சா சக்தி, க்ரியா சக்தி மற்றும் ஞான சக்தி ரூபமாய் குணங்கள் தன்னை வெளிப்படுத்துகின்றன. அந்த சக்தியின் மூலமாக பரதேவதை எல்லா காரியங்களையும் நிறைவேற்றுகிறாள். **'ईशत ईशनीभिः' (श्वेत. ३-१) 'ஈஶத ஈஶனீபி⁴:' (ஶ்வேத. 3-1)** என்று ஸ்வேதாஸ்வதர உபநிஷத்திலே மூன்றாவது அத்தியாயத்தில் முதல் அடியில் இருக்கிறது. அந்த ஸ்லோகம் 'யா: ஏக: ஜாலவான் ஈஷத …' அந்த ஏக; என்பது ஸ்வேதாஸ்வதர உபநிஷத்திலே பரமாத்மா என்று சொல்கிறது. அந்த பரமாத்மா தன்னால் ஏதும் செய்ய முடியாது. அவ்யக்தமாய் மாயையை உள்ளடக்கிய பரமாத்மா. அதனால் பரமாத்மாவின் சக்தியாய் பரதேவதை செயல்படுகிறது. ஆதலால் தான் ஆக்கும் அழிக்கும் சக்தி அனைத்தையும் அவள் செய்கிறாள். அவ்யக்தத்தில் இருந்து வ்யக்தம் (ஸ்ருஷ்டி) வரை அனைத்தும். அதாவது ஸர்வ கர்த்ரீ என்பது தஸ்ய கர்த்தாராம் அகர்த்தாராம் அபி என்பது

போல . இதை பின்னால் ஸர்வ ஸாக்ஷி, ஸர்வ பத்ரு, ஹந்த்ரு என்று எல்லாம் சொல்லப் போகிறார்.

**ॐ सर्वकर्त्र्यै नमः ||१२५||**
**ஓம் ஸர்வகர்த்ர்யை நமः ||125||**

**सर्वभर्त्री | (126)**
**ஸர்வப⁴ர்த்ரீ | 126**

**सर्वं बिभर्तीति तथा, 'एष विधृतिरेषां लोकानाम्' (छा ८-४) इति श्रुतेः ||**

**ஸர்வம் பி³ப⁴ர்தீதி ததா², 'ஏஷ வித்⁴ரு'திரேஷாம்' லோகானாம்' (சா² 8-4) இதி ஶ்ருதே: ||**

எல்லாவற்றையும் தாங்கி பரிபாலிப்பவள். **'एष विधृतिरेषां लोकानाम्' (छा ८-४) 'ஏஷ வித்⁴ரு'திரேஷாம்' லோகானாம்' (சா² 8-4)** ஆத்மஸ்வரூபமாக அனைத்தையும் தாங்குகின்றாள். ஸர்வஸ்ய அதிஷ்டானம் ஆத்மா. அத்யஸ்தம் தான் இந்த விஷயங்கள் எல்லாமே. அதாவது 'அதிஷ்டான அத்யஸ்த ரூபேண ஸர்வ பர்த்ரீ' என்று எடுத்து கொள்ளலாம்.

**ॐ सर्वभर्त्र्यै नमः ||१२६||**
**ஓம் ஸர்வப⁴ர்த்ர்யை நமः ||126||**

**सर्वहन्त्री | (127)**
**ஸர்வஹந்த்ரீ | 127**

**सर्वं हरतीति तथा। एभिनीमत्रयैः 'यतो वा' (तै. ३-१) इत्यादिश्रुत्युक्ततटस्थलक्षणत्रयमभिहितमिति वेदितव्यम् ||**

**ஸர்வம்' ஹரதீதி ததா² ஏபி⁴னீமத்ரயை: 'யதோ வா' (தை. 3-1) இத்யாதி³ஶ்ருத்யுக்த - தடஸ்த²லக்ஷணத்ரயமபி⁴ஹிதமிதி வேதி³தவ்யம் ||**

அனைத்தையும் ஸம்ஹாரம் செய்யக்கூடியவள். அதனால் கர்த்ரீ, பர்த்ரீ, ஹந்த்ரீ இந்த மூன்று நாமங்களினாலே ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார க்ருத்யங்கள் (காரணங்கள்) கூறப்பட்டன. 'மையேவ ஸகலம் ஜாதம் ...' என்று கைவல்ய உபநிஷத் கூறுகின்றது. ஆக்கி, அளித்து துடைக்கும் தொழில் அனைத்தும் செய்து அதன் தாக்கமற நிற்கும் சமர்த்தன் என்று பரமேஸ்வரனை தாயுமானவர் சொல்கிறார். பரமேஸ்வரனின் மாயா சக்தியையும் சொல்கிறார். ஸ்ருதி வாக்கியம் சொல்கிறது **'यतो वा.....' (तै. ३-१) 'யதோ வா...' (தை. 3-1)** என்று இந்த அனைத்து ஸ்ருஷ்டியும் எதில் இருந்து தோன்றி எதிலே இருந்து எதிலே லயம் அடைகிறதோ அதுவே த்ரி குணாத்மிகா மாயா என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ப்ரஹ்ம ஸூத்ரத்திலே தடஸ்த லக்ஷணமாக இந்த ஸ்ருஷ்டி ப்ரகரணம்

சொல்லப்பட்டு ஜன்மாத்யஸ்ய யத: என்று இந்த தடஸ்த லக்ஷணம் பற்றி பகவான் சங்கரர் விரிவாக சொல்கிறார்.

**ॐ सर्वहन्त्र्यै नमः ||१२७||**
**ஓம் ஸர்வஹந்த்ர்யை நம: ||127||**

**सनातना | (128)**
**ஸனாதனா | 128**

**'अजो नित्यः शाश्वतोऽयं पुराणः' (कठ. २-१८) इति श्रुतेः नित्यसिद्धस्वरूपेत्यर्थः ||**

**'அஜோ நித்ய: ஶாஶ்வதோ(அ)யம்' புராண:' (கட². 2-18) இதி ஶ்ருதே: நித்யஸித்³த⁴ஸ்வ - ரூபேத்யர்த²: ||**

ஸனாதனம் என்று சொன்னால் **'अजो नित्यः शाश्वतोऽयं पुराणः' (कठ. २-१८) 'அஜோ நித்ய: ஶாஶ்வதோ(அ)யம்' புராண:' (கட². 2-18)** என்று ஒரு வாக்கியம் இருக்கு. நித்ய ஸித்த ஸ்வரூபத்தை உடையவள். இந்த நித்ய ஸித்த ஸ்வரூபம் என்று சொல்வது 'அவினாஷி து தத்வித்தி யேன ஸர்வம் இதம் ததம்....' என்று கீதையில் சொல்கிறார். அதனால் நித்தியமாய் இருக்க கூடியது. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயத்துக்கு அதிஷ்டான காரணமாய் இருக்க கூடியது என்று 125ஆவது நாமத்தில் இருந்து 128 ஆவது நாமம் வரைக்கும் இந்த த்ரிசதியில் விளக்கப்பட்டு இருக்கின்றது. கீதையில் 13/22 உபத்ருஷ்டா பர்த்தா, போக்தா, மஹேஸ்வர: பரமத்தமா இதி.... யஞகர்ம வ்யா ப்ருதேஷு அதிஷ்டான தயா, அவர் கர்த்தா இவ கர்த்தா, பரணம் சைதன்யேன பரார்த்யேன ..... தாங்குவதால், அதன் பிறகு போக்தா அக்னி உஷ்ண வத் ..... ஸாக்ஷிரூபேண என்று கர்த்ருத்வம், போத்ருத்வம் இது அனைத்தும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் இவை அனைத்தும் அத்யாஸ லக்ஷணமாய் இருக்க கூடிய ஜகத்தில் ஸாக்ஷி ரூபமாய் இருக்க கூடிய சைதன்யத்தின் அத்யாஸ உபாதிக்கு தகுந்தபடி தன்னுடைய ஸ்வரூபத்தை வெளி காட்டிக்கொள்கிறது என்று நாம் அர்த்தம் அறிந்து கொள்ள வேண்டும்.

**ॐ सनातनायै नमः ||१२८||**
**ஓம் ஸனாதனாயை நம: ||128||**

**सर्वानवद्या सर्वाङ्गसुन्दरी सर्वसाक्षिणी |**
**सर्वात्मिका सर्वसौख्यदात्री सर्वविमोहिनी ||२५||**
**ஸர்வானவத்³யா ஸர்வாங்க³ஸுந்த³ரீ ஸர்வஸாக்ஷிணீ |**
**ஸர்வாத்மிகா ஸர்வஸௌக்²யதா³த்ரீ ஸர்வவிமோஹினீ ||25||**

**सर्वानवद्या | (129)**
**ஸர்வானவத்³யா | 129**

**सर्वैर्ज्ञानैश्वर्यादिगुणैरनवद्या । अवद्या नाम विद्यया हीना जडप्रकृतिः मिथ्या वाध्यमानत्वात् । तद्विलक्षणा सत्यज्ञानानन्दरूपत्वादनवद्या । सर्वेषां सर्वाभीष्टप्रापकत्वेन स्तुत्या वा ||**

**ஸர்வைர்ஜ்ஞானைஶ்வர்யாதி³கு³ணைரனவத்³யா | அவத்³யா நாம வித்³யயா ஹீனா ஜட³ப்ரக்ரு’தி꞉ மித்²யா வாத்⁴யமானத்வாத் | தத்³விளக்ஷணா ஸத்யஜ்ஞானா - னந்த³ரூபத்வாத³னவத்³யா | ஸர்வேஷாம்’ ஸர்வாபீ⁴ஷ்டப்ரா - பகத்வேன ஸ்துத்யா வா ||**

அவித்யா என்றால் அஞ்ஞானம் என்று அர்த்தம். அவித்யா என்பது ப்ரக்ருதி. அவத்யா என்பது ஜடப்ரக்ருதி. ஒரு காலத்தில் இது வாதத்திற்கு உட்படும். ப்ரக்ருதி இருக்கிறதா என்றால் இருக்கிறது ப்ரக்ருதி சொல்லே சத்யவதி .... அதை தான் நாம் சொல்வோம் ப்ரதீயமாநத்வாத் ந அஸத் பாதிதத்வாது ந ஸத் என்பது தான் ப்ரகிருதிக்கு லக்ஷணம்.

இந்த ப்ரக்ருதிக்கு விலக்ஷணமாய் இருக்க கூடிய ஸத் சித் ஆனந்த வடிவமாய் இருக்க கூடிய பரதேவதை விளங்குவதால் அநவத்யா. எல்லாருக்கும் அவரவர்களுக்கு விரும்பிய பலனை தருவதாலும் ஸ்தோத்ரம் செய்யப்படுபவள் என்றும் ஒரு அர்த்தம் சொல்லலாம். காலத்தினாலும், பஞ்ச பூதங்களினாலும் எதனாலும் அழிக்க முடியாதது. நித்ய ஸித்த வஸ்து என்று ஸர்வானவத்யா என்று இந்த நாமமானது தெளிவு படுத்துகிறது.

**ॐ सर्वानवद्यायै नमः ||१२९||**

**ஓம் ஸர்வாநவத்³யாயை நம꞉ ||129||**

**सर्वाङ्गसुन्दरी | (130)**

**ஸர்வாங்க³ஸுந்த³ரீ | 130**

**सर्वाणि च तानि अङ्गानि च अवयवाः शिरःपाण्यादयः, तेष्वन्यूनातिरिक्तभाववत्त्वात् यथासामुद्रि - कलक्षणं तद्वत्त्वेन सर्वाङ्गसुन्दरी । अथवा, सर्वेषामङ्गेषु शरीरेषु ब्रह्मस्वरूपतया अत्यन्तप्रेमविषयत्वेन सुन्दरपदार्थवदविना भाववाञ्छाविषयत्वात् तथा ||**

**ஸர்வாணி ச தானி அங்கா³னி ச அவயவா꞉ ஶிர꞉பாண்யாத³ய꞉, தேஷ்வந்யூனாதிரி - க்தபா⁴வவத்த்வாத் யதா²ஸாமுத்³ரிகலக்ஷணம்’ தத்³வத்த்வேன ஸர்வாங்க³ஸுந்த³ரீ | அத²வா, ஸர்வேஷாமங்கே³ஷு ஶரீரேஷு ப்³ரஹ்மஸ்வரூபதயா அத்யந்தப்ரேம - விஷயதவின ஸுந்த³ரபதா³ர்த²வத்³வினாபா⁴வவாஞ்சா²விஷயத்வாத் ததா² ||**

எல்லா அங்கங்களும் ஒரு ஸுந்தரமாக மனோ ரம்யமாக அமையப்பெற்றவள். ஸாமுத்ரிகா லக்ஷணத்தின் படி அங்க ஸுந்தரி. எல்லாருடைய ஸரீரங்களிலும் அத்யந்த ப்ரேமைக்கு விஷயமாய் இருப்பதால். ஆனந்த ஆத்மஸ்வரூப வடிவமாய் இருப்பதால் அனைத்து வடிவங்களும் பரதேவதையின் வடிவங்கள் ஸ்வரூப அபரித்யாகேன என்ற ரூபாந்தர ப்ராப்தி என்பதினால் ஆனந்த ஸுந்தரி என்று கொள்ள வேண்டும்.

**ॐ सर्वाङ्गसुन्दर्यै नमः ||१३०||**





ஓம் ஸர்வாங்க³ - ஸுந்த³ர்யை நம: ||130||

**सर्वसाक्षिणी | (131)**
**ஸர்வஸாக்ஷிணீ | 131**

**सर्वेषां जडानां कार्याणां स्फूर्त्याधायकत्वेन प्रकाशकर्त्री तथा | सर्वं साक्षादीक्षत इति वा तथा ||**

**ஸர்வேஷாம்' ஜடா³னாம்' கார்யாணாம்' ஸ்பூ²ர்த்யாதா⁴யகத்வேன ப்ரகாஶகர்த்ரீ ததா² | ஸர்வம்' ஸாக்ஷாதீ³க்ஷத இதி வா ததா² ||**

இந்த நாமாவில் தாத்பர்ய லக்ஷணம் சொல்லப்பட்டிருக்கிறது. காரிய ரூபமாய் உள்ள ப்ரக்ருதி அதாவது ஜட வஸ்துக்களுக்கு ஸத்தா ஸ்பூர்த்தியை தருகிறாள். 'அந்தஸ் திஷ்டன் யமயதி' என்பது போல 'க்ஷேத்ரஞ்ஜும் சாபிமாம் இதி...' என்பது போல அந்த ஸர்வ ஸாக்ஷி ஸ்வரூபமாய் இருக்க கூடிய பரதேவதையினுடைய ஆசியினாலே அனைத்து பொருட்களும் பிரகாசிக்கின்றது. இருப்பையும் உணர்வையும் பெறுகின்றன. 'ஸத்யவாசா ஸர்வம் இமம் ...' என்ற ஸ்ருதி வாக்கியம் கூறுகிறது. அனைத்தையும் பற்றற்று அவள் அடைக்கலம் தருகிறாள். ஸர்வ ஸாக்ஷிணி என்று நாம் சொல்கிறோம். ஸாக்ஷி என்றாலே ஸாக்ஷாத் ஈக்ஷதே ஸாக்ஷி. பற்றின்றி பார்ப்பவள் என்று அர்த்தம்.

**ॐ सर्वसाक्षिण्यै नमः ||१३१||**
**ஓம் ஸர்வஸாக்ஷிண்யை நம: ||131||**

**सर्वात्मिका | (132)**
**ஸர்வாத்மிகா | 132**

**सर्वेषामात्मस्वरूपत्वात् । 'यच्चाप्नोति यदादत्ते यच्चात्ति विषयानिह । यच्चास्य सन्ततो भावस्तस्मा - दात्मेति गीयते ||' इति वचनात्तथा ||**

**ஸர்வேஷாமாத்மஸ்வரூபத்வாத் | 'யச்சாப்னோதி யதா³த³த்தே யச்சாத்தி விஷ - யானிஹ | யச்சாஸ்ய ஸந்ததோ பா⁴வஸ்தஸ்மாதா³த்மேதி கீ³யதே ||' இதி வசனா - த்ததா² ||**

'ஸர்வபூதஸ்திதம் யோ மாம்' என்பதின் தாத்பரியம் இந்த நாமா. எல்லாவற்றினுடைய ஆத்ம ஸ்வரூபமாய் இருக்க கூடியவள். 'க்ஷேத்ரக்ஞும் சாபிமாம் ... (13-2) கீதை வாக்கியத்தின் தாத்பர்ய லக்ஷணம். ஆத்மஸ்வரூபத்தை க்ரந்தங்கள் எப்படி விவரிக்கின்றது என்றால் **'यच्चाप्नोति यदादत्ते यच्चात्ति विषयानिह । यच्चास्य सन्ततो भावस्तस्मादात्मेति गीयते ||' 'யச்சாப்னோதி யதா³த³த்தே யச்சாத்தி விஷயானிஹ | யச்சாஸ்ய ஸந்ததோ பா⁴வஸ்தஸ்மாதா³த்மேதி கீ³யதே ||'** என்று வாக்கியங்கள் இருக்கின்றது. அப்படியென்றால் இது ஒரு இடைவெளியற்ற ஒரு சைதன்யஸ்வரூபம். அது பெறுகிறது, அது ஸந்தோஷிக்கிறது, அனைத்து பொருள்களையும் ஒளிரச்செய்கிறது. அனைத்து பொருளையும் அறிகிறது. கீதையில் 'ஸர்வ பூதஸ்திதம் மாம்..' என்று சொல்கிறார். 'ஸர்வாத்மானம்' என்று

**सर्वधर्मान्परित्यज्य मामेकं शरणं व्रज। अहं त्वां सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥66॥ ஸர்வத⁴ர்மான்பரித்யஜ்ய மாமேகம்' ஶரணம்' வ்ரஜ | அஹம்' த்வாம்' ஸர்வபாபேப்⁴யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ||66||** (கீதை 18-66) பாஷ்யத்தில் கீதையில் சொல்கிறார். அனைத்திற்கும் ஆத்மாவாய் இருக்க கூடியது. இருப்பையும் உணர்வையும் கொடுக்க கூடியவள் என்று நாம் அறிகிறோம்.

**ॐ सर्वात्मिकायै नमः ||१३२||**
**ஓம் ஸர்வாத்மிகாயை நம: ||132||**

**सर्वसौख्यदात्री | (133)**
**ஸர்வஸௌக்²யதா³த்ரீ | 133**

**सुखिनः भावः सौख्यम्, सर्वाणि च तानि प्रियमोदप्रमोदानन्दशब्दवाच्यानि । इष्टदर्शनजन्यं सुखं प्रियम् । तल्लाभजन्यं मोदः । तदनुभवजन्यं प्रमोदः । आनन्दः समष्टिः । जीवः भोक्ता । तानि ददातीति तथा । सर्वप्रकारैः स्मरणादिभिः सौख्यं ददातीति वा । सर्वेषामाब्रह्मस्तम्बपर्यन्तानां यथाकर्मोपासनं प्रत्यक्षेण दृश्यमानं ज्ञानैश्वर्यादिसहितं सुखं ददातीति वा तथा। 'एष ह्येवानन्दयाति' (तै. २-७) इति श्रुतेः ॥**

**ஸுகி²ன: பா⁴வ: ஸௌக்²யம், ஸர்வாணி ச தானி ப்ரியமோத³ப்ரமோதா³னந்த³ - ஶப்³த³வாச்யானி | இஷ்டத³ர்ஶனஜன்யம்' ஸுக²ம்' ப்ரியம் | தல்லாப⁴ஜன்யம்' மோத³: | தத³னுப⁴வஜன்யம்' ப்ரமோத³: | ஆனந்த³: ஸமஷ்டி: | ஜீவ: போ⁴க்தா | தானி த³தா³தீதி ததா² | ஸர்வப்ரகாரை: ஸ்மரணாதி³பி⁴: ஸௌக்²யம்' த³தா³தீதி வா | ஸர்வேஷாமா - ப்³ரஹ்மஸ்தம்ப³பர்யந்தானாம்' யதா²கர்மோபாஸனம்' ப்ரத்யக்ஷேண த்³ரு'ஶ்யமா - னம்' ஜ்ஞானைஶ்வர்யாதி³ஸஹிதம்' ஸுக²ம்' த³தா³தீதி வா ததா² | 'ஏஷ ஹ்யேவான - ந்த³யாதி' (தை. 2-7) இதி ஶ்ருதே: ||**

ஸர்வ ஸுக பாவங்கள் ப்ரியமோத ப்ரமோதம் என்று தைத்திரீய வாக்கியம் கூறுகிறது. ப்ரிய மோத ப்ரமோத ஆனந்த ஸ்வரூபம் என்று. இந்த ஸர்வ ஸுக பாவங்களை. அனுபவிக்க கூடிய காரண வஸ்துவாய் இருப்பவள் அல்லது அருள் செய்பவள். நாம் விரும்பிய பொருளை பார்ப்பதால் ஏற்படக்கூடிய ஸுகத்துக்கு ப்ரியம் என்று பெயர். அப்படி ப்ரியப்பட்ட பொருளை அடைவதால் உண்டாவது மோதம் என்று பெயர். அதை அனுபவிப்பதால் உண்டாகும் ஸுகம் ப்ரமோதம். இவைகள் எல்லாம் சேர்ந்த ஸமஷ்டிக்கு அதிஷ்டானமாக இருக்கக்கூடியது 'ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா' என்று ஆனந்த ஸ்வரூபமாய் கூறப்படுகிறது. இவற்றை அனுபவிப்பவன் ஜீவன். ப்ரஹ்மா முதல் புழு வரை சீராக உள்ள ஸர்வ ப்ராணிகளுக்கும் அவர் அவர்கள் செய்த கர்ம உபாஸனைகளுக்கு தகுந்த படி எல்லாவிதமான பலன்களையும் தரக்கூடியது. **'एष ह्येवानन्दयाति' (तै. २-७) 'ஏஷ ஹ்யே - வானந்த³யாதி' (தை. 2-7)** என்ற ஸ்ருதி வாக்கியமாய் கூறப்படுகிறது. ஸர்வ ஸௌக்கிய தாத்ரீயாய் இருக்க கூடிய லலிதாம்பிகை என்று நாம் அர்த்தம் கொள்ளல் வேண்டும்.

**ॐ सर्वसौख्यदात्र्यै नमः ||१३३||**
**ஓம் ஸர்வஸௌக்²யதா³த்ர்யை நம: ||133||**

**सर्वविमोहिनी | (134)**
**ஸர்வவிமோஹினீ | 134**

**सर्वान् विमोहयतीति अन्यथा ग्राहयतीति वा तथा । 'अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः' (गीता ५-१५) अनृतेन हि प्रत्यूढाः' (छा. ८-३) इति श्रुतिस्मृतिभ्यां अज्ञानावरणशक्तिकार्यं मोहनादि सत्ताप्रकाशादिप्रदानाधिष्ठानत्वेन उपचारात् सर्वं मोहयतीत्युच्यते । अयो दहतीतिवत् ॥**

**ஸர்வான் விமோஹயதீதி அன்யதா² க்³ராஹயதீதி வா ததா² | 'அஜ்ஞானேனாவ்ரு'தம்' ஜ்ஞானம்' தேன முஹ்யந்தி ஜந்தவ:' (கீ³தா 5-15) அந்ரு'தேன ஹி ப்ரத்யூடா⁴:' (சா². 8-3) இதி ஶ்ருதிஸ்ம்ரு'திப்⁴யாம்' அஜ்ஞானாவரணஶக்திகார்யம்' மோஹநாதி³ ஸத்தாப்ரகாஶாதி³ப்ரதா³னாதி⁴ஷ்டா²னத்வேன உபசாராத் ஸர்வம்' மோஹயதீத்யுச்யதே | அயோ த³ஹதீதிவத் ||**

'ஈஷா வாஸ்யம் இதம் ஸர்வம்' என்பதற்கு ஈஷேன ஆச்சாத்யம் என்று ஈஷாவாஸ்ய உபநிஷத் கூறுகிறது. அதையே மாயையால் வ்யாபிக்கப் - பட்டடிருக்கிறது, மோகம் அடையச் செய்கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் எல்லாவற்றையும் மோஹிக்க செய்யக்கூடியவள் பரதேவதை அல்லது ஸர்வ ஜீவர்களுக்கும் விபரீதமான உணர்ச்சியை தருபவள்.

'அயதா பூத த்ருஷ்டி...' என்று ப்ரஹ்ம ஸூத்ரத்திலே க்யாதி வாதத்திலே சொல்லப்படுகிறது. விபரீதமான உணர்ச்சி என்றால் கயற்றிலே தோன்றக்கூடிய பாம்பு போல. **'अज्ञानेनावृतं ज्ञानं तेन मुह्यन्ति जन्तवः' (गीता ५-१५) अनृतेन हि प्रत्यूढाः' (छा. ८-३) 'அஜ்ஞானேனாவ்ரு'தம்' ஜ்ஞானம்' தேன முஹ்யந்தி ஜந்தவ:' (கீ³தா 5-15) அந்ரு'தேன ஹி ப்ரத்யூடா⁴:' (சா². 8-3)** என்று ப்ரமாண வாக்கியங்கள் கூறுகின்றன. யதார்த்தமாய் இருக்க கூடிய வஸ்துவை மறைத்து அது அல்லாத ஒன்றாய் காட்டுவது. பார்த்த பொருள், பார்க்கும் போது சத்தியமாய் இருக்கிறது என்பது போல் இருக்க கூடிய விபரீத உணர்ச்சி. யதார்த்தமான வஸ்துவை மறைத்து அது அல்லாத மற்றோன்றாய் காட்டுவது. முதலில் ஆவரணம் என்ற மாயா சக்தி அதன் பிறகு விக்ஷேபம் என்று மாயா சக்தி. 'சக்தித்வயம் ஹி மாயா ஆவரண......' என்று திருக் த்ருஷ்ய விவேகத்தில் கூறப்படுகிறது. ஞானமாயினும் அஞ்ஞானமாயினும் அது சித் ஸ்வரூபத்தின் விளையாட்டு. சித்தை ஆஸ்ரயித்து ஞானமும் அஞ்ஞானமும் இருக்க வேண்டும். அதனால் அதிஷ்டான நோக்கத்திலே ஸர்வ விமோஹினி என்று கூறப்பட்டது. 'ஞானிநாமபி சேதாம்ஸி ...' என்று யாராய் இருந்தாலும் அது மோஹத்தால் கட்டுப்படுத்த கூடிய ஸ்வபாவத்தை உடையவள் லலிதா பரதேவதை.

**ॐ सर्वविमोहिन्यै नमः ||१३४||**
**ஓம் ஸர்வவிமோஹின்யை நம: ||134||**

**सर्वाधारा सर्वगता सर्वावगुणवर्जिता |**
**सर्वारुणा सर्वमाता सर्वभूषणभूषिता ||२६||**
**ஸர்வாதா⁴ரா ஸர்வக³தா ஸர்வாவகு³ணவர்ஜிதா |**
**ஸர்வாருணா ஸர்வமாதா ஸர்வபூ⁴ஷணபூ⁴ஷிதா ||26||**

### सर्वाधारा | (135)
**ஸர்வாதா⁴ரா | 135**

**सर्वस्याधारा 'ब्रह्म पुच्छं प्रतिष्ठा' (तै. २-५) इति श्रुतेः । सर्वेषां हृदयानि आधारः अभिव्यक्तिस्थानं उपासनाय यस्याः सेति तथा ||**

**ஸர்வஸ்யாதா⁴ரா 'ப்³ரஹ்ம புச்ச²ம்' ப்ரதிஷ்டா²' (தை. 2-5) இதி ஶ்ருதே꞉ | ஸர்வேஷாம்' ஹ்ரு'த³யானி ஆதா⁴ர꞉ அபி⁴வ்யக்திஸ்தா²னம்' உபாஸனாய யஸ்யா꞉ ஸேதி ததா² ||**

ஸர்வத்துக்கும் ஆதாரம் என்றால் **'ब्रह्म पुच्छं प्रतिष्ठा' (तै. २-५) 'ப்³ரஹ்ம புச்ச²ம்' ப்ரதிஷ்டா²' (தை. 2-5)** என்ற தைத்ரீய வாக்கியத்தின் படி அனைத்தையும் தாங்கி நிற்பவள். த்ருதம் ராஷ்ட்ரம் யேன என்று த்ருதராஷ்டர பதத்திற்குவிக்ரஹ வாக்கியமாய் கொடுப்பது போல ஈஸ்வர ஸ்வரூபத்தை கொடுப்பது போல அனைத்தையும் தாங்குபவள் அதாவது ஸர்வ ஆதாரம். ஆதாரம் என்றால் அத்தியாசத்திற்கு அதிஷ்டானமாய் விளங்கக்கூடியவள். உபாஸகர்களுக்கு உபாஸ்யமான ஸ்வரூபம், ப்ரத்யக்ஷமாய் விளங்க கூடிய ஸ்தானம் அவர்களின் ஹ்ருதய ஆஹாசமே ஆதாரமாய் இருக்கிறது. அதனால் எல்லா ஜீவர்களுக்கும், தஹ ராகாஸ ஸ்வரூபமாய் தஹர வித்யாவில் இருக்கிறாள் என்று புகழப்படுகிறது.

**ॐ सर्वाधारायै नमः ||१३५||**
**ஓம் ஸர்வாதா⁴ராயை நம꞉ ||135||**

### सर्वगता | (136)
**ஸர்வக³தா | 136**

**सर्वं गच्छतीति तथा । 'अनेन जीवेनात्मनानुप्रविश्य' (छा. ६-३) इति श्रुतेः ॥**

**ஸர்வம்' க³ச்ச²தீதி ததா² | 'அனேன ஜீவேனாத்மனானுப்ரவிஶ்ய' (சா². 6-3) இதி ஶ்ருதே꞉ ||**

ஸர்வ கதா என்று சொன்னால் எங்கும் நிறைந்து இருப்பவள். **'अनेन जीवेनात्मनानुप्रविश्य' (छा. ६-३) 'அனேன ஜீவேனாத்மனானுப்ரவிஶ்ய' (சா². 6-3)** என்பது ஸ்ருதி வாக்கியம். அது போல ஆத்மஸ்வரூபமாக அனைத்து ப்ராணிகளுக்கும் இருப்பையும் உணர்வையும் கொடுக்க கூடியவள். அதனால் அவள் ஸர்வகதா என்றால் சைதன்யஸ்வரூபம் என்று அர்த்தம்.

**ॐ सर्वगतायै नमः ||१३६||**
**ஓம் ஸர்வக³தாயை நம꞉ ||136||**

### सर्वावगुणवर्जिता | (137)
**ஸர்வாவகு³ணவர்ஜிதா | 137**

**अवमानहेतवश्च ते गुणाश्च तथा, आध्यात्मिकसंबन्धेन आरोपिताः सत्त्वादयः समष्टौ, अन्तःकरणधर्माः कामादयः व्यष्टौ, सर्वे च ते अवगुणाश्च तथा । सर्वान्तर्यामित्वेन सर्वानुस्यूतत्वेऽपि तत्तदुपाधिनिष्ठो - त्तमाधमधर्मैः न संबध्यते घटादिनिष्ठाकाशबत् कोशान्तर्गतखड्गबद्वा, 'सूर्यो यथा सर्वलोकस्य चक्षुः न लिप्यते चाक्षुषैः बाह्यदोषैः । एकस्तथा सर्वभूतान्तरात्मा न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥' (कठ. ५-११) इति श्रुतेः ॥**

**அவமானஹேதவஶ்ச தே கு³ணாஶ்ச ததா², ஆத்⁴யாத்மிகஸம்ப³ந்தே⁴ன ஆரோபிதாः ஸத்த்வாத³யः ஸமஷ்டௌ, அந்தःகரணத⁴ர்மாः காமாத³யः வ்யஷ்டௌ, ஸர்வே ச தே அவகு³ணாஶ்ச ததா² | ஸர்வாந்தர்யாமித்வேன ஸர்வானுஸ்யூதத்வே(அ)பி தத்தது³ - பாதி⁴நிஷ்டோ²த்தமாத⁴மத⁴ர்மைः ந ஸம்ப³த்⁴யதே க⁴டாதி³நிஷ்டா²காஶப³த் கோஶா - ந்தர்க³தக²ட்³க³ப³த்³வா, 'ஸூர்யோ யதா² ஸர்வலோகஸ்ய சக்ஷுः ந லிப்யதே சாக்ஷு - ஷைः பா³ஹ்யதோ³ஷைः | ஏகஸ்ததா² ஸர்வபூ⁴தாந்தராத்மா ந லிப்யதே லோகது³ः - கே²ன பா³ஹ்யः ||' (கட². 5-11) இதி ஶ்ருதேः ||**

அவகுணம் என்று சொன்னால் ஒரு அவமானத்திற்கு ஹேதுவாய் இருக்க கூடிய குணங்கள். நல்ல குணங்களுடன் கூடியவள் என்று கொள்ள தகுமா என்றால்.., அவமானமான குணங்களோடு கூடியவள் இல்லை என்று சொன்னால் நல்ல குணங்களோடு கூடியவள் என்றால் அதுவும் இல்லை. ஏனென்றால் நிர்குணஸ்வரூப சித் சக்திக்கு ஸகுணங்களும் அல்லது 'அஸுரகுணங்களும் (துர்குணங்களும்) அவைகள் இரண்டுமே அவமானத்துக்கு ஹேதுவானவைகள் ஆகும். ஸத்வம், காமம் முதலியன அந்தகரணத்தின் தர்மங்கள். இவைகள் ஆத்ம ஸ்வரூபத்திலே ஆரோபிக்கப்பட்டு ஆத்ம ஸத்தாவினால் இருப்பையும் உணர்வையும் பெற்றவள் என்று ப்ரஸித்தி. பரதேவதையாக இருக்க கூடிய லலிதா த்ரிபுர ஸுந்தரி எல்லா வித ஆரம்பிக்கப்பட்ட பொருட்களிலும் அந்தர்யாமியாக இருந்து அந்த குணத்திலே ஒட்டுவது கிடையாது. அஸங்க சித் ஸ்வரூபமாய் அம்பாள் இருக்கிறாள்.

எப்படி பானையில் இருக்கும் ஆகாசத்திற்கும் பானைக்கும் ஸம்பந்தம் இல்லையோ அது போல. உபநிஷத் வாக்கியம் சொல்கிறது **'सूर्यो यथा सर्वलोकस्य चक्षुः न लिप्यते चाक्षुषैः बाह्यदोषैः । एकस्तथा सर्वभूतान्तरात्मा न लिप्यते लोकदुःखेन बाह्यः ॥' (कठ. ५-११) 'ஸூர்யோ யதா² ஸர்வலோகஸ்ய சக்ஷுः ந லிப்யதே சாக்ஷுஷைः பா³ஹ்ய - தோ³ஷைः | ஏகஸ்ததா² ஸர்வபூ⁴தாந்தராத்மா ந லிப்யதே லோகது³ःகே²ன பா³ஹ்யः ||' (கட². 5-11)** என்று ஸூரியன் உலகத்துக்கு கண்ணாக இருக்கிறான். அது பரவக்கூடிய இடங்களிலே இருக்கக்கூடிய , அது ஒளிரக்கூடிய பொருட்களிலே இருக்கக்கூடிய தோஷங்கள் அந்த ஸூரியனை ஒட்டுவது கிடையாது. அதனால் **न लिप्यते लोकदुःखेन ந லிப்யதே லோகது³ःகே²ன** என்ற வாக்கியத்தினுடைய ப்ரமாணம் இருக்கிறது.

**ॐ सर्वावगुणवर्जितायै नमः ||१३७||**
**ஓம் ஸர்வாவகு³ண - வர்ஜிதாயை நமः ||137||**

**सर्वारुणा | (138)**

**ஸர்வாருணா | 138**

**सर्वेष्वङ्गेष्वरुणा आरक्तवती, 'असौ यस्ताम्रो अरुणः' इति श्रुतेः ||**

**ஸர்வேஷ்வங்கே³ஷ்வருணா ஆரக்தவதீ, 'அஸௌ யஸ்தாம்னோ அருணஃ' இதி ஶ்ருதேஃ ||**

**'असौ यस्ताम्रो अरुणः' 'அஸௌ யஸ்தாம்னோ அருணஃ'** என்று வாக்கியம் இருக்கிறது. தாம்ரவர்ணம் , இந்த ஸ்ருதி படி தாம்ரவர்ணத்தோடு கூடிய அங்கங்களை உடையவள். செந்நிற அங்கங்களை உடையவள். ஸர்வாருணாயை என்று சொன்னாலும் சரி அருணஸ்வரூபமாய் ஒளிருகின்ற ஸ்வரூபமாய் இருக்க கூடியவள். அருணன் என்றால் சூரியன் என்று அர்த்தம்.

**ॐ सर्वारुणायै नमः ||१३८||**
**ஓம் ஸர்வாருணாயை நமஃ ||138||**

**सर्वमाता | (139)**
**ஸர்வமாதா | 139**

**सर्वेण कार्येण मीयते अनुमीयतेऽभेदेनेति तथा । तथा हि- इदं जगत् ब्रह्माभिन्नं तत्सत्तास्फूर्तिनियतसत्ताप्रकाशज्ञानविषयत्वात्, यः यन्नियतसत्ताप्रकाशवान् स तदभिन्नः – यथा तन्तुकार्यः पट इति । सर्वान् मिनोति स्वाभेदेन जनातीति तथा ॥**

**ஸர்வேண கார்யேண மீயதே அனுமீயதே(அ)பே⁴தே³னேதி ததா² | ததா² ஹி- இத³ம்' ஜக³த் ப்³ரஹ்மாபி⁴ன்னம்' தத்ஸத்தாஸ்பூ²ர்திநியதஸ த்தாப்ரகாஶஜ்ஞானவிஷயத் - வாத், யஃ யந்நியதஸத்தாப்ரகாஶவான் ஸ தத³பி⁴ன்னஃ – யதா² தந்துகார்யஃ பட இதி | ஸர்வான் மினோதி ஸ்வாபே⁴தே³ன ஜனாதீதி ததா² ||**

ஶ்ரீ மாத்ரே நமஹ என்பது லலிதா ஸஹஸ்ர நாமத்தில் முதல் நாமம். ஸர்வ ப்ரபஞ்சத்தையும் அந்த ப்ரபஞ்சம் அபேதம் என்பதை அறிந்தவள். ஏனென்றால் ப்ரத்யக்ஷமாய் அறியக்கூடிய இந்த உலகமானது ப்ரஹ்ம அபின்னம். விவர்த்தம் என்று அர்த்தம். ஸ்வரூப அபரித்யாகேன ரூபாந்தர ப்ராப்தி மாறாமல் மாறியது போல் காட்சி அளிக்க கூடியது இந்த உலகம். அதனால் ப்ரஹ்ம ஸத்தாவிலே தோன்றி ப்ரஹ்ம ஸத்தையில் இருந்து அதனுடைய ப்ரகாசத்திலே இருப்பையும் உணர்வையும் பெறக்கூடியது. எது எதன் ஸத்தையில் தோன்றி ப்ரகாசிக்கும் தன்மையமானதோ அது அதற்கு அபின்னமானது. நூலின் காரியமாக வஸ்த்ரம் போல ஸர்வத்தையும் இந்த ஜகத் முழுவதையும் தனக்கு அபின்னாமாய் அறிபவள். அதனால் ஜகதம்பா என்று சொல்லும் பொழுது ஜகத்துக்கு மாதா என்று சொல்லும் பொழுது தனக்கு அந்நியமாய் ஜகத்தை அறியாதவள். தனக்கு ஜகத் அந்நியமற்றது என்று அறிந்தவள். 'மாம் ந அந்யம்' என்று ஞாத்வா என்று

கீதையில் பாஷ்யக்காரர் சொல்கிறார். அதனால் தான் ஸர்வ மாதா என்று ஒரு வாக்கியம் இருக்கின்றது.

**ॐ सर्वमात्रे नमः ||१३९||**
**ஓம் ஸர்வமாத்ரே நமः ||139||**

**सर्वभूषणभूषिता | (140)**
**ஸர்வபூ⁴ஷணபூ⁴ஷிதா | 140**

**सर्वात्मकत्वेन ये ये प्राणिनः यानि यानि भूषणालंकारभोजनादीनि भोग्यवस्तून्यात्मार्थं संपादयन्ति, तेषां सर्वेषां प्रत्यक्तया तैः सर्वैर्भूषिता उपकृतेत्यर्थः, 'आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति' (बृह, २-४) इति श्रुतेः । अथवा, सर्वदेवात्मकत्वेन सर्व भक्तजनस्य स्वस्वेष्टदेवताप्रत्यिर्थं भूषणभूषितत्वेन तथा । अथवा, सर्वैर्भक्तजनैः तत्तदवयवेषु भूषणैरारोपिता, स्वस्याः महाराज्ञीत्वेन असंगोदासीनस्वभावत्वादिति भावः । यद्वा, सर्वदेशकाललोकेषु भूषणैः तत्र तत्र भवैः उच्चावचैर्भूषणैरारोपिता; हस्त्यश्वादिदेहोपाधिका सती तत्तदीयालंकारादिषु जुगुप्सारहितेत्यर्थः । भूषयन्ति सर्वोत्तमत्वेन प्रतिपादयन्तीति भूषणानि वेदान्तम - हावाक्यानि, सर्वैः समस्तैः गतिसामान्यात् एकतात्पर्येण भूषिता लक्षणया पर्यवसिता समन्विता वेत्यर्थः ॥**

**ஸர்வாத்மகத்வேன யே யே ப்ராணினः யானி யானி பூ⁴ஷணாலங்காரபோ⁴ஜ - நாதீ³னி போ⁴க்³யவஸ்தூன்யாத்மார்த²ம் ஸம்பாத³யந்தி, தேஷாம்' ஸர்வேஷாம்' ப்ரத்யக்தயா தைः ஸர்வைர்பூ⁴ஷிதா உபக்ரு'தேத்யர்த²:, 'ஆத்மனஸ்து காமாய ஸர்வம்' ப்ரியம்' ப⁴வதி' (ப்³ரு'ஹ, 2-4) இதி ஶ்ருதே: | அத²வா, ஸர்வதே³வாத்மகத்வேன ஸர்வ ப⁴க்தஜனஸ்ய ஸ்வஸ்வேஷ்டதே³வதாப்ரத்யிர்த²ம்' பூ⁴ஷணபூ⁴ஷிதத்வேன ததா² | அத²வா, ஸர்வைர்ப⁴க்தஜனை: தத்தத³வயவேஷு பூ⁴ஷணைராரோபிதா, ஸ்வஸ்யா: மஹாராஜ்ஞீத்வேன அஸங்கோ³தா³ஸீனஸ்வபா⁴வத்வாதி³தி பா⁴வ: | யத்³வா, ஸர்வ - தே³ஶகாலலோகேஷு பூ⁴ஷணை: தத்ர தத்ன ப⁴வை: உச்சாவசைர்பூ⁴ஷணைராரோ - பிதா; ஹஸ்த்யஶ்வாதி³தே³ஹோபாதி⁴கா ஸதீ தத்ததீ³யாளங்காராதி³ஷு ஜுகு³ப்ஸா - ரஹிதேத்யர்த²: | பூ⁴ஷயந்தி ஸர்வோத்தமத்வேன ப்ரதிபாத³யந்தீதி பூ⁴ஷணானி வேதா³ந்தமஹாவாக்யானி, ஸர்வை: ஸமஸ்தை: க³திஸாமான்யாத் ஏகதாத்பர்யேண பூ⁴ஷிதா லக்ஷணயா பர்யவஸிதா ஸமன்விதா வேத்யர்த²: ||**

பரதேவதை ஸர்வாத்ம ஸ்வரூபமாய் இருப்பதினால் யார் யார் எந்த ஆபரணங்களை அலங்காரங்களையும் செய்து கொள்கிறார்களோ அதை எல்லாம் அன்னையினுடைய தோற்றத்திலே வெளிப்படுகின்றது. அதை அழகு பார்த்து அனுபவித்தாலும் அந்த அனுபவம் அந்த அந்த ஜீவனுடைய ஆத்மஸ்வரூபத்தின் பொருட்டே ஆகும். **'आत्मनस्तु कामाय सर्वं प्रियं भवति' (बृह, २-४) 'ஆத்மனஸ்து காமாய ஸர்வம்' ப்ரியம்' ப⁴வதி' (ப்³ரு'ஹ, 2-4)** என்பது ஶ்ருதி. அதனால் எல்லாமே பரதேவதையினுடையதே ஆகும் அல்லது பக்தர்கள் எல்லாம் தங்கள் தங்கள் இஷ்ட தேவதைக்கு பலவிதமான அலங்காரங்கள் ஆபரணங்கள் செய்வித்தாலும் ஸகல தேவதா ஸ்வரூபிணியாக இருக்க கூடிய பரதேவதையையே அந்த பூஷணா அலங்காரம் போய் சேருகிறது.

எல்லா தேசங்களிலும் எல்லா காலங்களிலும் எல்லா ஜனங்களாலும் அணியப்பட்ட சிறந்த, தாழ்ந்த, உயர்ந்த, அனைத்தும் நல்லதும் கேட்டதும் அனைத்தும் அந்த பரதேவதையையே போய் சேருகின்றது. ரிஷபங்களுக்கு, யானைகளுக்கு, குதிரைகளுக்கு செய்யக்கூடிய அலங்காரங்களும் அந்த பரதேவதையையே சேருகின்றது.

'ப்ரஞானம் ப்ரஹ்ம', 'அஹம் ப்ரம்ஹாஸ்மி' போன்ற மஹா வாக்கியத்தின் எடுத்துக் காட்டாக இருக்கிறது. அந்த வாக்கியங்களுமே அவளுக்கு பூஷணங்களாய் இருக்கின்றன. ஸர்வம் உத்தமமான அபய ஸ்வரூபத்தை ப்ரதி பாதிப்பதால் மஹா ஞானிகளால் நன்கு போற்றப்படுபவளாக இருக்கின்றாள். இந்த மஹா வாக்கியத்தினால் ப்ரதிவாதனம் செய்யக்கூடிய சைதன்ய ஸ்வரூபிணியாக பரதேவதை இருக்கிறாள்.

இந்த லக்ஷணமானது எல்லா சாஸ்திரத்திலும் ஏகோபித்த முடிவை உடையது. அப்படி பட்ட ஸ்வரூபத்தை (ஸமன்வய) ஸ்வரூபத்தை லலிதாம்பிகை பெற்று இருக்கிறாள் என்று கூறவேண்டும்.

**ॐ सर्वभूषणभूषितायै नमः ||१४०||**
**ஓம் ஸர்வபூ⁴ஷண - பூ⁴ஷிதாயை நம꞉ ||140||**

**ककारार्था कालहन्त्री कामेशी कामितार्थदा |**
**कामसंजीवनी कल्या कठिनस्तनमण्डला ||२७||**
**ககாரார்தா² காலஹந்த்ரீ காமேஶீ காமிதார்த²தா³ |**
**காமஸஞ்ஜீவனீ கல்யா கடி²நஸ்தனமண்ட³லா ||27||**

**ककारार्था | (141)**
**ககாரார்தா² | 141**

**'कं ब्रहा' (छा. ४-१०) इति श्रुत्या ककारस्य ब्रह्मार्थकत्वेन तव्द्यतिरिक्तस्यातदर्थस्य बाधितत्वात् ।।**

**'கம்' ப்³ரஹ்ா' (சா². 4-10) இதி ஶ்ருத்யா ககாரஸ்ய ப்³ரஹ்மார்த²கத்வேன தவ்த்³யதிரிக்தஸ்யாதத³ர்த²ஸ்ய பா³தி⁴தத்வாத் ||**

**'कं ब्रहा' (छा. ४-१०)** **'கம்' ப்³ரஹா' (சா². 4-10)** என்று சாந்தோக்ய ஸ்ருதி சொல்கிறது. இந்த ஸ்ருதிப்படி அவள் ப்ரஹ்ம ஸ்வரூபமாய் இருக்கின்றாள்.

**ॐ ककारार्थायै नमः ||१४१||**
**ஓம் ககாரார்தா²யை நம꞉ ||141||**

**कालहन्त्री | (142)**
**காலஹந்த்ரீ | 142**

**अजपारूपेण प्राणापाननामकचन्द्रसूर्यनियमने पुरुषाणा नियमित परिमितायुः स्वरूपैक विंशतिषट्शताधिक सहस्रसंख्याकनिर्गमनरूपेण क्षपयन्ति अवशेषायुषो युगकल्पाद्यविशिष्टरय वृद्धौ पुनः संयमने तथा तथा वृद्धौ संयुञ्जानस्य सर्वप्राणेन्द्रियस्य वृत्तिलये मनोन्मन्यवस्था निष्पद्यते। तथा च श्रुतिः 'पृथिव्यप्तेजोऽनिलखे समुत्थिते पञ्चात्मके योगगुणे प्रवृत्ते । न तस्य रोगो न जरा न मृत्युः प्राप्तस्य योगाग्निमयं शरीरम् ॥' (श्वेता. २-१२) इति, 'अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति' (कठ. २-१२) इति च । तथा च तदानीमाविर्भूतब्रह्मस्वरूपेण 'ततः संवत्सरोऽजायत' इति श्रुत्या क्रियाशक्त्यात्मककालोत्पत्तिश्रवणात् तस्मिन् ब्रह्मण्येव लये कालं हन्ति नाशयतीति तथा नामनिर्वचनं युक्तं वक्तुमिति भावः ॥**

**அஜபாரூபேண ப்ராணாபானநாமகசந்த்³ரஸூர்யநியமனே புருஷாணா நியமித பரிமிதாயு꞉ ஸ்வரூபைக விம்ஶதிஷட்ஶதாதி⁴க ஸஹஸ்ரஸங்க்²யாகநிர்க³மனரூபண க்ஷபயந்தி அவஶேஷாயுஷோ யுக³கல்பாத்³யவிஶிஷ்டரய வ்ரு’த்³தௌ⁴ புன꞉ ஸம்’ய - மனே ததா² ததா² வ்ரு’த்³தௌ⁴ ஸம்’யுஞ்ஜானஸ்ய ஸர்வப்ராணேந்த்³ரியஸ்ய வ்ரு’த்தி - லயே மனோன்மன்யவஸ்தா² நிஷ்பத்³யதே | ததா² ச ஶ்ருதி꞉ 'ப்ரு’தி²வ்யப்தேஜோ(அ) - னிலகே² ஸமுத்தி²தே பஞ்சாத்மகே யோக³கு³ணே ப்ரவ்ரு’த்தே | ந தஸ்ய ரோகோ³ ந ஜரா ந ம்ரு’த்யு꞉ ப்ராப்தஸ்ய யோகா³க்³னிமயம்’ ஶரீரம் ||' (ஶ்வேதா. 2-12) இதி, 'அத்⁴யாத்மயோகா³தி⁴க³மேன தே³வம்’ மத்வா தீ⁴ரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி' (கட². 2-12) இதி ச | ததா² ச ததா³னீமாவிர்பூ⁴தப்³ரஹ்மஸ்வரூபேண 'தத꞉ ஸம்’வத்ஸரோ - (அ)ஜாயத' இதி ஶ்ருத்யா க்ரியாஶக்த்யாத்மககாலோத்பத்திஶ்ரவணாத் தஸ்மின் ப்³ரஹ்மண்யேவ லயே காலம்’ ஹந்தி நாஶயதீதி ததா² நாமநிர்வசனம்’ யுக்தம்’ வக்துமிதி பா⁴வ꞉ ||**

ஹம்ஸ: ஹம்ஸேன மந்த்ரேண …. இது ஒரு ஆழமான நாமம். ஹம்ஸ: என்பது அஜபா ஸ்வரூபம். அஜபா என்றால் ஜபம் அற்ற ஸ்வரூபம் என்று அர்த்தம். அது ஒரு ஸ்வபாவ ஸ்வரூபம். சந்திர, ஸூரியர்கள் ப்ராண அபான வாயுக்களால் ஒரு மனிதனுக்கு ஸூர்யோதயமும் மறுநாள் சூரியோதயம் வரை 21600 ஸ்வாஸங்களை உண்டாக்குகிறது. ஸ்வாஸம் என்பது காற்றை உள்ளுக்கு இழுப்பதும் அதை வெளியிடுவதும் ஆகும். இந்த ஸ்வாஸங்களால் தான் ஒரு மனிதனுக்கு அவனுடைய ஆயுள் தீர்மானிக்கப்படுகிறது. ப்ராண வாயுவை அதிகமாக ஸ்வாசிப்பதால் ஆயுள் வ்ருத்தியும், அதிகமாக வெளியே விடுவதால் ஆயுளின் க்ஷீணமும் ஏற்படுகிறது. அதனால் ப்ராணத்தை ஆயாயமம் செய்து கும்ப சத்தியை வ்ருத்தி செய்வதால் ஆயுள் வ்ருத்தி என்று யோக சாஸ்திரம் கூறுகிறது. இதனால் ஸர்வ இந்திரியங்களும் சித்த வ்ருத்திகளும் லயம் அடைகின்றன. சித்த வ்ருத்தி நிரோதமே மனோன்மணி அவஸ்தை என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**'पृथिव्यप्तेजोऽनिलखे समुत्थिते पञ्चात्मके योगगुणे प्रवृत्ते । न तस्य रोगो न जरा न मृत्युः प्राप्तस्य योगाग्निमयं शरीरम् ॥' (श्वेता. २-१२) 'ப்ரு’தி²வ்யப்தேஜோ(அ)னிலகே² ஸமுத்தி²தே பஞ்சா - த்மகே யோக³கு³ணே ப்ரவ்ரு’த்தே | ந தஸ்ய ரோகோ³ ந ஜரா ந ம்ரு’த்யு꞉ ப்ராப்தஸ்ய யோகா³ க்³னிமயம்’ ஶரீரம் ||' (ஶ்வேதா. 2-12)** என்று பதஞ்சலி யோக ஸூத்ரத்திலே ஒரு ஸ்ருதி வாக்கியம் கூறுகிறது.

**'अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति' (कठ. २-१२) 'அத்⁴யாத்மயோகா³தி⁴ - க³மேன தே³வம்' மத்வா தீ⁴ரோ ஹர்ஷஶோகௌ ஜஹாதி' (கட². 2-12)** மற்றோரு ஸ்ருதி வாக்கியம் இதை கூறுகிறது. சித்த வ்ருத்தி நிரோதம் செய்த பின் அந்த யோகியானவன் அத்யாத்ம யோகத்தினால் ஜீவ ப்ரஹ்ம ஐக்கிய ஸாக்ஷாத்-காரத்தை அவன் அடைந்து ஸுக, துக்கங்களை ஜெயித்து தீரன் ஆகின்றான். இப்படிப்பட்ட ப்ரஹ்ம ஸ்வரூபமான ஞானியிடம் இருந்து தான் க்ரியா சக்தி வடிவமான காலத்தின் உற்பத்தி ஸ்ருதிகளிலே காண்பிக்கப்பட்டு இருக்கிறது.

**'ततः संवत्सरोऽजायत' 'ததः ஸம்'வத்ஸரோ(அ)ஜாயத'** என்பது ஸ்ருதி வாக்கியம். இங்ஙனம் எந்த ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் இருந்து காலம் உற்பத்தி ஆயிற்றோ, அங்கேயே இருந்து அதிலே லயமாகின்றது அதாவது நாசத்தை அடைகிறது. அதனால் ப்ரஹ்ம அபின்ன சித் சக்தியாக இருக்கக்கூடிய பரதேவதை காலத்தை வென்றவள் (நாசம் செய்பவள்). அதனால் கால தத்துவத்திற்கு அதீதமானவள் என்பது கருத்து. கால ஹந்தரீ என்றால் காலத்தை வென்றவள் என்று அர்த்தம். காலாதீதஸ்வரூபம் சைதன்யஸ்வரூபம் அம்பாள் என்பது இந்த நாமத்தில் விளக்கியிருக்கின்றது.

**ॐ कालहन्त्र्यै नमः ||१४२||**
**ஓம் காலஹந்த்ர்யை நம꞉ ||142||**

### कामेशी | (143)
**காமேஶீ | 143**

**कामानां भोग्यपदार्थानां यथादृष्टं ईष्टे प्रेरयतीति तथा ||**

**காமானாம்' போ⁴க்³யபதா³ர்தா²னாம்' யதா²த்³ரு'ஷ்டம்' ஈஷ்டே ப்ரேரயதீதி ததா² ||**

காமத்தை விரும்பக்கூடிய போக்கிய பதார்த்தங்களை விரும்பக்கூடிய ஜீவர்களுடைய அந்த எண்ணத்துக்கு இணங்க, அவரவர்களுடைய கர்ம பலனின் ப்ரகாரம் அதை அடைவிக்கும் படி ப்ரேரணை செய்யக்கூடியவள் அதாவது அதற்கு ஆஞ்ஞை செய்யக்கூடியவள் அம்பாள் என்று இந்த நாமம் தெரிவிக்கிறது.

**ॐ कामेश्यै नमः ||१४३||**
**ஓம் காமேஶ்யை நம꞉ ||143||**

### कामितार्थदा | (144)
**காமிதார்த²தா³ | 144**

**कामितानर्थान् ददातीति तथा, 'आप्तकामः' इति श्रुतेः । संसारदशायामावृतानन्दस्य अनाप्तवद - वभासमानस्य आत्यन्तिकसुखात्मिका मुक्तिर्मे स्यादिति काम्यमानत्वादात्मनः कामितत्वम् । कामित - श्चासावर्थश्चेति तस्यैव ज्ञानस्यावरणाभिभावकत्वेन प्राप्तप्राप्तिरूपतया तं ददाति प्रयच्छतीति प्रकाश - स्वरूपेण अनुभावयतीत्यर्थः ||**

**காமிதானர்தா²ன் த³தா³தீதி ததா², 'ஆப்தகாம:' இதி ஶ்ருதே: | ஸம்’ஸாரத³ஶாயா - மாவ்ரு’தானந்த³ஸ்ய அனாப்தவத³வபா⁴ஸமானஸ்ய ஆத்யந்திகஸுகா²த்மிகா முக் - திர்மே ஸ்யாதி³தி காம்யமானத்வாதா³த்மன: காமிதத்வம் | காமிதஶ்சாஸாவர்த²ஶ் - சேதி தஸ்யைவ ஜ்ஞானஸ்யாவரணாபி⁴பா⁴வகத்வேன ப்ராப்தப்ராப்திரூபதயா தம்’ த³தா³தி ப்ரயச்ச²தீதி ப்ரகாஶஸ்வரூபேண அனுபா⁴வயதீத்யர்த²: ||**

காமித - அர்த்த - தா : காமித அர்த்தத்தை அதாவது விரும்பும் புருஷார்த்தத்தை ஜீவர்களுக்கு ‘தா’ கொடுப்பவள். ஸம்ஸார திசையிலே நிஜஸ்வபாவமான ஆனந்தம் அஞ்ஞானத்தினால் மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த காரணத்தினால் தன்னுடைய ஆனந்தம் தன்னிடத்தில் இல்லை என்று நினைத்து அத்தகைய ஆனந்த ரூப மோக்ஷம் தனக்கு உண்டாக வேண்டும் என்றால் ஒவ்வொரு ஜீவனும் வெளியே விஷயத்தை விரும்புகின்றான். நித்யானத்தை ஸ்வரூபம் தான் மோக்ஷம். அதுவே காமிதார்த்தம் என்று பரதேவதை வித்யாஸ்வரூபிணியாய் இருப்பதினால் ஜீவர்களிடம் உள்ள அந்த தவறான எண்ணத்தை அஞ்ஞானத்தை நாஸம் செய்து அதன் மூலமாக அவர்களால் ஸ்வயமாய் விரும்பப்பட்ட ஆனந்த நிலையை அவர்கள் அடையும்படி செய்கிறாள். அதாவது நித்ய ஸித்ய பரமபுருஷார்த்த வடிவான நித்யானந்த நிலையை புதிதாய் அடைவது போல் அடைவிக்கின்றாள். ப்ரகாஷ விமர்ஷ ஸாமான்யமே இன் நிலையாகும் என்று அறிதல் வேண்டும். அந்த ஸாமான்ய என்பது ஒரு வித வித்தியாஸமும் அற்ற நிலை என்று எடுத்துக்கொள்ளவேண்டும். ஒருவனுக்கு தான் ப்ரஹ்ம ஸ்வரூபம் என்று தெரியவில்லை. குரு வாக்கியத்தின் மூலமாகவும் ஸ்ரவணத்தின் மூலமாகவும் அவனுக்கு தான் ப்ரஹ்ம ஸ்வரூபம் என்று தெரிகின்றது. அதிலே விமர்சிக்க கூடிய விஷயம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டால் ஒன்றும் கிடையாது. அது பார்வையிலே வித்தியாசம். ஒருவருடைய பார்வையுனுடைய த்ருஷ்டி வித்தியாசம். அதனால் அந்த விமர்சனம் அதற்கு இல்லை என்று அறிய வேண்டும்.

**ॐ कामितार्थदायै नमः ||१४४||**

**ஓம் காமிதார்த²தா³யை நம: ||144||**

## कामसंजीवनी | (145)

**காமஸஞ்ஜீவனீ | 145**

**कामं मन्मथं परमेश्वरनेत्राग्निविप्लुष्टं भण्डासुरात्मना अनेककालदेवलोकविपक्षं कामशास्त्रप्रयोगसमये रतिदेवीप्रार्थनसमीचीनतदीयपूर्वकायं तपश्चर्यादिपरिपाकफलभूतं करुणारसपूरितापाङ्गावलोकनेन संजीवयति सप्राणं कृत्वा तस्मै वरादि प्रयच्छति तेन तं हर्षयतीति तथा ||**

**காமம்’ மன்மத²ம்’ பரமேஶ்வரநேத்ராக்³னிவிப்லுஷ்டம்’ ப⁴ண்டா³ஸுராத்மனா அனேககாலதே³வலோகவிபக்ஷம்’ காமஶாஸ்த்ரப்ரயோக³ஸமயே ரதிதே³வீப்ரா - ர்த²னஸமீசீனததீ³யபூர்வகாயம்’ தபஶ்சர்யாதி³பரிபாகப²லபூ⁴தம்’ கருணாரஸபூரிதா - பாங்கா³வலோகனேன ஸஞ்ஜீவயதி ஸப்ராணம்’ க்ரு’த்வா தஸ்மை வராதி³ ப்ரயச் - ச²தி தேன தம்’ ஹர்ஷயதீதி ததா² ||**

பரமேச்வரனுடைய நெற்றிக்கண்ணினுடைய அக்னியால் சாம்பலான காமதேவன் பின்னர் பண்டாஸுர வடிவத்தால் அனேக காலம் தேவலோகத்திற்கு விரோதியாய் இருந்த மன்மதன். அவனை காமாஸ்த்திர ப்ரயோக ஸமயத்தில் அவனுடைய பார்யையயான ரதி தேவியானவள் லலிதாம்பிகையை ப்ரார்த்தித்து, துதித்து, தவம் செய்து அம்பாள் தன்னுடைய கருணாரஸம் ததும்பும் கடைக்கண் பார்வையால் அந்த மன்மதனை பிழைப்பித்தாள். பிழைப்பித்தது மட்டும் அன்றி அநேக வரங்களையும் அவனுக்கு அருளி அவனை ஸந்தோஷிக்க செய்தாள் என்று இந்த நாமமானது பரம கருணா மூர்த்தி வடிவான அம்பாளை துதிக்கிறது.

**ॐ कामसंजीवन्यै नमः ||१४५||**
**ஓம் காமஸஞ்ஜீவன்யை நம꞉ ||145||**

**कल्या | (146)**
**கல்யா | 146**

**कलयितुं ध्यातुं योग्या। अथवा, सर्वोत्तमदेवत्वेन ध्यातुं योग्या कल्या। कलेः कामधेनुत्वेन यथावा -ञ्छितार्थकारणम् ||**

**கலயிதும்' த்⁴யாதும்' யோக்³யா | அத²வா, ஸர்வோத்தமதே³வத்வேன த்⁴யாதும்' யோக்³யா கல்யா | கலே꞉ காமதே⁴னுத்வேன யதா²வாஞ்சி²தார்த²காரணம் ||**

தியானிப்பதற்கு பாத்திரமானவள் பரதேவதை. ஸர்வ உத்தம தேவதா ஸ்வரூப ஆத்ம அபின்ன ப்ரஹ்ம ஸ்வரூபிணி. அந்த பரதேவதையை காட்டிலும் வேறு பொருள் இல்லை. அதனால் எந்தப் பொருளையும் பரதேவதையை விட்டு த்யானிக்க முடியாது. பாணினியின் வ்யாககரணத்திலே 'கல்யா' என்ற வார்த்தை 'கலி' என்ற தாதுவில் இருந்து உண்டானது. இந்த 'கலி' என்ற தாதுவிற்கு அர்த்தம் காமதேனு. அதனால் த்யானிப்பதற்கு பாத்திரமாய் இருக்கும் அம்பாள் காமதேனுவைப்போல் நினைத்ததை அருளக்கூடியவள். விரும்பியதை கொடுக்க கூடியவள் அப்படியென்றால் காமதேனுஸ்வரூபிணி என்று எடுத்துக் கொள்ளலாம்.

**ॐ कल्यायै नमः ||१४६||**
**ஓம் கல்யாயை நம꞉ ||146||**

**कठिनस्तनमण्डला | (147)**
**கடி²னஸ்தனமண்ட³லா | 147**

**स्तनयोः मण्डले आदिमभागौ सान्तः- प्रदेशौ कठिने अप्रकम्पे अतिस्थिरे वा यस्याः तथा ||**

**ஸ்தனயோ꞉ மண்ட³லே ஆதி³மபா⁴கௌ³ ஸாந்த꞉- ப்ரதே³ஶௌ கடி²னே அப்ரகம்பே அதிஸ்தி²ரே வா யஸ்யா꞉ ததா² ||**

இதனுடைய நேர்முகமான அர்த்தம் ஸ்திரமான, கடினமான ஸ்தனங்களை உடையவள் லலிதாம்பிகை என்று அர்த்தம். இந்த நேரடி அர்த்தம் எதை

லக்ஷியார்த்தமாக கொண்டுள்ளது என்றால், இந்த ஜகத்தை கட்டிக் காத்து உணவு அளிக்க கூடிய அம்பாள் ஒரு போதும் தளர்வது கிடையாது. லலிதாம்பிகை அனைவரையும் கட்டிக்காத்து காப்பாற்றுவதிலே தளர்ச்சி அடையாதவள் என்பதை பூடகமாக கடினமான ஸ்தனங்களை உடையவள் என்று இந்த நாமமானது குறிப்பிடுகிறது.

**ॐ कठिनस्तनमण्डलायै नमः ||१४७||**
**ஓம் கடி²னஸ்தன - மண்ட³லாயை நம: ||147||**

**करभोरूः कलानाथमुखी कचजिताम्बुदा |**
**कटाक्षस्यन्दिकरुणा कपालिप्राणनायिका ||२८||**
**கரபோ⁴ரூ: கலாநாத²முகீ² கசஜிதாம்பு³தா³ |**
**கடாக்ஷ - ஸ்யந்தி³ - கருணா கபாலி - ப்ராண - நாயிகா ||28||**

**करभोरूः | (148)**
**கரபோ⁴ரூ: | 148**

**करभ इव ऊरू यस्याः सा तथा । 'मणिबन्धादाकनिष्ठं करस्य करभो बहिः' इति प्रमाणादिति भावः ||**

**கரப⁴ இவ ஊரூ யஸ்யா: ஸா ததா² | 'மணிப³ந்தா⁴தா³கநிஷ்ட²ம்' கரஸ்ய கரபோ⁴ ப³ஹி:' இதி ப்ரமாணாதி³தி பா⁴வ: ||**

கரபோரூ: என்பது மணிக்கட்டில் இருந்து சுண்டு விரல் வரை அந்த ப்ரதேசமானது பருத்து படிப்படியாக சிருத்து வருவது போல. அப்படிப்பட்ட பருத்து முறையாய் சிருத்த துடைகளை உடையவள் அம்பிகை என்று அர்த்தம். அதனால் அம்பிகையின் துடையின் மேல் பாகம் பருத்து வர வர சிருத்து என்று ஸூசகமாக சொல்லப்படுகிறது. காண்போரை கவரும் துடைகளை உடையவள்.

**ॐ करभोरवे नमः ||१४८||**
**ஓம் கரபோ⁴ரவே நம: ||148||**

**कलानाथमुखी | (149)**
**கலாநாத²முகீ² | 149**

**कलाः चतुः षष्टिकलाः नाथयति प्रेरयतीति कलानाथः, 'निःश्वसितमेतद्यदृग्वेदो यजुर्वेदः सामवेदः' (बृ. २-४-१०) इत्यादिश्रुतेः, 'शास्त्रयोनित्वात्' (ब्र. सू. १-१-३) इति न्यायाच्च । तादृशं मुखं वदनं यस्याः सेति तथा। कलानाथश्चन्द्र इव मुखं यस्याः सेति वा ||**

**கலா: சது: ஷஷ்டிகலா: நாத²யதி ப்ரேரயதீதி கலாநாத²:, 'நி:ஶ்வஸிதமேதத்³ய - த்³ரு'க்³வேதோ³ யஜுர்வேத³: ஸாமவேத³:' (ப்³ரு'. 2-4-10) இத்யாதி³ஶ்ருதே:, 'ஶாஸ்த்ர - யோனித்வாத்' (ப்³ர. ஸூ. 1-1-3) இதி ந்யாயாச்ச | தாத்³ரு'ஶம்' முக²ம்' வத³னம்' யஸ்யா: ஸேதி ததா². கலாநாத²ஶ்சந்த்³ர இவ முக²ம் யஸ்யா: ஸேதி வா ||**

கலாநாதம் என்று சொன்னால் ஆய கலைகள் 64. இந்த 64 கலைகளையும் ப்ரேரணை செய்கின்ற ஒரு முகத்தோடு கூடியவள். **'निःश्वसितमेतद्यदृग्वेदो यजुर्वेदः सामवेदः' (बृ. २-४-१०)** **'நி:ஶ்வஸிதமேதத்³யத்³ரு’க்³வேதோ³ யஜுர்வேத³: ஸாமவேத³:' (ப்³ரு’. 2-4-10)** என்று ஒரு வாக்கியம் இருக்கிறது. இந்த ஸ்ருதி ப்ரமாணத்தின் மூலமாக 64 கலைகளையும் தடையின்றி ப்ரேரணை செய்யக்கூடியவள் லலிதாம்பிகை. **'शास्त्रयोनित्वात्' (ब्र. सू. १-१-३) 'ஶாஸ்த்ரயோனித்வாத்' (ப்³ர. ஸூ. 1-1-3)** என்று பிரம்ம ஸூத்ரமும் அதை குறிப்பிடுகிறது. கலைகளுக்கு நாதன் சந்திரன். வளர்க்கலை, தேய்கலை என்று கலைகளை உள்ளடக்கியவன் சந்திரன். அப்படி பட்ட கலாநாதனான சந்திரனைப் போன்ற குளிர்ந்த முகத்தை உடையவள் என்று அர்த்தம்.

**ॐ कलानाथमुख्यै नमः ||१४९||**
**ஓம் கலாநாத²முக்²யை நம: ||149||**

**कचजिताम्बुदा | (150)**
**கசஜிதாம்பு³தா³ | 150**

**कचेन केशभारेण कबरेण वेत्यर्थः । जिताः अधरीकृताः अम्बुदा मेघा यया सा तथा, मेघमण्डलापेक्षया ऊर्ध्वगामिशिरोरुहभारा व्योमकेशीति भावः । अथवा, केशवृत्तिनीलरूपेण सादृश्यासहत्वेन धिक्कृताः मेघाः यया सा तथा ||**

**கசேன கேஶபா⁴ரேண கப³ரேண வேத்யர்த²: | ஜிதா: அத⁴ரீக்ரு’தா: அம்பு³தா³ மேகா⁴ யயா ஸா ததா², மேக⁴மண்ட³லாபேக்ஷயா ஊர்த்⁴வகா³மிஶிரோருஹபா⁴ரா வ்யோமகேஶீதி பா⁴வ: | அத²வா, கேஶவ்ரு’த்திநீலரூபேண ஸாத்³ரு’ஶ்யாஸஹத்வேன தி⁴க்க்ரு’தா: மேகா⁴: யயா ஸா ததா² ||**

கருமை நிறத்தினால் மேகத்தை பழிக்கும் படியான கேசபாரத்தை உடையவள் அம்பிகை. அதனால் அம்பாளின் கூந்தல் மேகங்களுக்கு மேலே இருக்கிறது. அதனால் அவளுக்கு ‘வ்யோமகேஶீ’ என்று ஒரு நாமம் கூட உண்டு. மேகத்தை வெட்கம் அடைய செய்யக்கூடிய கருமை நிற கூந்தலை உடையவள்.

**ॐ कचजिताम्बुदायै नमः ||१५०||**
**ஓம் கசஜிதாம்பு³தா³யை நம: ||150||**

**कटाक्षस्यन्दिकरुणा | (151)**
**கடாக்ஷஸ்யந்தி³கருணா | 151**

**यद्यपि दीनेषु परिपाल्यत्ताबुद्धिर्देवानां महतां करुणेत्युच्यते, तथापि तस्याः आन्तरत्वेन अज्ञायमानतया तेषु भक्त्यतिशयेन प्रवृत्त्यर्थं सेवादौ तद्वत्ताज्ञानस्यावश्यकफलप्रदानादिहेतुतया निश्चयेन तदनुरूपकसात्त्विकवीक्षणस्मेरसंभाषणादिसत्त्व तत्रावश्यं भवतीति कार्यसत्त्वप्रसञ्जितकारणसत्त्ववत्त्वात्, करुणायाः नवरसेष्वन्तर्भावात्, रसशब्दस्य मधुरादौ रूढत्वात् तेषामनिर्वचनीयत्वेऽपि अनुभवगोच -**

रतायामिक्ष्वादिसारद्रव्यपदार्थनिष्ठत्वोपलब्धेः तत्संबन्धवशात् परंपरया द्रवद्रव्यवृत्तिस्यन्दनरूपक्रिया -
श्रयत्वमुपचर्यते । तथा च कटाक्षस्यन्दिनी करुणा परिपाल्यताबुद्धिरूपा यस्याः सा तथा ||

யத்³யபி தீ³னேஷு பரிபால்யத்தாபு³த்³தி⁴ர்தே³வானாம்’ மஹதாம்’ கருணேத்யுச் -
யதே, ததா²பி தஸ்யா꞉ ஆந்தரத்வேன அஜ்ஞாயமானதயா தேஷு ப⁴க்த்யதிஶயேன
ப்ரவ்ரு’த்த்யர்த² ஸேவாதௌ³ தத்³வத்தாஜ்ஞானஸ்யாவஶ்யகப²லப்ரதா³நாதி³ஹே -
துதயா நிஶ்சயேன தத³னுரூபகஸாத்த்விகவீக்ஷணஸ்மேரஸம்பா⁴பணாதி³ஸத்த்வ
தத்ராவஶ்யம்’ ப⁴வதீதி கார்யஸத்த்வப்ரஸஞ்ஜிதகாரணஸத்த்வவத்த்வாத், கருணா -
யா꞉ நவரஸேஷ்வந்தர்பா⁴வாத், ரஸஶப்³த³ஸ்ய மது⁴ராதௌ³ ரூட⁴த்வாத் தேஷாம -
நிர்வசனீயத்வே(அ)பி அனுப⁴வகோ³சரதாயாமிக்ஷ்வாதி³ஸாரத்³ரவ்யபதா³ர்த²நிஷ்ட²
- த்வோபலப்³தே⁴꞉ தத்ஸப³ந்த⁴வஶாத் பரம்பரயா த்³ரவத்³ரவ்யவ்ரு’த்திஸ்யந்த³ன
ரூபக்ரியாஶ்ரயத்வமுபசர்யதே | ததா² ச கடாக்ஷஸ்யந்தி³னீ கருணா பரிபால்யதா -
பு³த்³தி⁴ரூபா யஸ்யா꞉ ஸா ததா² ||

எல்லா தேவதைகளுக்கும் உயர்ந்த, தாழ்ந்த ஸ்திதியில் உள்ள அனைவர்களையும் நல்ல நிலமையிலையும், தீன நிலமையிலையும் இருக்க கூடியவர்களை ரக்ஷிக்க வேண்டும் என்ற எண்ணத்துக்கு கருணை என்று வருகிறது. இந்த கருணை என்பது கண்ணுக்கு புலப்படாத ஒரு ஆனந்தமான ஒரு பாவம். அதுவும் ஒரு ஆந்தரமான பாவம் (உள்ளே தான் அது இருக்கிறது). இது நவரஸங்களிலே ஒன்று. மதுரம் என்பதை இந்த பதமானது இனிப்பு (ஆனந்தம்) என்று தெரிவிக்கிறது. மதுர ரஸத்தை கருப்பஞ்சாற்றின் ருசியை அனுபவத்தினால் தான் அறிய முடியும். அப்படியே இந்த கருணா ரஸமும் புன்முறுவல், இனிமையான சம்பாஷணை, ஹித பாஷாணம், அபாங்க லீலை என்ற கடைக்கண் பார்வை, ஆனந்த முகம் (களிப்போடு கூடிய முககுறி) இவற்றால் தான் ஊகிக்க முடியும். இங்ஙனம் மதுர ரஸமானது கரும்பு ரஸ வடிவ ஜல பதார்த்தமாக கூறப்பட்டதோ அங்ஙனமே கருணையும் திரவ பதார்த்தமாக கூறப் பட்டுள்ளது. ‘ஸந்தி கருணா’ வெள்ளம் போல் பெருக்கக்கூடிய கருணையோடு கூடியவள். அதாவது வற்றாத கருணை (கருணை வெள்ளம்). கடாக்ஷம் என்பது கடைக்கண் பார்வை (அபாங்க லீலை). அதாவது வற்றாத கருணைப் ப்ரவாகத்தோடு கூடிய கடைக்கண் பார்வையை உடையவள் என்பது இந்த நாமத்தினுடைய தாத்பர்யம்.

**ॐ कटाक्षस्यन्दिकरुणायै नमः ||१५१||**

**ஓம் கடாக்ஷஸ்யந்தி³ - கருணாயை நம꞉ ||151||**

## कपालिप्राणनायिका | (152)

**கபாலிப்ராணநாயிகா | 152**

कपालमस्य अस्तीति कपालि आनन्दभैरवः, तस्य प्राणनायिका प्राणस्येत्युपलक्षणं पञ्चानाम् । नायिका अधिष्ठानत्वेन प्रेरका । 'न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन । इतरेण तु जीवन्ति यस्मिन्ने -
तावुपाश्रितौ ||' (कठ. ५-५) इति श्रुतेः । तस्यापि हृदयान्तर्पर्तिपरमेश्वररूपति यावत् । प्राणवल्लभेति वा, प्रियेति भावः ॥

**கபாலமஸ்ய அஸ்தீதி கபாலி ஆனந்த³பை⁴ரவ:, தஸ்ய ப்ராணநாயிகா ப்ராண - ஸ்யேத்யுபலக்ஷணம்' பஞ்சானாம் | நாயிகா அதி⁴ஷ்டா²னத்வேன ப்ரேரகா | 'ந ப்ரா - ணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கஶ்சன | இதரேண து ஜீவந்தி யஸ்மின்னேதாவு - பாஶ்ரிதௌ ||' (கட². 5-5) இதி ஶ்ருதே: | தஸ்யாபி ஹ்ரு'த³யாந்தர்பர்திபரமேஸ்வர - ரூபதி யாவத் | ப்ராணவல்லபே⁴தி வா, ப்ரியேதி பா⁴வ: ||**

கபாலத்தை உடையவர் கபாலி (பரமேஸ்வரன் என்றும் ஆனந்த பைரவர் என்று கூறலாம்) அவர் பஞ்சப் ப்ராணன்களுக்கும் அதிஷ்டானமாய் உள்ளவர். அவருடைய பஞ்சப் ப்ராணன்களுக்கும் அதிஷ்டானமாய் உள்ளவள். **'न प्राणेन नापानेन मर्त्यो जीवति कश्चन । इतरेण तु जीवन्ति यस्मिन्नेतावुपाश्रितौ ||' (कठ. ५-५) इति श्रुतेः 'ந ப்ராணேன நாபானேன மர்த்யோ ஜீவதி கஶ்சன | இதரேண து ஜீவந்தி யஸ்மின்னே - தாவுபாஶ்ரிதௌ ||' (கட². 5-5) இதி ஶ்ருதே: |** என்பது ஸ்ருதி வாக்கியம். அந்த பரமேஸ்வரனுடைய ஆனந்த பைரவருடைய ஹ்ருதயத்துக்குள்ளே இருக்க கூடிய பரமேஸ்வர ஸ்வரூபிணியாய் இருக்க கூடியவள்.

கபாலி என்று பெயர் பெற்ற பரமேஸ்வரனுடைய ப்ராண வல்லபை (ப்ரியை) என்பது இதனுடைய பொருள். கபாலியின் 'ப்ராண நாயிகா', ப்ராணனைப் போன்று முக்கிய ஸ்தானத்திலே இருக்கின்றாள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

**ॐ कपालिप्राणनायिकायै नमः ||१५२||**
**ஓம் கபாலிப்ராணநாயிகாயை நம: ||152||**

**कारुण्यविग्रहा कान्ता कान्तिधूतजपावलिः |**
**कलालापा कम्बुकण्ठी करनिर्जितपल्लवा ||२९||**
**காருண்யவிக்³ரஹா காந்தா காந்திதூ⁴தஜபாவளி: |**
**கலாலாபா கம்பு³கண்டீ² கரநிர்ஜிதபல்லவா ||29||**

**कारुण्यविग्रहा | (153)**
**காருண்யவிக்³ரஹா | 153**

வெண்ணை (நவநீதம்) போல் மிகவும் ம்ருதுவாகவும், உடனே உருக கூடிய ஸ்வபாவமாகவும் உள்ள ஹ்ருதயத்திலே விளங்கக்கூடியவள் (ஸ்மரிப்பவள்). ஜீவ காருண்யம் உடைய ஞானிகளின் ஹ்ருதயம் மிகவும் ம்ருதுவாயும், ஸுலபமாயும் உருகும் கருணைத்தன்மை உடையதாய் உள்ளது. இப்படி பட்ட இதயத்தில் கருணா ரஸ ஸ்வரூபியாய் விளங்கக்கூடியவள். ம்ருதுவான ஹ்ருதயத்தை உடையவள் என்றும் இந்த நாமத்தை விளக்கலாம். ஸர்வ ப்ராணிகளும் பரதேவதையின் வடிவம் ஆதலால் எல்லாவற்றின் ஹ்ருதயமாய் விலங்குகின்றாள். 'க்ஷேத்ரக்ஞும் சாபிமாம் வித்திம ஸர்வ க்ஷேத்ரேஷு' என்ற அர்த்தம் இங்கே தொனிக்கின்றது.

**ॐ हय्यङ्गवीनहृदयायै नमः ||१७९||**
**ஓம் ஹய்யங்க³வீந - ஹ்ரு'த்³யாயை நம꞉ ||179||**

**हरिगोपारुणांशुका | (180)**
**ஹரிகோ³பாருணாம்'ஶுகா | 180**

**हरिगोपः इन्द्रगोपः आर्द्रामधानक्षत्रे वर्षासूद्भवाः अष्टपादाः रक्तवर्णाः मृद्धङ्गाः कीटविशेषाः, तथा शोणमंशुकं अम्बरम्, स्वार्थे कप्रत्ययः, किरणानि वा यस्याः सा तथा ||**

**ஹரிகோ³ப꞉ இந்த்³ரகோ³ப꞉ ஆர்த்³ராமதா⁴நக்ஷத்ரே வர்ஷாஸூத்³ப⁴வா꞉ அஷ்ட - பாதா³꞉ ரக்தவர்ணா꞉ ம்ரு'த்³த⁴ங்கா³꞉ கீடவிஶேஷா꞉, ததா² ஶோணமம்'ஶுகம்' அம்ப³ரம், ஸ்வார்தே² கப்ரத்யய꞉, கிரணானி வா யஸ்யா꞉ ஸா ததா² ||**

‘ஹரிகோபா’ என்றால் சிவப்பாய் இருக்க கூடிய ஒரு பூச்சி. மழைக்காலத்தில் உற்பத்தி ஆகக்கூடியது. அப்படி பட்ட அந்த பூச்சிக்கு எட்டு அங்கங்கள் உள்ளது. அது சிவந்த நிறத்தை உடையது. அப்படிப்பட்ட செம்மையான வஸ்திரத்தை உடையவள். அந்த எட்டு அங்கங்களும் ப்ருக்ருதியின் எட்டு அங்கங்களாய் எடுத்துக் கொள்ளலாம். சிவந்த காந்தியை உடையவள். ஸூரியன் திருவாதிரை, மகம் என்ற நட்சத்திரத்தில் சஞ்சரிக்கும் பொழுது பெய்யக்கூடிய மழையால் உண்டாகக்கூடிய ஒரு பூச்சி தான் இந்திரகோபம். அதை உவமானமாக வைத்து பரதேவதையினுடைய ஸரீர காந்தியும், பரதேவதையும் ப்ரக்ருதியின் ஆளும் தன்மையும் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன.

**ॐ हरिगोपारुणांशुकायै नमः ||१८०||**
**ஓம் ஹரிகோ³பாருணாம்’ - ஶுகாயை நம: ||180||**

**लकाराख्या | (181)**
**லகாராக்²யா | 181**

**लकारयुक्तः मूलमन्त्रः आख्या वाचकशब्दः यस्याः स्रा तक्षा । लकारस्य शक्रबीजस्य वार्थः 'सेन्द्रः' इति श्रुतेः । लकारयुक्तस्य मायाबीजस्य वा स्तब्धमायेत्यर्थः ||**

**லகாரயுக்த: மூலமந்த்ர: ஆக்²யா வாசகஶப்³த³: யஸ்யா: ஸ்ரா தக்ஷா | லகாரஸ்ய ஶக்ரபீ³ஜஸ்ய வார்த²: 'ஸேந்த்³ர:' இதி ஶ்ருதே: | லகாரயுக்தஸ்ய மாயாபீ³ஜஸ்ய வா ஸ்தப்³த⁴மாயேத்யர்த²: ||**

பரமேஸ்வரியின் மூல மந்திரத்திலே ‘லகாரம்’ என்பது இந்திர பீஜமாகும். இதற்கு சக்ர பீஜம் என்றும் ஒரு அர்த்தம் உண்டு. அவள் இந்திர பீஜ ரூபமாய் இருக்கிறாள் அல்லது லகாரத்தின் மூலமாக தன்னை வெளிக்காட்டி கொள்கிறாள். ‘இந்திரேந்திர சோக்ஷர பரமஸ் வராட்’ என்ற ஸ்ருதி வாக்கியம் இதற்கு ப்ரமாணமாய் இருக்கிறது. இந்திரன் முதலிய தேவர்களின் நாம ரூபங்களுக்கு அதிஷ்டான ஸ்வரூபமாய் விளங்க கூடியவள் அல்லது லகாரத்தோடு கூடிய மாயா பீஜம் ‘ஹ்ரீம்’ கார வாச்யமாய் விளங்கி மாயையை தன்னுள் அடக்கி வைத்து இருப்பவள் என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.

**ॐ लकाराख्यायै नमः ||१८१||**
**ஓம் லகாராக்²யாயை நம: ||181||**

**लतापूज्या | (182)**
**லதாபூஜ்யா | 182**

**लवन्ति विनमन्ति अत्यन्तनम्रा भवन्तीति लताः परमपतिव्रताः अरुन्धत्यादयः स्त्रियः, ताभिः स्थिरमाङ्गल्याय स्वेष्टदेवतात्वेन पूज्या पूजनीया। तदुक्तम्- 'समाराध्य महेशानीं भुक्तिं मुक्तिं च विन्दति' इति । अथवा, केदारादिगौरीविशेषमूर्तौ लताभिः उपलक्षणं वन्यपूजोपकरणैः पूज्या अलंकृता । शबरी वा वनदुर्गा वेति भावः ||**

**லவந்தி வினமந்தி அத்யந்தனம்ரா ப⁴வந்தீதி லதா: பரமபதிவ்ரதா: அருந்த⁴த்யாத³ய: ஸ்த்ரிய:, தாபி⁴: ஸ்தி²ரமாங்க³ல்யாய ஸ்வேஷ்டதே³வதாத்வேன பூஜ்யா பூஜனீயா| தது³க்தம்- 'ஸமாராத்⁴ய மஹேஶானீம்' பு⁴க்திம்' முக்திம்' ச விந்த³தி' இதி | அத²வா, கேதா³ராதி³கௌ³ரீவிஶேஷமூர்தௌ லதாபி⁴: உபலக்ஷணம்' வன்யபூஜோபகரணை: பூஜ்யா அலங்க்ரு'தாஶப³ரீ வா வனது³ர்கா³ வேதி பா⁴வ: ||**

பதிவ்ருத தேவிகளால் (அருந்ததி போன்ற ஸ்த்ரீகளால்) தங்களுடைய மாங்கல்யம் நித்தியமாய் நிலைத்து விளங்குவதற்கு இஷ்ட தேவதா ரூபமாய் பராம்பிகை பூஜிக்கப்படுகிறாள். **'समाराध्य महेशानीं भुक्तिं मुक्तिं च विन्दति' 'ஸமாராத்⁴ய மஹேஶானீம்' பு⁴க்திம்' முக்திம்' ச விந்த³தி'** என்பது ப்ரமாண வாக்கியம். அதேபோல் கௌரி முதலிய விசேஷ மூர்த்திகள் அதன் வடிவமான கொடிகள் தளிர்கள் காட்டிலே உண்டான வஸ்துக்களைக் கொண்டு பூஜிக்கப்படுபவள். சபரி, வனதுர்கா முதலிய காட்டில் விளங்க கூடிய பரதேவதா ரூபங்கள். இந்த தேவதா மூர்த்திகள் காட்டு புஷ்பங்கள், தளிர்கள், கொடிகள், வேர் முதலியவைகளால் பூஜிப்பதினால் திருப்தி அடைகிறார்கள். அப்படி பட்ட தேவதைகள், தேவர்களின் சைதன்ய ஸ்வரூபமாய் இருக்க கூடிய பரமாம்பிகையும் த்ருப்தி அடைகிறாள்.

**ॐ लतापूज्यायै नमः ||१८२||**
**ஓம் லதாபூஜ்யாயை நம: ||182||**

**लयस्थित्युद्भवेश्वरी | (183)**
**லயஸ்தி²த்யுத்³ப⁴வேஶ்வரீ | 183**

**वैपरीत्येन विशेषणं योज्यम् । उद्भवतीत्युद्भवः कार्यात्मना अभिव्यक्तिः । स्थितिः ज्ञानविषयतायोग्यकालावच्छेदः अनुभवसत्तावत्त्वमिति यावत् । लयः उत्पन्नकार्यस्य कारणात्मना अवस्थितिः वाचारम्भणयोग्यतेत्यर्थः । तासां क्रियाणाम् अचेतनकार्यत्वायोगेन घटादिकार्ये चेतनस्य निमित्ततादर्शनात् एकतटस्थेश्वरत्वं वा, गोपुरादौ नानाचेतनदर्शनात्तादृशनानेश्वरत्वं वेति विशये, 'यतो वा इमानि भूतानि जायन्ते (तै. ३) इति श्रुतौ 'यतः' इत्येकवचनपञ्चम्यानानात्वतटस्थत्वे 'जनिकर्तुः प्रकृतिः' इति सूत्रम् । जनिकर्तुः कार्यस्य प्रकृतिरुपादानमपादानसंज्ञा स्यात् । 'अपादाने पञ्चमी' इति शासनात् अभिन्ननिमित्तोपादानत्वमीश्वरत्वमिति सिद्धान्तः । तटस्थलक्षणमेतत्, ज्ञायमानस्य ब्रह्मणः लक्षणप्रमाणयोः अवश्यवाच्यत्वादित्यभिप्रायः । आदौ लयशब्दोपादानेन अनादित्वं प्रपञ्चस्य सूचितम् । जगत इति शब्दपूरणेन नाम योजनीयम् । तथा च जगतः लयश्च स्थितिश्च उद्भवश्च तेषामीश्वरी। कूटस्थचैतन्यमात्रसच्चिदानन्दाधायकतया विवर्तकारणमित्यर्थः ||**

**வைபரீத்யேன விஶேஷணம்' யோஜ்யம் | உத்³ப⁴வதீத்யுத்³ப⁴வ: கார்யாத்மனா அபி⁴வ்யக்தி: | ஸ்தி²தி: ஜ்ஞானவிஷயதாயோக்³யகாலாவச்சே²த³: அனுப⁴வஸத்தாவத்த்வமிதி யாவத் | லய: உத்பன்னகார்யஸ்ய காரணாத்மனா அவஸ்தி²தி: வாசாரம்ப⁴ணயோக்³யதேத்யர்த²: | தாஸாம்' க்ரியாணாம் அசேதனகார்யத்வாயோகே³ன க⁴டாதி³கார்யே சேதனஸ்ய நிமித்ததாத³ர்ஶனாத் ஏகதடஸ்தே²ஶ்வரத்வம்' வா, கோ³புராதௌ³ நானாசேதனத³ர்ஶனாத்தாத்³ரு'ஶனானேஶ்வரத்வம்' வேதி விஶ யே, 'யதோ வா இமானி பூ⁴தானி ஜாயந்தே (தை. 3) இதி ஶ்ருதௌ 'யத:' இத்யேகவசனபஞ்சம்யானானாத்வதடஸ்த²த்வே 'ஜநிகர்து: ப்ரக்ரு'தி:' இதி ஸூத்ரம் | ஜநிகர்து: கார்யஸ்ய ப்ரக்ரு'திருபாதா³னமபாதா³னஸஞ்ஜ்ஞா ஸ்யாத் | 'அபாதா³னே பஞ்சமீ'**

**இதி ஶாஸனாத் அபி⁴ன்னநிமித்தோபாதா³னத்வமீஶ்வரத்வமிதி ஸித்³தா⁴ந்த꞉ | தடஸ்த²லக்ஷணமேதத், ஜ்ஞாயமானஸ்ய ப்³ரஹ்மண꞉ லக்ஷணப்ரமாணயோ꞉ அவஶ் - யவாச்யத்வாதி³த்யபி⁴ப்ராய꞉ | ஆதௌ³ லயஶப்³தோ³பாதா³னேன அநாதி³த்வம்' ப்ரப - ஞ்சஸ்ய ஸூசிதம் | ஜக³த இதி ஶப்³த³பூரணேன நாம யோஜனீயம் | ததா² ச ஜக³த꞉ லயஶ்ச ஸ்தி²திஶ்ச உத்³ப⁴வஶ்ச தேஷாமீஶ்வரீ | கூடஸ்த²சைதன்யமாத்ரஸச்சிதா³ - னந்தா³தா⁴யகதயா விவர்தகாரணமித்யர்த²꞉ ||**

'லயம், ஸ்திதி, உத்பவம்' 'லயம்' என்றால் ஒடுங்குதல் . 'ஸ்திதி' என்றால் நிலையாய் இருத்தல். 'உத்பவம்' என்றால் உற்பத்தி. அதனால் அழிவு, நிலையிருத்தல், உற்பத்தி ஆவது. ஸ்ருஷ்டி, ஸ்திதி, நாசம். இந்த இடத்திலே நாசம், ஸ்திதி, ஸ்ருஷ்டி. இங்கு சாதாரணமாய் கூறப்படுவதை காட்டிலும் தலை கீழாய் கூறப்பட்டிருக்கிறது. காரிய வடிவமாய் இந்த ஜகத் தோன்றுவதற்கு 'உத்பவம்' என்றும். அறிதற்கு விஷயமாய் அனுபவ ஸத்தாவோடு கூடிய கால விசேஷத்திற்கு 'ஸ்திதி' என்றும். தோன்றிய காரியமானது காரண வடிவாய் லயமாக இருந்தது என்றும் சாஸ்திரம் கூறுகிறது.

எங்ஙனம் குடம் முதலிய காரியங்களில் குயவன் போன்ற சேதனர்களின் நிமித்தம் காணப்படுகிறதோ அங்ஙனமே அசேதமான ப்ரபஞ்சத்தில் ப்ரபஞ்ச காரியமும் ஒரு சேதன நிமித்த காரணம் இன்றி ஸம்பவிக்க முடியாது. இந்த நிமித்த காரணம் யார் என்ற வினாவினால் அது ஒருவரா அல்லது ஒரு வீடோ அல்லது கோபுரமோ கட்டுவதற்கு பல சிற்பிகள் நிமித்த காரணமாய் இருப்பது போல், ஜகத் ரூப காரியத்திற்கு பல நிமித்த காரணங்களா என்று சந்தேகம் நிகழக்கூடும்.

இதற்கு சமானமாக ப்ரஹ்ம ஸூத்திரத்திலே' **'यतो वा इमानि भूतानि जायन्ते யதோ வா இமானி பூ⁴தானி ஜாயந்தே** என்ற ஸ்ருதி வாக்கியத்தின் படி இந்த பூதங்கள் எந்த ஒன்றில் இருந்து உண்டாயிற்றோ என்று ஒருமையில் கூறப்பட்டு இருப்பதால் நிமித்த காரணம் ஒருவரே என்று ஸித்திக்கின்றது. எங்ஙனம் காரியமாக ஜடம் மண்ணில் இருந்து உண்டாகி மண்ணிலே ஸ்திதியைப் பெற்று மண்ணிலே லயம் அடைகிறதோ அது போல அபின்ன நிமித்த உபாதான காரணமாய் இருக்கக்கூடிய பரமேஸ்வரனிடத்திலே உற்பத்தியாகி நின்று, அழிகின்றது என்று சாஸ்திரம் அறுதியிட்டு கூறுகின்றது.

எந்த காரியத்துக்கும் எது லயமாகக்கூடிய ஸ்தானமோ அது தான் அதற்கு உபாதான காரணமாகும் என்பது ஞாயம். அதாவது குடமானது மண்ணிலே லயமாகிறது. அதுவே உற்பத்திக்கும் காரணமாய் இருக்கின்றது. அதனால் லயத்தை முதலிலே சொல்லி அதன் பிறகு உற்பத்தியை அந்த மூன்று செயல்களையும் வழக்கமாய் சொல்வதை காட்டிலும் மாற்றி இந்த இடத்திலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. காரிய அபின்ன நிமித்த காரணம். ஒரு உதாரணம் சாஸ்திரம் சொல்லுகிறது ஒரு எட்டுக்கால் பூச்சி தன்னுடைய உமிழ் நீரில் இருந்து ஒரு வலையை பின்னி, அந்த வலையை நிலைபெற செய்து பின் தன்னுள்ளே இழுத்து கொள்கிறது. முண்டகோபநிஷத்திலே 'யதா ஊர்ண நாபி;' என்ற வாக்கியம் இதை குறிப்பிடுகிறது.

அதை போலவே பகவான் இடத்தில் இருந்து உற்பத்தியாகி பகவான் இடத்திலே நிலைபெற்று, பகவானிடத்தில் லயமாகிறது இந்தப் ப்ரபஞ்சம். ஸ்ருஷ்டிப்பதற்கு முன்னால் ‘ஸதேவ ஸௌம்ய இதம் அக்ரே ஆஸீத்’ என்று சாந்தோக்கியம் கூறுகின்றது. ஸத்தா மாத்திரமாக இருந்தது. அந்த ஸத்தா என்ன என்று கேட்டால் சைதன்யமும், கூடஸ்த ஸ்வரூபமாய் இருக்கும் சைதன்யமும் அவ்யக்தமான மாயையுமே காரணம் என்று சொல்லுகிறோம். ஸ்ருஷ்டி என்பது அவ்யக்த மாயையை வ்யக்தமாவதும், லயம் என்பது வ்யக்தமாய் இருக்கும் மாயை, அவ்யக்தமாய் மறுபடியும் ஈஸ்வரனிடத்திலே மாய ரூபமாய் சேர்வதும் என்றும் எடுத்து கொள்ளலாம். அஸ்தி, பாதி, ப்ரியம், ரூபம், நாம ரூப அம்ச பஞ்சகம், ஆர்தர்த்ரய ப்ரஹ்ம ரூபம் ததோத்வயம் ப்ரஹ்ம ரூபம் என்று சாஸ்திரம் அறுதியிட்டு கூறுகிறது. அபின்ன நிமித்தோ உபாதான காரண விவரத்தை காரணமான பரமேஸ்வரி மாயாஸ்வரூபியாக இருக்கின்றாள் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ॐ लयस्थित्युद्भवेश्वर्यै नमः ||१८३||**
**ஓம் லயஸ்தி2த்யுத்3 - ப4வேஶ்வர்யை நமஃ ||183||**

**लास्यदर्शनसंतुष्टा लाभालाभविवर्जिता |**
**लङ्घ्येतराज्ञा लावण्यशालिनी लघुसिद्धिदा ||३५||**
**லாஸ்யத3ர்ஶந - ஸந்துஷ்டா லாபா4லாப4விவர்ஜிதா |**
**லங்க்4யேதராஜ்ஞா லாவண்ய - ஶாலினீ லகு4 - ஸித்3தி4தா3 ||35||**

**लास्यदर्शनसन्तुष्टा | (184)**
**லாஸ்யத3ர்ஶனஸந்துஷ்டா | 184**

**यथा राजा संपूर्णकामः प्रयोजनमनुद्दिश्यापि मृगयादिलीलाविशेषान् पश्यति बालकादिनृत्य वा, तथा अज्ञानाम् इष्टानिष्ट मिश्रोदासीनपदार्थ चतुष्टयानुभवजन्यहर्षशोकादि संभवन्मदोद्रेकशोकातिरेकहेतुक विहितादिकरणाकरणरूपचरणाद्यङ्गपरिस्पन्दरूपनानाविधप्राणिकायनिकायजन्यलास्यदर्शनेन अनुद्दि - श्यापि प्रयोजनं सन्तुष्टा तत्तत्कर्मानुसारेण फलप्रापकेश्वरत्तया सर्वसमानत्वात्, 'नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः' (गीता ५-१५) इति भगवद्वचनात् । लास्यं देवतादिवारवनितादिभिः क्रियमाणं तालगीतयुक्तं नृत्यं तद्दर्शनेन संतुष्टा । तदीयफलप्रदानोन्मुखकृपारसवतीत्यर्थः ||**

**யதா2 ராஜா ஸம்பூர்ணகாமః ப்ரயோஜனமனுத்3தி3ஶ்யாபி ம்ரு’க3யாதி3ளீலாவி - ஶேஷான் பஶ்யதி பா3லகாதி3ந்ரு’த்ய வா, ததா2 அஜ்ஞானாம் இஷ்டாநிஷ்ட மிஶ் - ரோதா3ஸீனபதா3ர்த2 சதுஷ்டயானுப4வஜன்யஹர்ஷஶோகாதி3 ஸம்ப4வன்மதோ3த்3 - ரேகஶோகாதிரேகஹேதுக விஹிதாதி3கரணாகரணரூபசரணாத்3யங்க3 பரிஸ்பந் - த3ரூபனானாவித4ப்ராணிகாயநிகாயஜன்யலாஸ்யத3ர்ஶனேன அனுத்3தி3ஶ்யாபி ப்ர - யோஜனம் ஸந்துஷ்டா தத்தத்கர்மானுஸாரேண ப2லப்ராபகேஶ்வரத்தயா ஸர்வ - ஸமானத்வாத், 'நாத3த்தே கஸ்யசித்பாபம்’ ந சைவ ஸுக்ரு’தம்’ விபு4ः' (கீ3தா 5-15) இதி ப4க3வத்3வசனாத் | லாஸ்யம்’ தே3வதாதி3வாரவனிதாதி3பி4ः க்ரியமாணம்’ தாலகீ3த - யுக்தம்’ ந்ரு’த்யம்’ தத்3த3ர்ஶனேன ஸந்துஷ்டா | ததீ3யப2லப்ரதா3னோன்முக2க்ரு’பா - ரஸவதீத்யர்த2ः ||**

பகவான் பாஷ்யகாரர் சொல்கிறார் எப்படி ஒரு ராஜா த்ருப்த காமனாய் இருக்கிறானோ, அவனுக்கு கிடைக்காத விஷயமே கிடையாது. எல்லா விதமான காமனைகளையும் அடைந்துள்ள பூர்த்த காமனாய் இருக்கின்றான். அதனால் ஏதேனும் ப்ரயோஜனத்தை கருதி வேலை செய்யவேண்டும் என்றால், அப்படி ஒன்றும் இல்லை. வேட்டை ஆடுவது, குழந்தைகளுடன் ஆடுவது, நாரீ மணிகளுடன் ஆடுவது இப்படி பட்ட லீலைகளை பார்த்து மகிழ்கின்றானோ அதேப்போல பரதேவதை அவளுக்கும் செய்ய வேண்டிய கர்த்ருத்வம் கிடையவே கிடையாது. ந-கர்த்ருத்வம் பரதேவதைக்கு. ஏதாவது அவஸிஷ்டம் (செய்யவேண்டியது) இருக்கிறதா என்று கேட்டால் அவளுக்கும் அவஸிஷ்டம் கிடையாது. அதனால் அஞ்ஞானிகள் 'இஷ்டம் அனிஷ்டம் உதாஸீனம் மிஸ்ரம்' என்று நான்கு விதமான கர்ம பலன்களை அனுபவிக்க கூடிய ஸரீர மாற்றங்கள் ஸுகம், துக்கம் எல்லாவற்றையும், அந்த அங்க சேஷ்டைகளை பார்த்துக் கொண்டு இருக்கிறாள். பார்த்து சந்தோஷிக்கின்றாள் என்று சொல்கிறார். அப்படியென்றால் கர்மபலன் சரியாக போய் சேர்ந்து இருக்கிறது என்ற த்ருப்தி அவளிடத்தில் இருக்கிறது.

அப்படியே பார்த்தாலும் **'नादत्ते कस्यचित्पापं न चैव सुकृतं विभुः' (गीता ५-१५) 'நாத³த்தே கஸ்யசித்பாபம்' ந சைவ ஸுக்ரு'தம்' விபு⁴:' (கீ³தா 5-15)** என்ற வாக்கியம் இருக்கின்றது. அதனால் யாருடைய பாபம் புண்ணியத்தையோ பகவான் ஏற்றுக் கொள்வது இல்லை. அதனால் பரமாம்பிகை எப்படி தன்னுடைய நேரத்தை கடத்துகிறாள் என்று கேட்டால் ரம்பை, ஊர்வசி போன்ற பல வித தேவதா ஸ்த்ரீகள் , அவளுடைய சேடிகளால் செய்யக் கூடிய தாளத்தோடும், சங்கீதத்தோடும் கூடிய பரதநாட்டியத்தைப் பார்த்து சந்தோஷப் - படுகிறாள்.அதாவது கருணை மூர்த்தியாய் இருக்கிறாள் என்று அர்த்தம்.

**ॐ लास्यदर्शनसंतुष्टायै नमः ||१८४||**
**ஓம் லாஸ்யத³ர்ஶந - ஸந்துஷ்டாயை நம꞉ ||184||**

## लाभालाभविवर्जिता | (185)
**லாபா⁴லாப⁴விவர்ஜிதா | 185**

**अप्राप्तप्राप्तिर्लाभः, कृतेऽपि यत्ने तदप्राप्तिरलाभः, ताभ्यां विवर्जिता, पर्याप्तकामत्वेन नित्यतृप्तत्वात्, 'न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन' (गीता, ३-२२) इति भगवद्वचनात् ||**

**அப்ராப்தப்ராப்திர்லாப⁴:, க்ரு'தே(அ)பி யத்னே தத³ப்ராப்திரளாப⁴:, தாப்⁴யாம்' விவர்ஜிதா, பர்யாப்தகாமத்வேன நித்யத்ரு'ப்தத்வாத், 'ந மே பார்தா²ஸ்தி கர்தவ்யம்' த்ரிஷு லோகேஷு கிஞ்சன' (கீ³தா, 3-22) இதி ப⁴க³வத்³வசனாத் ||**

கிடைக்காத பொருளை அடைவது லாபம். அந்த ஒரு பொருளை பெறுவதற்கு எல்லா வித முயற்சித்து அது கிடைக்காமல் போனால் அ-லாபம். முயற்சி என்பது லாபம், அது கிடைக்காமல் போனால் அ-லாபம். அவை இரண்டும் அதாவது அதனால் ஏற்பாடாகி கூடிய சுக துக்கங்கள் அற்றவள் (மன உளைச்சல் அற்றவள்).

அதனால் தான் 'சுகத்துக்கே லாபா லாபௌ ஜயா ஜயௌ ஸமே க்ருத்வா' என்று பகவான் கீதையில் சொல்கிறார். எல்லாம் அடையப்பட்ட தன்மை ஸஹஸ்ர கர்ம க்ருதாவாய் இருப்பதால், நித்ய த்ருப்தி, ஆத்ம த்ருப்தியோடு இருப்பவள் ஆதலால் **'न मे पार्थास्ति कर्तव्यं त्रिषु लोकेषु किंचन' (गीता, ३-२२) 'ந மே பார்தா²ஸ்தி கர்தவ்யம்' த்ரிஷு லோகேஷு கிஞ்சன' (கீ³தா, 3-22)** என்ற வாக்கியம் இருப்பதினால், லாபத்தில் நஷ்டத்திலோ அவள் ஸந்தோஷத்தையோ, தளர்வதையோ அடைதல் கிடையாது. ஸமத்ருஷ்டியுடன் இருப்பவள்.

**ॐ लाभालाभविवर्जितायै नमः ||१८५||**
**ஓம் லாபா⁴லாப⁴ - விவர்ஜிதாயை நம꞉ ||185||**

**लङ्घ्येतराज्ञा | (186)**
**லங்க்⁴யேதராஜ்ஞா | 186**

**इतरेषां जीवभ्रान्तिकल्पितानां गुणमूर्त्यादीनाम् उपासनाविधिरूपा वा, कर्मविधिरूपा वा आज्ञा प्रेरणा लङ्घ्या अविषयीकृता यया सा तथा । शुद्धचैतन्यस्य विशिष्टक्रियाद्यात्मकत्वाभावेन विध्यविष - यत्वादिति यावत् । अथवा, किंकरीत्वाभावेन इतरासां देवतानाम् आज्ञा प्रेरणा लङ्घ्या उपेक्षणीया यया सा तथा, 'सर्वस्याधिपतिः सर्वस्येशानः' (बृ. ४-४-२२) इति श्रुतेः । ईश्वरस्य सर्वनियन्तृत्वेन स्वेतरानिय - म्यत्वादिति ज्ञातव्यम् ||**

**இதரேஷாம்' ஜீவப்⁴ராந்திகல்பிதானாம்' கு³ணமூர்த்யாதீ³னாம் உபாஸனாவிதி⁴ - ரூபா வா, கர்மவிதி⁴ரூபா வா ஆஜ்ஞா ப்ரேரணா லங்க்⁴யா அவிஷயீக்ரு'தா யயா ஸா ததா² | ஶுத்³த⁴சைதன்யஸ்ய விஶிஷ்டக்ரியாத்³யாத்மகத்வாபா⁴வேன வித்⁴யவிஷ - யத்வாதி³தி யாவத் | அத²வா, கிங்கரீத்வாபா⁴வேன இதராஸாம்' தே³வதானாம் ஆஜ்ஞா ப்ரேரணா லங்க்⁴யா உபேக்ஷணீயா யயா ஸா ததா², 'ஸர்வஸ்யாதி⁴பதி꞉ ஸர்வஸ்யேஶான꞉' (ப்³ரு'. 4-4-22) இதி ஶ்ருதே꞉ | ஈஶ்வரஸ்ய ஸர்வநியந்த்ரு'த்வேன ஸ்வேதரானியம்யத்வாதி³தி ஜ்ஞாதவ்யம் ||**

ஜீவன்.. தான் ஜீவன், அல்பஞன் என்ற மயக்கத்திலே இருக்கிறான். தன்னை விட வேறான ஸகுண மூர்த்திகளை உபாஸிக்கின்றான். இந்த லோகத்திலும், பரலோகத்திலும் விஷய ஸுகங்களை அனுபவிப்பதற்கு ஸாதகமாக வேதத்திலே சொல்லப்பட்ட வைதீக கர்மங்களை செய்யவும் 'வேத வாதாரதா பார்த்த ...' என்ற வாக்கியத்தின் படி வேதத்தில் குறிக்கப்பட்ட கர்மங்களை அவன் செய்வதற்கு விதிக்கப்பட்டு இருக்கின்றன. அதை அவன் செய்கின்றான். இப்படி பட்ட விதிகளுக்கு ஆஞ்ஞா. பரதேவதையாகும் சித் ஸ்வரூபிணி ஶுத்த சைதன்ய ஸ்வரூபிணியாக இருப்பதால் அவயவம் அற்று இருப்பதால் நித்யம், நைமித்திகம், காமியம், ப்ராயஸ்சித்தம், போன்ற கர்மாக்கள், அதேபோல பேத குண உபாஸனையாலும் அடையக்கூடிய வஸ்து பரமாம்பிகை கிடையாது. 'நேதம் யதிதம் உபாஸதே ..' என்று கேன உபநிஷத் சொல்கிறது. உபாஸனையால் அடையக் கூடிய ஸ்வரூபத்தை அற்றவள் பரதேவதை.

பரதேவதை எல்லாவற்றிற்கும் அதிஷ்டான மாகவும், நியந்தாவாகவும் 'ஸாக்ஷி ரூபேண அந்தஸ்திஷ்டன் யமயதி' என்ற உபநிஷத் வாக்கியப்படி அவள்

இருக்கிறாள். ஸ்வாதந்திரியமாக இருக்கிறாள், தனக்கு கட்டளை இடுவார்கள் வேறு யாரும் இல்லை என்று தீர்மானமாக அறிவு இருக்கிறது. ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் முதலிய தேவர்கள் கூட மீறமுடியாத ஆஞ்ஞையை தரக் கூடியவள். அவரவர்கள் கர்மாவை எப்படி செய்கிறார்கள் என்று ஸாக்ஷி ரூபேண (பார்த்துக்கொண்டு) இருப்பவள். ஸர்வ லோகைக-ஷாஸனா என்று ஸஹஸ்ர நாமத்திலே இதை ஆதரித்து ஒரு நாமம் இருக்கிறது.

**ॐ लङ्ध्येतराज्ञायै नमः ||१८६||**
**ஓம் லங்த்4யேதராஜ்ஞாயை நம: ||186||**

**लावण्यशालिनी | (187)**
**லாவண்யஶாலினீ | 187**

**लावण्यं सौन्दर्यं परमानन्दस्वरूपतया अतिशयप्रीतिविषयत्वं शालत इति तथा । सर्वावयवसाधारण - सुन्दरभाववतीति वा ||**

**லாவண்யம்' ஸௌந்த3ர்யம்' பரமானந்த3ஸ்வரூபதயா அதிஶயப்ரீதிவிஷயத்வம்' ஶாலத இதி ததா2 | ஸர்வாவயவஸாதா4ரணஸுந்த3ரபா4வவதீதி வா ||**

பரமானந்த ஸ்வரூபமாய் பரமாம்பிகை இருப்பதினாலே அத்யந்த ப்ரீதிக்கு விஷயமான அழகோடு கூடியவள். சௌந்தர்யமானது ஸரீரம் முழுவதையும் வ்யாபித்து ஸௌந்தர்யமே (ஸர்வ அலங்காரமே) பரமாம்பிகையின் ரூபத்திலே ஆவீர் பாவமாய் இருக்கின்றது என்று நாம் பொருள் கொள்ள வேண்டும்.

**ॐ लावण्यशालिन्यै नमः ||१८७||**
**ஓம் லாவண்யஶாலின்யை நம: ||187||**

**लघुसिद्धिदा | (188)**
**லகு4ஸித்3தி4தா3 | 188**

**लघुना उपायेन सिद्धिं वाञ्छितार्थप्राप्तिं ददातीति तथा । लघुशब्दः लक्षणया लघिमासिद्धिपरः, तथा च लघिमाद्यष्टैश्वर्यप्रदेति वा । अथवा, लघूनां अत्यन्ताल्पज्ञानभाग्यशरीररूपचरणवतामप्यत्तिनिकृष्टानां तिर्यगादीनामपि सिद्धिं मुक्तियोग्यताहेतुज्ञानादिसाधनसंपत्तिं तत्कार्यमहिमातिशयोन्नेयां ददातीति सा तथा ||**

**லகு4னா உபாயேன ஸித்3தி4ம்' வாஞ்சி2தார்த2ப்ராப்திம்' த3தா3தீதி ததா2 | லகு4 - ஶப்3த3: லக்ஷணயா லகி4மாஸித்3தி4பர:, ததா2 ச லகி4மாத்3யஷ்டைஶ்வர்யப்ரதே3தி வா | அத2வா, லகூ4னாம்' அத்யந்தால்பஜ்ஞானபா4க்3யஶரீரரூபசரணவதாமப்யத்தி - னிக்ரு'ஷ்டானாம்' திர்யகா3தீ3னாமபி ஸித்3தி4ம்' முக்தியோக்3யதாஹேதுஜ்ஞாநாதி3 - ஸாத4னஸம்பத்திம்' தத்கார்யமஹிமாதிஶயோன்னேயாம்' த3தா3தீதி ஸா ததா2 ||**

வெகு சுலபமாக 'ஆஶுதோஷி' என்று பகவானுக்கு ஒரு அடைமொழி உண்டு. சீக்கிரமாக அதாவது சிறிய விஷயத்திலே கூட சீக்கிரமாக சந்தோஷப்பட்டு

விடுவார். ‘ராமா’ என்று சொன்னால் கூட சந்தோஷத்தை பெற்று விடுவார். ‘நம: சிவாய’ என்று சொன்னால் சந்தோஷம் பெற்று விடுவார். அது போல பரமாம்பிகை வெகு சுலபமாக தன் பக்தர்களுக்கு வேண்டக்கூடிய இஷ்ட ஸித்திகளை தருபவள். அதாவது அணிமா, லஹிமா, மஹிமா,கரீமா, போன்ற ஸித்திகளைத் தருபவள். அதனால் அற்பஞ்ஞானம், அதனால் உண்டாகும் ஸரீரம், யோனிகள், வடிவம் இவற்றோடு கூடிய தாழ்ந்த யோனிகளுக்கு கூட அதிகமான ஸித்தியை அளிப்பதற்கு கண்டிப்பாக தனது ஆசிகளை (மஹிமைகளையும்) தரக் கூடியவள் என்று அர்த்தம்.

**ॐ लघुसिद्धिदायै नमः ||१८८||**
**ஓம் லகு⁴ஸித்³தி⁴தா³யை நம꞉ ||188||**

**लाक्षारससवर्णाभा लक्ष्मणाग्रजपूजिता |**
**लभ्येतरा लब्धभक्तिसुलभा लाङ्गलायुधा ||३६||**
**லாக்ஷாரஸ - ஸவர்ணாபா⁴ லக்ஷ்மணாக்³ரஜ - பூஜிதா |**
**லப்⁴யேதரா லப்³த⁴ப⁴க்தி - ஸுலபா⁴ லாங்க³ளாயுதா⁴ ||36||**

**लाक्षारससवर्णाभा | (189)**
**லாக்ஷாரஸஸவர்ணாபா⁴ | 189**

**लाक्षारसेन लाक्षाद्रवेण समानो वर्णो यस्याः सा तथाभूता शोभा कान्तिर्यस्याः सा तथा | अतिपाटल-विग्रहप्रभेत्यर्थः ||**

**லாக்ஷாரஸேன லாக்ஷாத்³ரவேண ஸமானோ வர்ணோ யஸ்யா꞉ ஸா ததா²பூ⁴தா ஶோபா⁴ காந்திர்யஸ்யா꞉ ஸா ததா² | அதிபாடலவிக்³ரஹப்ரபே⁴த்யர்த²꞉ ||**

‘லாக்ஷாரஸ’ என்றால் அரக்கு. அந்த அரக்கை உருக்கினால் செக்க செவேல் என்று இருக்கும். அப்படி பட்ட செக்கசெவேல் என்று இருக்க கூடிய தேக காத்தியை உடையவள் என்று அர்த்தம். காந்தி அதாவது சிவந்த காந்தியை உடையவள். உதிக்கும் ஸூரியனை போலவும் மறையும் ஸூரியனை போலவும் உள்ளவள் செந்நிறத்தை உடையவள்.

**ॐ लाक्षारससवर्णाभायै नमः ||१८९||**
**ஓம் லாக்ஷாரஸ - ஸவர்ணாபா⁴யை நம꞉ ||189||**

**लक्ष्मणाग्रजपूजिता | (190)**
**லக்ஷ்மணாக்³ரஜபூஜிதா| 190**

**अग्रे जायेते इत्यग्रजौ रामभरतौ लक्ष्मणस्यापि ज्येष्ठभूतरामाचारानुकारित्वेन चतुर्भिरपि दाशरथिभिः पूजितेत्यर्थः । रामस्य शिवलिङ्गप्रतिष्ठाता —- इति नामवत्त्वान्यथानुपपत्त्या शिवदंपतिपूजकत्वेन तदित - रेषां तद्वंशस्त्रीपुरुषाणां तत्सिद्धिरिति ध्वनितोऽर्थः ॥**

**அக்³ரே ஜாயேதே இத்யக்³ரஜௌ ராமப⁴ரதௌ லக்ஷ்மணஸ்யாபி ஜ்யேஷ்ட² - பூ⁴தராமாசாரானுகாரித்வேன சதுர்பி⁴ரபி தா³ஶரதி²பி⁴: பூஜிதேத்யர்த²: | ராமஸ்ய ஶிவலிங்க³ப்ரதிஷ்டா²தா —- இதி நாமவத்த்வான்யதா²னுபபத்த்யா ஶிவத³ம்பதி - பூஜகத்வேன ததி³தரேஷாம்' தத்³வம்'ஶஸ்த்ரீபுருஷாணாம்' தத்ஸித்³தி⁴ரிதி த்⁴வனி - தோ(அ)ர்த²: ||**

'அக்ர:' என்றால் முன்னாடி என்று அர்த்தம். லக்ஷ்மணனுக்கு முன் பிறந்தவர்கள் (ராமன் , பரதன்) என்று அர்த்தம். லக்ஷ்மணனும் சத்ருக்கனனும் கூட எல்லாருக்கும் ஜேஷ்டனாய் இருக்க கூடிய ராமனது ஆசாரத்தை கடைப்பிடித்து அவன் பால் அந்த தர்மத்திலேயே ஈடுபட்டு இருப்பதினால், ராமனின் ஆசாரத்தை கடைப்பிடித்து ஒழுகுவதால் தாசரதிகள் நால்வராலும் பூஜிக்கப்பட்ட பரமேஸ்வரி. சிவ லிங்கத்தை ப்ரதிஷ்டை செய்தவன் ராமன் என்பது ப்ரஸித்தம். சிவனையும் சிவாவையும் பூஜித்தல் உசிதம் ஆகும். அதனால் சிவ தம்பதிகளின் பூஜை ராமனின் வம்சத்திற்கே ஸித்தியை தருகிறது (ஸித்தித்து இருப்பது) என்பது இந்த நாமத்திலே தொநிக்கின்றது.

**ॐ लक्ष्मणाग्रजपूजितायै नमः ||१९०||**

**ஓம் லக்ஷ்மணாக்³ரஜ - பூஜிதாயை நம: ||190||**

**लभ्येतरा | (191)**

**லப்⁴யேதரா | 191**

**लभ्यानि लब्धव्यानि कर्मोपासनाविशेषाणां फलत्वेन साध्यानि भव्यानीत्यर्थः । तेभ्य इतरा विलक्षणा । 'तत्सत्यं स आत्मा' (छा. ६-८) 'नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान् । तमा - त्मस्थम्' (कठ. ५-१३) इति, 'यत्साक्षादपरोक्षाद्ब्रह्म' (बृ. ३-४) इत्यादिभिः श्रुतिभिः आत्मनः नित्यप्राप्त - स्वरूपत्वेन प्राप्तप्राप्तव्यरूपतया मोक्षरूपत्वेन चतुर्विधक्रियाफलत्वाभावादिति मन्तव्यम् । अथवा, इतराणि धर्मार्थकामरूपत्रिवर्गरूपाणि फलानि लब्धव्यानि प्राप्तव्यानि यस्याः सकाशादिति सा तथा, उक्तश्रुतेः ||**

**லப்⁴யானி லப்³த⁴வ்யானி கர்மோபாஸனாவிஶேஷாணாம்' ப²லத்வேன ஸாத்⁴யானி ப⁴வ்யானீத்யர்த²: | தேப்⁴ய இதரா விளக்ஷணா | 'தத்ஸத்யம்' ஸ ஆத்மா' (சா². 6-8) 'நித் - யோ நித்யானாம்' சேதனஶ்சேதனாநாமேகோ ப³ஹூனாம்' யோ வித³தா⁴தி காமான் | தமாத்மஸ்த²ம்' (கட². 5-13) இதி, 'யத்ஸாக்ஷாத³பரோக்ஷாத்³ப்³ரஹ்ம' (ப்³ரு'. 3-4) இத்யா - தி³பி⁴: ஶ்ருதிபி⁴: ஆத்மன: நித்யப்ராப்தஸ்வரூபத்வேன ப்ராப்தப்ராப்தவ்யரூபதயா மோக்ஷரூபத்வேன சதுர்வித⁴க்ரியாப²லத்வாபா⁴வாதி³தி மந்தவ்யம் | அத²வா, இதரா - ணி த⁴ர்மார்த²காமரூபத்ரிவர்க³ரூபாணி ப²லானி லப்³த⁴வ்யானி ப்ராப்தவ்யானி யஸ்யா: ஸகாஶாதி³தி ஸா ததா², உக்தஶ்ருதே: ||**

'லப்ய' என்றால் எதை பெற முடியுமோ. விசேஷ கர்மாக்களினாலும் உபாஸனைகளாலும் ஸித்திக்க கூடிய பலவித பலன்களை அடைவது லப்யம் என்று கூறலாம். இந்த லப்ய பலன்களை காட்டிலும் வேறாக விசேஷமாக உள்ளவள் பரதேவதை. அதனால் ஸாதனையால் விளைய கூடிய ஸாத்ய வஸ்து அல்ல பராம்பிகை. அப்படி கூறுவதால் கர்ம உபாஸனைகளுக்கு பலன்

ஆகாதவள் (பலனாயும் இருக்க கூடியவள்) பரதேவதை என்பது ஸித்திக்கின்றது. ஏனென்றால் ஸாத்திய, ஸாதனைக்கு அப்பாற்பட்ட ஸித்த வஸ்துவாய் இருப்பதால்.

**'तत्सत्यं स आत्मा' (छा. ६-८) 'नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान् । तमात्मस्थम्' (कठ. ५-१३) इति, 'यत्साक्षादपरोक्षाद्ब्रह्म' (बृ. ३-४) 'தத்ஸத்யம்' ஸ ஆத்மா' (சா². 6-8) 'நித்யோ நித்யானாம்' சேதனஸ்சேதனாநாமேகோ ப³ஹூனாம்' யோ வித³தா⁴தி காமான் | தமாத்மஸ்த²ம்' (கட². 5-13) இதி, 'யத்ஸாக்ஷாத³பரோக்ஷாத்³ப்³ரஹ்ம' (ப்³ரு'. 3-4)** என்று ஸித்த வஸ்துவை சொல்கிறது. ஆத்மஸ்வரூபமான பரதேவதை த்ரிபுர ஸுந்தரி நித்ய ப்ராப்த வஸ்து. அதாவது எப்பொழுதும் இருக்க கூடிய அடையப்பட்டுள்ள தன்மை உடையவள்.

கழுத்திலே உள்ள முத்தாரம் எங்கே காணோம் என்று தேடி அயர்ந்த ஆப்தனாய் உந்தன் கழுத்திலே உள்ளது என்று அறிந்த காலத்தில் அந்த ஹாரம் புதிதாய் அடையப்பட்டதாக கருதல் மயக்கமே ஆகும். முன்னாலே காணோமே என்று பயந்து தேடும் காலத்தில் கூட கழுத்திலேயே நித்ய ப்ராப்தமாய் அந்த ஆபரணமானது இருக்கிறது. இங்ஙனம் பரதேவதா ஸ்வரூபாத்மாவும் நித்ய ஸித்தமாய் இருக்கின்றது. அறிவால் விமர்ச்சிக்கப்படுவது நித்ய ஸித்த ப்ரஹ்ம அபின்ன ஆத்மஸ்வரூபம் பிரதேவதையே ஆகும். இதுவே மோக்ஷஸ்வரூபம்.

ஸ்தூல, ஸூக்ஷ்மமாகவும் கர்ம உபாஸனையால் பெற கூடிய பலன்கள் நான்கு வகைகள் என்று சொல்லப்படுகின்றன. ஆப்யம், உத்பாத்யம், ஸம்ஸ்கார்யம், விகார்யம். ஆப்யம் என்று சொன்னால் அடைவது. விகாரம் என்று சொன்னால் மாறுபாட்டை அடைவது. உத்பாத்யம் என்று சொன்னால் உற்பத்தி செய்வது. ஸம்ஸ்கார்யம் என்று சொன்னால் தூய்மை அடைவது. இப்படிப்பட்ட நான்கு விதமான கர்மங்களால் அடைய கூடிய வஸ்து பரமாம்பிகை அல்ல. மோக்ஷ ரூபமான பரதேவதா ஸ்வரூபம் நித்ய ஸித்தமாய் இருக்கிறது. உற்பத்தி இல்லை. நித்யமானதால் நாசமும் கிடையாது. வியாபகமாய் இருப்பதால் அடைதல் என்ற காரியத்திற்கு விஷயம் அல்ல. நிர்விகாரியாய் இருப்பதால் ஷட்பாவ விகாரங்கள் இல்லாதவள். அசங்கம் அமலம் நிரந்தரமாய் இருப்பதால் ஸம்ஸ்காரத்திற்கு விஷயமாய் அம்பாள் கிடையாது என்பது இதனுடைய திரண்ட பொருள்.

தர்மம், அர்த்தம், காமம் என்பது த்ரிவர்கங்களாகும். இவ்வுலகத்திலும் வேறு உலகத்திலும் பலன்கள் எந்த பரதேவதையினின்றும் ஸாதகர்கள் பெறுகிறார்களோ அவளே லலிதாம்பிகை. From where you get all the benefits, and to whom all the benefits remain and to whom all the benefits remain and resolve அதுவே பரதேவதை என்று சொல்லப்படுகிறது.

**ॐ लभ्येतरायै नमः ||१९१||**

**ஓம் லப்⁴யேதராயை நம꞉ ||191||**

**लब्धभक्तिसुलभा | (192)**

**லப்³த⁴ப⁴க்திஸுலபா⁴ | 192**

**भक्तिः सामान्यविशेषाकारेण द्विविधा । तत्राद्या आर्तजिज्ञास्वर्थार्थिभिः यैर्लब्धा तत्तत्फलोद्देशेन समयविशेषे विच्छिद्य विच्छिद्य प्राप्ता तेषां सुलभा तत्तत्प्रारब्धानुसारेण फलदानोन्मुखस्वात्मरूपतया संनिहितत्वात् । द्वितीया भक्तिस्तु ब्रह्मसाक्षात्कारवता पुरुषेण येनैकभक्तितया लब्धा, 'एकभक्तिर्विशिष्यते' (गीता ७-१७) इति स्मृतेः; तस्य सुलभा, स्वात्मरूपतया सदा ज्ञायमानत्वात् । 'ज्ञानी त्वात्मैव मे मतम्' (७-१८) इति गीतासु । अथवा, लब्धा प्राप्ता सत्यपि कण्ठगतचामीकरवत् लब्धभक्तीनां सुलभा सुखेनानायासेन कष्टेन विना साध्यतया लाभः प्राप्तिर्यस्याः सा तथा, 'भक्त्या मामभिजानाति' (गीता १८-५५) इति स्मृतेः ||**

**ப⁴க்திः ஸாமான்யவிஶேஷாகாரேண த்³விவிதா⁴ | தத்ராத்³யா ஆர்தஜிஜ்ஞாஸ் - வர்தா²ர்தி²பி⁴ः யைர்லப்³தா⁴ தத்தத்ப²லோத்³தே³ஶேன ஸமயவிஶேஷே விச்சி²த்³ய விச்சி²த்³ய ப்ராப்தா தேஷாம்' ஸுலபா⁴ தத்தத்ப்ராரப்³தா⁴னுஸாரேண ப²லதா³ - னோன்முக²ஸ்வாத்மரூபதயா ஸம்'நிஹிதத்வாத் | த்³விதீயா ப⁴க்திஸ்து ப்³ரஹ்ம - ஸாக்ஷாத்காரவதா புருஷேண யேனைகப⁴க்திதயா லப்³தா⁴, 'ஏகப⁴க்திர்விஶிஷ்யதே' (கீ³தா 7-17) இதி ஸ்ம்ரு'தே:; தஸ்ய ஸுலபா⁴, ஸ்வாத்மரூபதயா ஸதா³ ஜ்ஞாயமான - த்வாத் | 'ஜ்ஞானீ த்வாத்மைவ மே மதம்' (7-18) இதி கீ³தாஸு | அத²வா, லப்³தா⁴ ப்ராப் - தா ஸத்யபி கண்ட²க³தசாமீகரவத் லப்³த⁴ப⁴க்தீனாம்' ஸுலபா⁴ ஸுகே²னானாயா - ஸேன கஷ்டேன வினா ஸாத்⁴யதயா லாப⁴ः ப்ராப்திர்யஸ்யாः ஸா ததா², 'ப⁴க்த்யா மாமபி⁴ஜானாதி' (கீ³தா 18-55) இதி ஸ்ம்ரு'தேः ||**

பக்தி இரண்டு வகை. ஒன்று ஸாமான்ய பக்தி (ஆர்த்தி, அர்த்தார்த்தி , ஜிக்ஞாஸு) என்ற மூன்று அதிகாரிகளால் செய்யக் கூடிய பக்தி. ஆர்த்தி ப்ரதி பலனை எதிர்பார்த்து தனது கஷ்டங்கள் தீர பகவானை பக்தி செய்வது. ஜிக்ஞாஸு பரமேஸ்வரனை அறிவதற்கு பக்தி செய்யப்படுவார்.அர்த்தா ஆர்த்தி தனம், பூமி முதலியவற்றை அடைவதற்காக பக்தி செய்கின்றான். அதனால் அது ஸாமான்ய பக்தி. அந்த பக்தியானது அவரவர்களுக்கு ப்ராரப்த கர்மாவை அனுசரித்து வேண்டக்கூடிய பலனை அருளக்கூடிய வளாய் பராம்பிகை இருக்கிறாள்.

இரண்டாவது விசேஷ ரூப வ்ருத்தி ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரங்களுடைய ஞானிகளால் செய்யக்கூடியது. அதனால் அனன்யமாய் அறியப்படுபவள். **'एकभक्तिर्विशिष्यते' (गीता ७-१७) 'ஏகப⁴க்திர்விஶிஷ்யதே' (கீ³தா 7-17)** என்பது ஸ்ம்ருதி வாக்கியம். அத்தகைய அனன்ய பக்திக்கு சுலபயாய் அகப்படக்கூடியவள். சிவாத்ம ரூபமாகவே ஸதா அறியப்படுபவள். **'ज्ञानी त्वात्मैव मे मतम्' (७-१८) इति गीतासु । 'ஜ்ஞானீ த்வாத்மைவ மே மதம்' (7-18) இதி கீ³தாஸு |** என்பது கீதா வசனம். ஸுகமாயும் யாது ஒரு கஷ்டமின்றியும் மிக ஸுலபமாக பரா பக்தியால் அடையப்படுபவள் லலிதாம்பிகை.

பரா பக்தி என்பது ஒரு வித மாறுபாடு இல்லாத அனன்ய பக்தி. 'மாம் ந அன்ய மிதிஞ்ஞாதவா' என்று கீதையிலே பகவான் பாஷ்யத்தில் கூறுகிறார். கண்ட சாமீகர ஞாயாயம் போல் கழுத்திலே இருக்க கூடிய ஆபரணத்தை போல் நித்யமாயும் ஸித்தமாயும் உள்ள ஸ்வரூப அனுஸந்தான பக்தி.

விவேகசூடாமணியிலே ‘ஸ்வரூப அனுஸந்தான பக்தி’ என்ற வாக்கியம் இருக்கிறது. அப்படி பட்ட பரா பக்தியால் மிகவும் ஸுலபமாய் ஸாக்ஷாத்காரம் ஆகக்கூடியவள் **'भक्त्या मामभिजानाति' (गीता १८-५५) 'ப⁴க்த்யா மாமபி⁴ஜானாதி' (கீ³தா 18-55)** என்பது கீதையினுடைய வாகக்கியம்.

**ॐ लब्धभक्तिसुलभायै नमः ||१९२||**
**ஓம் லப்³த⁴ப⁴க்தி - ஸுலபா⁴யை நமঃ ||192||**

**लाङ्गलायुधा | (193)**
**லாங்க³ளாயுதா⁴ | 193**

**शेषरूपतया हलायुधेत्यर्थः, 'अनन्तश्चास्मि नागानाम्' (गीता १०-२९) इति श्रीभगवद्वचनात् ||**

**ஶேஷரூபதயா ஹலாயுதே⁴த்யர்த²ঃ, 'அனந்தஶ்சாஸ்மி நாகா³னாம்' (கீ³தா 10-29) இதி ஶ்ரீப⁴க³வத்³வசனாத் ||**

‘லாங்கலம்’ என்றால் கலப்பை என்று அர்த்தம். அந்த கலப்பையை ஆயுதமாக உடையவள். கலப்பை ஆயுதமாய் என்றல் பலராமன் என்று அர்த்தம். அதனால் பலராமனின் ஸ்வரூப ரூபிணி. ஆதிசேஷ ரூபிணி என்பது பகவத் வசனம். **'अनन्तश्चास्मि नागानाम्' (गीता १०-२९) 'அனந்தஶ்சாஸ்மி நாகா³னாம்' (கீ³தா 10-29)** என்று கீதையில் வாக்கியம் இருக்கிறது.

**ॐ लाङ्गलायुधायै नमः ||१९३||**
**ஓம் லாங்க³லாயுதா⁴யை நமঃ ||193||**

**लग्नचामरहस्तश्रीशारदापरिवीजिता ।**
**लज्जापदसमाराध्या लंपटा लकुलेश्वरी ॥ ३७ ॥**
**லக்³னசாமரஹஸ்த - ஶ்ரீஶாரதா - ³பரிவீஜிதா |**
**லஜ்ஜாபத³ - ஸமாராத்⁴யா லம்படா லகுலேஶ்வரீ ||37||**

**लग्नचामरहस्तश्रीशारदापरिवीजिता | (194)**
**லக்³னசாமரஹஸ்தஶ்ரீஶாரதா³பரிவீஜிதா | 194**

**लग्नौ करसंबद्धौ घृतावित्यर्थः ; लग्नौ चामरौ ययोस्तौ तादृशौ हस्तौ ययोस्ते श्रीश्च महालक्ष्मीः शारदा च ते, ताभ्यां वीजिता परिवीजिता । अनादिकालादारभ्य परिचर्यया वीज्यमानेत्यर्थः ।**

**லக்³னௌ கரஸம்ப³த்³தௌ⁴ க்⁴ரு’தாவித்யர்த²ঃ ; லக்³னௌ சாமரௌ யயோஸ்தௌ தாத்³ரு’ஶௌ ஹஸ்தௌ யயோஸ்தே ஶ்ரீஶ்ச மஹாலக்ஷ்மீঃ ஶாரதா³ ச தே, தாப்⁴யாம்’ வீஜிதா பரிவீஜிதா | அநாதி³காலாதா³ரப்⁴ய பரிசர்யயா வீஜ்யமானேத்யர்த²ঃ |**

‘ஹஸ்த சாமர’ கைகளிலே பிடித்துக் கொண்டு இருக்கும் சாமரங்களோடும் கூடியவர்களான லக்ஷ்மி, ஸரஸ்வதி அவர்களால் சாமரம் வீசப்பட்டவள். அனாதிகாலங்கள் முதல் திருமகளாலும், வாக்தேவியாலும் சாமரம் வீசும்

பணியிடை மூலமாக உபாஸிக்க கூடியவள். அவர்களால் உபாஸிக்கப் படுபவள் (உபாஸனா மூர்த்தி).

**ॐ लग्नचामरहस्तश्रीशारदापरिवीजितायै नमः ||१९४||**
**ஓம் லக்³னசாமர - ஹஸ்த - ஶ்ரீஶாரதா³ - பரிவீஜிதாயை நம꞉ ||**

**लज्जापदसमाराध्या | (195)**
**லஜ்ஜாபத³ஸமாராத்⁴யா | 195**

**लज्जा नाम अन्तःकरणधर्मः जुगुप्साहैतुः गूहनसाधनम्, उपलक्षणं मनोधर्माणाम्, तस्य पदं आश्रयः; 'कामः संकल्पो षिचिकित्सा श्रद्धाऽश्रद्धा धृतिरधृतिर्ह्रीर्धीर्भीरित्येतत्सर्वं मन एव' (बृ. १-५-३) इति श्रुतेः । तस्मिन् समाराध्या चिन्तनीयेत्यर्थः, 'य आत्मनि तिष्ठन्नन्तरो यमयति' (बृ. ३-७) 'गुहाहितं गह्वरेष्ठं पुराणम्' (कठ. २-१२) 'तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः' (कठ. ५-१२) इत्यादिश्रुतिभ्यः । अथवा, लज्जापदं जीवचक्रम्, तस्मिन् तदधिष्ठानानन्दाभिव्यक्तिहेतुतया बहिर्यागक्रमेण पूजनीयेत्यर्थः ||**

**லஜ்ஜா நாம அந்த꞉கரணத⁴ர்ம꞉ ஜுகு³ப்ஸாஹைது꞉ கூ³ஹனஸாத⁴னம், உபலக்ஷணம்' மனோத⁴ர்மாணாம், தஸ்ய பத³ம்' ஆஶ்ரய꞉; 'காம꞉ ஸங்கல்போ ஷிசிகித்ஸா ஶ்ரத்³தா⁴(அ)ஶ்ரத்³தா⁴ த்⁴ரு'திரத்⁴ரு'திர்ஹ்ரீர்தீ⁴ர்பீ⁴ரித்யேதத்ஸர்வம்' மன ஏவ' (ப்³ரு'. 1-5-3) இதி ஶ்ருதே꞉ | தஸ்மின் ஸமாராத்⁴யா சிந்தனீயேத்யர்த²꞉, 'ய ஆத்மனி திஷ்ட²ன்னந்தரோ யமயதி' (ப்³ரு'. 3-7) 'கு³ஹாஹிதம்' க³ஹ்வரேஷ்ட²ம்' புராணம்' (கட². 2-12) 'தமாத்மஸ்த²ம்' யே(அ)னுபஶ்யந்தி தீ⁴ரா꞉' (கட². 5-12) இத்யாதி³ஶ்ருதிப்⁴ய꞉ | அத²வா, லஜ்ஜாபத³ம்' ஜீவசக்ரம், தஸ்மின் தத³தி⁴ஷ்டா²னான - ந்தா³பி⁴வ்யக்திஹேதுதயா ப³ஹிர்யாக³க்ரமேண பூஜனீயேத்யர்த²꞉ ||**

'லஜ்ஜை' என்பது அந்தக்கரண தர்மம். **'कामः संकल्पो षिचिकित्सा श्रद्धाऽश्रद्धा धृतिरधृतिर्ह्रीर्धीर्भीरित्येतत्सर्वं मन एव' (बृ. १-५-३) 'காம꞉ ஸங்கல்போ விசிகித்ஸா ஶ்ரத்³தா⁴(அ)ஶ்ரத்³தா⁴ த்⁴ரு'திரத்⁴ரு'திர்ஹ்ரீர்தீ⁴ர்பீ⁴ரித்யேதத்ஸர்வம்' மன ஏவ' (ப்³ரு'. 1-5-3)** அதாவது காமம், ஸங்கல்பம், விசிகித்ஸா, ஸ்ரத்தா, அ-ஸ்ரத்தா, த்ருதி, அ-த்ருதி꞉, ஹ்ரீ, என்பன . இவை எல்லாம் அந்தக் கரண தர்மம் என்று த்ருக் த்ருஷ்ய விவேகத்திலே விவரிக்கப்படுகின்றன. அதனால் லஜ்ஜை என்பதை கூறுவதில் மூலமாகவும் உபலக்ஷணமாய் இப்படி சொல்லப்பட்ட அனைத்து மனோ தர்மங்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த பூரணமான மனோ தர்மங்களுக்கு ஆச்ரயமாகி அந்தகாரணத்துக்கு அதிஷ்டானத்தையும் உணர்வையும் தரக்கூடிய ப்ரதான சைதன்ய ஸ்வரூபிணியாய் அம்பாள் இருக்கிறாள். அதனால் இந்த அந்தக்கரண தர்மங்களிலே ஹ்ரீ என்பது உபலக்ஷணமாய் கூறப்படுகிறது. அந்த அம்பாள் **'य आत्मनि तिष्ठन्नन्तरो यमयति' (बृ. ३-७) 'गुहाहितं गह्वरेष्ठं पुराणम्' (कठ. २-१२) 'तमात्मस्थं येऽनुपश्यन्ति धीराः' (कठ. ५-१२) 'ய ஆத்மனி திஷ்ட²ன்னந்தரோ யமயதி' (ப்³ரு'. 3-7) 'கு³ஹாஹிதம்' க³ஹ்வரேஷ்ட²ம்' புராணம்' (கட². 2-12) 'தமாத்மஸ்த²ம்' யே(அ)னுபஶ்யந்தி தீ⁴ரா꞉' (கட². 5-12)** என்பது ஆத்மஸ்வரூபமாய் இருக்க கூடிய பரதேவதையினுடைய ப்ரமாண வாக்கியங்கள்.

அல்லது லஜ்ஜா என்ற பதமானது அநேக ஜீவர்கள் (ஜீவர சக்ரத்தை குறிப்பிடுகின்றது), அதனுடைய அதிஷ்டான ஸ்வரூபா: ஆனந்தத்தின்

அபிவிருத்தியை பொருட்டு பகிர் யாக க்ரமத்தின் படி பூஜிக்கத்தகுந்தவள். பகிரங்க ஸாதனமாய் பூஜிக்க தகுந்தவள்

**ॐ लज्जापदसमाराध्यायै नमः ||१९५||**
**ஓம் லஜ்ஜாபத³ - ஸமாராத்⁴யாயை நம꞉ ||195||**

**लंपटा | (196)**
**லம்படா | 196**

**लमिति पृथ्वीवाचकबीजेन तदुपलक्षितं जगल्लक्ष्यते; पट शब्देन आवारकत्वधर्मवत्तया अविद्या लक्ष्यते; लमः जगतः पटः कारणीभूता अविद्या यस्याः सा तथा, 'मायिनं तु महेश्वरम्' (श्वे. ४-१०) 'य एको जालवान्' (श्वेता, ३-१) इति श्रुतेः । 'अज्ञानेनावृतं ज्ञानम्' (गी. ५-१५) इति स्मृतेश्च । अथवा, लम्पटो नाम तन्द्री आलस्यम्, कर्मोपासनाबाहुल्येऽपि प्रतिबन्धकभूयस्त्वे शीघ्रतया परमेश्वरस्य फलदानोन्मुखतायां राजादिवच्चिरविलम्बितसेवाफलदानवैमुख्ये तद्वत्तोपचारात्; लम्पटो यस्याः सा तथा। अथवा, लम्पटा - दीनामन्तः- करणधर्माणामध्यासवशेन तदवच्छिन्ने चैतन्ये सत्त्वरजस्तमः कार्याणामुपलब्धेस्तद्वत्त्वं वा ||**

**லமிதி ப்ருʼத்²வீவாசகபீ³ஜேன தது³பலக்ஷிதம்ʼ ஜக³ல்லக்ஷ்யதே; பட ஶப்³தே³ன ஆவாரகத்வத⁴ர்மவத்தயா அவித்³யா லக்ஷ்யதே; லம꞉ ஜக³த꞉ பட꞉ காரணீபூ⁴தா அவித்³ - யா யஸ்யா꞉ ஸா ததா², 'மாயினம்ʼ து மஹேஶ்வரம்' (ஶ்வே. 4-10) 'ய ஏகோ ஜாலவான்' (ஶ்வேதா, 3-1) இதி ஶ்ருதே꞉ | 'அஜ்ஞானேனாவ்ருʼதம்ʼ ஜ்ஞானம்' (கீ³. 5-15) இதி ஸ்ம்ருʼ - தேஶ்ச | அத²வா, லம்படோ நாம தந்த்³ரீ ஆலஸ்யம், கர்மோபாஸனாபா³ஹுல்யே - (அ)பி ப்ரதிப³ந்த⁴கபூ⁴யஸ்த்வே ஶீக்⁴ரதயா பரமேஶ்வரஸ்ய ப²லதா³னோன்முக² - தாயாம்ʼ ராஜாதி³வச்சிரவிளம்பி³தஸேவாப²லதா³னவைமுக்²யே தத்³வத்தோபசா - ராத்; லம்படோ யஸ்யா꞉ ஸா ததா² | அத²வா, லம்படாதீ³நாமந்த꞉- கரணத⁴ர்மாணா - மத்⁴யாஸவஶேன தத³வச்சி²ன்னே சைதன்யே ஸத்த்வரஜஸ்தம꞉ கார்யாணாமுபல - ப்³தே⁴ஸ்தத்³வத்த்வம்ʼ வா ||**

'லம்' என்னும் பீஜாக்ஷரம் 'ப்ருத்வி'. அந்த பீஜாக்ஷரத்தின் மூலமாக ஜகத் லக்ஷிணையாய் கூறப்படுகிறது. 'பட' என்னும் பதமானது ஆவரணம் (மறைக்கும்) தன்மையான அவித்யையை தெரிவிக்கின்றது. ஆகவே லம்படா என்பது ஜகத்தை மறைக்கின்ற அஞ்ஞானத்தை தன் வசமாய் வைத்துக் கொண்டுள்ளவள் என்ற அர்த்தம் உடையதாகின்றது.

**'मायिनं तु महेश्वरम्' (श्वे. ४-१०) 'य एको जालवान्' (श्वेता, ३-१) इति श्रुतेः । 'अज्ञानेनावृतं ज्ञानम्' (गी. ५-१५) इति स्मृतेश्च । 'மாயினம்ʼ து மஹேஶ்வரம்' (ஶ்வே. 4-10) 'ய ஏகோ ஜாலவான்' (ஶ்வேதா, 3-1) இதி ஶ்ருதே꞉ | 'அஜ்ஞானேனாவ்ருʼதம்ʼ ஜ்ஞானம்' (கீ³. 5-15) இதி ஸ்ம்ருʼதேஶ்ச |** என்று ஸ்ருதி வாக்கியங்கள் கூறுகின்றன. அஜ்ஞானத்தினால் பராம்பிகையின் ஸ்வரூபமானது மறைக்கப்பட்டு இருக்கின்றது.

'லம்பட' என்பது ஜீவர்களுடைய 'ஆலஸ்யத்தை' குறிக்கின்றது. அவர்கள் சிறந்த கர்மங்களையும், உபாஸனையையும் செய்தாலும் அவர்களுக்கு பல தடைகள் உள்ள காரணத்தினால் பரமேஸ்வரன் சீக்கிரமாக பலனை தருவதற்கு தயாராய்

இருப்பதில்லை. இந்த மாதரி பரமேஸ்வரன் பலன் தருவதிலே நிறுத்திவைப்பாள் (ஹாலத்தியம்) பரதேவதை.

அந்தக்கரண தர்மங்களையும், அந்தக்கரண அவச்சின்ன சைதன்யத்தில் அத்யாஸ பட்சத்தினால் தோன்றும் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களை தோற்றுவிற்பதற்கும்ஆதார பூதமாய் இருக்க கூடியவள் பராம்பிகை.

**ॐ लंपटायै नमः ||१९६||**
**ஓம் லம்படாயை நம꞉ ||196||**

**लकुलेश्वरी | (197)**
**லகுலேஶ்வரீ | 197**

**कुः पृथिव्युपलक्षितजगत् लीयते अस्मिन्निति कुलम्, मायोपाधिकचैतन्यम्, प्रलयाधिष्ठानम् । 'यत्प्रयन्त्यभिसंविशान्त' (तै. ३-१) इति श्रुतेः । लीयमानं कुलं लकुलं निरुपाधिकमित्यर्थः । तच्च सा ईश्वरी च सा तथा । अथवा, लकुलं स्थानविशेषः स्वाधिष्ठानं मणिपूरक वा, तस्येश्वरी, विष्णुरुद्रात्मिकेत्यर्थः, भूतसृष्टिश्रुतौ पृथिव्या उदके तस्य तेजसि तस्य परमात्मनि लयश्रवणात् । 'सदायतनाः सत्प्रतिष्ठाः' (छा. ६-८) इति । तस्येश्वरी विभूतिविशेषो वा ||**

**கு꞉ ப்ரு'தி²வ்யுபலக்ஷிதஜக³த் லீயதே அஸ்மின்னிதி குலம், மாயோபாதி⁴கசை - தன்யம், ப்ரளயாதி⁴ஷ்டா²னம் | 'யத்ப்ரயந்த்யபி⁴ஸம்'- விஶாந்த' (தை. 3-1) இதி ஶ்ருதே꞉ | லீயமானம்' குலம்' லகுலம்' நிருபாதி⁴கமித்யர்த²꞉ | தஞ்ச ஸா ஈஶ்வரீ ச ஸா ததா² | அத²வா, லகுலம்' ஸ்தா²னவிஶேஷ꞉ ஸ்வாதி⁴ஷ்டா²னம்' மணிபூரக வா, தஸ்யேஶ் - வரீ, விஷ்ணுருத்³ராத்மிகேத்யர்த²꞉, பூ⁴தஸ்ரு'ஷ்டிஶ்ருதௌ ப்ரு'தி²வ்யா உத³கே தஸ்ய தேஜஸி தஸ்ய பரமாத்மனி லயஶ்ரவணாத் | 'ஸதா³யதனா꞉ ஸத்ப்ரதிஷ்டா²꞉' (சா². 6-8) இதி | தஸ்யேஶ்வரீ விபூ⁴திவிஶேஷோ வா ||**

'கு:' என்று சொன்னால் அதுவும் ப்ருதிவி பீஜத்தினால் உபலக்ஷிதமாக ஜகத். அந்த ஜகத்தானது எங்கே லயமாகிறதோ அங்கே அதுவே குலம் என்றாகிறது. அதுவே ப்ரளயத்திற்கு அதிஷ்டானம் மாயையை உபாதியாக உடைய சைதன்யஸ்வரூபம் **'यत्प्रयन्त्यभिसं - विश ' (तै. ३-१) 'யத்ப்ரயந்த்யபி⁴ஸம்'- விஶாந்தி ' (தை. 3-1)** என்று தைத்ரீய வாக்கியம் கூறுகிறது. மாயை ஒரு காலத்திலே லயமாவதற்கு உரியது. அதனால் 'மாயா உபாதிகத்வம் நிருபாதிக சைதன்யத்திலே லயமாகும் தன்மையுடையது. ஆதலால் அது லகுலம் என்று இந்த பதத்தால் விவரிக்கப்படுகிறது. நிருபாதிக ஸ்வரூப லகுலமாயும் ஈஸ்வரியாயும் உள்ளவள் பராம்பிகை.

அல்லது லகுலம் என்பது ஒரு ஸ்தான விஷேஷம் என்று கூறப்படுகின்றது. அது ஸ்வாதிஷ்டானமோ அல்லது மணிபூரகமோ. அதற்கு பரமாம்பிகை விஷ்ணு அல்லது ருத்ர ஸ்வரூபிணி என்பது பொருள். பூத ஸ்ருஷ்டியை கூறும் ஸ்ருதி வாக்கியங்களில் 'ப்ருதிவி', 'ஜலத்திலும்', 'ஜலம், 'அக்னியிலும்', 'அக்னி' 'பரமாத்மாவிலும்' லயமாவதை சித்தரிக்கப் படுவதால் அவை அனைத்தும் 'ஸத் ஆயத்தனா:' என்று சொல்லுகிறது. ஸத்திலே ப்ரதிஷ்டையாகி இருக்கிறது என்று

சொல்லப்படுகிறது. ஸத்திலே நிலைபெற்று ஸத்திலே ஒடுங்குகின்றன. அத்தகைய ஸத் ஸ்வரூப ஈஸ்வர மஹிமையை உள்ளடக்கியவள் (விபூதியை உடையவள்) பரமாம்பிகை.

**ॐ लकुलेश्वर्यै नमः ||१९७||**
**ஓம் லகுலேஶ்வர்யை நம꞉ ||197**

**लब्धमाना लब्धरसा लब्धसंपत्समुन्नतिः |**
**हींकारिणी हींकाराद्या हींमध्या हींशिखामणिः ||३८||**
**லப்³த⁴மாநா லப்³த⁴ரஸா லப்³த⁴ஸம்பத் - ஸமுந்நதி꞉ |**
**ஹீங்காரிணீ ஹீங்காராத்³யா ஹீம்'மத்⁴யா ஹீம்'ஶிகா²மணி꞉ ||38||**

**लब्धमाना | (198)**
**லப்³த⁴மானா | 198**

**सर्वैः प्राणिभिः लब्धः मानः अध्यस्ताहंकारः ; 'अभिमानात्मकस्तद्वदहंकारः प्रकीर्त्यते' इति स्मरणात् । अध्यासेनाहंकाराधिष्ठानेत्यर्थः । अथवा 'मान पूजायाम्' इति स्मरणात् यैर्यैः प्राणिभिः विद्यैश्वर्यकुल - सौन्दर्यातिशयादिवशात् पूजा लभ्यते सुखहेतुः सा तदन्तर्यामिना पूर्वमेव लब्धा, पूजादिजन्योपकारस्य सुखादेः स्वस्वरूपतया लब्धत्वात् । यद्वा मानः परिमाणः अणुमहद्दीर्घह्रस्वभेदेन प्रसिद्धः । 'स वा एष महानज आत्मा' (छा. ४-४) 'महान् प्रभुर्वै पुरुषः' (श्वे. ३-१२) 'अणोरणीयान् महतो महीयान्' (कठ. २-२०) इत्यादिवेदवाक्यैर्जलसूर्यादिवदुपाधिधर्माणामुपहिते गजस्तम्बमत्कुणसर्पादौ प्रतीयमानत्वात्, लब्धः मानः परिमाणः उपहिततया जगतः यया सा तथा ||**

**ஸர்வை꞉ ப்ராணிபி⁴꞉ லப்³த⁴꞉ மான꞉ அர்த்⁴யஸ்தாஹங்கார꞉ ; 'அபி⁴மானாத்மகஸ் - தத்³வத³ஹங்கார꞉ ப்ரகீர்த்யதே' இதி ஸ்மரணாத் | அத்⁴யா- ஸேனாஹங்காராதி⁴ - ஷ்டா²னேத்யர்த²꞉ | அத²வா 'மான பூஜாயாம்' இதி ஸ்மரணாத் யைர்யை꞉ ப்ராணிபி⁴꞉ வித்³யைஶ்வர்யகுலஸௌந்த³ர்யாதிஶயாதி³வஶாத் பூஜா லப்⁴யதே ஸுக²ஹேது꞉ ஸா தத³ந்தர்யாமினா பூர்வமேவ லப்³தா⁴, பூஜாதி³ஜன்யோபகாரஸ்ய ஸுகா²தே³꞉ ஸ்வஸ்வரூபதயா லப்³த⁴த்வாத் | யத்³வா மான꞉ பரிமாண꞉ அணுமஹத்³தீ³ர்க⁴ஹ்ரஸ் - வபே⁴தே³ன ப்ரஸித்³த⁴꞉ | 'ஸ வா ஏஷ மஹானஜ ஆத்மா' (சா². 4-4) 'மஹான் ப்ரபு⁴ர்வை புருஷ꞉' (ஶ்வே. 3-12) 'அணோரணீயான் மஹதோ மஹீயான்' (கட². 2-20) இத்யாதி³வேத³ - வாக்யைர்ஜலஸூர்யாதி³வது³பாதி⁴த⁴ர்மாணாமுபஹிதே க³ஜஸ்தம்ப³மத்குணஸர் - பாதௌ³ ப்ரதீயமானத்வாத், லப்³த⁴꞉ மான꞉ பரிமாண꞉ உபஹிததயா ஜக³த꞉ யயா ஸா ததா² ||**

தான் அல்லாத ஒன்றில் 'தான்' என்ற மயக்க புத்தியே 'அஹங்காரம்' அல்லது அபிமானம் என்று சொல்லப்படும். கயிற்றில் இல்லாத பாம்பை, ஆரோபம் செய்வது போல. இல்லாத பாம்பை கயற்றிலே ஆரோபம் செய்வது போல. இந்த மயக்க புத்தியே அஹங்காரம் அல்லது அபிமானம். ஸ்ர்வ ப்ராணிகளும் இந்த அத்யஸ்த அபிமானத்தோடு கூடியவர்கள். இத்தகைய அத்யஸ்தமாய் இருக்கக்கூடிய இந்த அஹங்காரத்திற்கு அதிஷ்டானமாய் விளங்கக்கூடியவள்.

‘மான’ என்பதற்கு தாது வர்க்கம் பூஜாயாம் என்ற அர்த்தம் இருக்கிறது. அப்படி பட்ட அர்த்தத்தின் படி மானம் என்பது பூஜை எனப்படும். பூஜை என்பது வித்யை ஐஸ்வர்யம், உயர்ந்த குலம், அழகு முதலியவற்றின் ஆதிக்கத்தால் ஏற்படுவது. பூஜை என்பது ‘பூஜ்யதா’ அதாவது பூஜாவிற்க்கு உரியதாகும். இதரர்கள் தன்னை கௌரவிப்பதால் ஜீவர்களுக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. இப்படி பட்ட ஸுக ஹே துவாகிய மானம் ஆனந்தமே வடிவமாய் உள்ள பரதேவதைக்கு ஸ்வபாவமாயும் ஸ்வத ஸித்தமாயும் இருக்கிறது. ‘பூஜ்யதா ஸ்வத ஸித்த ஸ்வரூபிணி’ .

மானம் என்பது பரிமாணம் என்று கூட கூறப்படுகிறது. **'अणोरणीयान् महतो महीयान्' (कठ. २-२०) 'அணோரணீயான் மஹதோ மஹீயான்' (கட². 2-20)** என்ற வாக்கியத்திற்கு அர்த்த ஸ்வரூபிணியாய் உள்ளவள் பரமாம்பிகை. எங்ஙனம் ஸூரியன் ஜலத்தின் உபாதியில் ப்ரதிபிம்பித்த காரணத்தினால் அந்த பரிமாணத்தை அடைந்தவன் போல் காணப்படுகின்றானோ அதுபோல பரிமாணங்களுக்கு எல்லாம் அதீதமான சித் ஸ்வரூபமானது பலவித பிராணிகளுக்குடைய உபாதியில் அந்தர்யாமியாக இருக்கும் காரணத்தினால் பரிமாணங்களை அடைந்தது போல் இருக்கிறாள் அல்லது பரிச்சின்னங்களை அடைந்தது போல் இருக்கிறாள் என்பது லப்தமானாயை என்ற நாமத்தின் அர்த்தமாக இருக்கிறது.

**ॐ लब्धमानायै नमः ||१९८||**
**ஓம் லப்³த⁴மாநாயை நம꞉ ||198||**

**लब्धरसा | (199)**
**லப்³த⁴ரஸா | 199**

**'रसो वै सः' (तै २-७) इति श्रुतेः रसवत् रस्यते संबध्यत इति अत्यन्तश्रीतिविषयः आनन्दः, सः स्वस्वरूपत्वेन लब्धो यया सा तथा । शृङ्गाररसो वा, तव्यञ्जकमङ्गलाभरणपुष्पालंकारवत्त्वादिति भावः । शुद्धसत्त्वप्रधानमायोपाधिकतया, 'रस्याः स्निग्धाः स्थिरा हृद्याः आहाराः सात्त्विकप्रियाः' (गी. १७-८) इति गीतावचनात् नैवेद्यादौ कट्वाम्ललवणादीनां देवादिविषये निषेधाच्च प्रीतिविषयत्वेन मधुररसो लब्धो ययेति वा तथा ||**

**'ரஸோ வை ஸ꞉' (தை 2-7) இதி ஶ்ருதே꞉ ரஸவத் ரஸ்யதே ஸம்ப³த்⁴யத இதி அத்யந்தஶ்ரீதிவிஷய꞉ ஆனந்த³꞉, ஸ꞉ ஸ்வஸ்வரூபத்வேன லப்³தோ⁴ யயா ஸா ததா² | ஶ்ரு’ங்கா³ரரஸோ வா, தவ்த்³யஞ்ஜகமங்க³ளாப⁴ரணபுஷ்பாலங்காரவத்த்வாதி³தி பா⁴வ꞉ | ஶுத்³த⁴ஸத்த்வப்ரதா⁴னமாயோபாதி⁴கதயா, 'ரஸ்யா꞉ ஸ்னிக்³தா⁴꞉ ஸ்தி²ரா ஹ்ரு’த்³யா꞉ ஆஹாரா꞉ ஸாத்த்விகப்ரியா꞉' (கீ³. 17-8) இதி கீ³தாவசனாத் நைவேத்³யாதௌ³ கட்வாம்லலவணாதீ³னாம்’ தே³வாதி³விஷயே நிஷேதா⁴ச்ச ப்ரீதிவிஷயத்வேன மது⁴ரரஸோ லப்³தோ⁴ யயேதி வா ததா² ||**

**'रसो वै सः' (तै २-७) 'ரஸோ வை ஸ꞉' (தை 2-7)** என்பது உபநிஷத்தின் வாக்கியம். ப்ரஹ்ம ஸ்வரூபத்தை குறிக்கிறது. ‘ரஸம்’ என்பது பரம ப்ரேமைக்கு விஷயமாய் உள்ள ஆனந்த ஸ்வரூபம். அந்த ஆனந்த ஸ்வரூபத்தை உடையவள் லலிதாம்பிகை. ‘ரஸம்’ – நவரஸங்களிலே சிறந்ததான ஸ்ருங்கார ரஸத்தை

குறிக்கின்றது என்று கவிஞர்கள் கூறுவார்கள். ஸ்ருங்கார ரஸத்தை உண்டாக்கி அதைப் போற்றக்கூடிய ஆபரணங்கள், புஷ்ப அலங்காரங்கள், வாசனை, சந்தன பூச்சு முதலிய மங்கள பொருட்களை நித்ய ஸித்யமாய் அடைந்தவள் லலிதாம்பிகை.

**'रस्याः स्निग्धाः स्थिरा हृद्याः आहाराः सात्त्विकप्रियाः' (गी. १७-८) 'ரஸ்யாः ஸ்னிக்³தா⁴ः ஸ்தி²ரா ஹ்ரு'த்³யாः ஆஹாராः ஸாத்த்விகப்ரியாः' (கீ³. 17-8)** என்னும் கீதையின் வசனத்தின் படி பரதேவதையானவள் ஶுத்த ஸத்வ ப்ரதான மாயா உபாதியை உடையதால் ஸத்வ ஆஹாரமாகிய மதுர ரஸத்தை எப்பொழுதும் அடைந்துள்ளவள். மதுர ரஸத்தின் ப்ரதி பிம்பமாய் இருக்க கூடியவள். தேவதைகளுக்கு கசப்பு, காரம், உவர்ப்பு முதலிய ரஸமுள்ள பண்டங்களை நைவேத்தியம் செய்ய கூடாது என்பதை ஒரு பாடமாய் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ॐ लब्धरसायै नमः ||१९९||**
**ஓம் லப்³த⁴ரஸாயை நமः ||199||**

**लब्धसंपत्समुन्नतिः | (200)**
**லப்³த⁴ஸம்பத்ஸமுன்னதிः | 200**

**लब्धाः स्वस्वरूपतया स्वतःसिद्धाः याः संपदः सत्यकामत्वादयः सच्चिदानन्दादयो वा, ताभिः समुन्नतिः सर्वोत्कृष्टता यस्याः सेति तथा। ब्रह्मणः मायामात्रोपाधिना अभिव्यज्यमानाः गुणाः कर्मानुद्भूतत्वादनाकस्मिकाः सन्तः सर्वोत्कृष्टभावं ब्रह्मणः ज्ञापयन्ति । 'तमीश्वराणां परमं महेश्वरं तं देवतानां परमं च दैवतम् । पतिं पतीनां परमं पुरस्ताद्विदाम देवं भुवनेशमीड्यम् ॥', (श्वे. ६-७) 'सत्यकामः सत्यसंकल्पः' (छा. ८-१), 'एष सर्वेश्वर एष सर्वज्ञ एपोऽन्तर्याम्येष योनिः सर्वस्य (माण्डू) इति, 'गतिर्भर्ता प्रभुः साक्षी' (गी. ९-१८) इत्यादिश्रुनिस्मृतिशतेभ्यः । 'एष नित्यो महिमा ब्राह्मणस्य' (वृ. ४-४) इति प्रसिद्धनित्योत्कर्षवत्त्वं ब्रह्मस्वरूपमेवेति नात्र विचारणीयं किंचिदस्तीत्यभिप्रायः ।।**

**லப்³தா⁴ः ஸ்வஸ்வரூபதயா ஸ்வதःஸித்³தா⁴ः யாः ஸம்பத³ः ஸத்யகாமத்வாத³யः ஸச்சிதா³னந்தா³த³யோ வா, தாபி⁴ः ஸமுன்னதிः ஸர்வோத்க்ரு'ஷ்டதா யஸ்யாः ஸேதி ததா² | ப்³ரஹ்மணः மாயாமாத்ரோபாதி⁴னா அபி⁴வ்யஜ்யமானாः கு³ணாः கர்மானுத்³ - பூ⁴தத்வாத³னாகஸ்மிகாः ஸந்தः ஸர்வோத்க்ரு'ஷ்டபா⁴வம்' ப்³ரஹ்மணः ஜ்ஞாபயந்தி | 'தமீஶ்வராணாம்' பரமம்' மஹேஶ்வரம்' தம்' தே³வதானாம்' பரமம்' ச தை³வதம் | பதிம்' பதீனாம்' பரமம்' புரஸ்தாத்³விதா³ம தே³வம்' பு⁴வனேஶமீட்³யம் ..', (ஶ்வே. 6-7) 'ஸத்யகாமः ஸத்யஸங்கல்பः' (சா². 8-1), 'ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ ஸர்வஜ்ஞ ஏபோ - (அ)ந்தர்யாம்யேஷ யோனிः ஸர்வஸ்ய (மாண்டூ³) இதி, 'க³திர்ப⁴ர்தா ப்ரபு⁴ः ஸாக்ஷீ' (கீ³. 9-18) இத்யாதி³ஶ்ருநிஸ்ம்ரு'திஶதேப்⁴யः | 'ஏஷ நித்யோ மஹிமா ப்³ராஹ்மணஸ்ய' (வ்ரு'. 4-4) இதி ப்ரஸித்³த⁴நித்யோத்கர்ஷவத்த்வம்' ப்³ரஹ்மஸ்வரூபமேவேதி நாத்ர விசாரணீயம்' கிஞ்சித³ஸ்தீத்யபி⁴ப்ராயः ||**

இதிலே ஒரு பாட பேதம் இருக்கிறது லப்த- ஸம்பத்- ஸமுன்- நதி:. தீபிகாவிலே கொடுக்கப்பட்டுள்ள நாமத்திலே 'நாத்யை' என்று தீர்க்கமாய் இருக்கிறது. அதனால் லப்த ஸம்பத் ஸமுன் நதி: என்பதற்கு என்ன அர்த்தம் என்றால் ஸத்ய

காமம், ஸத்ய ஸங்கல்பம், ஸத்ய ஸச்சிதானந்தம் முதலிய ஸம்பத்துக்களின் உயர்ச்சி ஸ்வரூபமாக விளங்க கூடிய உத்க்ருஷ்ட தன்மை உடையவள் பரமாம்பிகை. சித் சக்தியின் அபின்னமான ப்ரஹ்மத்திற்கு மாயை என்னும் உபாதி மாத்திரத்தினால் தோன்றும் குணங்கள் கர்மத்தினால் தோன்றுபவை அல்ல. அவை எப்பொழுதும் தோன்றுவன அல்ல. உபாதி உள்ளவரை தோன்றுகின்றன. அதனால் ஸர்வ உத்க்ருஷ்டமான வஸ்து உபாதியின் மூலமாய் அறியப்படுகிறது.

‘மித்யா ஆத்ம ப்ரகாச னாய’ **'तमीश्वराणां परमं महेश्वरं तं देवतानां परमं च दैवतम् । पतिं पतीनां परमं पुरस्ताद्विदाम देवं भुवनेशमीड्यम् ॥', (श्वे. ६-७) 'सत्यकामः सत्यसंकल्पः' (छा. ८-१), 'एष सर्वेश्वर एष सर्वज्ञ एपोऽन्तर्याम्येष योनिः सर्वस्य (माण्डू) इति, 'गतिर्भर्ता प्रभुः साक्षी' (गी. ९-१८) 'தமீஶ்வராணாம்’ பரமம்’ மஹேஶ்வரம்’ தம்’ தே³வதானாம்’ பரமம்’ ச தை³வதம் | பதிம்’ பதீனாம்’ பரமம்’புரஸ்தாத்³விதா³ம தே³வம்’ பு⁴வனேஶமீட்³யம் ..', (ஶ்வே. 6-7) 'ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:' (சா². 8-1), 'ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ ஸர்வஜ்ஞ ஏபோ(அ)ந்தர்யாம்யேஷ யோனி: ஸர்வஸ்ய (மாண்டூ³) இதி, 'க³திர்ப⁴ர்தா ப்ரபு⁴: ஸாக்ஷீ' (கீ³. 9-18)** என்ற வாக்கியங்களினால் க்ஷேத்ரஜும் ஸர்வ க்ஷேத்ரேஷு என்ற சைதன்ய ஸ்வரூபிணியாய் இருக்க கூடியவள் பரமாம்பிகை. ப்ரஹ்ம அபின்ன பரதேவதையின் உத்க்ருஷ்ட தன்மையிலே இவை அனைத்தும் கூறப்படுகின்றன. **'एष नित्यो महिमा ब्राह्मणस्य' (वृ. ४-४) 'ஏஷ நித்யோ மஹிமா ப்³ராஹ்மணஸ்ய' (வ்ரு’. 4-4)** என்னும் வாக்கியம் இதற்கு ப்ரமாணமாய் இருக்கிறது. இந்த இருநூறு நாமாக்களிலே விஸ்தரிக்கப்பட்ட லலிதா தேவியினுடைய ஸ்வரூபமானது ஶுத்த சைதன்யஸ்வரூபம். உபாதியானது கற்பிக்கப்பட்ட உபாதி என்பது நமக்கு தெளிவாகிறது.

**ॐ लब्धसंपत्समुन्नत्यै नमः ||२००||**
**ஓம் லப்³த⁴ஸம்பத் - ஸமுந்நத்யை நம: ||200||**

## ह्रींकारिणी | (201)
**ஹ்ரீங்காரிணீ | 201**

**ह्रींकारः द्वितीयखण्डसमाप्त्यवयवतया वाच्यवाचकसंबन्धेन अस्या अस्तीति तथा ||**

**ஹ்ரீங்கார: த்³விதீயக²ண்ட³ஸமாப்த்யவயவதயா வாச்யவாசகஸம்ப³ந்தே⁴ன அஸ் - யா அஸ்தீதி ததா² ||**

‘கூடஸ்த்ரய கலேபரா’ என்று லலிதா ஸஹஸ்ரநாமத்திலே மூன்று நிலைகள் பரதேவதைக்கு கூறப்படுகின்றன. அந்த மூன்று நிலைகளாவது வாக்பவ கூடம், காமராஜ கூடம், சக்தி கூடம். அவைகள் முறையை காதி வித்யா, ஹாதி வித்யா, ஸாதி வித்யா. முறையே இச்சா, க்ரியா, ஞான சக்தியை அவை தெரிவிக்கின்றன. அப்படி பட்ட மூன்று கூடங்களிலே இரண்டாவது ஸ்தானத்திலே உள்ள அவயவமாக ‘ஹ்ரீம்’காரம் குறிப்பிடப் படுகிறது. அதாவது ஹ்ரீம்கார வடிவமாய் இருக்கும் பரதேவதை. இந்த ஹ்ரீம் காரத்துக்கும், பரதேவதைக்கும் வாக்ய வாசக சம்பந்தம் என்று பகவான் ஆதி சங்கரர் குறிப்பிடுகிறார்.

வாசகம் என்றால் ஒரு அர்த்தம் உள்ள சொல் என்று அர்த்தம். வாக்கியம் என்றால் அந்த அர்த்தமுள்ள சொல்லால் குறிப்பிட கூடிய வஸ்து. அதாவது ஹ்ரீம் காரத்தால் குறிப்பிடக்கூடிய வஸ்து பரதேவதை என்று வாக்ய வாசக சம்பந்தம் என்று இரண்டாவது கூட்டத்தின் அதிபதியாக பரதேவதை குறிப்பிடப்படுகிறாள். இந்த பீஜாக்ஷரமானது குறிப்பிடப்படுகிறது.

**ॐ ह्रींकारिण्यै नमः ||२०१||**
**ஓம் ஹ்ரீங்காரிண்யை நம: ||201||**

**ह्रींकाराद्या | (202)**
**ஹ்ரீங்காராத்$^3$யா| 202**

**अत्र ह्रींकारशब्देन तत्कार्यभूता: वेदाः, तेषामप्यर्थतया कारणतया वा आद्या आदौ भवा पूर्वभावि - नीत्यर्थः । शब्दस्य अर्थविषयत्वेन प्रवृत्तेः शक्तिग्रहादौ काव्यादिकृतौ च अर्थज्ञानपूर्वकशब्दप्रयोग - दर्शनादर्थस्य पूर्वभावित्वमुक्तमिति भावः ||**

**அத்ர ஹ்ரீங்காரஶப்$^3$தே$^3$ன தத்கார்யபூ$^4$தா: வேதா$^3$:, தேஷாமப்யர்த$^2$தயா காரணதயா வா ஆத்$^3$யா ஆதௌ$^3$ ப$^4$வா பூர்வபா$^4$வினீத்யர்த$^2$: | ஶப்$^3$த$^3$ஸ்ய அர்த$^2$ - விஷயத்வேன ப்ரவ்ரு'த்தே: ஶக்திக்$^3$ரஹாதௌ$^3$ காவ்யாதி$^3$க்ரு'தௌ ச அர்த$^2$ஜ்ஞான - பூர்வகஶப்$^3$த$^3$ப்ரயோக$^3$த$^3$ர்ஶநாத$^3$ர்த$^2$ஸ்ய பூர்வபா$^4$வித்வமுக்தமிதி பா$^4$வ: ||**

'ஹ்ரீம்' என்று சொன்னாலும் 'ஓம்' என்று சொன்னாலும் ஒன்றுதான். அதனால் வேதத்தின் மூலம். 'ஸர்வே வேதா: யத்பதம் ஆமனந்தி' என்ற வாக்கியத்தின் படி அந்த ஓம்காரம் என்பதும் ஹ்ரீம் என்பதும் வேதங்கள். அதனுடைய காரியம் வேதங்கள். ப்ரணவத்தின் காரியம் வேதங்கள். ஏனென்றால் ஸப்த ப்ரபஞ்சம் அனைத்தையும் உள்ளடக்கியது ஓம்காரம். அதுவே ஹ்ரீம்காரம். அந்த வேதத்தின் மூலமாய் இருக்க கூடிய மூல வடிவமாய் இருக்க கூடிய ஹ்ரீம் காரத்திற்கு அதற்கும் ஆதியாய் விளங்குபவள் 'சப்தா தீத ஸ்வரூபிணி'.

சப்தங்களுக்கு எல்லாம் ஒரு அர்த்த விஷயம் இருந்தால் தான் ப்ரவ்ருத்தியே ஏற்படும். காவ்யம் முதலியவற்றிலே சக்தி வ்ருத்தி இருக்க வேண்டும். அர்த்த ஞானத்தோடு தான் எல்லா ஸப்தங்களும் ப்ரயோகிக்கப் படுவதால், சப்தத்திற்கு முன் அர்த்தம் ஏற்பட்டு இருக்க வேண்டும் என்பது ஸித்தமாகிறது. அதாவது ஒரு உதாரணம் கொடுக்க வேண்டும் என்றால் இலக்கணம் வருவதற்கு முன்னாலேயே சமஸ்க்ருத மொழி இருந்தது போல. அதனால் சப்தத்திற்கு முன் அர்த்தம் ஏற்பட்டு இருக்க வேண்டும் என்பது ஸித்திக்கிறது. 'ஹ்ரீம்' என்னும் இந்த ப்ரணவத்திற்கு ஆதி ரூபா அர்த்தமாய் அல்லது ஸ்வரூபமாய் விளங்க கூடியவள் லலிதா த்ரிபுர ஸுந்தரி.

**ॐ ह्रींकाराद्यायै नमः ||२०२||**
**ஓம் ஹ்ரீங்காராத்$^3$யாயை நம: ||202||**

**ह्रींमध्या | (203)**

**ஹ்ரீம்’மத்⁴யா |203**

**अस्य बीजस्य जगदभिन्नानिमित्तोपादानभूतमायाविशिष्टचैतन्यवाचकतया तत्प्रतीकत्वेन तन्निष्ठयाव - द्गुणवत्त्वं तदुपासनातिशयमहिम्नाभिव्यज्यते । अन्यथा मन्त्रपुरश्चर्यास्विष्टासद्धयभावप्रसङ्गः स्यात् । अव्यवहितपूर्वनाम्नानभिव्यक्तस्वरूपस्यापि शब्दजालस्य एतद्बीजमात्रात्मनैवाङ्कुरि तबीजार्थवत्तया पूर्व - भावित्वमुक्तम् । इदानीमभिव्यक्तात्मकत्वार्थकतया विवर्तवादमाश्रित्य वाचारम्भणाकारेण नामरूप द्वयषत्त्वमुच्यते । ह्रींकारबीजार्थः तेन शब्देन लक्ष्यते । मध्ये व्यवहारकाले ह्रीं यस्याः सा तथा । घटादिषु वस्तुषु सच्चिदानन्दप्रतीत्या व्यवहारकालेऽपि प्रपञ्चकारणं ब्रह्मानुस्यूततया भासमानं जगत्कारणमिति सिद्धान्तः । अनेनाचेतनपरिणामारम्भादिवादाः निष्प्रमाणतया युक्त्याद्याभासकत्वेन निरस्ताः वेदितव्याः ||**

**அஸ்ய பீ³ஜஸ்ய ஜக³த³பி⁴ன்னாநிமித்தோபாதா³னபூ⁴தமாயாவிஶிஷ்டசைதன்ய - வாசகதயா தத்ப்ரதீகத்வேன தந்நிஷ்ட²யாவத்³கு³ணவத்த்வம்’ தது³பாஸனாதிஶய - மஹிம்நாபி⁴வ்யஜ்யதே | அன்யதா² மந்த்ரபுரஶ்சர்யாஸ்விஷ்டாஸத்³த⁴யபா⁴வப்ர - ஸங்க³ஃ ஸ்யாத் | அவ்யவஹிதபூர்வநாம்னானபி⁴வ்யக்தஸ்வரூபஸ்யாபி ஶப்³த³ஜா - லஸ்ய ஏதத்³வீஜமாத்ராத்மனைவாங்க்ரு’ரிதபீ³ஜார்த²வத்தயா பூர்வபா⁴வித்வமுக்தம் | இதா³னீமபி⁴வ்யக்தாத்மகத்வார்த²கதயா விவர்தவாத³மாஶ்ரித்ய வாசாரம்ப⁴ணா - காரேண நாமரூபத்³வயஷத்த்வமுச்யதே | ஹ்ரீங்காரபீ³ஜார்த²ஃ தேன ஶப்³தே³ன லக்ஷி - யதே | மத்⁴யே வ்யவஹாரகாலே ஹ்ரீம்’ யஸ்யாஃ ஸா ததா² | க⁴டாதி³ஷு வஸ்துஷு ஸச்சிதா³னந்த³ப்ரதீத்யா வ்யவஹாரகாலே(அ)பி ப்ரபஞ்சகாரணம்’ ப்³ரஹ்மானுஸ் - யூததயா பா⁴ஸமானம்’ ஜக³த்காரணமிதி ஸித்³தா⁴ந்தஃ | அனேனாசேதனபரிணாமா - ரம்பா⁴தி³வாதா³ஃ நிஷ்ப்ரமாணதயா யுக்த்யாத்³யாபா⁴ஸகத்வேன நிரஸ்தாஃ வேதி³ - தவ்யாஃ ||**

இந்த ‘ஹ்ரீம்’ என்கிற பீஜம் ஜகத்திற்கு அபின்ன நிமித்த உபாதான காரணமாகும். ‘**मायाविशिष्टचैतन्य**’ ‘**மாயாவிஶிஷ்டசைதன்ய**’ என்று ஒரு வாசகம். இது ஒரு பொருளுள்ள ஸப்தம். அவ்யக்த மாயையை உபாதியாய் இருக்க கூடிய இந்த ஹ்ரீம் பீஜம். அந்த வாசகமாய் இருப்பதினாலே வாக்கியம் என்ன என்று கேட்டால் மாய விஸிஷ்ட சித் சக்தியின் வ்யக்தம் என்று எடுத்து கொள்ளலாம். இந்த மாயா உபாதி சித் சக்தியினுடைய ப்ரதீகமாகும். அப்படி பட்ட ஹ்ரீம் கார உபாஸனையினால், இந்த சக்தியினிடத்திலே இருக்கக்கூடிய உபாஸனை எல்லாம் ப்ரகாசிக்கின்றன.

அதனால் ‘ஹ்ரீம்’ கார புரஸ்சரணத்தின் மூலமாக அபீஷ்ட ஸித்தி ஏற்படுகிறது என்று பகவான் சங்கரர் கூறுகிறார். ‘ஹ்ரீம்காராத்யா’ என்ற நாமத்தில் அபீஷ்ட ஸ்வரூபமான சப்த காரியங்களுக்கு ‘ஹ்ரீம்’ என்ற பீஜாக்ஷரம் அர்த்தமானதால் அர்த்தம் முன்னால் உண்டாகியிருக்கிறது என்று கூறப்பட்டது. வ்யக்தமாக இங்கே கூறக்கூடிய நாமாவிலே இந்த ஜகத் ஸ்ருஷ்டி விவர்த்த வாதத்தை ஆஸ்ரயித்து சப்தம், அர்த்தம் என்று நாம ரூபங்கள் கூறப்படுகின்றன.

‘வாசாரம் பணம் விகாரோ நாம தேயம் ம்ருத்திகா இத்யேவ ஸத்யம்’ என்ற சாந்தோக்ய உபநிஷத் ஸ்ருதி இதற்கு ப்ரமாணமாய் இருக்கிறது. ‘ஹ்ரீம்’ பீஜத்தின் அர்த்தமானது லக்ஷணா வ்ருத்தியால் குறிப்பிடப்படுகிறது. லக்ஷணா வ்ருத்தி

என்று சொன்னால் ஜகத் லக்ஷணம், அஜகத் லக்ஷணம். ஜகத் அஜகத் லக்ஷணம் என்று பாகத்தியாக லக்ஷணத்தினால் சைதன்யஸ் ஸ்வரூபம் குறிப்பிடப்படுகிறது.

ப்ரபஞ்சத்தினுடைய ஸ்திதி காலத்திலும், மத்தியமான விவகார காலத்திலும் அதன் காரணமாக பிரகாசிக்க கூடியவள் பரதேவதை. சாதாரணமாய் இருக்க கூடிய உலக பொருட்களிலே நாம ரூப விவகார காலத்திலும் கூட 'போதம், போதம் ப்ரதி போதம்' என்பது போல ஒரு ஒரு ஸச்சிதானந்த ப்ரக்ருதியின் உண்மை என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த சித் சக்தி அபின்ன ப்ரஹ்ம ஸ்வரூபமானது ஒரு ஒரு பொருளிலும் விளங்குகின்றது. இதுவே ஜகத் காரணம் என்று சொல்லப்படுகிறது. 'ஸ தேவ ஸௌம்ய இதம் அக்ரே ஆஸீத் ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம' என்பது ப்ரமாண வாக்கியம்.

அதனால் சேதன அசேதன வாதங்கள், பரிணாம ஆரம்ப வாதங்கள் எல்லாம் தன்னுடைய ப்ரமாண தன்மையை இழந்து விட்டு அபின்ன நிமித்த விவர்த்த உபாதான காரணமாய் ப்ரஹ்மஸ்வரூபம் என்று இதனுடைய உள்ளார்த்தமாய் கூறப்படுகிறது.

**ॐ ह्रींमध्यायै नमः ||२०३||**
**ஓம் ஹ்ரீம்'மத்⁴யாயை நம: ||203||**

**ह्रींशिखामणिः | (204)**
**ஹ்ரீம்'ஶிகா²மணி: | 204**

**लोके यथा चूडामणिः सर्वाङ्गरचिताभरणापेक्षया तद्विजातीयप्रकाशसत्ताद्याश्रयवान् उत्तमाङ्गस्था - नविशेषे स्थापितः महदैश्वर्यादि तद्वतः पुरुषस्य ज्ञापयति, तथा सर्वशब्दजालतद्वाच्यार्थभूतचिज्जडसम्ब - न्धरूप प्रपञ्चवाचकातिसूक्ष्म ह्रींवर्णात्मक श्रीविद्याराजबीजस्य सत्यज्ञानानन्दात्मकलक्ष्यार्थभूता सती ह्रींबीजजापकानां सर्वार्थप्रदानेन पारमैश्वर्यं व्यञ्जयतीति गुणयोगकृतनामेदम् । तथा च ह्रीमः शिखा - मणिः परमतात्पर्येण ज्ञापयतीत्यर्थः ||**

**லோகே யதா² சூடா³மணி: ஸர்வாங்க³ரசிதாப⁴ரணாபேக்ஷயா தத்³விஜாதீயப்ரகாஶ - ஸத்தாத்³யாஶ்ரயவான் உத்தமாங்க³ஸ்தா²னவிஶேஷே ஸ்தா²பித: மஹதை³ஶ் - வர்யாதி³ தத்³வத: புருஷஸ்ய ஜ்ஞாபயதி, ததா² ஸர்வஶப்³த³ஜாலதத்³வாச்யார்த² - பூ⁴தசிஜ்ஜட³ஸம்ப³ந்த⁴ரூப ப்ரபஞ்சவாசகாதிஸூக்ஷ்ம ஹ்ரீம்'வர்ணாத்மக ஶ்ரீவித்³யா - ராஜபீ³ஜஸ்ய ஸத்யஜ்ஞானானந்தா³த்மகலக்ஷ்யார்த²பூ⁴தா ஸதீ ஹ்ரீம்பீ³ஜஜாபகா - னாம்' ஸர்வார்த²ப்ரதா³னேன பாரமைஶ்வர்யம்' வ்யஞ்ஜயதீதி கு³ணயோக³க்ரு'த - நாமேத³ம் | ததா² ச ஹ்ரீம: ஶிகா²மணி: பரமதாத்பர்யேண ஜ்ஞாபயதீத்யர்த²: ||**

'சிகாமணி' என்றால் சூடாமணி என்று அர்த்தம். தலையிலே சூடிக் கொள்ளக்கூடிய ஒரு ஆபரணம். விவேகசூடாமணி (The crest jewel of the discrimination) சிரஸிலே சூடிக்கொள்ள கூடிய அந்த ஆபரணமானது மற்ற அவயங்களிலே போட்டுக்கொள்ள படுகின்ற ஆபரணங்களை காட்டிலும் உத்க்ருஷ்டமானது . அது தன்னை அணிந்து கொண்டு இருக்கிற அந்த புருஷனை அவனுடைய நிதி நிலைமை அவனுடைய மற்றொரு காம்பீர்யத் தன்மை முதலியவற்றை

தெரிவிக்கின்றது. அதைப்போல ஸர்வ சப்த ப்ரபஞ்சத்திற்கும் அவற்றின் வாக்யார்த்தங்களான சித் ஜட ஸம்பந்த ரூப ஸர்வ (இது என்று சுட்டிக்காட்ட கூடிய ஜகத்திற்கும்) வாசகமாகவும் அதி ஸூக்ஷமமாயும் உள்ள 'ஹ்ரீம்' என்னும் பீஜமானது ஸ்ரீவித்தையின் சிரஸிலே ராஜ அக்ஷரமாய் விளங்குகின்றது. தன்னை ஜபம் செய்யும் உபாஸகர்களுக்கு அவரவர் வேண்டக்கூடிய அபீஷ்டங்களை அருளி பின்னால் பரம ஐஸ்வர்யமாகும் ஸச்சிதானந்த அகண்ட ஏக ரஸ ஸ்திதியை அருள்பாலிக்கின்றது இந்த நாமமானது அறிவிக்கின்றது.

சிகாமணியாகும் ஹ்ரீம்கார ரூபிணியே பரதேவதை என்பது அதனுடைய பாவார்த்தமாய் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஸ்வரூப அர்த்தமாய் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**ॐ ह्रींशिखामणये नमः ||२०४||**
**ஓம் ஹ்ரீம்'ஶிகா²மணயே நம꞉ ||204||**

**ह्रींकारकुण्डाग्निशिखा ह्रींकारशशिचन्द्रिका |**
**ह्रींकारभास्कररुचिर्ह्रींकाराम्भोदचञ्चला ||३९||**
**ஹ்ரீங்கார - குண்டா³க்³நி - ஶிகா² ஹ்ரீங்கார - ஶஶி - சந்த்³ரிகா |**
**ஹ்ரீங்கார - பா⁴ஸ்கரருசிர் - ஹ்ரீங்காராம்போ⁴த³ - சஞ்சலா ||39||**

**ह्रींकारकुण्डाग्निशिखा | (205)**
**ஹ்ரீங்காரகுண்டா³க்³நிஶிகா² | 205**

**ह्रींकार एव कुण्डं वाच्यवाचकसंबन्धेन परब्रह्मावच्छेदकतया आहवनीयादिसदृशम्, तस्याग्निशिखा, 'उद्दीप्तेऽग्नौ जुहोति' - इति प्रमाणेन 'आहवनीये जुहोति' इति विधिवाक्यावगतहोमाधारतायाः केवलाहवनीयस्यायोग्यतया साग्निज्वालस्य होमाधारतायां ज्ञायमानायामदृष्टद्वारा स्वर्गसंबन्धेन स्वार्थकतया तज्ज्ञापकवेदवाक्यस्यापि पुरुषार्थसंबन्धित्वमाहवनीयनिष्ठहोमाधिकरण दीप्ताग्निज्वाला स्वाधारभूतकुण्डसार्थक्यसंपादिकेवाभाति । तथा स्ववाचकबीजस्यापि 'मन्त्रैरुपासीत' इति विधिगत - देवतोपासनकरणानां मन्त्राणामपि स्ववाचकतया सार्थक्यसंपादनात्तथोच्यते ||**

**ஹ்ரீங்கார ஏவ குண்ட³ம்' வாச்யவாசகஸம்ப³ந்தே⁴ன பரப்³ரஹ்மாவச்சே²த³கதயா ஆஹவனீயாதி³ஸத்³ரு'ஶம், தஸ்யாக்³நிஶிகா², 'உத்³தீ³ப்தே(அ)க்³னௌ ஜுஹோதி' - இதி ப்ரமாணேன 'ஆஹவனீயே ஜுஹோதி' இதி விதி⁴வாக்யாவக³தஹோமாதா⁴ர - தாயா꞉ கேவலாஹவனீயஸ்யாயோக்³யதயா ஸாக்³நிஜ்வாலஸ்ய ஹோமாதா⁴ரதா - யாம்' ஜ்ஞாயமானாயாமத்³ரு'ஷ்ட²த்³வாரா ஸ்வர்க³ஸம்ப³ந்தே⁴ன ஸ்வார்த²கதயா தஜ்ஜ்ஞாபகவேத³வாக்யஸ்யாபி புருஷார்த²ஸம்ப³ந்தி⁴த்வமாஹவனீயநிஷ்ட²ஹோ - மாதி⁴கரண தீ³ப்தாக்³நிஜ்வாலா ஸ்வாதா⁴ரபூ⁴தகுண்ட³ஸார்த²க்யஸம்பாதி³கேவா - பா⁴தி | ததா² ஸ்வவாசகபீ³ஜஸ்யாபி 'மந்த்ரைருபாஸீத' இதி விதி⁴க³ததே³வதோ - பாஸனகரணானாம்' மந்த்ராணாமபி ஸ்வவாசகதயா ஸார்த²க்யஸம்பாத³னாத்த - தோ²ச்யதே ||**

பகவான் சங்கரர் சொல்கிறார் ஹ்ரீம்காரம் என்ற பீஜாக்ஷரமே அக்னி குண்டமாய் இருக்கிறது. வாக்ய வாசக ஸம்பந்தத்தினாலே ப்ரஹ்மனின்

அவச்சேதம் (ப்ரஹ்ம ஸ்வரூபத்தின் அவச்சேதன வடிவம்) ஹ்ரீம்காரம் என்று எடுத்துக் கொள்ளவேண்டும் . இந்த ஹ்ரீம்காரமானது தக்ஷிணாக்னி, கார்யபத்ய அக்னி, ஆகவனீயம் என்ற த்ரேதா அக்னி. அதாவது அக்னி த்ரய ஸ்வரூபமாய் இருக்கின்றது. இந்த அக்னி குண்டத்தில் ஹ்ரீம்காரத்தின் ஜ்வாலா ரூபமாய் விளங்க கூடியவள் பரதேவதை. சைதன்யஸ்வரூபமாய் விளங்க கூடியவள்.

**'उद्दीप्तेऽग्नौ जुहोति'** **'உத்3தீ3ப்தே(அ)க்3னௌ ஜுஹோதி'** **'आहवनीये जुहोति'** **'ஆஹவனீயே ஜுஹோதி'** என்ற வேத வாக்கியங்களின் படி ஹோமத்தின் ஆஹாரத்வம் அதிஷ்டானம் என்ன என்றால் நன்றாய் கொழுந்து விட்டு எரியும் அக்னி ஜ்வாலைக்கே ஏற்படுகின்றது. யஞ்ஞும் யஜனம் என்ற க்ரியை அதிலே அதிருஷ்டம் என்றதின் மூலமாக ஸ்வர்க சம்பந்தமாய் இருக்க கூடிய பலன்கள் கிடைக்கும் என்று சொல்லப் படுகின்றது. அதனால் தர்ம புருஷார்த்தத்தை கொடுக்க கூடிய ஜ்வாலையோடு கூடிய அக்னி, அந்த அங்கி காரியத்திற்கே உண்டு என்று ஏற்படுகிறது.

**'मन्त्रैरुपासीत'** **'மந்த்ரைருபாஸீத'** என்ற வேத வாக்கியத்தின் படி மந்த்ர பதத்திற்கு வாசகமாய் இருக்க கூடிய ஶ்ரீவித்யாத்மக ஹ்ரீம்காரமே அர்த்தமாகும். அது ஞானாக்னி ஸ்வரூபமானது. அந்த ஜ்வாலையே பரதேவதையாகும். ப்ரஹ்ம, அபின்ன சைதன்ய ஸ்வரூபம் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**ॐ ह्रींकारकुण्डाग्निशिखायै नमः ||२०५||**
**ஓம் ஹ்ரீங்கார - குண்டா3க்3நி - ஶிகா2யை நம: ||205||**

**ह्रींकारशशिचन्द्रिका | (206)**
**ஹ்ரீங்காரஶஶிசந்த்3ரிகா | 206**

**ह्रींकार एव शशी चन्द्रः तस्य स्वरूपाभेदभूतप्रकाशचैतन्यं चन्द्रिकापदेनोपमीयते । यथा चन्द्रस्वरूपभूतामृतप्रसारभूता ज्योत्स्ना देवादिसर्वलोकानां सञ्जीवकतयोपकरोति, तथा दृढतरभक्ति - परवशपुरुषधौरेयादीनां ह्रींकारवाच्यार्थतया तदभिन्नत्वेऽपि जगद्विवर्तकारणतया सच्चिदानन्दाधाय - कत्वेन सञ्जीवयतीति भावः ॥**

**ஹ்ரீங்கார ஏவ ஶஶீ சந்த்3ர: தஸ்ய ஸ்வரூபாபே4த3பூ4தப்ரகாஶசைதன்யம்' சந்த்3ரிகாபதே3னோபமீயதே | யதா2 சந்த்3ரஸ்வரூபபூ4தாம்ரு'தப்ரஸாரபூ4தா ஜ்யோ - த்ஸ்னா தே3வாதி3ஸர்வலோகானாம்' ஸஞ்ஜீவகதயோபகரோதி, ததா2 த்3ரு'ட4தர - ப4க்திபரவஶபுருஷதௌ4ரேயாதீ3னாம்' ஹ்ரீங்காரவாச்யார்த2தயா தத3பி4ன்ன - த்வே(அ)பி ஜக3த்3விவர்தகாரணதயா ஸச்சிதா3னந்தா3தா4யகத்வேன ஸஞ்ஜீவயதீதி பா4வ: ||**

**'ह्रींकार एव शशी'** **'ஹ்ரீங்கார ஏவ ஶஶீ:'** ஹ்ரீம்காரமே சந்திரன். அந்த ஹ்ரீம்கார சந்திர ஸ்வரூப ப்ரகாஸ சைதன்யமாய் விளங்க கூடியவள். எங்ஙனம் சந்திரனிடத்திலே இருந்து அம்ருத கிரணங்கள் வெளி வந்து ஸ்வர்க ரூபமான தேவலோகம் முதலிய எல்லா லோகங்களுக்கும் ப்ராண ஆதாரமாய்




விளங்குகின்றதோ அது போல பரதேவதையானவள் மிகவும் திடமான பக்தியோடு வழிபட்ட புருஷ ஸ்ரேஷ்டர்களுக்கு ஹ்ரீம் காரத்தின் வாச்சியார்த்தத்தினால் அதற்கு அபேதமாய் இருந்து கொண்டு விவர்த்த தன்மையால் ஸச்சிதானந்த வடிவ அம்ருத ஸ்வரூபமான மோக்ஷத்தை தருகின்றாள். அதனால் சந்திரன் என்று சொல்லும் பொழுதே ஸூரியனிடத்தில் இருந்து ஒளியை பெற்று அதை ப்ரதிபிம்பதிப்பதால் (reflect) சைதன்யஸ் ஸ்வரூபத்தின் ப்ரதிபலிப்பு என்று எடுத்துக் கொள்ளலாம். ப்ரதிபலிக்க கூடிய அந்த ஸாதனம் (medium) மித்யாவாக இருப்பதால் விவர்த்தமாக சைதன்யமே அந்த சந்திர கிரணங்களாய் இருக்கின்றது என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ॐ ह्रींकारशशिचन्द्रिकायै नमः ||२०६||**
**ஓம் ஹ்ரீங்கார - ஶஶி - சந்த்³ரிகாயை நம꞉ ||206||**

**ह्रींकारभास्कररुचिः | (207)**
**ஹ்ரீங்காரபா⁴ஸ்கரருசி꞉ | 207**

**भासः कान्तीः करोति प्रसारयति लोकोपकारायेति तथा सूर्यः, तस्य रुचिः प्रचण्डभानुः । यथा लोके सूर्यः वर्षास्वतिगाढतरस्रवदुदकधारासंव्याप्तदिगन्तरासु दिवा विद्यमानोऽपि सूर्यः साक्षादयमिति चाक्षुषज्ञानगोचरो न भवति, तदभावे शिष्टानां भोजनादिसजीवकव्यवहाराभावेन तदुपायासिद्ध्याऽप्र - सन्नमनांसि भवन्ति, तथा ज्ञानमार्गानधिकारिणां मोक्षमार्गोपायभूताविदितदेवतारूपह्रींकाराणां जनानां बहुतरपुण्यमहिम्ना महावातेनेव मेघावलौ दूरीकृतायां चण्डभानुरिव सुखसाधनं गुरुकृपापाङ्गावलो - कनरूपदीक्षावशेन प्रतिबन्धकदुरितापगमे परदेवतारूपं ह्रींकारः पुरश्चर्यया साक्षाद्वाच्यार्थापरोक्षज्ञा - नहेतुर्भवति । चिरकालनैरन्तर्यभावनाप्रकर्षेण तस्मिन्नभिमुखे सति तल्लक्ष्यार्थरूपपरमानन्दचित्कला स्वयमेवाभिव्यक्ता सत्यानन्दानुभवामृतेन सुखयतीति तथोच्यते ||**

**பா⁴ஸ꞉ காந்தீ꞉ கரோதி ப்ரஸாரயதி லோகோபகாராயேதி ததா² ஸூர்ய꞉, தஸ்ய ருசி꞉ ப்ரசண்ட³பா⁴னு꞉ | யதா² லோகே ஸூர்ய꞉ வர்ஷாஸ்வதிகா³ட⁴தரஸ்ரவது³த³கதா⁴ - ராஸம்'வ்யாப்ததி³க³ந்தராஸு தி³வா வித்³யமானோ(அ)பி ஸூர்ய꞉ ஸாக்ஷாத³யமிதி சாக்ஷுஷஜ்ஞானகோ³சரோ ந ப⁴வதி, தத³பா⁴வே ஶிஷ்டானாம்' போ⁴ஜநாதி³ஸஜீவ - கவ்யவஹாராபா⁴வேன தது³பாயாஸித்³த்⁴யா(அ)ப்ரஸன்னமனாம்'ஸி ப⁴வந்தி, ததா² ஜ்ஞானமார்கா³னதி⁴காரிணாம்' மோக்ஷமார்கோ³பாயபூ⁴தாவிதி³ததே³வதாரூப - ஹ்ரீங்காராணாம்' ஜனானாம்' ப³ஹுதரபுண்யமஹிம்னா மஹாவாதேனேவ மேகா⁴ - வலௌ தூ³ரீக்ரு'தாயாம்' சண்ட³பா⁴னுரிவ ஸுக²ஸாத⁴னம்' கு³ருக்ரு'பாபாங்கா³வ - லோகனரூபதீ³க்ஷாவஶேன ப்ரதிப³ந்த⁴கது³ரிதாபக³மே பரதே³வதாரூபம்' ஹ்ரீங் - கார꞉ புரஶ்சர்யயா ஸாக்ஷாத்³வாச்யார்தா²பரோக்ஷஜ்ஞானஹேதுர்ப⁴வதி | சிரகால - னைத்ந்தர்யபா⁴வனாப்ரகர்ஷேண தஸ்மின்னபி⁴முகே² ஸதி தல்லக்ஷ்யார்த²ரூப - பரமானந்த³சித்கலா ஸ்வயமேவாபி⁴வ்யக்தா ஸத்யானந்தா³னுப⁴வாம்ருதேன ஸுக² - யதீதி ததோ²ச்யதே ||**

ஸூரியன் தன்னுடைய கிரண சக்தியால் லோகத்திற்கு உபகாரமாக ப்ரகாஸிக்கின்றான் 'ஜகத் ஏக சக்ஷு:'. இந்த ஸூரியனுடைய உக்ரமான ஒளிவெள்ளமாய் விளங்கக்கூடியவள் பரதேவதை. மழை காலத்திலே மேகங்கள் இருந்து சூழ்ந்து மழை பொழியும் பொழுது பகலாய் இருந்தாலும் மறைபட்டது போல் தோன்றக்





கூடிய ஸூரியன் எவ்வாறு கண்ணுக்கு புலப்படுவது இல்லையோ அங்ஙனமே ஞான மார்க்கத்திற்கு அதிகாரம் இல்லாத அஞ்ஞானிகளுக்கு மோக்ஷ ஸாதனமான ஹ்ரீம்கார ரூப பரதேவதா ஆராதனம் விளங்குவதே கிடையாது. ஆயினும் எந்த காற்றால் மேகங்கள் சூழ்ந்து ஸூரியனை மறைத்ததோ அதே காற்றால் மேகங்கள் சிதறி ஒழிந்த காலத்திலே ஸூரியன் எங்ஙனம் ப்ரகாசிக்கின்றானோ அல்லது அதனுடைய ப்ரகாஸம் நம்முடைய பார்வைக்கு வருகின்றதோ அங்ஙனமே அஞ்ஞானிகள் பூர்வ ஜென்மங்களிலே செய்த புண்ய விசேஷத்தால் குருவை தரிசித்து அவர்களுடைய க்ருபைக்கு பாத்திரமாகி அவர்களின் கடாக்ஷரூபமான ஞான தீக்ஷையை பெறுவதால் ப்ரதி பந்தங்களாகும் தடைகள் எல்லாம் ஒழிந்து ஞான ஸித்தி ஏற்படுகின்றது. இதுவே ஸுக சாதனமாகும். பரதேவதா ரூப ஹ்ரீங்காரமானது புரஸ் சரணத்தினாலே ப்ரத்யக்ஷ ஞானத்திற்கு காரணமாய் இருக்கிறது. இங்ஙனம் வெகு நாட்கள் விஸ்வாசத்தோடு செய்கின்ற ஒரு பாவனா விசேஷத்தால் ஹ்ரீம்கார புரஸ் சரணத்தினால் ஹ்ரீம் காரத்தின் லக்ஷியார்த்தமான பரமானந்த சித் ஸ்வரூபமானது அபரோக்ஷமாய் ஸித்தியாகின்றது. இதுவே நித்ய ஆனந்த நிலையாகும். மேலே கூறப்பட்ட இந்த மூன்று நாமாக்களில் அக்னி, சோம, ஸூரிய மண்டலங்களை உபாதியாய் உடைய ப்ரகாஸ ஸ்வரூபம் சைதன்யம் என்றும் அல்லது சிவன் என்றும், ஜ்வாலை சந்திரிகை, கிரணங்கள் இவைகளை உபாதியாய் உடையது சக்தி என்றும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பகவான் சங்கரர் இங்கே குறிப்பிடுகின்றார்.

**ॐ ह्रींकारभास्कररुचये नमः ||२०७||**
**ஓம் ஹ்ரீங்கார - பா4ஸ்கரருசயே நம: ||207||**

**ह्रींकाराम्भोदचञ्चला | (208)**
**ஹ்ரீங்காராம்போ4த3சஞ்சலா | 208**

**अम्भांसि अमृतानि ददतीत्यम्भोदाः, ह्रींकारोऽपि कामवर्षत्वेन तैरुपमीयते । तेषु चञ्चला विद्युल्लता विद्यमाना तदभिन्नप्रकाशमाना सती वर्षोदकद्वारा सस्याद्युत्पादकत्वं यथा व्यनक्ति तथा ह्रींकारवा - च्यतया तदभिन्नापि तत्स्वरूपविचारणायां शुद्धलक्ष्यार्थस्वरूपा सत्यपि अनिर्वचनीयस्ववाचकमन्त्रप्र - काशितदेवतात्वेन स्वाभीष्टपुरुषार्थप्राप्तिहेतुभूतेत्यभिसंधिः ||**

**அம்பா4ம்'ஸி அம்ரு'தானி த3த3தீத்யம்போ4தா3:, ஹ்ரீங்காரோ(அ)பி காமவர்ஷ - த்வேன தைருபமீயதே | தேஷு சஞ்சலா வித்3யுல்லதா வித்3யமானா தத3பி4ன்ன - ப்ரகாஶமானா ஸதீ வர்ஷோத3கத்3வாரா ஸஸ்யாத்3யுத்பாத3கத்வம்' யதா2 வ்யனக்தி ததா2 ஹ்ரீங்காரவாச்யதயா தத3பி4ன்னாபி தத்ஸ்வரூபவிசாரணாயாம்' ஶுத்3த4ள - க்ஷயார்த2ஸ்வரூபா ஸத்யபி அநிர்வசனீயஸ்வவாசகமந்த்ரப்ரகாஶிததே3வதாத்வேன ஸ்வாபீ4ஷ்டபுருஷார்த2ப்ராப்திஹேதுபூ4தேத்யபி4ஸந்தி4: ||**

'ஹ்ரீம்' காரம் மேகத்துக்கு ஒப்பிடப்பட்டு அதிலே பரதேவதை மின்னலைப் போன்றவள் (மின்னல் கொடி போன்றவள்). மேகங்கள் ஜலத்தை வர்ஷிப்பது போல ஹ்ரீம் கார ரூபமான பரதேவதை உபாஸிப்பவர்களின் அபீஷ்டங்களை வர்ஷிக்கின்றாள். அந்த காரணத்தினால் மேகத்திற்கு ஒப்பு உவமையாக கூறப்பட்டது. எங்ஙனம் மேகங்களில் மின்னலானது மறைவாய் இருந்து கொண்டு

அந்த மேகங்களை ஒளிரவைத்து மழை பெய்யும் படி செய்து அதனால் பயிர் பச்சைகளை செழிக்க செய்கின்றதோ அங்ஙனமே லலிதா த்ரிபுர ஸுந்தரியான பரதேவதையும் ஹ்ரீம் காரமான மேகத்திலே அந்தர்யாமி வடிவமான மின்னலைப்போல் இருந்து உபாஸிப்பவர்களுக்கு புருஷார்த்தங்களையும் அளிக்கிறாள். மேகத்துக்கு அபின்னமாய் பரதேவதை இருப்பது வாச்யார்தம் என்றும் மின்னல் என்பது லக்ஷியார்தம் என்று பகவான் சங்கரர் விளக்குகின்றார்.

**ॐ ह्रींकाराम्भोदचञ्चलायै नमः ||२०८||**
**ஓம் ஹ்ரீங்காராம்போ⁴த³ - சஞ்சலாயை நம꞉ ||208||**

**ह्रींकारकन्दाङ्कुरिका ह्रींकारैकपरायणा ।**
**ह्रींकारदीर्घिकाहंसी ह्रींकारोद्यानकेकिनी ||४०||**
**ஹ்ரீங்கார - கந்தா³ங்குரிகா ஹ்ரீங்காரைக - பராயணா |**
**ஹ்ரீங்காரதீ³ர்கி⁴கா - ஹம்'ஸீ ஹ்ரீங்காரோத்³யாந - கேகிநீ ||40||**

**ह्रींकारकन्दाङ्कुरिका | (209)**
**ஹ்ரீங்காரகந்தா³ங்குரிகா | 209**

**ह्रींकार एव कन्दं दृढतरबीजभावः तस्य अङ्कुरिका आदिप्रसवः नूतनाभिव्यक्तिरित्यर्थः । यथा लोके अङ्कुरादिकं कन्दादिनिष्ठोत्पादकशक्तिमनभिभूयैव स्वयं स्कन्धशाखापत्रपुष्पफलाद्यात्मना यथा विवर्तमानं तत्सामर्थ्यप्रकटनकारणं भवति, तथा ह्रींकारस्य वेदैकदेशत्वेन इतरप्रमाणानपेक्षतया स्ववा - च्यार्थज्ञापनेन स्वतः प्रामाण्ये स्थितेऽपि तज्जन्यज्ञानविषयतावच्छेदकधर्मरूपनानाप्रकारजगत्परि - णामहेतुत्वसाधका घटितघटनापटीयसीमायोपाधिकत्वेन तदर्थद्वयरूपा सती तन्मात्रप्रमाणवेद्येत्यर्थः ||**

**ஹ்ரீங்கார ஏவ கந்த³ம்' த்³ரு'ட⁴தரபீ³ஜபா⁴வ꞉ தஸ்ய அங்குரிகா ஆதி³ப்ரஸவ꞉ நூதநாபி⁴வ்யக்திரித்யர்த²꞉ | யதா² லோகே அங்குராதி³கம்' கந்தா³தி³நிஷ்டோ²த்பாத³ - கஶக்திமனபி⁴பூ⁴யைவ ஸ்வயம்' ஸ்கந்த⁴ஶாகா²பத்ரபுஷ்பப²லாத்³யாத்மனா யதா² விவர்தமானம்' தத்ஸாமர்த்²யப்ரகடனகாரணம்' ப⁴வதி, ததா² ஹ்ரீங்காரஸ்ய வேதை³ - கதே³ஶத்வேன இதரப்ரமாணானபேக்ஷதயா ஸ்வவாச்யார்த²ஜ்ஞாபனேன ஸ்வத꞉ ப்ராமாண்யே ஸ்தி²தே(அ)பி தஜ்ஜன்யஜ்ஞானவிஷயதாவச்சே²த³கத⁴ர்மரூபனானா - ப்ரகாரஜக³த்பரிணாமஹேதுத்வஸாத⁴கா க⁴டிதக⁴டனாபடீயஸீமாயோபாதி⁴கத்வே - ன தத³ர்த²த்³வயரூபா ஸதீ தன்மாத்ரப்ரமாணவேத்³யேத்யர்த²꞉ ||**

'கந்தம்' என்றால் கிழங்கு என்று ஒரு அர்த்தம் உள்ளது. அதாவது விதை அல்லது பீஜம் என்றும் எடுத்துக் கொள்ளலாம். இந்த 'ஹ்ரீம்' காரம் என்னும் பீஜத்திற்கு அங்குரமாய் இருக்கு கூடியவள் பராசக்தி. அந்த அங்குரமானது அந்த பீஜத்தில் உள்ள உற்பத்தி சக்தியை மறைக்காமல் வ்ருக்ஷத்தினுடைய அடிபாகம், நடுபாகம், கிளைகள், இலை, புஷ்பம், காய், பழம் இவற்றின் வளர்ச்சிக்கு காரணமாய் இருக்கின்றது. அதாவது வளர்ச்சிக்கு வித்திட்டு இருக்கிறது. அதே ஹ்ரீம் காரம் என்னும் பீஜமானது சிவசக்திகளில் காமகலா ஸ்வரூபம் என்று வர்ணிக்கப் படுகின்றது. இதில் இருந்து ஏற்பட்ட ஞானத்திற்கு விஷயமான தன்மையுடையதும் பலவாறாய் தோன்றும் ஜகத் பரிணாமத்திற்கு காரணமாகவும், ஸம்பவிக்க கூடாததை நடக்கும் படி செய்யக்கூடிய ஆற்றல் உள்ளதுமான மாயையை

உபாதியாய் கொண்டு விளங்கும் சக்தி ஹ்ரீம் காரத்தின் வாச்சியார்த்தம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதுவே அங்குரம். இந்த அங்குரத்தின் ஒரு பாகம் வளர்ந்து மேல் நோக்கி வளர்ந்து வ்ருக்ஷமாகின்றது. மற்றோரு பாகம் கீழ் நோக்கி பூமிக்குள்ளே வளர்ந்து வேர் அல்லது அதிஷ்டானம் என்ற பெயர் பெறுகின்றது. இந்த வேர், அதுவே மூலம். அதுவே அந்த மரத்தின் ஸ்திதி, வளர்ச்சிக்கு ஆதாரமாய் இருக்கின்றது. இது தான் ஹ்ரீம் காரம் என்ற பீஜத்தின் லக்ஷ்யார்த்தம். 'பீஜாங்குர ரூபிணி பராசக்தி:' என்று காமகலா விலாஸம் என்ற க்ரந்தத்திலே குறிப்பிடப் பட்டு இருக்கின்றது.

**ॐ ह्रींकारकन्दाङ्कुरिकायै नमः ||२०९||**
**ஓம் ஹ்ரீங்கார - கந்தா³ங்குரிகாயை நம: ||209||**

**ह्रींकारैकपरायणा | (210)**
**ஹ்ரீங்காரைகபராயணா | 210**

**ह्रींकार एव एकं अनितरसाधारणं चतुर्विधपुरुषार्थसाधकतया परम् अयनं ज्ञापकं प्रमाणं यस्याः सा तथा । अस्य बीजस्य वाच्यार्थो माया, सा निरधिष्ठाना न सिध्यतीति तदाश्रयत्वविषयत्वाभ्यां तद्रहितं तेन ज्ञाप्यत इति भावः ||**

**ஹ்ரீங்கார ஏவ ஏகம்' அநிதரஸாதா⁴ரணம்' சதுர்வித⁴புருஷார்த²ஸாத⁴கதயா பரம் அயனம்' ஜ்ஞாபகம்' ப்ரமாணம்' யஸ்யா: ஸா ததா² | அஸ்ய பீ³ஜஸ்ய வாச்யார்தோ² மாயா, ஸா நிரதி⁴ஷ்டா²னா ந ஸித்⁴யதீதி ததா³ஶ்ரயத்வவிஷயத்வாப்⁴யாம்' தத்³ரஹிதம்' தேன ஜ்ஞாப்யத இதி பா⁴வ: ||**

'ஹ்ரீம்' காரம் தர்ம, அர்த்த, காம மோக்ஷங்கள் என்ற சதுர்வித புருஷார்த் - தங்களை கொடுக்க கூடிய வல்லமை படைத்தது. மற்ற பீஜங்களுக்கு இத்தகைய ஆற்றல் இல்லை. அதனால் ஒப்பிட முடியாத அசாதரணமான பீஜமாய் இருக்கின்றது. அதனால் இது உத்க்ருஷ்டமானது. இப்படி பட்ட ஹ்ரீம் காரத்தை பரம ப்ரமாணமாய் உடையவள் லலிதா த்ரிபுர ஸுந்தரி அல்லது ஹ்ரீம் காரத்திற்கு ஆதாரமாய் இருப்பவள் என சித் சக்தி என்பது பொருந்தும்.

'ஹ்ரீம்' பீஜத்திற்கு 'ஓம்காரம்' என்று ஒரு அர்த்தம் உண்டு. மாயை என்றும் ஒரு அர்த்தம் உண்டு. இந்த மாயை சித் சக்தியை ஆஸ்ரயத்து சைதன்யத்தை ஆஸ் ரயத்து அந்த சைதன்யத்தையே மறைக்கின்றது என்பது உபநிஷத்தின் கருத்து. 'ஸ்வ ஆஸ் ரய, ஸ்வ விஷயம் என்பது இதற்கு ப்ரமாணம்.

**ॐ ह्रींकारैकपरायणायै नमः ||२१०||**
**ஓம் ஹ்ரீங்காரைக - பராயணாயை நம: ||210||**

**ह्रींकारदीर्घिकाहंसी | (211)**
**ஹ்ரீங்காரதீ³ர்கி⁴காஹம்'ஸீ | 211**

**ह्रींकार एव दीर्घिका राजोद्यानवनक्रीडावापी । संसारकाननसंवारिलोकविश्रान्तिकारणत्वेन ह्रींकारः तयोपमीयते, 'आराममस्य पश्यन्ति न तं पश्यति कश्चन' (बृ. ४-३) इति श्रुतेः । आ समन्ताद्रमत्यस्मिन् इत्यारामः अथवा जगत् । तत्रोपासनादिना परमानन्दप्रापकतया वा ह्रींकारः उपमीयते । तस्मिन् हंसी स्त्रीहंसः । यथा लोके सारासारविवेकिहंस्या आधारसुवर्णकमलादिमती वापिका महाराजसंबन्धिनी विज्ञाप्यते, तद्वद्वाच्यार्थरूपतया प्रकाशमाना सती स्वसंबन्धिबीजस्य सुखोत्पादकत्वमोक्षहेतुत्वं द्योतयतीत्यभिप्रायः ॥**

**ஹ்ரீங்கார ஏவ தீ³ர்கி⁴கா ராஜோத்³யானவனக்ரீடா³வாபீ | ஸம்’ஸாரகானனஸம்’ - வாரிலோகவிஶ்ராந்திகாரணத்வேன ஹ்ரீங்காரः தயோப- மீயதே, 'ஆராமமஸ்ய பஶ்யந்தி ந தம்’ பஶ்யதி கஶ்சன' (ப்³ரு’. 4-3) இதி ஶ்ருதேः |ஆ ஸமந்தாத்³ரமத்யஸ்மின் இத்யாராமः அத²வா ஜக³த் | தத்ரோபாஸநாதி³னா பரமானந்த³ப்ராபகதயா வா ஹ்ரீங்காரः உபமீயதே | தஸ்மின் ஹம்’ஸீ ஸ்த்ரீஹம்’ஸः | யதா² லோகே ஸாராஸார - விவேகிஹம்’ஸ்யா ஆதா⁴ரஸுவர்ணகமலாதி³மதீ வாபிகா மஹாராஜஸம்ப³ந்தி⁴னீ விஜ்ஞாப்யதே, தத்³வத்³வாச்யார்த²ரூபதயா ப்ரகாஶமானா ஸதீ ஸ்வஸம்ப³ந்தி⁴ - பீ³ஜஸ்ய ஸுகோ²த்பாத³கத்வமோக்ஷஹேதுத்வம்’ த்³யோதயதீத்யபி⁴ப்ராயः ||**

‘தீர்கிகா’ என்று சொன்னால் ராஜாக்களின் உத்யான வனத்திலே இருக்கக்கூடிய ஜலக் க்ரீடைக்கு உறிய ஒரு சிறிய தடாகம். அல்லது வாவி என்றும் சொல்லலாம். அந்த ஹ்ரீம் காரமே இந்த சிறிய தடாகம். இந்த தடாகத்தில் ஸஞ்சரிக்கும் அன்னபக்ஷியே பரதேவதைக்கு ஒப்பிடப் படுகிறாள். இந்த ஹ்ரீம் காரமானது ஸம்ஸாரம். அந்த ஸம்ஸார காட்டிலே அலைந்து உழலக்கூடிய ஜீவர்களது ஒய்வு ஸ்தானமாய் விளங்குகின்றது. அதனால் உபாஸகர்களுக்கு பரமானந்த ரூப பரம சாந்தி தருதலால் அது ஒரு சிறு நீரோடைக்கு உவமித்து கூறப்பட்டது.

சாரம், அ-சாரம் என்று பகுத்து அறியக்கூடிய அன்னப்பறவைகளும் தாமரை மலர்களும் கூடிய ஓடையானது (நீர்நிலையானது) சக்கரவர்த்திக்கு உரியதானது என்று எங்ஙனம் எல்லோராலும் அறியப் படுகின்றதோ அங்ஙனமே வா ச்சியார்த்தத்தினால் விளங்கும் ஹ்ரீம் காரம் பரதேவதையை சார்ந்தது, அதோடு ஸம்பந்தப்பட்டது. ஆனாலும் நித்யானந்த மோக்ஷத்திற்கு காரணமானது அந்த ஹ்ரீம் கார பீஜம் என்று அறிவது அவசியம் என்று பகவான் சங்கரர் குறிப்பிடுகிறார்.

**ॐ ह्रींकारदीर्घिकाहंस्यै ननः ||२११||**
**ஓம் ஹ்ரீங்கார - தீ³ர்கி⁴கா - ஹம்’ஸ்யை நனः ||211||**

**ह्रींकारोद्यानकेकिनी | (212)**
**ஹ்ரீங்காரோத்³யானகேகினீ | 212**

**ह्रींकार एव उद्यानवत् फलानुभावकत्वात् तथोच्यते, तस्य केकिनी मयूरी। यथा लोके बहुषु पक्षिषु आरण्यकेषु सत्स्वपि तस्याः रूपध्वनिभ्यां सुखतया दर्शनश्रवणादिजन्यप्रमोदसाधकतया उद्यानालं - करिष्णुत्वम्, तथा ह्रींकाररूपदेवताध्वनेः सच्चिदानन्दरूपतद्वाच्यार्थस्य च परमपुरुषार्थसाधकत्वेन अविशिष्टत्वेऽपि ब्रह्मविष्णुरुद्रादिमूर्तिषु उद्यानतरुवल्लिकक्षगुल्मादिवदुत्तमनीचदेवतिर्यङ्गनुष्यादिषु च**

**मयूरीव स्वेच्छया सर्वव्यापकत्वेन तदात्मरूपतया शरीरेन्द्रियप्राणाद्याधारपरमप्रेमास्पद परमानन्दरूप - प्रत्यग्गोचराहंवृत्तिव्याप्यतयैतद्बीजप्रकाश्या भवतीत्यर्थः ॥**

**ஹ்ரீங்கார ஏவ உத்³யானவத் ப²லானுபா⁴வகத்வாத் ததோ²ச்யதே, தஸ்ய கேகினீ மயூரீ | யதா² லோகே ப³ஹுஷு பக்ஷிஷு ஆரண்யகேஷு ஸத்ஸ்வபி தஸ்யா: ரூபத்⁴வ - னிப்⁴யாம்' ஸுக²தயா த³ர்ஶனஶ்ரவணாதி³ஜன்யப்ரமோத³ஸாத⁴கதயா உத்³யானா - லங்கரிஷ்ணுத்வம், ததா² ஹ்ரீங்காரரூபதே³வதாத்⁴வனே: ஸச்சிதா³னந்த³ரூபதத்³ - வாச்யார்த²ஸ்ய ச பரமபுருஷார்த²ஸாத⁴கத்வேன அவிஶிஷ்டத்வே(அ)பி ப்³ரஹ்ம - விஷ்ணுருத்³ராதி³மூர்திஷு உத்³யானதருவல்லிகக்ஷுத்³ள்மாதி³வது³த்தமநீசதே³வ - திர்யங்மனுஷ்யாதி³ஷு ச மயூரீவ ஸ்வேச்ச²யா ஸர்வவ்யாபகத்வேன ததா³த்மரூப - தயா ஶரீரேந்த்³ரியப்ராணாத்³யாதா⁴ரபரமப்ரேமாஸ்பத³ பரமானந்த³ரூபப்ரத்யக்³ - கோ³சராஹம்'வ்ரு'த்திவ்யாப்யதயைதத்³பீ³ஜப்ரகாஶ்யா ப⁴வதீத்யர்த²: ||**

'ஹ்ரீம்'காரம் ஒரு நந்தவனத்திற்கு (உத்யாவனத்திற்கு) சொல்லப்படுகிறது. அந்த உத்யானவனத்திற்கு அழகையும் ஷோபையும் தரக்கூடிய (பெண்) மயில் போல் இருக்க கூடியவள் பரதேவதை. தர்ம, அர்த்த, காம, பலவித பலன்களை தருவதால் ஹ்ரீம் என்னும் பீஜத்தை அந்த உத்யானத்திற்கு உவமித்து கூறப்பட்டது. உத்யானம் என்ற சிறு நந்த வனத்திலே அநேக விதமான பக்ஷிகள் இருந்தாலும் மயிலானது தன்னுடைய தோகையினாலும் ரூபத்தாலும் தொனியினாலும் எங்ஙனம் ஒரு மன ஸுகத்தை உண்டாக்குகின்றதோ அது போல இந்த பீஜத்தின் வாச்யார்த்தமும் ரூபத்தாலும் தொனியாலும் இங்ஙனம் வேறு உலகங்களிலும் பலனை தருகின்றது. லக்ஷயார்த்தத்தினால் பரம புருஷார்த்த ரூபமான ஞானத்தையும் ஸச்சிதானந்த தன்மய ஸ்திதியை தருகின்றது. மயிலானது எங்ஙனம் அந்த உத்யான வனத்தினிலே உள்ள மரங்கள், கொடிகள், கற்கள், மணல் மேடுகள் முதலிய மேலான, தாழான தளங்களிலே தன் இஷ்டம் போல் ஸஞ்சரிக்கின்றதோ அது போல இந்த பீஜத்தின் வாச்யார்த்தம் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், இந்திரன், மனுஷ்யர்கள், திர்யக் ஜந்துக்கள் முதலியவைகளின் உடல், இந்திரியம், ப்ராணன் முதலியவைகளில் ஜட ஸ்வரூப ஸர்வ பூதங்களிலும் வ்யாபித்து பரம ப்ரேமைக்கு காரணமான அஹம் ஆதாரமாகவும் இதம் ஆகாரமாயும் விளங்குகின்றது (விவர்த்த ரூபேண). ஜட சேதனாத்மக ஸர்வ ப்ரபஞ்சமும் 'ஹ்ரீம்' காரம் என்றும் அது உத்தியான வனம் என்றும், அதில் ஸ்வ இச்சையாய் (தன் இச்சையாய்) ஸஞ்சரிக்கும் மயூரமே பரதேவதை லலிதா த்ரிபுர ஸுந்தரி என்றும் வர்ணிக்கப்பட்டது.

**ॐ ह्रींकारोद्यानकेकिन्यै नमः ||२१२||**
**ஓம் ஹ்ரீங்காரோத்³யான - கேகின்யை நம: ||212||**

**ह्रींकारारण्यहरिणी ह्रींकारावालवल्लरी ।**
**ह्रींकारपञ्जरशुकी ह्रींकाराङ्गणदीपिका ||४१||**
**ஹ்ரீங்காராரண்யஹரிணீ ஹ்ரீங்காராவாலவல்லரீ |**
**ஹ்ரீங்காரபஞ்ஜரஶுகீ ஹ்ரீங்காராங்க³ணதீ³பிகா ||41||**

**ह्रींकारारण्यहरिणी | (213)**

**ஹ்ரீங்காராரண்யஹரிணீ | 213**

**ह्रींकारवाच्यार्थैकदेशभूतमायाविद्यातत्कार्याणां बन्धरूपतया गहने व्याघ्रादीनामिव भयहेतूनां सद्भावेन दुष्प्रवेशत्वरूपधर्मसाम्येन ह्रींकारस्य अरण्योपमितत्वम् । तथा च अरण्यमिव ह्रींकार इति सर्वत्रोपमानोत्तरपदसमासः । तत्रैवं सति यथारण्यगत पुरुषस्य शीघ्रं दृष्टिपथं गता हरिणी एणी व्याघ्राद्याभावनिश्चयेन तदधिगमफलप्राप्तिसाधनतामवगमयति धीरपुरुषस्य, तथा निरन्तरभक्तिभजनपरप्राणिलोकस्य उपासनापरिपाकमहिम्ना अपरोक्षीकृताज्ञाननिवृत्तिपूर्वकं भयापकरणेनानन्दं प्रापयतीति तयोपमितेति भावः । 'तमेव विदित्वातिमृत्युमेति' (श्वे. ३-८) इति श्रुतेः ॥**

**ஹ்ரீங்காரவாச்யார்யைகதே³ஶபூ⁴தமாயாவித்³யாதத்கார்யாணாம்’ ப³ந்த⁴ரூபதயா க³ஹனே வ்யாக்⁴ராதீ³நாமிவ ப⁴யஹேதூனாம்’ ஸத்³பா⁴வேன து³ஷ்ப்ரவேஶத்வரூபத⁴ர்மஸாம்யேன ஹ்ரீங்காரஸ்ய அரண்யோபமிதத்வம் | ததா² ச அரண்யமிவ ஹ்ரீங்கார இதி ஸர்வத்ரோபமானோத்தரபத³ஸமாஸ: | தத்ரைவம்’ ஸதி யதா²ரண்யக³த புருஷஸ்ய ஶீக்⁴ரம்’ த்³ரு’ஷ்டிபத²ம்’ க³தா ஹரிணீ ஏணீ வ்யாக்⁴ராத்³யாபா⁴வநிஶ்சயேன தத³தி⁴க³மப²லப்ராப்திஸாத⁴னதாமவக³மயதி தீ⁴ரபுருஷஸ்ய, ததா² நிரந்தரப⁴க்திப⁴ஜனபரப்ராணிலோகஸ்ய உபாஸனாபரிபாகமஹிம்னா அபரோக்ஷீக்ரு’தாஜ்ஞானநிவ்ரு’த்திபூர்வகம்’ ப⁴யாபகரணேனானந்த³ம்’ ப்ராபயதீதி தயோபமிதேதி பா⁴வ: | 'தமேவ விதி³த்வாதிம்ரு’த்யுமேதி' (ஶ்வே. 3-8) இதி ஶ்ருதே: ||**

‘ஹ்ரீம்’ காரம் என்பது ஒரு காட்டுக்கு ஒப்பிடப்படுகிறது. அந்த காட்டிலே துள்ளிக் குதிக்கும் பெண் மானாய் இருப்பவள் பரதேவதை. காட்டிலே துஷ்ட ஜந்துக்கள் வசிக்கும் காரணத்தினால் அதில் ஸுலபமாய் பிரவேசிப்பதற்கு முடியாதும், பயத்திற்கு காரணமாய் இருப்பது போல ஹ்ரீம் காரமும் தனது வாச்யார்த்தத்திலே ஏக தேச வடிவ மாயையாக, அவித்யா காரியங்களாக, பந்த ஸ்வரூபமாகவும், பய காரணமாகவும் இருத்ததினால் அது இருண்ட காட்டிற்கு ஒப்புதலாய் கூறப்பட்டது. இப்படி பட்ட பய காரணமாகிய காட்டில் பல மான்கள் துள்ளினும் ஆயின், அந்த காட்டிலே துஷ்ட ம்ருகங்கள் அநேகம் இல்லை, இருந்தால் பரம ஸாது ஸ்வரூபமான மான்கள் நிர்பயமாய் ஸஞ்சரிக்குமா என்று நாம் கேள்வி எழுப்ப முடியும். இங்ஙனமே ஹ்ரீம் பீஜத்தின் வாச்யார்த்தத்தின் மற்றோரு பாகமாகிய அதிஷ்டான ரூப சைதன்யம் ஞானத்தினால் உபாதி ரூப மாயை (அவித்யைகள்) அவை மித்யா என்று ஏற்படும். உபாதியால் ஏற்பட்ட அத்யாஸ நாசத்தால் ஸம்ஸார ரூப ஸகல அனர்த்தங்களும் நீங்கி நிர்பய ஸ்வரூபமான மோக்ஷம் தானாகவே ஸித்திக்கின்றது. **'तमेव विदित्वातिमृत्युमेति' (श्वे. ३-८) 'தமேவ விதி³த்வாதிம்ரு’த்யுமேதி' (ஶ்வே. 3-8)** என்று அந்த அம்ருத ஸ்வரூபத்தை அடைகின்றான் என்று ஸ்ருதி வாக்கியம் கூறுகின்றது.

**ॐ ह्रींकारारण्यहरिण्यै नमः ||२१३||**
**ஓம் ஹ்ரீங்காராரண்ய - ஹரிண்யை நம: ||213||**

**ह्रींकारावालवल्लरी | (214)**
**ஹ்ரீங்காராவாலவல்லரீ | 214**

ह्रींकारमन्त्रवाचकतानिरूपितवाच्यतानामकसंबन्धावच्छिन्नपरदेवतास्वरूपत्वेन तदुपासनाविषयफल - दानसमर्था सती आवालमात्रप्ररोहाद्विवृद्धवल्लर्योपमीयते । तथा च तत्संबन्धितया ह्रींकारः जपादिना आवाल इव सर्वदा संरक्षणीय इति तात्पर्यार्थः परिनिष्पन्न इति यावत् ||

ஹ்ரீங்காரமந்த்ரவாசகதாநிரூபிதவாச்யதாநாமகஸம்ப³ந்தா⁴வச்சி²ன்னபரதே³வ - தாஸ்வரூபத்வேன தது³பாஸனாவிஷயப²லதா³னஸமர்தா² ஸதீ ஆவாலமாத்ரப்ர - ரோஹாத்³விவ்ரு'த்³த⁴வல்லர்யோபமீயதே | ததா² ச தத்ஸம்ப³ந்தி⁴தயா ஹ்ரீங்காரः ஜபாதி³னா ஆவால இவ ஸர்வதா³ ஸம்'ரக்ஷணீய இதி தாத்பர்யார்த²ः பரிநிஷ்பன்ன இதி யாவத் ||

'ஹ்ரீம்' காரம் ஒரு செடியை சுற்றி நாம் வைக்க கூடிய ஒரு சிறு அணைபோல (பாத்தி போல) இருக்கின்றது. அந்த பாத்தியின் நடுவிலே வளரக்கூடிய பசுங் கொடியைப்போன்றவள் பரதேவதை. அந்த ஹ்ரீம் காரத்தின் வாசகத்திற்கு வாக்கியார்த்தமாய் இருக்க கூடியவள் பரதேவதை. ஏற்கனவே கூறியது போல் பரதேவதையும் ஹ்ரீம் காரமும் வாச்ய வாசக ஸம்பந்தம் உடையது என்று தெரிந்து கொள்ளவேண்டும். அந்த ஹ்ரீம் காரத்தை உபாஸிப்பவர்களுக்கு பரதேவதையின் ஸாக்ஷாத்கார ரூபா பலன் ஏற்படுகிறது. ஆதலால் ஹ்ரீம் காரத்தை செடியை சுற்றி வைக்கக்கூடிய பாத்திக்கும் பரதேவதை பசுங் கொடிக்கும் உவமையாய் கூறப்பட்டது. அந்த செடியை சுற்றியுள்ள பாத்தி, அந்த பாத்தியில் களைகள் முளையாமல் அதை (களைகளை) களைந்து எரு இட்டு ஜலம் வார்த்து ரக்ஷிப்பதால் அதிலே வளரக்கூடிய கொடி எங்ஙனம் செழித்து வளர்ந்து பலன் தருகின்றதோ அது போல ஹ்ரீம் பீஜ மந்திரத்தை இதர எண்ணங்கள் வராமல் ஏகாக்ருதத்தோடு ஜபித்து விஸ்வாசத்தோடு அர்த்த அனுஸந்தானத்தோடும் இடை விடாது நெடு நாள் உபாஸனை செய்பவர்கள் ஸ்வாத்ம ஸ்வரூப பரதேவதா ஸாக்ஷாத்கார அத்வைத ஸித்தி ஏற்படுகிறது என்பது இந்த நாமத்தின் ஸித்தாந்தமாய் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**ॐ ह्रींकारावालवल्लर्यै नमः ||२१४||**

**ஓம் ஹ்ரீங்காராவால - வல்லர்யை நம: ||214||**

## ह्रींकारपञ्जरशुकी | (215)

**ஹ்ரீங்காரபஞ்ஜரஶுகீ | 215**

मन्दाधिकारिणामप्युपासनाकारणसाधारणपार्वतीप्रतीकतया ह्रींकारस्य बालकादिलालनविषयत्व - धर्मपुरस्कारेण पञ्जरोपमा । तथा च तत्रत्यशुकीव संलापादिना मनुष्यादिचित्तरञ्जिनी । एवं तत्तदद्दृष्टानु - सारेण फलदात्रि सती तयोपमितेति द्रष्टव्यम् । ह्रींकारः पञ्जरमिव तस्य शुकी तत्सार्थक्यकारिणी - त्यभिप्रायः ||

மந்தா³தி⁴காரிணாமப்யுபாஸனாகாரணஸாதா⁴ரணபார்வதீப்ரதீகதயா ஹ்ரீங்கா - ரஸ்ய பா³லகாதி³லாலனவிஷயத்வத⁴ர்மபுரஸ்காரேண பஞ்ஜரோபமா | ததா² ச தத்ர - த்யஶுகீவ ஸம்'லாபாதி³னா மனுஷ்யாதி³சித்தரஞ்ஜினீ | ஏவம்' தத்தத³த்³ரு'ஷ்டானு - ஸாரேண ப²லதா³த்ரி ஸதீ தயோபமிதேதி த்³ரஷ்டவ்யம் | ஹ்ரீங்காரः பஞ்ஜரமிவ - தஸ்ய ஶுகீ தத்ஸார்த²க்யகாரிணீத்யபி⁴ப்ராய: ||

'பஞ்ஜரம்' என்றால் ஒரு கூண்டு. 'ஶுகி' என்றால் கிளி. 'ஹ்ரீம்' காரமே அந்த கூண்டு. அதிலே இருந்து அந்த கூண்டுக்கு அழகு சேர்த்து கிளி போன்றவள் அந்த பரதேவதை. அந்த கிளி கூண்டிற்கு அழகையும் ஒரு ஷோபனத்தையும் தருவது அந்த கிளி தான். கிளி அற்ற கூண்டு ஷோபனம் அற்றதாய் (பயனற்றதாய்) இருக்கிறது. கிளியுடைய கிளி கூண்டானது குழந்தைகளின் விளையாட்டுக்கும் அனைவரின் சந்தோஷத்திற்கும் விஷயமாக இருக்கின்றதோ அதைப்போலவே ஹ்ரீம் காரம் மந்த அறிவாளிகளுக்கு தேவதா ரூபமாக ப்ரதீகா உபாஸனைக்கு விஷயமாய் இருக்கின்றது.

'ப்ரதீகா' - 'ஓம்காரமும்' ஒரு ப்ரதீகா என்று சொல்லப்படுகின்றது. ஹ்ரீம் காரமும் ஓம் காரமும் ஸமமாய் கருதப் படுவதால் ப்ரதீகா உபாஸனா பீஜாக்ஷரம் ஒரு கிளி கூண்டை ஒரு உபமானமாய் வைத்து கூறப்பட்டது. கூண்டிலே இருக்க கூடிய ஒரு கிளியானது மனிதர்கள் பேசுவது போல் பேசி மனத்தை களிக்க செய்கின்றது (சந்தோஷப்பட செய்கின்றது). அப்படியே பரதேவதா லலிதா த்ரிபுர ஸுந்தரி உபாஸனை செய்கிறவர்களுக்கு அவர்களுடைய நிலையை அனுசரித்து, அவர்களுடைய மனோபாவத்தை அனுசரித்து அவர்களின் கர்மாவுக்கு தக்கபடி உபாஸனா பலன்களையும், க்ரமமாக ஞானத்தையும் தந்து ஸர்வ ஜீவர்களையும் சந்தோஷம் அடையச் செய்கின்றாள். அதனால் கிளியோடும், கிளி இருக்கும் கூண்டோடும் உவமானமாக கூறப்பட்டது என்று அறிவது அவசியம்.

**ॐ ह्रींकारपञ्जरशुक्यै नमः ||२१५||**

**ஓம் ஹ்ரீங்கார - பஞ்ஜரஶுக்யை நம: ||215||**

### ह्रींकाराङ्गणदीपिका | (216)
### ஹ்ரீங்காராங்க³ணதீ³பிகா | 216

**अङ्गणवत् सर्वसाधारणविश्रान्तिस्थानतया ह्रींकारस्य तदुपमा तम्य दीपिका । यथाङ्गणारोपितदीपः बाह्याभ्यन्तरवस्तुजातं प्रकाशयन् तत्रत्यलोकानामन्धकारादिनिवर्तनपूर्वकमभीष्टव्यवहारहेतुतया सर्वान् श्लाघयति स्वयमपि तैः संरक्ष्यते, तथा ह्रींकारबीजार्थश्रवणमनननिदिध्यासननिरन्तराभ्यासात् अपरो - क्षीकृतस्वयंप्रकाशानन्दरूपा सती स्वसेवकान् सर्वोत्कर्षयतीति तदुपमिता सती तथोच्यते ||**

**அங்க³ணவத் ஸர்வஸாதா⁴ரணவிஶ்ராந்திஸ்தா²னதயா ஹ்ரீங்காரஸ்ய தது³பமா தம்ய தீ³பிகா | யதா²ங்க³ணாரோபிததீ³ப: பா³ஹ்யாப்⁴யந்தரவஸ்துஜாதம்' ப்ரகாஶ - யன் தத்ரத்யலோகாநாமந்த⁴காராதி³நிவர்தனபூர்வகமபீ⁴ஷ்டவ்யவஹாரஹேதுதயா ஸர்வான் ஶ்லாக⁴யதி ஸ்வயமபி தை: ஸம்'ரக்ஷ்யதே, ததா² ஹ்ரீங்காரபீ³ஜார்த²ஶ்ர - வணமனனநிதி³த்⁴யாஸனநிரந்தராப்⁴யாஸாத் அபரோக்ஷீக்ரு'தஸ்வயம்ப்ரகாஶா - னந்த³ரூபா ஸதீ ஸ்வஸேவகான் ஸர்வோத்கர்ஷயதீதி தது³பமி தா ஸதீ ததோ² - ச்யதே ||**

'தீபிகா' என்றால் விளக்கு. 'அங்கணம்' என்று சொன்னால் அந்தத் காலத்தில் வீட்டில் இருக்க கூடிய முற்றம் {A protected open space where air, water everything can easily enter} (அதவாது மழை தண்ணீர் நன்றாக உள்ளே வரும், காற்று நன்றாக வரும், courtyard ) அப்படிப்பட்ட முற்றத்திலே (protected space) எப்படி நல்ல

வெளிச்சமும் காற்றும் இருக்கிறதோ, வீட்டிலே இருப்பவர்கள் வெளியே சென்று அலைந்து ஸ்ரமத்தோடு வந்தால் அவர்களுடைய ஸ்ரம பரிகாரத்திற்கு இளைப்பாறும் படியாக ஒரு ஸ்தானமாய் இருக்கிறது. அப்படி பட்ட ஹ்ரீம் கரம் என்னும் முற்றத்திலே இருக்க கூடிய விளக்கு போன்றவள் பரதேவதை. ஹ்ரீம் என்ற மந்திரமும் பாஹ்ய ப்ரவர்த்தியால் ஏற்பட்ட த்ரிவித தாபங்கள் —- ஆத்யாத்மிகம், ஆதிபௌதிக, ஆதிதெய்வீக தாபங்களில் இருந்து விஷ்ராந்தி அடைவதற்கு (அமைதி அடைவதற்கு) ஸ்தானமாய் இருக்கின்றது. அதனால் அங்கணம் என்ற முற்றத்தோடு உவமிக்கப்பட்டது.

முற்றத்திலே வைக்கப் பட்ட தீபமானது மத்திய மணி தீப நியாயம் போல் வீடு முழுமையும் ப்ரகாஸித்து வீட்டில் உள்ள வஸ்துக்களை ஒளிரச் செய்கின்றது. இதைப்போலவே 'ஹ்ரீம்' பீஜத்தை உபாதியாய் உடைய சைதன்ய ஸ்வரூபமான பரதேவதையும் உபாஸிப்பவர்களின் இஷ்டத்திற்கு வேண்டி அவரவர்களின் கர்மம், பக்தி, விவேகம், வைராக்கியம், அதிகாரித்தவம், மோக்ஷ இச்சா , குரு உபசதனம், ஸ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலிய ஸாதனங்களை அவரவர்களின் அதிகாரத்துவதிற்கு ஏற்ப பிரகாசிக்க செய்து ஆனந்த ஸ்வரூபத்தை அறிய வைக்கின்றது. அதனால் பரதேவதை ஞான ஸ்வரூபமான தீபத்தோடு உவமித்து கூறப்பட்டது.

**ॐ ह्रींकाराङ्गणदीपिकायै नमः ||२१६||**
**ஓம் ஹ்ரீங்காராங்க³ண - தீ³பிகாயை நம: ||216||**

**ह्रींकारकन्दरासिंही ह्रींकाराम्भोजभृङ्गिका |**
**ह्रींकारसुमनोमाध्वी ह्रींकारतरुमञ्जरी ||४२||**
**ஹ்ரீங்காரகந்த³ரா - ஸிம்'ஹீ ஹ்ரீங்காராம்போ⁴ஜப்⁴ரு'ங்கி³கா |**
**ஹ்ரீங்காரஸுமனோமாத்⁴வீ ஹ்ரீங்கார - தருமஞ்ஜரீ ||42||**

**ह्रींकारकन्दरासिंही | (217)**
**ஹ்ரீங்காரகந்த³ராஸிம்'ஹீ | 217**

**पर्वतशिखाग्रवर्तिगुहा कन्दा दरीत्यर्थः । वेदमौलिपठितह्रींकारस्य ग्राम्यविपयलिप्सुप्राणिप्रवेशयोग्य - ताविकलतया कन्दरोपमा । तत्र यथा सिंही स्वेतरक्षुद्रमृगप्रवेशभयहेतुसटादिस्वव्याप्यचिह्नानुमिता तस्याः स्वाश्रयमात्रतां धीरस्य तत्परिसरनखनिर्घातमुक्ताफलादिप्राप्तिं च नयति, तथा मन्दभक्तितन्द्री - बुभुक्षादिकलुषितपरिच्छिन्नाभिमानदेवतान्तरप्रतिपादकबीजतया स्वदेवतैकभावं कामितार्थं च प्रापय - तीति सिंह्युपमिता सती तथोच्यते ||**

**பர்வதஶிகா²க்³ரவர்திகு³ஹா கந்தா³ த³ரீத்யர்த²: | வேத³மௌளிபடி²தஹ்ரீங்காரஸ்ய க்³ராம்யவிபயலிப்ஸுப்ராணிப்ரவேஶயோக்³யதாவிகலதயா கந்த³ரோபமா | தத்ர யதா² ஸிம்'ஹீ ஸ்வேதரக்ஷுத்³ரம்ரு'க³ப்ரவேஶப⁴யஹேதுஸடாதி³ஸ்வவ்யாப்யசிஹ் - னானுமிதா தஸ்யா: ஸ்வாஶ்ரயமாத்ரதாம்' தீ⁴ரஸ்ய தத்பரிஸரநக²நிர்கா⁴தமுக்தா - ப²லாதி³ப்ராப்திம்' ச நயதி, ததா² மந்த³ப⁴க்திதந்த்³ரீபு³பு⁴க்ஷாதி³கலுஷிதபரிச்சி²ன் - னாபி⁴மானதே³வதாந்தரப்ரதிபாத³கபீ³ஜதயா ஸ்வதே³வதைகபா⁴வம்' காமிதார்த²ம்' ச ப்ராபயதீதி ஸிம்'ஹ்யுபமிதா ஸதீ ததோ²ச்யதே ||**

‘கந்தரா’ என்றால் மலையிலே இருக்க கூடிய குகை. ‘ஸிம்ஹி’ என்றால் பெண் ஸிம்ஹம். அதாவது ஹ்ரீம் காரமாகும் குகையிலே ஹ்ரீம்கார மேவ கந்தரா. ஹ்ரீம் காரம் போன்ற குகையிலே வசிக்கக்கூடிய பெண் ஸிம்ஹம் போன்றவள். நாட்டிலே அந்த மலையிலே இருக்க கூடிய குகைக்கு செல்வது என்பது ஒரு ஸ்ரமமான காரியம். இதைப்போல வேதங்களின் முடிவிலே விளங்கக்கூடிய உபநிஷத்துகளிலே ஹ்ரீம் காரம் மிகவும் கூடமாய்(மறைவாய்) கூறப்பட்டு உள்ளத்தினாலும் விஷய இந்திரியங்களை ஆஸ்ரயித்து உள்ள வேத வ்ருத்தியோடு கர்த்ருத்துவத்தோடு கூடிய ஜீவர்களால் அறிவதற்கு அரிதாய் உள்ளதாலும் இது குகைக்கு ஒப்பிடப்பட்டு கூறப்பட்டது. ‘யோவேத நிஹிதம் குஹாயாம் பரமேவ்யோமன்’ என்று வஸ்துவினுடைய கூடஸ்த தன்மை உபநிஷத்திலே கூறப்படுகிறது.

குகையில் வசிக்கும் ஸிம்ஹமானது மற்ற அற்ப ப்ராணிகளை ப்ரவேசிப்பதற்கு இடம் தராமல் தன்னுடைய பார்வையாலும் தோற்றத்தாலும் கர்ஜனையாலும் விரட்டி விடுகின்றது. தான் மட்டும் ஏகமாய் இருக்கும் தன்மை அது தெரிவிக்கின்றது. அதனால் ஜீவர்கள் (தைரியவான்கள்) தனது இருப்பிடமாகிய குகையை அவர்கள் அடைந்தால் அவர்களுக்கு தன்னுடைய அங்கங்களில் இருந்து உதிரும் படியான விலையில்லா ஞான முத்துக்களை கிடைக்கும் படி செய்கின்றது. இதைப்போலவே பரதேவதா கருணையோடு மந்தபுத்தி , ஹாலாஸ்யம், பௌமங்களில் மட்டும் இச்சை முதலியவற்றோடு கூடிய கலங்கிய அஞ்ஞான சித்தத்தோடு உள்ள ஜீவர்களுக்கும், த்வைத பாவத்தோடு கூடிய தேவதா அந்தர உபாஸகர்களுக்கும் அவள் ஸ்வரூபமாய் அடைய முடியாமல் இருக்கின்றாள். அதனால் விவஹார வஸ்துக்களை அளிக்கிறாள்.

பாஹ்ய ப்ரவ்ருத்தியோடு கூடிய இந்திரியங்களையும், மனசையும் வென்று அந்தர்முக வ்ருத்தியோடு கூடிய ஏதோ ஒரு தீர புருஷனுக்கு ஹ்ரீம் கார உபாஸனையை (அதனால்) ‘உபாஸ்ய உபாஸக அபேத ரூப’ தத்வஞ்ஞானத்தையும் தந்து பாரமார்த்திகமான நிலையை அளித்து வெகு ஸுலபமாய் அறியச் செய்கின்றாள். அதனால் பரதேவதையை ஸிம்ஹமாக உருவகம் செய்யப் பட்டுள்ளது.

**ॐ ह्रींकारकन्दारासिंह्यै नमः ||२१७||**
**ஓம் ஹ்ரீங்காரகந்தா³ரா - ஸிம்ஹ்யை நம: ||217||**

**ह्रींकाराम्भोजभृङ्गिका | (218)**
**ஹ்ரீங்காராம்போ⁴ஜப்⁴ரு’ங்கி³கா | 218**

**ह्रींकारस्य अष्टैश्वर्यात्मकपुरुषार्थसाधकनानाशक्तिमत्तया नानाप्रकारवर्णान्तरघटितत्वेन परागपरि - मलादिमत्कमलोपमितत्वमिति योजनीयम् । कमले यथा मधुमात्रसारग्राहिणी भृङ्गी रमते सर्वपुष्परस - मधुपानस्वाभाव्येन सर्वसमापि मध्वाधिक्यविविदिषया प्रभूतमधुमत्त्वेन च तस्मिन्नेव विशिष्यासक्तिमती, तथा सर्वमन्त्रबीजवाच्यदेवतात्मना सर्वानुगतापि ह्रींकारस्य विशिष्टगुणवत्त्वेन सर्वोपादानसगुणब्रह्म - प्रतिपादकतया तदीयस्वरूपतटस्थलक्षणवत्त्वेन तदभिन्नस्वरूपतया सर्वशब्दजालप्रकृतित्वेन च रूढ्या**

**लक्षणया वा तत्संबन्धिनी सती तदुपासकानां तदधिष्ठानतया च तैर्लक्ष्यत इति भृङ्ग्युपमया वर्णितेति तात्पर्यम् ||**

**ஹ்ரீங்காரஸ்ய அஷ்டைஶ்வர்யாத்மகபுருஷார்த²ஸாத⁴கனாநாஶக்திமத்தயா நானாப்ரகாரவர்ணாந்தரக⁴டிதத்வேன பராக³பரிமளாதி³மத்கம- லோபமிதத்வமிதி யோஜனீயம் | கமலே யதா² மது⁴மாத்ரஸாரக்³ராஹிணீ ப்⁴ரு’ங்கீ³ ரமதே ஸர்வபுஷ்ப - ரஸமது⁴பானஸ்வாபா⁴வ்யேன ஸர்வஸமாபி மத்⁴வாதி⁴க்யவிவிதி³ஷயா ப்ரபூ⁴தமது⁴ - மத்த்வேன ச தஸ்மின்னேவ விஶிஷ்யாஸக்திமதீ, ததா² ஸர்வமந்த்ரபீ³ஜவாச்ய - தே³வதாத்மனா ஸர்வானுக³தாபி ஹ்ரீங்காரஸ்ய விஶிஷ்டகு³ணவத்த்வேன ஸர்வோ - பாதா³னஸகு³ணப்³ரஹ்மப்ரதிபாத³கதயா ததீ³யஸ்வரூபதடஸ்த²லக்ஷணவத்த்வேன தத³பி⁴ன்னஸ்வரூபதயா ஸர்வஶப்³த³ஜாலப்ரக்ரு’தித்வேன ச ரூட்⁴யா லக்ஷணயா வா தத்ஸம்ப³ந்தி⁴னீ ஸதீ தது³பாஸகானாம்’ தத³தி⁴ஷ்டா²னதயா ச தைர்லக்ஷ்யத இதி ப்⁴ரு’ங்க்³யுபமயா வர்ணிததி தாத்பர்யம் ||**

‘ப்ருங்கிகா’ என்றால் வண்டு. ‘அம்போஜம்’ என்றால் தண்ணீரில் உதிக்க கூடிய தாமரை. ‘ஹ்ரீம்’காரமாய் இருக்கின்ற தாமரை புஷ்பத்தில் பெண் வண்டாய் இருப்பவள் பரதேவதை. அந்த தாமரையானது ஒரு மனோகரமான சிவப்பும் வெண்மையும் கலந்த நிறத்தோடு கூடியது. மகரந்தங்கள் நிரம்பி இருக்கின்றன. அதிகமான தேன் இருக்கின்றது அதனால் வண்டு அங்கு ரீங்காரம் இட்டு தேனை பருகுகின்றது. அப்படிப்பட்ட தாமரை பூவானது ‘ஹ்ரீம்’ பீஜம் என்று உவமித்து கூறப்பட்டு அந்த ஹ்ரீம் பீஜாக்ஷரமும் அஷ்ட ஐஸ்வர்யாத்ம: சதுர் வித புருஷார்த்தங்களையும் அருளக்கூடிய சக்தி உடையதாகவும் பல வர்ணங்களோடு கூடி ஞான வாஸனையும், பரமானந்த வடிவ மோக்ஷ ஸாதனத்வம் கூடியுள்ள காரணத்தினால் தாமரை புஷ்பத்திற்கு ஸமானமாய் ஹ்ரீம் கார பீஜாக்ஷரம் கூறப்பட்டு இருக்கிறது.

பல புஷ்பங்களுக்கு சென்ற வண்டுகள் தேனை சேகரித்தாலும் தாமரை புஷ்பத்திலே அவை அதிகமாய் வட்டம் இடுகின்றன. தாமரை சிறப்பாய் கூறப்பட்டுள்ளது. அதே போல பரதேவதையும் ஸர்வ மந்த்ர பீஜாக்ஷரங்களின் வாச்சியார்த்தமாய் இருந்தாலும் ஹ்ரீம் காரம் என்னும் பீஜாக்ஷரத்திலே ஸர்வ ப்ரபஞ்ச அபின்ன நிமித்த உபாதான அதாவது விவர்த்த உபாதான ஸகுண பிரம்ம காரண ஈஸ்வர ப்ரதீகமாய் இருக்கிறாள். இதுவே சைதன்யத்தின் தடஸ்த லக்ஷணமும் ப்ருக்ருதி ஸ்வரூபமாயும் இருக்கிறது. அந்த ஹ்ரீம் பீஜமானது ஸாதாரண அர்த்தமாகவும் லக்ஷணார்த்தமாகவும் மோக்ஷத்தோடு ஸம்பந்த பட்டு இருக்கின்றாள். ஹ்ரீம் பீஜ வடிவ மந்த்ர உபாசகர்களுக்கு தான் அதிஷ்டான வடிவமாய் விளங்கி பரம ஆனந்த நிலையை புரிய வைக்கிறாள். அதனால் தாமரையில் ரீங்காரம் இடும் பெண் வண்டுக்கு உவமானமாக கூறப் பட்டது

**ॐ ह्रींकाराम्भोजभृङ्गिकायै नमः ||२१८||**
**ஓம் ஹ்ரீங்காராம்போ⁴ஜ - ப்⁴ரு’ங்கி³காயை நம: ||218||**

**ह्रींकारसुमनोमाध्वी | (219)**
**ஹ்ரீங்காரஸுமனோமாத்⁴வீ | 219**

**ह्रींकारस्स्य वाञ्छितफलप्रदानसाधकतया सुमनःसादृश्यम् । अथवा, पुष्पाणि व्यवहारसमये बहुसाव - धानतया व्यवहर्तव्यानि परममार्दवाधिकरणत्वेन बहुमान्यत्वात्, तथा ह्रींकारोऽप्युपासनवेलायां परब्रह्मवाचकत्वेन प्रयत्नपूर्वकमेकाग्रमनसा देवताभिन्नत्वेन ध्यातव्य इति नियमसंपादनार्थं पुष्पोपममिति विभावनीयम् । तथा च वाय्वादिना शुष्काणि पुष्पाणि निर्मधुत्वेन फलान्यजनयित्वा परिपतन्ति फलजनकशक्तेरभावेन; तदितराणि तु तद्वत्त्वेन तज्जनकानि लोके दृष्टानि; पुष्परसश्च पृथिवीकारणभूतोदकतन्मात्रस्वरूपमधुररसात्मकत्वात् पुष्पाणां फलजनकशक्तिज्ञापको भवति ; तथा ह्रींकारस्यापि सर्वजनकताशक्त्याधायकतदधिष्ठानसच्चिदानन्दपरब्रह्मस्वरूपा सती तन्मन्त्रप्राप्त्या यथोक्तफलहेतुतया तदर्थरूपेण तद्वृत्तिर्भवतीति माध्वीसमानधर्मवत्त्वमस्या उपपद्यत इति विवेचनीयमिति यावत् ॥**

**ஹ்ரீங்காரஸ்ஸ்ய வாஞ்சி2தப2லப்ரதா3னஸாத4கதயா ஸுமன:ஸாத்3ரு’ஶ்யம் | அத2வா, புஷ்பாணி வ்யவஹாரஸமயே ப3ஹுஸாவதா4னதயா வ்யவஹர்தவ்யானி பரமமார்த3வாதி4கரணத்வேன ப3ஹுமான்யத்வாத், ததா2 ஹ்ரீங்காரோ(அ)ப்யுபாஸ - னவேலாயாம்’ பரப்3ரஹ்மவாசகத்வேன ப்ரயத்னபூர்வகமேகாக்3ரமனஸா தே3வதா - பி4ன்னத்வேன த்4யாதவ்ய இதி நியமஸம்பாத3னார்த2ம்’ புஷ்போபமமிதி விபா4வ - னீயம் | ததா2 ச வாய்வாதி3னா ஶுஷ்காணி புஷ்பாணி நிர்மது4த்வேன ப2லான் - யஜனயித்வா பரிபதந்தி ப2லஜனகஶக்தேரபா4வேன; ததி3தராணி து தத்3வத்த்வேன தஜ்ஜனகானி லோகே த்3ரு’ஷ்டானி; புஷ்பரஸஶ்ச ப்ரு’தி2வீகாரணபூ4தோத3கதன் - மாத்ரஸ்வரூபமது4ரரஸாத்மகத்வாத் புஷ்பாணாம்’ ப2லஜனகஶக்திஜ்ஞாபகோப4வதி ததா2 ஹ்ரீங்காரஸ்யாபி ஸர்வஜனகதாஶக்த்யாதா4யகதத3தி4ஷ்டா2னஸச்சிதா3ன - ந்த3பரப்3ரஹ்மஸ்வரூபா ஸதீ தன்மந்த்ரப்ராப்த்யா யதோ2க்தப2லஹேதுதயா தத3ர்த2 - ரூபேண தத்3வ்ரு’த்திர்ப4வதீதி மாத்4வீஸமானத4ர்மவத்த்வமஸ்யா உபபத்3யத இதி விவேசனீயமிதி யாவத் ||**

‘ஹ்ரீம்’ காரம் என்ற புஷ்பத்திலே இருக்க கூடிய சுவையான தேனைப்போன்றவள். ‘ஹ்ரீம்’ காரம் இஷ்ட பலனை தருவதால் அது புஷ்பங்களுக்கு உவமையாய் கூறப்பட்டது. ஏனென்றால் புஷ்பங்கள் பல பழங்களுக்கு காரணமாய் இருக்கின்றது. புஷ்பங்கள் ம்ருதுவான தன்மையும் வாஸனையையும் உடையவை. ஆதலால் அவற்றை உபயோகிக்கும் பொழுது அவை கசங்கிவிடாமல் ஜீவர்கள் பூஜ்ய புத்தியோடு அதை போற்றி பாதுகாக்கிறார்கள். அதைப்போலவே ஹ்ரீம் காரம் என்ற புஷ்பம் பரப்ருஹ்ம ஸ்வரூபத்தை குறிக்கக்கூடிய பரதேவதைக்கு வாசகமாய் இருப்பதால் அதை உபாஸிக்கும் காலத்தில் உபாஸக ஜீவர்கள் ஸ்ரமத்தோடு ஏகாக்ரகமான சித்தத்தோடு தேவதையை தமக்கு அபின்னமாய் தியானிக்கின்றனர். அதனால் ஹ்ரீம் காரத்திற்கு புஷ்பத்தோடு ஒப்புதல் கூறப்பட்டது. தேனுள்ள புஷ்பங்கள் பழங்களை உண்டு பண்ணும் தன்மை உடையவாய் இருக்கின்றன. புஷ்பத்தில் உள்ள தேனானது பூமி தத்துவத்திற்கு காரணமான ஜல தன்மாத்திரையின் ஸ்வரூபமான ரஸமாய் இருக்கின்றது. ‘ரஸோவை ஸ:’ என்பதுவே இதற்கு ப்ரமாணம். இனிமையான செவியோடு கூடியவைகளாகவும் பழங்களை தருவதற்கு சக்தியோடு கூடியதாயும் இருக்கின்றது. இதைப்போல பரதேவதையும் ஹ்ரீம் காரத்திற்கு ஸர்வ சக்திகளையும் தருபவளாகயும், ஸச்சிதானந்த ரூபமாயும் உபாஸகர்களுக்கு அவரவர்கள் வேண்டும் இஷ்ட ஸித்தியை

அருள்பவளாயும் இருப்பதால் மது என்ற தேனுக்கு துல்லியமாக கற்பிக்கப்படுகிறாள்.

**ॐ ह्रींकारसुमनोमाध्व्यै नमः ||२१९||**
**ஓம் ஹ்ரீங்காரஸுமநோ - மாத்⁴வ்யை நம: ||219||**

**ह्रींकारतरुमञ्जरी | (220)**
**ஹ்ரீங்காரதருமஞ்ஜரீ | 220**

**फलार्थिनः स्वारूढजनान् पतनादिभ्यः प्रतिबन्धकेभ्यस्तारयति पारं प्रापयति फललाभेन संतोषयतीति तरुः । ह्रींकारस्य कल्पादितरुर्दृष्टान्तीकृतः । प्रेक्षावतां संवादिप्रवृत्तिजनकत्वेन शाखोपशाखाप्रगता पुष्पमञ्जरी फलकारणयोग्यतां ज्ञापयतीव पुरुषार्थार्थिनां असंशयप्रवर्तकत्वेन प्रत्यक्स्वरूपा सती गुरूपदिष्टमन्त्रदेवतात्मकतया मन्त्रोपासनायामभिमुखीकरणेन पुरुषार्थान् प्रापयतीति मञ्जरीसादृश्यं प्राप्तं परदेवताया इति विवेचनीयम् ||**

**ப²லார்தி²ன: ஸ்வாரூட⁴ஜனான் பதநாதி³ப்⁴ய: ப்ரதிப³ந்த⁴கேப்⁴யஸ்தாரயதி பாரம்' ப்ராபயதி ப²லலாபே⁴ன ஸந்தோஷயதீதி தரு: | ஹ்ரீங்காரஸ்ய கல்பாதி³தருர்த்³ரு'ஷ்- டாந்தீக்ரு'த: | ப்ரேக்ஷாவதாம்' ஸம்'வாதி³ப்ரவ்ரு'த்திஜனகத்வேன ஶாகோ²பஶாகா²- ப்ரக³தா புஷ்பமஞ்ஜரீ ப²லகாரணயோக்³யதாம்' ஜ்ஞாபயதீவ புருஷார்தா²ர்தி²னாம்' அஸம்'ஶயப்ரவர்தகத்வேன ப்ரத்யக்ஸ்வரூபா ஸதீ கு³ரூபதி³ஷ்டமந்த்ரதே³வதாத் - மகதயா மந்த்ரோபாஸனாயாமபி⁴முகீ²கரணேன புருஷார்தா²ன் ப்ராபயதீதி மஞ்ஜரீ- ஸாத்³ரு'ஶ்யம்' ப்ராப்தம்' பரதே³வதாயா இதி விவேசனீயம் ||**

'மஞ்சரி' என்றால் பூங்கொத்து. 'தரு' என்றால் வ்ருக்ஷம். ஹ்ரீங்காரமேவதரு — ஹ்ரீம் காரமாகிய வ்ருக்ஷத்திலே இருக்க கூடிய பூங்கொத்தைப் போன்றவள். வ்ருக்ஷம் தன்னை ஆச்சரியமடைந்த ஜனங்களை சிரமத்தில் இருந்து காப்பாற்றி நிழலை கொடுத்து , பசியை போக்குவதற்கு பழங்களையும் கொடுத்து ஒரு ரம்மியமான சூழ்நிலையை எப்படி உண்டாக்குகிறதோ, கற்பக வ்ருக்ஷத்திற்கு ஸமமான ஹ்ரீம் காரமும் தன்னை சரண் அடைந்த உபாஸகர்களின் ஜனன மரண ஸம்ஸார பயத்தை போக்கி அவர்கள் விரும்பக்கூடிய நித்யானந்த மோக்ஷ நிலையை அறிவடையச் செய்து ஆனந்த ஸ்வரூபத்தை தெரிவிக்கின்றது.

ஹ்ரீம் காரம் வேதத்திற்கு ஒப்பிடப்படுகிறது. ஓம்காரத்திற்கு ஒப்பிடப்படுகிறது. அந்த வேதமானது 'இஷ்ட காம துக்' என்று கீதையில் போற்றப்படுகிறது. அதைப்போல ஹ்ரீம் காரமும் வ்ருக்ஷ ரூபமாகவும், இஷ்ட காமங்களை அளிக்க கூடிய காமதேனுவும் ஸமானமாய் பரதேவதை லக்ஷ்யார்தமாய் உபாசிக்கப் படுகிறாள். பரதேவதை தர்ம, அர்த்த, காம, மோக்ஷங்கள் என்ற பலன்களை கூறும் காரணங்களுக்கு காளி தாஸனின் கருணையால் வித்யா ரூபமாகவும் தேவதா ரூபமாகவும் விளங்கி அவரவர்களுக்கு ஏற்பட்ட சந்தேக விபரீத பாவங்களை எல்லாம் நீக்கி அபரோக்ஷ ஞானத்தை தானாய் விளங்கும் மஹா பலனை தருகின்றாள். அபரோக்ஷ ஞான ஸித்தி தாயின்யை என்று எடுத்து கொள்ளலாம்.

இந்த லலிதா த்ரிசதியிலே இப்பொழுது நாம் பார்த்த நாமாக்கள் இரண்டாவது கூடத்தின் ஹ்ரீம் பீஜத்தினுடைய சிறப்பு. அக்னி குண்டம், சந்திரன், பாஸ்கரன், அம்போதம், காந்தம் , தீப்திகை, உத்யானம், ஆரண்யம், பஞ்சரம், அங்கணம், கந்தரம், அம்போஜம், ஸுவன:, தரு என்பவற்றிற்கும் அந்த பீஜத்தின் அதிஷ்டானமான பரதேவதையை அக்னிஷிகா, சந்திரிகா, ருசி, ஸஞ்சலா, அங்குரிகா, ஹம்ஸி, கீக்கினீ, ஹாரிணீ, வல்லரீ, ஸுகீ, தீபிகா, ஸிம்ஹீ, ப்ருங்கிகா, மாத்வீ, மஞ்சரீ என்று உவமித்து கூறப்பட்டது. இதையெல்லாம் ஆராய்ந்து நோக்கினால் உலகத்திலே உள்ள எல்லா பொருட்களும் அவைகள் ஹ்ரீம் காரமாகவும் அந்த அந்த பொருளுக்கு ஏற்பட்ட சக்தியையும் பயனும் பரதேவதா ரூபமாயும் விளங்குகின்றது என்பது புலப்படாமல் போகவே போகாது. அதனால் 'யத் யத் விபூதி மத் ஸத்வம் தத் தத்' என்று கீதையில் சொல்லப்பட்டது 'மம தேஜோ அம்ச சம்பவம் என்று பகவான் அங்கே கூறுகிறார். அது போல பரதேவதையின் தேஜோ அம்சமே பொருள்களிலே இருக்கக்கூடிய சோபனம், சக்தி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால் பரதேவதையே இந்த ஜகத்தாய் விவர்த்தமாய் பரிணமித்து காட்சி அளிக்கிறாள் என்பது இந்த நாமங்களினுடைய சாரம்.

**ॐ ह्रींकारतरुमञ्जर्यै नमः ||२२०||**
**ஓம் ஹ்ரீங்கார - தருமஞ்ஜர்யை நம: ||220||**

**सकाराख्या समरसा सकलागमसंस्तुता |**
**सर्ववेदान्ततात्पर्यभूमिः सदसदाश्रया ||४३||**
**ஸகாராக்²யா ஸமரஸா ஸகலாக³ம - ஸம்’ஸ்துதா |**
**ஸர்வவேதா³ந்த - தாத்பர்ய - பூ⁴மி: ஸத³ஸதா³ஶ்ரயா ||43||**

**सकाराख्या | (221)**
**ஸகாராக்²யா | 221**

**सकारयुक्ता श्रीविद्यानामिका आख्या वाचकशब्दः यस्याः सा तथा ||**

**ஸகாரயுக்தா ஶ்ரீவித்³யாநாமிகா ஆக்²யா வாசகஶப்³த³: யஸ்யா: ஸா ததா² ||**

'ஆக்யா' என்று சொன்னால் ஆசமந்தாத் கதனம் (முழுமையாய் கூறுதல்) என்று அர்த்தம். ஸகாராய ஆக்கியா: — ஸகாரம் என்று சொன்னால், ஸகாரம் என்னும் பீஜாக்ஷரத்தை உடைய ஶ்ரீவித்யா ஸ்வரூபிணி, காதி வித்யா ஸ்வரூபிணி லலிதா த்ரிபுர ஸுந்தரி. அதனால் அந்த ஸகாரத்தை தன் வாசகமாய் உடையவள். வாசக, வாக்கிய ஸம்பந்தமாய் இருக்கக்கூடிய த்ரிகூடா காமகோடிகா என்று சொல்லக் கூடிய மூன்றாவது கூடத்தை ஸ்தானமாக உடைய அங்கமாக உடைய ஸகாரத்தை பீஜாக்ஷரமாய் உடையவள். அந்த வித்யாவை தனது பெயராய் உடையவள் என்றாலும் பொருந்தும்.

**ॐ सकाराख्यायै नमः ||२२१||**

ஓம் ஸகாராக்²யாயை நம꞉ ||221||

**समरसा | (222)**
**ஸமரஸா | 222**

**समः एकः रसः मधुरादिरसवद्गुडपिण्डादावेकरूपेण कार्ये व्यवस्थितेत्यर्थः । अथवा, संसारदशायां सर्वज्ञत्वकिंचिज्ज्ञत्वादिविशेषणभेदेन भिन्नरसवत् भिन्नस्वभाववत् प्रतीयमानयोरीश्वरजीवयोर्वेदान्तश्रव - णादिना जन्याखण्डाकारवृत्तिव्याप्या अहं ब्रह्मास्मि — इत्यभेदानुभवदशायामेकरूपतया साक्षात्क्रियते इति सा तथोच्यते, 'रसो वै सः' इति श्रुतेः, रसशब्दार्थः परब्रह्म समः अभिन्नं यस्याः सा तथा । तैत्तिरीयो - पनिपत्लतिपाद्येत्यर्थः ||**

**ஸம꞉ ஏக꞉ ரஸ꞉ மது⁴ராதி³ரஸவத்³கு³ட³பிண்டா³தா³வேகரூபேண கார்யே வ்யவஸ்தி² - தேத்யர்த²꞉ | அத²வா, ஸம்'ஸாரத³ஶாயாம்' ஸர்வஜ்ஞத்வகிஞ்சிஜ்ஜ்ஞத்வாதி³விஶே - ஷணபே⁴தே³ன பி⁴ன்னரஸவத் பி⁴ன்னஸ்வபா⁴வவத் ப்ரதீயமானயோரீஶ்வரஜீவ - யோர்வேதா³ந்தஶ்ரவணாதி³னா ஜன்யாக²ண்டா³காரவ்ரு'த்திவ்யாப்யா அஹம்' ப்³ர - ஹ்மாஸ்மிஇத்யபே⁴தா³னுப⁴வத³ஶாயாமேகரூபதயா ஸாக்ஷாத்க்ரியதே இதி ஸா ததோ²ச்யதே, 'ரஸோ வை ஸ꞉' இதி ஶ்ருதே꞉, ரஸஶப்³தா³ர்த²꞉ பரப்³ரஹ்ம ஸம꞉ அபி⁴ன்னம்' யஸ்யா꞉ ஸா ததா² | தைத்திரீயோபனிபத்த்ரதிபாத்³யேத்யர்த²꞉ ||**

'ஸம' என்று சொன்னால் ஸூத்த ஸாஹரத்தில் ஏகம் ஏவ என்று சொல்வது. 'ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேஸ்வரம்' என்று சொல்லக்கூடிய சைதன்யஸ்வரூபத்தை சொல்வது. நிர்விகார ஸ்வரூபம் என்றும் சொல்வது. இது எல்லாம் ஸப்த ஸாஹரத்தில் 'ஸமம்' என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டு இருக்கிறது.

'ரஸ:' — ரஸோ வை ஸ: (The essence of every being) ஆத்மா என்று அர்த்தம். 'ஸமரஸா' – ஏக ரஸமாய் இருப்பவள். இந்த காரிய ரூப ப்ரபஞ்சத்திலே விளங்கக்கூடியவள். காரிய ஸ்வரூபமாயும், விவர்த்தமாய் காரண ஸ்வரூபமாயும் இருக்க கூடியவள் லலிதா த்ரிபுர ஸுந்தரி.

பகவான் சங்கரர் சொல்கிறார் இந்த வ்யாவரிக, ஸாம்ஸாரிக நிலையிலே அஞ்ஞானத்தோடு 'கிஞ்சித் ஞ:' என்று. பகவான் என்றால் ஸர்வஞ்ஞன் என்ற அஞ்ஞான பேதத்தினால் பிரித்து பார்க்க கூடிய நிலையிலே வேறு வேறு ஸ்வபாவமாய் தோன்றக்கூடிய சைதன்யம். ஜீவேஸ்வர பாவங்களை நமக்கு காண்பிக்க கூடியது. பேத புத்தியோடு பார்ப்பவர்களுக்கு அஞ்ஞான திசையிலே வித்தியாசமாய் காண்பிக்க கூடியது.

அதனால் ஸ்ரீவித்யாவை உபாஸிக்க கூடியவனுக்கு வேதாந்த ஸ்ரவண மனனாதிகளால் ஏற்படக்கூடிய அகண்ட ஏகரஸ ஸித்தி வாக்கியம் 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்பது அபரோக்ஷ ஞானமாய் ஒருவனுக்கு அனுபவ ஸித்தியாகிறது. (Easy way of Ishvara to explain is to see everything as Ishvara. இருப்பது அனைத்தும் இறைவனே என்ற எண்ணம் நமக்கு தன்மயமாகிறது). அந்த அபேத அனுபவ நிலை ஸ்தூல அவித்யாவை effortless ஆக neutralize பண்ணக்கூடிய நிலை.

அதுக்கு ஏக ரஸமாய் விளங்க கூடியவள் பரமாம்பிகை.இதுவே பரப்ரஹ்ம ஸ்வரூபம். ப்ரஹ்ம அபின்ன ஸ்வரூபிணி என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

**ॐ समरसायै नमः ||२२२||**
**ஓம் ஸமரஸாயை நம: ||222||**

**सकलागमसंस्तुता | (223)**
**ஸகலாக³மஸம்'ஸ்துதா | 223**

**आ समन्तान् गमयन्तीति आगमाः, सकलपदार्थगोचरसविकल्पकप्रमाजनकवेदाः इत्यर्थः । सकलैरन्यूनानतिरेकेणेतिहासपुराणसहितयावदङ्गोपाङ्गरहस्यादियोगित्वं सकलशब्दार्थः । तैः संस्तुता सम्यक् नातः परं किंचिदस्तीति निश्चयपूर्वकं स्तुता गुणिनिष्ठगुणाभिधानविषयतया तदुपजीवकेत्यर्थः । सर्वार्थप्रकाशकवेदानां सर्वज्ञत्वेनैदंपर्येण तदीयस्तुतिविषयतया शुद्धचैतन्यात्मकतया मोक्षकारणीभूतज्ञा - नस्वरूपत्वेन जिज्ञास्येति ध्वनितोऽर्थः ||**

**ஆ ஸமந்தான் க³மயந்தீதி ஆக³மா:, ஸகலபதா³ர்த²கோ³சரஸவிகல்பகப்ரமாஜன - கவேதா³: இத்யர்த²: | ஸகலைரந்யூனானதிரேகேணேதிஹாஸபுராணஸஹிதயா - வத³ங்கோ³பாங்க³ரஹஸ்யாதி³யோகி³த்வம்' ஸகலஶப்³தா³ர்த²: | தை: ஸம்'ஸ்துதா ஸம்யக் நாத: பரம்' கிஞ்சித³ஸ்தீதி நிஶ்சயபூர்வகம்' ஸ்துதா கு³ணிநிஷ்ட²கு³ணா - பி⁴தா⁴னவிஷயதயா தது³பஜீவகேத்யர்த²: | ஸர்வார்த²ப்ரகாஶகவேதா³னாம்' ஸர்வ - ஜ்ஞத்வேனைத³ம்பர்யேண ததீ³யஸ்துதிவிஷயதயா ஶுத்³த⁴சைதன்யாத்மகதயா மோக்ஷகாரணீபூ⁴தஜ்ஞானஸ்வரூபத்வேன ஜிஜ்ஞாஸ்யேதி த்⁴வனிதோ(அ)ர்த²: ||**

'ஆகமம்' என்றால் வேதம் என்று அர்த்தம். 'யஸ்ய மஹதோ பூதஸ்ய ப்ரஸ்வஸிதம் வேதா:'. அதாவது பகவானுடைய மூச்சுக்காற்று தான் வேதம் என்று சொல்கிறது. **आ समन्तान् गमयन्तीति आगमाः ஆ ஸமந்தாத் க³மயந்தீதி ஆக³மா:** எங்கும் வ்யாபித்து இருக்க கூடியது இரண்டற்ற ஒன்று என்ற அர்த்தத்தை கூடியது ஆகமம் என்பது. ஸகல பதார்த்தத்தையும் விளக்கக்கூடிய (objective and subjective knowledge) ஸவிகல்ப ஞானத்தையும் நிர்விகல்ப ஞானத்தையும் அதை உண்டு பண்ணக்கூடிய ஆதாரமாய் இருக்க கூடியது வேதம். ஸ்ம்ருதி, புராணங்கள், இதிஹாஸங்கள் அதோடு அங்கங்களோடு கூடிய இருக்க கூடிய வேதங்கள் எனினும் அவைகளால் நன்கு துதிக்கப்படுபவள். ப்ரஹ்ம ஸூத்ரத்திலே 'சாஸ்திர யோனி த்வாத்' என்ற ஸூத்ரமானது 'காஸ்திரமேவ யோனி: சாஸ்திரஸ்ய யோனி:' என்று நாம் விக்ரஹ வாக்கியம் செய்து நாம் அர்த்தஸ்மரணம் செய்து கொள்கிறோமோ அது போல எந்த பரதேவதையினிடத்தில் வேதம் உண்டாயிற்றோ அந்த வேதமே பரதேவதையை துதிக்கின்றது என்று சொல்வது உண்டு.

